

தமிழ்நாடு அரசு

ஆறாம் வகுப்பு

தமிழ்

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனித நேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

6th Std Tamil CBSE FM.indd 1 20-03-2020 16:14:01

தமிழ்நாடு அரசு

முதல்பதிப்பு - 2018
திருத்திய பதிப்பு - 2019, 2020

(புதிய பாடத்திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்ட நூல்)

விலை: ரூ

பாடநூல் உருவாக்கமும்
தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்
© SCERT 2018
நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்
www.textbooksonline.tn.nic.in

6th Std Tamil CBSE FM.indd 2 20-03-2020 16:14:02

முகவுரை

கல்வி, அறிவுத் தேடலுக்கான பயணம் மட்டுமல்ல; எதிர்கால வாழ்விற்கு அடித்தளம் அமைத்திடும் கனவின் தொடக்கமும்கூட. அதே போன்று, பாடநூல் என்பது மாணவர்களின் கைகளில் தவழும் ஒரு வழிகாட்டி மட்டுமல்ல; அடுத்த தலைமுறை மாணவர்களின் சிந்தனைப் போக்கை வடிவமைத்திடும் வல்லமை கொண்டது என்பதையும் உணர்ந்துள்ளோம். பெற்றோர், ஆசிரியர் மற்றும் மாணவரின் வண்ணக் கனவுகளைக் குழைத்து ஓர் ஓவியம் தீட்டியிருக்கிறோம். அதனூடே கீழ்க்கண்ட நோக்கங்களையும் அடைந்திடப் பெருமுயற்சி செய்துள்ளோம்.

- கற்றலை மனனத்தின் திசையில் இருந்து மாற்றிப் படைப்பின் பாதையில் பயணிக்க வைத்தல்.
- தமிழர்தம் தொன்மை, வரலாறு, பண்பாடு மற்றும் கலை, இலக்கியம் குறித்த பெருமித உணர்வை மாணவர்கள் பெறுதல்.
- தன்னம்பிக்கையுடன் அறிவியல் தொழில்நுட்பம் கைக்கொண்டு மாணவர்கள் நவீன உலகில் வெற்றிநடை பயில்வதை உறுதிசெய்தல்.
- அறிவுத்தேடலை வெறும் ஏட்டறிவாய்க் குறைத்து மதிப்பிடாமல் அறிவுச் சாளரமாய்ப் புத்தகங்கள் விரிந்து பரவி வழிகாட்டுதல்.
- தோல்வி பயம் மற்றும் மன அழுத்தத்தை உற்பத்தி செய்யும் தேர்வுகளை உருமாற்றி, கற்றலின் இனிமையை உறுதிசெய்யும் தருணமாய் அமைத்தல்.

புதுமையான வடிவமைப்பு, ஆழமான பொருள் மற்றும் குழந்தைகளின் உளவியல் சார்ந்த அணுகுமுறை எனப் புதுமைகள் பல தாங்கி உங்களுடைய கரங்களில் இப்புதிய பாடநூல் தவழும்பொழுது, பெருமிதம் ததும்ப ஒரு புதிய உலகத்துக்குள் நீங்கள் நுழைவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

6th Std Tamil CBSE FM.indd 3 20-03-2020 16:14:02

நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா.
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– *மகாகவி இரவீந்திரநாத தாகூர்.*

நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே!

உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!




6th Std Tamil CBSE FM.indd 4 20-03-2020 16:14:03

தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணீயம்' பெ. சுந்தரனார்.



தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும், பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!

6th Std Tamil CBSE FM.indd 5 20-03-2020 16:14:03



தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.



உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

6th Std Tamil CBSE FM.indd 6 20-03-2020 16:14:03

-

உலகின் மூத்த மொழியாம் தமிழின் பல்வேறு பரிமாணங்களை
இன்றைய இளம்தலைமுறைக்கு
அறிமுகப்படுத்தும் ஒரு துணைக்கருவியாக இப்பாடநூல்.



பொருண்மைக்கு ஏற்ப
இயலின் தொடக்கத்தில்
கற்றல் நோக்கங்கள்



ஒவ்வோர் இயலையும்
ஆர்வத்துடன் அணுக
உரைநடைஉலகம்,
கவிதைப்பேழை, விரிவானம்,
கற்கண்டு
ஆகிய தலைப்புகளாக . . . . .



பாடப்பகுதிகளின்
கருத்தை விளக்க அரிய,
புதிய செய்திகளை
அறிந்து கொள்ள
தெரிந்து தெளிவோம். . . .



காலத்தின் பாய்ச்சலுக்கு
ஈடுகொடுப்பதாக
இணையவழி உரலிகள் . . .

ஆளுமை மிக்க
ஆசிரியர்களுக்கும்
ஆற்றல் நிறை
மாணவர்களுக்கும்...



பயின்ற பாடங்கள் குறித்துச்
சிந்திக்க, கற்றல்
செயல்பாடுகளாகக்
கற்பவை கற்றபின் . . . .



இயலின் இறுதியில்
விழுமியப் பக்கமாக
நிற்க அதற்குத் தக. . .

மாணவர்தம்
அடைவை அளவிட
மதிப்பீடு . . . .



உயர்சிந்தனைத் திறன்பெற,
படைப்பாக்கத்தின்வழி
வாழ்வைத் தன்னம்பிக்கையுடன்
எதிர்கொள்ள, படித்துச்சுவைக்க,
மொழிவிளையாட்டு . . . .



இலக்கியச்சுவை உணர்ந்து
நுட்பங்களை உள்வாங்கி
மொழியை ஆற்றலுடன்
பயன்படுத்த
மொழியை ஆள்வோம் . . . .





பாடநூலில் உள்ள விரைவுக் குறியீட்டைப் (QR Code) பயன்படுத்துவோம்! எப்படி?

- உங்கள் திறன்பேசியில்,கூகுள் playstore /ஆப்பிள் app store கொண்டு QR Code ஸ்கேனர் செயலியை இலவசமாகப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.
- செயலியைத் திறந்தவுடன், ஸ்கேன் செய்யும் பொத்தானை அழுத்தித் திரையில் தோன்றும் கேமராவை QR Code–இன் அருகில் கொண்டு செல்லவும்.
- ஸ்கேன் செய்வதன் மூலம் திரையில் தோன்றும் உரலியைச் (URL) சொடுக்க, அதன் விளக்கப் பக்கத்திற்குச் செல்லும்.

மொழிப்பாடத்தை மட்டுமல்லாமல் பிறபாடங்களைப் பயில,
கருத்துகளைப் புரிந்து எதிர்வினையாற்ற உதவும் ஏணியாய்..... புதிய வடிவம், பொலிவான
உள்ளடக்கத்துடன் இப்பாடநூல் உங்கள் கைகளில்...

6th Std Tamil CBSE FM.indd 7 20-03-2020 16:14:04

பொருளடக்கம்

வ.எண்	பொருண்மை/இயல்	பாடத்தலைப்புகள்	பக்க எண்
1	மொழி	இன்பத்தமிழ் *	2
		தமிழ்க்கும்மி	5
	தமிழ்த்தேன்	வளர்தமிழ்	8
		கனவு பலித்தது	15
		தமிழ் எழுத்துகளின் வகையும் தொகையும்	18
2	**இயற்கை**	சிலப்பதிகாரம் *	26
		காணி நிலம் *	29
	இயற்கை இன்பம்	சிறகின் ஓசை	32
		கிழவனும் கடலும்	37
		முதலெழுத்தும் சார்பெழுத்தும்	43
		திருக்குறள் *	48
3	**அறிவியல், தொழில்நுட்பம்**	அறிவியல் ஆத்திசூடி	52
		அறிவியலால் ஆள்வோம்	55
	எந்திர உலகம்	கணியனின் நண்பன்	58
		ஒளி பிறந்தது	64
		மொழிமுதல், இறுதி எழுத்துகள்	69
4	கல்வி	மூதுரை *	78
		துன்பம் வெல்லும் கல்வி	80
	கண்ணெனத் தகும்	கல்விக்கண் திறந்தவர்	83
		நூலகம் நோக்கி...	87
		இன எழுத்துகள்	91
5	நாகரிகம், பண்பாடு	ஆசாரக்கோவை	100
		கண்மணியே கண்ணுறங்கு	102
	பாடறிந்து ஒழுகுதல்	தமிழர் பெருவிழா	105
		மனம் கவரும் மாமல்லபுரம்	109
		மயங்கொலிகள்	114
		திருக்குறள் *	120

6th Std Tamil CBSE FM.indd 8 20-03-2020 16:14:04

வ.எண்	பொருண்மை/இயல்	பாடத்தலைப்புகள்	பக்க எண்
6	தொழில், வணிகம்	நானிலம் படைத்தவன்	126
		கடலோடு விளையாடு *	129
	கூடித் தொழில் செய்	வளரும் வணிகம்	132
		உழைப்பே மூலதனம்	137
		சுட்டு எழுத்துகள், வினா எழுத்துகள்	140
7	நாடு, சமூகம், அரசு, நிருவாகம்	பாரதம் அன்றைய நாற்றங்கால் *	148
		தமிழ்நாட்டில் காந்தி	151
	புதுமைகள் செய்யும் தேசமிது	வேலுநாச்சியார்	155
		நால்வகைச் சொற்கள்	159
8	அறம், தத்துவம், சிந்தனை	பராபரக் கண்ணி *	166
		நீங்கள் நல்லவர்	168
	எல்லாரும் இன்புற	பசிப்பிணி போக்கிய பாவை	170
		பாதம்	174
		பெயர்ச்சொல்	178
		திருக்குறள் *	184
9	மனிதம், ஆளுமை	ஆசிய ஜோதி	188
		மனிதநேயம்	192
	இன்னுயிர் காப்போம்	முடிவில் ஒரு தொடக்கம்	196
		அணி இலக்கணம்	199
		திருக்குறள்	205

*(*) இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி*

6Z2H3C

மின் நூல்

6ZBS4Z

மதிப்பீடு

இணைய வளங்கள்

6th Std Tamil CBSE FM.indd 9 20-03-2020 16:14:04

ஆறாம் வகுப்பு

தமிழ்

6th Std Tamil CBSE FM.indd 10 20-03-2020 16:14:04

இயல் ஒன்று

தமிழ்த்தேன்




கற்றல் நோக்கங்கள்

- செய்யுளின் பொருளைச் சொந்த நடையில் கூறுதல் – எழுதுதல்
- தமிழ் மொழியின் இனிமையை உணர்ந்து போற்றுதல்
- தமிழ்மொழியின் தனிச்சிறப்புகளைப் பட்டியலிடுதல்
- தன்னம்பிக்கையுடன் தனக்கான இலக்குகளை உருவாக்குதல்
- எழுத்துகளின் வகை, தொகைகளை அறிதல்

6th Std Tamil CBSE Pages 1-24.indd 1 20-03-2020 16:18:21

இயல் ஒன்று

இன்பத்தமிழ்



நமது தாய்மொழியாகிய தமிழைத் தமிழ் இலக்கியங்கள் போற்றுகின்றன. தமிழ் வணக்கம் தற்கால இலக்கிய மரபாக ஆகிவிட்டது. பாரதிதாசன் தமிழைப் பலவாறாகப் போற்றுகிறார். கண்ணே! மணியே! என்று குழந்தையைக் கொஞ்சுவதும் உண்டு. அதுபோல அவர் நம் செந்தமிழுக்குப் பெயர்கள் பல சூட்டி மகிழ்வதைக் காண்போம்.

தமிழுக்கும் அமுதென்றுபேர்! – அந்தத்
*தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்! **

தமிழுக்கு நிலவென்று பேர்! – இன்பத்
*தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்! **

தமிழுக்கு மணமென்று பேர்! – இன்பத்
*தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்! **

தமிழ் எங்கள் இளமைக்குப் பால்! – இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்!

தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! – இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!

தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! – இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!

– பாரதிதாசன்

6ZKN6M

சொல்லும் பொருளும்

நிருமித்த – உருவாக்கிய
சமூகம் – மக்கள் குழு
விளைவு – வளர்ச்சி
அசதி – சோர்வு

6th Std Tamil CBSE Pages 1-24.indd 2 20-03-2020 16:18:21

பாடலின் பொருள்

தமிழுக்கு அமுது என்று பெயர். இன்பம் தரும் அந்தத் தமிழ் எங்கள் உயிருக்கு இணையானது.

தமிழுக்கு நிலவு என்று பெயர். இன்பத்தமிழ் எங்கள் சமூக வளர்ச்சிக்கு அடிப்படையான நீர் போன்றது.

தமிழுக்கு மணம் என்று பெயர். அது எங்கள் வாழ்விற்காகவே உருவாக்கப்பட்ட ஊர் ஆகும்.

தமிழ் எங்கள் இளமைக்குக் காரணமான பால் போன்றது. நல்ல புகழ்மிகுந்த புலவர்களுக்குக் கூர்மையான வேல் போன்ற கருவியாகும்.

தமிழ் எங்கள் உயர்விற்கு எல்லையாகிய வானம் போன்றது. இன்பத்தமிழ் எங்கள் சோர்வை நீக்கி ஒளிரச் செய்யும் தேன் போன்றது.

தமிழ் எங்கள் அறிவுக்குத் துணை கொடுக்கும் தோள் போன்றது. தமிழ் எங்கள் கவிதைக்கு வைரம் போன்ற உறுதி மிக்க வாள் ஆகும்.

நூல் வெளி



பாரதிதாசனின் இயற்பெயர் சுப்புரத்தினம். பாரதியாரின் கவிதைகள் மீது கொண்ட பற்றின் காரணமாகத் தம் பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார். தம் கவிதைகளில் பெண்கல்வி, கைம்பெண் மறுமணம், பொதுவுடைமை, பகுத்தறிவு முதலான புரட்சிகரமான கருத்துகளைப் பாடுபொருளாகப் பாடியுள்ளார். எனவே, இவர் புரட்சிக்கவி என்று போற்றப்படுகிறார். இவர் பாவேந்தர் என்றும் சிறப்பிக்கப்படுகிறார். இப்பாடல், 'பாரதிதாசன் கவிதைகள்' என்ற நூலில் 'தமிழ்' என்னும் தலைப்பின்கீழ் இடம்பெற்றுள்ளது.



கற்பவை கற்றபின்

1. இன்பத்தமிழ் என்ற பாடலை இனிய ஓசையுடன் பாடுக.
2. தமிழை அமுது, நிலவு, மணம் என்று பெயரிட்டு அழைப்பது பற்றி வகுப்பறையில் கலந்துரையாடுக.
3. தமிழுக்கு நீங்கள் சூட்ட விரும்பும் பெயர்களைப் பட்டியலிடுக.
4. தமிழ்க் கவிதைகள், பாடல்களைப் படித்து மகிழ்க.

(எ.கா.)

தமிழே உயிரே வணக்கம்
தாய்பிள்ளை உறவம்மா உனக்கும் எனக்கும்
அமிழ்தே நீ இல்லை என்றால்
அத்தனையும் வாழ்வில் கசக்கும் புளிக்கும்
தமிழே உன்னை நினைக்கும்
தமிழன் என் நெஞ்சம் இனிக்கும் இனிக்கும்

– காசி ஆனந்தன்

6th Std Tamil CBSE Pages 1-24.indd 3 20-03-2020 16:18:21

மதிப்பீடு

78KEZS

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஏற்றத் தாழ்வற்ற ------ அமைய வேண்டும்

அ) சமூகம் ஆ) நாடு இ) வீடு ஈ) தெரு

2. நாள் முழுவதும் வேலை செய்து களைத்தவர்க்கு ------ ஆக இருக்கும்

அ) மகிழ்ச்சி ஆ) கோபம் இ) வருத்தம் ஈ) அசதி

3. நிலவு + என்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ---------

அ) நிலயென்று ஆ) நிலவென்று இ) நிலவன்று ஈ) நிலவுஎன்று

4. தமிழ் + எங்கள் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ---------

அ) தமிழங்கள் ஆ) தமிழெங்கள் இ) தமிழுங்கள் ஈ) தமிழ்எங்கள்

5. 'அமுதென்று' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ---------

அ) அமுது + தென்று ஆ) அமுது + என்று இ) அமுது + ஒன்று ஈ) அமு + தென்று

6. 'செம்பயிர்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ---------

அ) செம்மை + பயிர் ஆ) செம் + பயிர் இ) செமை + பயிர் ஈ) செம்பு + பயிர்

இன்பத்தமிழ் – பாடலின் கருத்துக்கு ஏற்றபடி பொருத்துக.

1. விளைவுக்கு – பால்
2. அறிவுக்கு – வேல்
3. இளமைக்கு – நீர்
4. புலவர்க்கு – தோள்

ஒத்த ஓசையில் முடியும் (இயைபு) சொற்களை எடுத்து எழுதுக.

(எ.கா.) பேர் – நேர்

குறுவினா

1. பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் யாவை?
2. நீங்கள் தமிழை எதனோடு ஒப்பிடுவீர்கள்?

சிறுவினா

1. இன்பத் தமிழ் – பாடலில் உங்களுக்குப் பிடித்த அடிகள் இரண்டனை எழுதுக.
2. சமூக வளர்ச்சிக்கும் நீருக்கும் உள்ள தொடர்பு யாது?

சிந்தனை வினா

வேல் என்பது ஓர் ஆயுதம். தமிழ் ஏன் வேலுடன் ஒப்பிடப்படுகிறது?

6th Std Tamil CBSE Pages 1-24.indd 4 20-03-2020 16:18:21

கவிதைப்பேழை

இயல் ஒன்று

தமிழ்க்கும்மி

நுழையும்முன்

கூட்டமாகக்கூடிக் கும்மியடித்துப் பாடி ஆடுவது மகிழ்ச்சியான அனுபவம். கும்மியில் தமிழைப் போற்றிப்பாடி ஆடுவது பெரும் மகிழ்ச்சி தருவதாகும். வாருங்கள்! தமிழின் பெருமையை வாயாரப் பேசலாம்; காதாரக் கேட்கலாம்; இசையோடு பாடலாம்; கும்மி கொட்டி ஆடலாம்.

78UB2F

கொட்டுங்கடி கும்மி கொட்டுங்கடி இளங்
கோதையரே கும்மி கொட்டுங்கடி – நிலம்
எட்டுத் திசையிலும் செந்தமிழின் புகழ்
எட்டிடவே கும்மி கொட்டுங்கடி!

ஊழி பலநூறு கண்டதுவாம் அறிவு
ஊற்றெனும் நூல்பல கொண்டதுவாம் – பெரும்
ஆழிப் பெருக்கிற்கும் காலத்திற்கும் முற்றும்
அழியாமலே நிலை நின்றதுவாம்!

பொய் அகற்றும் உள்ளப் பூட்டறுக்கும் – அன்பு
பூண்டவரின் இன்பப் பாட்டிருக்கும் – உயிர்
மெய்புகட்டும் அறமேன்மை கிட்டும் இந்த
மேதினி வாழ்வழி காட்டிருக்கும் !

– பெருஞ்சித்திரனார்



சொல்லும் பொருளும்

ஆழிப் பெருக்கு	–	கடல் கோள்	ஊழி	–	நீண்டதொருகாலப்பகுதி
மேதினி	–	உலகம்	உள்ளப்பூட்டு	–	உள்ளத்தின் அறியாமை

6th Std Tamil CBSE Pages 1-24.indd 5 20-03-2020 16:18:22

பாடலின் பொருள்

இளம்பெண்களே! தமிழின் புகழ் எட்டுத்திசைகளிலும் பரவிடும் வகையில் கைகளைக் கொட்டிக் கும்மியடிப்போம்.

பல நூறு ஆண்டுகளைக் கண்டது தமிழ்மொழி. அறிவு ஊற்றாகிய நூல்கள் பலவற்றைக் கொண்ட மொழி. பெரும் கடல் சீற்றங்கள், கால மாற்றங்கள் ஆகிய எவற்றாலும் அழியாமல் நிலைத்திருக்கும் மொழி.

தமிழ், பொய்யை அகற்றும் மொழி; அது மனத்தின் அறியாமையை நீக்கும் மொழி; அன்புடைய பலரின் இன்பம் தரும் பாடல்கள் நிறைந்த மொழி; உயிர் போன்ற உண்மையை ஊட்டும் மொழி ; உயர்ந்த அறத்தைத் தரும் மொழி. இந்த உலகம் சிறந்து வாழ்வதற்கான வழிகளையும் காட்டும் மொழி தமிழ்மொழி .

நூல் வெளி



பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் மாணிக்கம். இவர் பாவலரேறு என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறார். கனிச்சாறு, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, நூறாசிரியம் முதலான நூல்களை இயற்றியுள்ளார். தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகிய இதழ்களை நடத்தினார். தனித்தமிழையும் தமிழுணர்வையும் பரப்பிய பாவலர் இவர்.

இப்பாடல் கனிச்சாறு என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது. இந்நூல் எட்டுத் தொகுதிகளாக வெளிவந்துள்ளது. இது தமிழுணர்வு நிறைந்த பாடல்களைக் கொண்டது.

கற்பவை கற்றபின்

1. *தமிழ்க்கும்மி பாடலை இசையோடு பாடி மகிழ்க.*

2. *பின்வரும் கவிதை அடிகளைப் படித்து மகிழ்க.*

வான்தோன்றி வளி தோன்றி நெருப்புத் தோன்றி
மண் தோன்றி மழை தோன்றி மலைகள் தோன்றி
ஊன் தோன்றி உயிர் தோன்றி உணர்வு தோன்றி
ஒளி தோன்றி ஒலி தோன்றி வாழ்ந்த அந்நாள்
தேன் தோன்றியது போல மக்கள் நாவில்
செந்தமிழே! நீ தோன்றி வளர்ந்தாய்! வாழி!

– வாணிதாசன்

6th Std Tamil CBSE Pages 1-24.indd 6 20-03-2020 16:18:22

மதிப்பீடு

794743

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தாய் மொழியில் படித்தால் ------ அடையலாம்

அ) பன்மை ஆ) மேன்மை இ) பொறுமை ஈ) சிறுமை

2. தகவல் தொடர்பு முன்னேற்றத்தால் ------ சுருங்கிவிட்டது

அ) மேதினி ஆ) நிலா இ) வானம் ஈ) காற்று

3. 'செந்தமிழ்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_____

அ) செந் + தமிழ் ஆ) செம் + தமிழ் இ) சென்மை + தமிழ் ஈ) செம்மை + தமிழ்

4. 'பொய்யகற்றும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_____

அ) பொய் + அகற்றும் ஆ) பொய் + கற்றும்

இ) பொய்ய + கற்றும் ஈ) பொய் + யகற்றும்

5. பாட்டு+ இருக்கும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ---------

அ) பாட்டிருக்கும் ஆ) பாட்டுருக்கும் இ) பாடிருக்கும் ஈ) பாடியிருக்கும்

6. எட்டு + திசை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ---------

அ) எட்டுத்திசை ஆ) எட்டிதிசை இ) எட்டுதிசை ஈ) எட்டிஇசை

நயம் உணர்ந்து எழுதுக.

1. பாடல் அடிகளில் முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் (மோனை) சொற்களை எடுத்து எழுதுக.
2. பாடல் அடிகளில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் (எதுகை) சொற்களை எடுத்து எழுதுக.
3. பாடல் அடிகளில் இறுதி எழுத்து ஒன்றுபோல் வரும் (இயைபு) சொற்களை எடுத்து எழுதுக.

குறுவினா

1. தமிழ் மொழியின் செயல்களாகக் கவிஞர் கூறுவன யாவை?
2. செந்தமிழின் புகழ் எங்கெல்லாம் பரவ வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?

சிறுவினா

1. கால வெள்ளத்தை எதிர்த்து நிற்கும் மொழி தமிழ் என்று கவிஞர் கூறுவதன் காரணம் என்ன?
2. தமிழ்க் கும்மி பாடலின்வழி நீங்கள் அறிந்துகொண்டவற்றை உம் சொந்த நடையில் எழுதுக.

சிந்தனை வினா


தமிழ் மொழி அறியாமையை எவ்வாறு அகற்றும்?

6th Std Tamil CBSE Pages 1-24.indd 7 20-03-2020 16:18:22

இயல் ஒன்று

வளர்தமிழ்

79D35Q



மூத்த தமிழ்மொழி என்றும் இளமையானது; எளிமையானது; இனிமையானது; வளமையானது; காலத்திற்கேற்பத் தன்னைத் தகுதிப்படுத்திக்கொள்வது; நினைக்கும்போதே நெஞ்சில் இனிப்பது; நம் வாழ்வைச் செழிக்கச் செய்வது; உலகச் செம்மொழிகளுள் ஒன்றாக விளங்கும் தமிழ்மொழியின் சிறப்புகளை அறியலாம் வாருங்கள்.

மனித இனப் பரிணாம வளர்ச்சியின் சிறப்புகளுள் ஒன்று மொழி. மனிதரைப் பிற உயிரினங்களிடம் இருந்து வேறுபடுத்தியும் மேம்படுத்தியும் காட்டுவது மொழி. மொழி, நாம் சிந்திக்க உதவுகிறது. சிந்தித்ததை வெளிப்படுத்தவும் உதவுகிறது. பிறர் கருத்தை நாம் அறிய உதவுவதும் மொழியே. உலகில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன. இவற்றுள் சில மொழிகள் மட்டுமே பேச்சு வடிவம், எழுத்து வடிவம் ஆகிய இரண்டையும் பெற்றுள்ளன.

உலக மொழிகளுள் பலவற்றுள் இலக்கண, இலக்கியவளம் பெற்றுத் திகழும் மொழிகள் மிகச்சிலவே. அவற்றுள் செம்மை மிக்க மொழி என ஏற்றுக் கொள்ளப்பட்டவை சில மொழிகளே. தமிழ்மொழி அத்தகு சிறப்பு மிக்க செம்மொழியாகும்.


தமிழ் இலக்கியங்கள் இனிமையானவை. ஓசை இனிமை, சொல் இனிமை, பொருள் இனிமை கொண்டவை. பல மொழிகள் கற்ற கவிஞர் பாரதியார்,

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்

என்று தமிழ்மொழியின் இனிமையை வியந்து பாடுகிறார்.

மூத்தமொழி

என்று பிறந்தவள் என்று உணராத
இயல்பினளாம் எங்கள் தாய்!



என்று பாரதத்தாயின் தொன்மையைப் பற்றிப் பாரதியார் கூறிய கருத்து தமிழ்த்தாய்க்கும் பொருந்துவதாக உள்ளது.

சாலைகள் தோன்றிய பிறகே சாலை விதிகள் தோன்றியிருக்கும். அதுபோல இலக்கியம் தோன்றிய பிறகே அதற்குரிய இலக்கண விதிகள் தோன்றியிருக்க வேண்டும். தொல்காப்பியம் தமிழில் நமக்குக்

6th Std Tamil CBSE Pages 1-24.indd 8 20-03-2020 16:18:23



கிடைத்துள்ள மிகப் பழைமையான இலக்கண நூல் ஆகும். அப்படி என்றால் அதற்கும் முன்னதாகவே தமிழில் இலக்கிய நூல்கள் இருந்திருக்க வேண்டும் அல்லவா? இதனைக் கொண்டு தமிழ் மிகவும் தொன்மையான மொழி என்பதை உணரலாம்.

எளிய மொழி

தமிழ்மொழி பேசவும் படிக்கவும் எழுதவும் உகந்த மொழி.

உயிரும் மெய்யும் இணைவதால் தோன்றுபவை உயிர்மெய் எழுத்துகள். உயிர் எழுத்துகள், மெய் எழுத்துகள் ஆகியவற்றின் ஒலிப்பு முறைகளை அறிந்து கொண்டால் உயிர்மெய் எழுத்துகளை எளிதாக ஒலிக்கலாம். எழுத்துகளைக் கூட்டி ஒலித்தாலே தமிழ் படித்தல் இயல்பாக நிகழ்ந்துவிடும்.

(எ.கா.) அ + மு + து = அமுது.

தமிழ்மொழியை எழுதும் முறையும் மிக எளிதுதான். இதற்கேற்ப, தமிழ் எழுத்துகள் பெரும்பாலும் வலஞ்சுழி எழுத்துகளாகவே அமைந்துள்ளன.

(எ.கா.) **வலஞ்சுழி எழுத்துகள்** – அ, எ, ஒள, ண, ஞ

இடஞ்சுழி எழுத்துகள் – ட , ய, ழ

தெரிந்து தெளிவோம்

சொல்	முதலில் ஆளப்படும் இலக்கியம்	மேற்கோள்
தமிழ்	தொல்காப்பியம்	தமிழென் கிளவியும் அதனோ ரற்றே– தொல் : 386
தமிழ்நாடு	சிலப்பதிகாரம் வஞ்சிக்காண்டம்	இமிழ்கடல் வேலியைத் தமிழ்நாடு ஆக்கிய இதுநீ கருதினை ஆயின் – வஞ்சி : 165
தமிழன்	அப்பர் தேவாரம்	... தமிழன் கண்டாய் – திருத்தாண்டகம் : 23


சீர்மை மொழி

சீர்மை என்பது ஒழுங்கு முறையைக் குறிக்கும் சொல். தமிழ் மொழியின் பலவகைச் சீர்மைகளுள் அதன் சொற்சிறப்பு குறிப்பிடத்தக்கது.

உயர்திணை, அஃறிணை என இருவகைத் திணைகளை அறிவோம். உயர்திணையின் எதிர்ச்சொல் தாழ்திணை என அமையவேண்டும். ஆனால் தாழ்திணை என்று கூறாமல் அஃறிணை (அல் + திணை = உயர்வு அல்லாத திணை) என்று பெயர் இட்டனர் நம் முன்னோர்.

பாகற்காய் கசப்புச்சுவை உடையது. அதனைக் கசப்புக்காய் என்று கூறாமல், இனிப்பு அல்லாத காய் பாகற்காய் (பாகு + அல் + காய்) என வழங்கினர். இவ்வாறு பெயரிடுவதிலும் சீர்மை மிக்கது தமிழ் மொழி.

6th Std Tamil CBSE Pages 1-24.indd 9 20-03-2020 16:18:23



வளமை மொழி

தமிழ் வளமை மிக்க மொழி. தொல்காப்பியம், நன்னூல் உள்ளிட்ட இலக்கண நூல்கள் மிகுந்தது தமிழ் மொழி. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய சங்க இலக்கியங்களைக் கொண்டது; திருக்குறள், நாலடியார் முதலிய அறநூல்கள் பலவும் நிறைந்தது; சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காப்பியங்களைக் கொண்டது. இவ்வாறு இலக்கிய, இலக்கண வளம் நிறைந்தது தமிழ் மொழி.

தமிழ் மொழி சொல்வளம் மிக்கது. ஒரு பொருளின் பல நிலைகளுக்கும் வெவ்வேறு பெயர் சூட்டுவது தமிழ் மொழியின் சிறப்பாகும். சான்றாக, பூவின் ஏழுநிலைகளுக்கும் தோன்றுவது முதல் உதிர்வது வரை தனித்தனிப் பெயர்கள்தமிழில் உண்டு.

ஓர் எழுத்தே ஒரு சொல்லாகிப் பொருள்தருவதும் உண்டு. ஒரு சொல் பல பொருளைக் குறித்து வருவதும் உண்டு. சான்றாக 'மா' – என்னும் ஒரு சொல் மரம், விலங்கு, பெரிய, திருமகள், அழகு, அறிவு, அளவு, அழைத்தல், துகள், மேன்மை, வயல், வண்டு போன்ற பல பொருள்களைத் தருகிறது.

வளர்மொழி

தமிழுக்கு முத்தமிழ் என்னும் சிறப்புப் பெயரும் உண்டு. இயல்தமிழ் எண்ணத்தை வெளிப்படுத்தும்; இசைத்தமிழ் உள்ளத்தை மகிழ்விக்கும்; நாடகத்தமிழ் உணர்வில் கலந்து வாழ்வின் நிறைகுறைகளைச் சுட்டிக்காட்டும்.

தமிழில் காலந்தோறும் பல வகையான இலக்கிய வடிவங்கள் புதிது புதிதாக உருவாகி வருகின்றன. துளிப்பா, புதுக்கவிதை, கவிதை, செய்யுள், போன்றன தமிழ்க் கவிதை வடிவங்கள். கட்டுரை, புதினம், சிறுகதை போன்றன உரைநடை வடிவங்கள்.

தற்போது அறிவியல் தமிழ், கணினித்தமிழ் என்று மேலும் மேலும் வளர்ந்து கொண்டே வருகிறது.

தெரிந்து தெளிவோம்

தாவர இலைப் பெயர்கள்	
ஆல், அரசு, மா, பலா, வாழை	இலை
அகத்தி, பசலை, முருங்கை	கீரை
அருகு, கோரை	புல்
நெல், வரகு	தாள்
மல்லி	தழை
சப்பாத்திக் கள்ளி, தாழை	மடல்
கரும்பு, நாணல்	தோகை
பனை, தென்னை	ஓலை
கமுகு (பாக்கு)	கூந்தல்

6th Std Tamil CBSE Pages 1-24.indd 10 20-03-2020 16:18:25

புதுமை மொழி

இன்றைய அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப தமிழில் புதிய புதிய கலைச்சொற்கள் உருவாகி வருகின்றன.

இணையம், முகநூல், புலனம், குரல்தேடல், தேடுபொறி, செயலி, தொடுதிரை முதலிய சொற்களை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். சமூக ஊடகங்களான செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றிலும் பயன்படத்தக்க மொழியாக விளங்குகிறது தமிழ்மொழி.



அறிவியல் தொழில்நுட்ப மொழி

உலகில் எழுத்து வடிவம் பெறாத மொழிகள் பல உள்ளன. இந்நிலையில் தமிழ் வரிவடிவ எழுத்துகள் அறிவியல் தொழில்நுட்பநோக்கிலும் பயன்படுத்தத் தக்கவையாக உள்ளன.

மொழியைக் கணினியில் பயன்படுத்த வேண்டும் என்றால் அது எண்களின் அடிப்படையில் வடிவமைக்கப்படவேண்டும். தொல்காப்பியம், நன்னூல் போன்றவை நாம் படிப்பதற்காக எழுதப்பட்டவை. ஆயினும் அவை கணினி மொழிக்கும் ஏற்ற நுட்பமான வடிவத்தையும் பெற்றுள்ளன.

தமிழ் எண்களை அறிவோம்.

1	2	3	4	5	6	7	8	9	10
க	உ	ங	ச	ரு	சு	எ	அ	கூ	கo



மூத்த மொழியான தமிழ் – கணினி, இணையம் போன்றவற்றில் பயன்படத்தக்க வகையில் புது மொழியாகவும் திகழ்கிறது. இத்தகு சிறப்புமிக்க மொழியைக் கற்பது நமக்குப் பெருமையல்லவா? தமிழ் மொழியின் வளமைக்கும் வளர்ச்சிக்கும் பங்காற்றவேண்டியது நமது கடமையல்லவா?

6th Std Tamil CBSE Pages 1-24.indd 11 20-03-2020 16:18:33

-

இரண்டாயிரம் ஆண்டுகளாக வழக்கில் இருக்கும் சில தமிழ்ச்சொற்கள்.

வ.எண்	சொல்	இடம்பெற்ற நூல்
1.	வேளாண்மை	கலித்தொகை 101, திருக்குறள் 81
2.	உழவர்	நற்றிணை 4
3.	பாம்பு	குறுந்தொகை-239
4.	வெள்ளம்	பதிற்றுப்பத்து-15
5.	முதலை	குறுந்தொகை-324
6.	கோடை	அகநானூறு-42
7.	உலகம்	தொல்காப்பியம், கிளவியாக்கம்- 56 திருமுருகாற்றுப்படை-1
8.	மருந்து	அகநானூறு-147, திருக்குறள் 952
9.	ஊர்	தொல்காப்பியம், அகத்திணையியல் -41
10.	அன்பு	தொல்காப்பியம், களவியல் 110, திருக்குறள் 84
11.	உயிர்	தொல்காப்பியம், கிளவியாக்கம்- 56, திருக்குறள் 955
12.	மகிழ்ச்சி	தொல்காப்பியம், கற்பியல்-142, திருக்குறள் 531
13.	மீன்	குறுந்தொகை 54
14.	புகழ்	தொல்காப்பியம், வேற்றுமையியல் 71
15.	அரசு	திருக்குறள் 554
16.	செய்	குறுந்தொகை 72
17.	செல்	தொல்காப்பியம், 75 புறத்திணையியல்
18.	பார்	பெரும்பாணாற்றுப்படை, 435
19.	ஒழி	தொல்காப்பியம், கிளவியாக்கம் 48
20.	முடி	தொல்காப்பியம், வினையியல் 206

6th Std Tamil CBSE Pages 1-24.indd 12 20-03-2020 16:18:33

கற்பவை கற்றபின்

1. மாற்றங்களுக்கு ஏற்பத் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் மொழி தமிழ் என்பது பற்றிக் கலந்துரையாடுக.
2. தமிழ் பேசத்தெரியாத குடும்பத்தினர் உங்கள் பக்கத்து வீட்டில் உள்ளனர். அவர்களுக்கு நீங்கள் கற்றுத் தர விரும்பும் பத்துத் தமிழ்ச் சொற்களைப் பட்டியலிடுக.
3. வாழ்த்துகளைத் தமிழில் கூறுவோம் (எ.கா.)



பிறந்தநாள் வாழ்த்து

நீண்ட நீண்ட காலம்-நீ, நீடு வாழ வேண்டும்!
வானம் தீண்டும் தூரம்-நீ, வளர்ந்து வாழ வேண்டும்!
அன்பு வேண்டும்! அறிவு வேண்டும்! பண்பு வேண்டும்! பரிவு வேண்டும்!
எட்டுத்திக்கும் புகழ வேண்டும்! எடுத்துக்காட்டு ஆக வேண்டும்!
உலகம் பார்க்க உனது பெயரை, நிலவுத் தாளில் எழுதவேண்டும்!
சர்க்கரைத் தமிழ் அள்ளி, தாலாட்டு நாள் சொல்லி வாழ்த்துகிறோம்!
பிறந்தநாள் வாழ்த்துகள்! பிறந்தநாள் வாழ்த்துகள்!
இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்!

– அறிவுமதி

மதிப்பீடு

79LY7D

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'தொன்மை' என்னும் சொல்லின் பொருள்_____
   அ) புதுமை ஆ) பழமை இ) பெருமை ஈ) சீர்மை
2. 'இடப்புறம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_____
   அ) இடன் + புறம் ஆ) இடை + புறம் இ) இடம் + புறம் ஈ) இடப் + புறம்
3. 'சீரிளமை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_____
   அ) சீர் + இளமை ஆ) சீர்மை + இளமை இ) சீரி + இளமை ஈ) சீற் + இளமை

6th Std Tamil CBSE Pages 1-24.indd 13 20-03-2020 16:18:33

4. சிலம்பு + அதிகாரம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்_____

அ) சிலம்பதிகாரம் ஆ) சிலப்பதிகாரம்

இ) சிலம்புதிகாரம் ஈ) சில பதிகாரம்

5. கணினி + தமிழ் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____

அ) கணினிதமிழ் ஆ) கணினித்தமிழ் இ) கணிணிதமிழ் ஈ) கனினிதமிழ்

6. "தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாடியவர் _____

அ) கண்ணதாசன் ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் ஈ) வாணிதாசன்

7. 'மா' என்னும் சொல்லின் பொருள்_____

அ) மாடம் ஆ) வானம் இ) விலங்கு ஈ) அம்மா

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. நாம் சிந்திக்கவும் சிந்தித்ததை வெளிப்படுத்தவும் உதவுவது .....
2. தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழைமையான இலக்கண நூல் .....
3. மொழியைக் கணினியில் பயன்படுத்த வேண்டும் எனில் அது ..... அடிப்படையில் வடிவமைக்கப்பட வேண்டும்.

சொற்களைச் சொந்தத் தொடரில் அமைத்து எழுதுக.

1. தனிச்சிறப்பு .....
2. நாள்தோறும் .....

குறுவினா

1. தமிழ் ஏன் மூத்தமொழி என்று அழைக்கப்படுகிறது?
2. நீங்கள் அறிந்த தமிழ்க் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

சிறுவினா

1. அஃறிணை, பாகற்காய் ஆகிய சொற்களின் பொருள் சிறப்பு யாது?
2. தமிழ் இனிய மொழி என்பதற்கான காரணம் தருக.
3. தமிழ் மொழியின் சிறப்பைக் குறித்து ஐந்து வரிகளில் எழுதுக.

சிந்தனை வினா

1. தமிழ் மொழி படிக்கவும் எழுதவும் எளியது என்பது பற்றி உங்கள் கருத்து யாது?
2. தமிழ் மொழி வளர்மொழி என்பதை உணர்கிறீர்களா? காரணம் தருக.

6th Std Tamil CBSE Pages 1-24.indd 14 20-03-2020 16:18:33


விரிவானம்

இயல் ஒன்று

கனவு பலித்தது

கடிதம்

79VU91



தமிழில் இயல் உண்டு; இசை உண்டு; நாடகம் உண்டு; இவைமட்டுமல்ல அறிவியலும் உண்டு. தமிழுக்கு அறிவியல் புதிதல்ல. அன்று முதல் இன்று வரை அறிவியல் செய்திகளை இலக்கியங்கள் வாயிலாக வெளியிட்டிருக்கிறார்கள் நம் முன்னோர்கள். இலக்கியங்கள் கூறும் செய்திகளை அறிவோமா!

இடம் : மதுரை
நாள் : 12-05-2017



அன்புள்ள அத்தைக்கு,

வணக்கம். நான் நலம். நீங்கள் நலமா?

என் பள்ளிப்பருவக் கனவு நனவாகி விட்டது. ஆம் அத்தை. இளம் அறிவியல் ஆய்வாளர் பணிக்கு நான் தெரிவு செய்யப்பட்டிருக்கிறேன். நாளை காலை சதீஷ்தவான் விண்வெளி ஆய்வு நிறுவனத்தில் பணியில் சேரவேண்டும். இந்த மகிழ்ச்சியான நேரத்தில் உங்களைத்தான் நினைத்துக் கொள்கிறேன். நான் ஆறாம் வகுப்பு படித்தபோது உங்களுக்கு ஒரு கடிதம் எழுதினேனே! நினைவிருக்கிறதா?

அன்புள்ள அத்தை,

நான் நலம். நீங்கள் நலமா?

வருங்காலத்தில் உங்களைப் போல அறிவியல் துறையில் பணியாற்ற வேண்டும் என்பது என் விருப்பம். நான் அரசுப் பள்ளியில் தமிழ்வழியில் படிக்கிறேன். அது உங்களுக்கும் தெரியும். தமிழில் படித்து அறிவியல் அறிஞர் ஆக முடியாது என்று பலரும் கூறுகிறார்கள். என்னால் சாதிக்க முடியாதா? தமிழில் படித்தால் என் கனவு நிறைவேறுமா? எனக்கு வழிகாட்டுங்கள்.

உங்கள் அன்புக்குரிய,
இன்பவல்லி.



அதன்பிறகு நீங்கள் எனக்குத் தொடர்ந்து பல கடிதங்கள் எழுதினீர்கள். செய்திகள் பலவற்றைக் கூறி ஊக்கம் அளித்துக்கொண்டே இருந்தீர்கள். என் ஐயங்கள் எல்லாவற்றையும் தீர்த்துவைத்தீர்கள். என் கனவுகளுக்கு உரம் ஊட்டியவை உங்களின் கடிதங்களே! அக்கடிதங்களை அறிவுக் கருவூலங்களாக இன்றும் பாதுகாத்து வருகிறேன். என்னுடைய உயர்வுக்குக் காரணமான அவற்றை மீண்டும் மீண்டும் படித்துப் பார்ப்பது வழக்கமாகிவிட்டது.

6th Std Tamil CBSE Pages 1-24.indd 15 20-03-2020 16:18:39



இடம்: சென்னை
நாள்: 04-03-2006

அன்புள்ள இன்சுவை,

இங்கு நான் நலமாக இருக்கிறேன். உன் கடிதம் கிடைத்தது. ஆறாம் வகுப்பிலேயே உன் எதிர்கால இலக்கினை நீ உருவாக்கிக் கொண்டு விட்டாய். மகிழ்ச்சி! தமிழில் படித்தால் சாதிக்க முடியாது என்பது தவறான எண்ணம். சாதனையாளர்கள் பலரும் தங்கள் தாய்மொழியில் படித்தவர்களே! சாதனைக்கு மொழி ஒரு தடையே இல்லை.

நீண்ட நெடுங்காலமாகவே அறிவியல் சிந்தனைகளோடு விளங்கியவர்கள் தமிழர்கள். தமிழ் இலக்கியங்களில் அறிவியல் சிந்தனைகள் பல காணப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றை உன்னுடன் பகிர நினைக்கிறேன்.

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐந்தும் கலந்தது இவ்வுலகம் என்பது அறிவியல் உண்மை. தொல்காப்பியர் தமது தொல்காப்பியம் என்னும் நூலில் இக்கருத்தைக் குறிப்பிட்டுள்ளார். மேலும் உலக உயிர்களை ஓரறிவு முதல் ஆறறிவு வரை வகைப்படுத்தியும் உள்ளார்.

கடல் நீர் ஆவியாகி மேகமாகும். பின்னர் மேகம் குளிர்ந்து மழையாகப் பொழியும். பழந்தமிழ் இலக்கியங்களான முல்லைப்பாட்டு, பரிபாடல், திருக்குறள், கார்நாற்பது திருப்பாவை முதலிய நூல்களில் இந்த அறிவியல் செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

திரவப் பொருள்களை எவ்வளவு அழுத்தினாலும் அவற்றின் அளவைச் சுருக்க முடியாது என்ற அறிவியல் கருத்து

ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
நாழி முகவாது நால் நாழி

என ஔவையார் பாடலில் கூறப்பட்டுள்ளது.

நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்.
– தொல்காப்பியம்

போர்க்களத்தில் மார்பில் புண்படுவது இயல்பு. வீரர் ஒருவரின் காயத்தை வெண்ணிற ஊசியால் தைத்த செய்தி பதிற்றுப்பத்து என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது.

கடல்நீர் முகந்த கமஞ்சூழ் எழிலி....
– கார்நாற்பது

சுறாமீன் தாக்கியதால் ஏற்பட்ட புண்ணை, நரம்பினால் தைத்த செய்தியும் நற்றிணை என்னும் நூலில் காணப்படுகிறது. முற்கால இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள அறுவை மருத்துவத்துக்கான இன்றைய கூறுகள் வியப்பளிக்கின்றன அல்லவா?

நெடு வெள்ளூசி நெடு வசி பரந்த வடு.
– பதிற்றுப்பத்து

தொலைவில் உள்ள பொருளின் உருவத்தை அருகில் தோன்றச் செய்ய முடியும். அறிவியல் அறிஞர் கலீலியோ நிறுவிய கருத்து இது. இக்கருத்து திருவள்ளுவமாலை என்னும் நூலில் கபிலர் எழுதிய பாடலில் இடம்பெற்றுள்ளது.

கோட்சுறா எறிந்தெனச் சுருங்கிய
நரம்பின் முடிமுதிர் பரதவர்
– நற்றிணை

6th Std Tamil CBSE Pages 1-24.indd 16 20-03-2020 16:18:48

திணையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட
பனையளவு காட்டும்

– திருவள்ளுவமாலை



தற்காலத்தில் அறிவியல் துறையில் மட்டுமன்றி அனைத்துத் துறைகளிலும் தமிழர்கள் கோலோச்சி வருகிறார்கள்.

சாதனையாளர்களின் வாழ்க்கை நிகழ்வுகளை அறிந்துகொள். நமது ஊர் நூலகம் உனக்கு மிகவும் உதவியாக இருக்கும். நூல் வாசிப்பு உன் சிந்தனைக்கு வளம் சேர்க்கும். அறிவியல் மனப்பான்மை பெருகும்.

தமிழாலும் தமிழராலும் எந்தத் துறையிலும் எதையும் சாதிக்க முடியும். தொடர்ந்து முயற்சி செய். நீ வெல்வாய்! உன் கனவு நனவாக வாழ்த்துகிறேன்.

அன்புடன் உன் அத்தை,

நறுமுகை.

தெரிந்து தெளிவோம்

தமிழில் பயின்ற அறிவியல் அறிஞர்கள்

- மேனாள் குடியரசுத் தலைவர் மேதகு டாக்டர் ஆ. ப. ஜெ. அப்துல்கலாம்
- இஸ்ரோ அறிவியல் அறிஞர் டாக்டர் மயில்சாமி அண்ணாதுரை.
- இஸ்ரோவின் தலைவர் டாக்டர் கை. சிவன்.

நீங்கள் கூறியபடி நூல்கள் பலவற்றையும் தொடர்ந்து படித்து வந்தேன். உங்கள் அன்பு என் எண்ணம் நிறைவேற உறுதுணையாக விளங்கியது. தமிழ் இலக்கியங்களும் பிற நூல்களும் எனக்கு நம்பிக்கை ஊட்டின. இவற்றை நான் என்றும் மறக்க மாட்டேன். சமுதாயத்திற்கு என்னால் இயன்ற நன்மைகளைச் செய்வேன். அதற்கேற்பப் பணியாற்றுவேன். நன்றி அத்தை.

அன்புடன்,
இன்சுவை.

கற்பவை கற்றபின்

1. இக்கடிதத்திற்கு நீங்கள் விரும்பும் வகையில் வேறொரு தலைப்பிடுக.
2. உங்கள் எதிர்காலக் கனவு குறித்து ஒரு கடிதம் எழுதுக.
3. இன்சுவையின் எண்ணம் நிறைவேறக் காரணங்களாக நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள்?
4. 'கனவு பலித்தது' என்ற தலைப்பு இக்கடிதத்திற்கு எவ்வாறு பொருந்துகிறது என்பதனை விளக்குக.

மதிப்பீடு

அத்தையின் கடிதக் கருத்துகளைச் சுருக்கி எழுதுக.

7A5QAN

6th Std Tamil CBSE Pages 1-24.indd 17 20-03-2020 16:18:48

கற்கண்டு

இயல் ஒன்று

தமிழ் எழுத்துகளின் வகையும் தொகையும்

உலகில் உள்ள ஒவ்வொரு பொருளையும் மனிதன் உற்றுநோக்கினான். அவற்றின் இயல்புகளை அறிந்துகொண்டான். இவ்வாறே மொழியையும் ஆழ்ந்து கவனித்தான். மொழியை எவ்வாறு பேசவும் எழுதவும் வேண்டும் என்பதை வரையறை செய்தான். அந்த வரையறைகளே இலக்கணம் எனப்படும்.

தமிழ் மொழியின் இலக்கண வகைகள் ஐந்து.

- எழுத்து இலக்கணம்
- சொல் இலக்கணம்
- பொருள் இலக்கணம்
- யாப்பு இலக்கணம்
- அணி இலக்கணம்



ஐந்துவகை இலக்கணம்

7AELCB

எழுத்து

ஒலி வடிவமாக எழுப்பப்படுவதும் வரிவடிவமாக எழுதப்படுவதும் எழுத்து எனப்படுகிறது.

உயிர் எழுத்துகள்

உயிருக்கு முதன்மையானது காற்று. இயல்பாகக் காற்று வெளிப்படும்போது உயிர் எழுத்துகள் பிறக்கின்றன. வாயைத் திறத்தல், உதடுகளை விரித்தல், உதடுகளைக் குவித்தல் ஆகிய எளிய செயல்பாடுகளால் 'அ' முதல் 'ஔ' வரையுள்ள பன்னிரண்டு உயிர் எழுத்துகளும் பிறக்கின்றன.



ஒலித்துப் பார்த்து உணர்வோம்!

அ, இ, உ, எ, ஒ - ஆகிய ஐந்தும் குறுகி ஒலிக்கின்றன.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ - ஆகிய ஏழும் நீண்டு ஒலிக்கின்றன.



6th Std Tamil CBSE Pages 1-24.indd 18 20-03-2020 16:19:00

• குறுகி ஒலிக்கும்  ஆகிய ஐந்தும் **குறில் எழுத்துகள்.**

• நீண்டு ஒலிக்கும்  ஆகிய ஏழும் **நெடில் எழுத்துகள்.**

ஒவ்வோர் எழுத்தையும் உச்சரிப்பதற்குக் கால அளவு உண்டு.

எழுத்தை உச்சரிக்க எடுத்துக்கொள்ளும் கால அளவைக் கொண்டே குறில், நெடில் என வகைப்படுத்துகிறோம்.


மாத்திரை

மாத்திரை என்பது இங்குக் கால அளவைக் குறிக்கிறது. ஒரு மாத்திரை என்பது ஒருமுறை கண் இமைக்கவோ ஒருமுறை கைநொடிக்கவோ ஆகும் கால அளவாகும்.

- குறில் எழுத்தை ஒலிக்கும் காலஅளவு – 1 மாத்திரை
- நெடில் எழுத்தை ஒலிக்கும் காலஅளவு – 2 மாத்திரை

மெய்யெழுத்துகள்

மெய் என்பது உடம்பு எனப் பொருள்படும். மெய் எழுத்துகளை ஒலிக்க உடல் இயக்கத்தின் பங்கு இன்றியமையாதது. க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் ஆகிய பதினெட்டும் மெய்யெழுத்துகள் ஆகும்.



வல்லினம்
க், ச், ட், த், ப், ற்

மெய் எழுத்துகள் ஒலிக்கும் கால அளவு – அரை மாத்திரை



மெல்லினம்
ங், ஞ், ண், ந், ம், ன்



இடையினம்
ய், ர், ல், வ், ழ், ள்

6th Std Tamil CBSE Pages 1-24.indd 19 20-03-2020 16:19:02

ஒலித்துப் பார்த்து உணர்வோம்!

- க், ச், ட், த், ப், ற் – ஆகிய ஆறும் வன்மையாக ஒலிக்கின்றன.
- ங், ஞ், ண், ந், ம், ன் – ஆகிய ஆறும் மென்மையாக ஒலிக்கின்றன.
- ய், ர், ல், வ், ழ், ள் – ஆகிய ஆறும் வன்மையாகவும் இல்லாமல், மென்மையாகவும் இல்லாமல் இரண்டிற்கும் இடைப்பட்டு ஒலிக்கின்றன.

உயிர்மெய்

மெய் எழுத்துகள் பதினெட்டுடன் உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் சேர்வதால் தோன்றும் 216 எழுத்துகளும் உயிர்மெய் எழுத்துகள் ஆகும்.

மெய்யுடன் உயிர்க்குறில் சேர்ந்தால் உயிர்மெய்க் குறில் தோன்றுகிறது. மெய்யுடன் உயிர் நெடில் சேர்ந்தால் உயிர்மெய் நெடில் தோன்றுகிறது. ஆகவே உயிர்மெய் எழுத்துகளையும் உயிர்மெய்க் குறில், உயிர்மெய் நெடில் என இருவகைப்படுத்தலாம்.

ஆய்த எழுத்து

தமிழ் மொழியில் உயிர், மெய், உயிர்மெய் எழுத்துகள் தவிர தனி எழுத்து ஒன்றும் உள்ளது. அது ஃ என்னும் ஆய்த எழுத்தாகும்.

ஆய்த எழுத்தை ஒலிக்க ஆகும் காலஅளவு
அரை மாத்திரை



கற்பவை கற்றபின்

உங்கள் பெயர் மற்றும் உங்கள் நண்பர்களது பெயர்களுக்கான மாத்திரை அளவைக் கண்டுபிடி.

(எ.கா.) கபிலர் – 1 + 1 + 1 + ½ = 3½



மதிப்பீடு

கொடுக்கப்பட்டுள்ள மாத்திரை அளவுக்கேற்பச் சொற்களை எழுதுக

1. உயிரெழுத்தில் தொடங்கும் இரண்டு மாத்திரை அளவுள்ள சொல் ----------
2. இரண்டு மாத்திரை அளவுள்ள ஓரெழுத்துச்சொல் ----------
3. ஆய்த எழுத்து இடம்பெறும் இரண்டரை மாத்திரை அளவுள்ள சொல் -------

குறுவினா

1. தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. மெய்யெழுத்துகளை மூவகை இனங்களாக வகைப்படுத்தி எழுதுக.
3. தமிழ் எழுத்துகளுக்குரிய மாத்திரை அளவுகளைக் குறிப்பிடுக.

6th Std Tamil CBSE Pages 1-24.indd 20 20-03-2020 16:19:02

மொழியை ஆள்வோம்!

7ANHDY

கேட்டும் பார்த்தும் உணர்க.

1. இனிய தமிழ்ப் பாடல்களைக் கேட்டு மகிழ்க.
2. தமிழறிஞர்களின் வானொலி, தொலைக்காட்சி உரைகளைக் கேட்டு மகிழ்க.

கீழ்க்காணும் தலைப்புகளில் ஒரு நிமிடம் பேசுக.

- தமிழ் இனிது
- தமிழ் எளிது
- தமிழ் புதிது

சொல்லக் கேட்டு எழுதுக.

இன்பத்தமிழ்	தொல்காப்பியம்	சுப்புரத்தினம்	பன்னிரண்டு
பாவேந்தர்	அஃறிணை	செந்தமிழ்	ஆராய்ச்சியாளர்
உயிரினங்கள்	கருவூலங்கள்		

கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

விரிவான கருத்தைச் சுருக்கிச் சொல்வதே பழமொழியின் சிறப்பு. சான்றாக, சுத்தம் சோறு போடும் என்னும் பழமொழி தரும் பொருளைக் காண்போம். சுத்தம் நோயற்ற வாழ்வைத் தரும். உடல்நலமே உழைப்புக்கு அடிப்படை. உழைத்துத் தேடிய பொருளால் உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றைப் பெறுகிறோம். இவை அனைத்திற்கும் சுத்தமே அடிப்படை. இவ்விரிந்த கருத்து சிறு அடிக்குள் அடங்கியுள்ளது.

1. பழமொழியின் சிறப்பு _____ சொல்வது

அ) விரிவாகச் ஆ) சுருங்கச் இ) பழைமையைச் ஈ) பல மொழிகளில்

2. நோயற்ற வாழ்வைத் தருவது _____

3. உடல்நலமே _____ அடிப்படை

4. உழைத்துத் தேடிய பொருளால் நாம் பெறுவன யாவை?

5. பத்திக்குப் பொருத்தமான தலைப்புத் தருக.

பிறமொழிக் கலப்பின்றிப் பேசுக.

1. எங்க ஸ்கூல்லே சுற்றுலா கூட்டிட்டுப் போறாங்க.
2. பெற்றோரிடம் பர்மிசன் லெட்டர் வாங்கி வரச் சொன்னாங்க.

ஆய்ந்தறிக.

பெயரில் தலைப்பெழுத்தைப் பலவகையாக எழுதுகின்றோம்.

S. இனியன், எஸ். இனியன், ச. இனியன் – இவற்றுள் சரியானது எது? ஏன்?

கடிதம் எழுதுக.

விடுப்பு விண்ணப்பம்

6th Std Tamil CBSE Pages 1-24.indd 21 20-03-2020 16:19:02



மொழியோடு விளையாடு

திரட்டுக.

'மை' என்னும் எழுத்தில் முடியும் சொற்களின் பட்டியல் தயாரிக்க.

சொல் வளம் பெறுவோம்.

1. கீழ்க்காணும் சொற்களில் உள்ள எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குக.

(எ.கா) **கரும்பு** – **கரு, கம்பு**

கவிதை – _____

பதிற்றுப்பத்து – _____

பரிபாடல் – _____

2. இரண்டு சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.

நூல் மொழி கோல் மீன் நீதி எழுது

கண் வெளி தமிழ் மணி மாலை விண்

(எ.கா.) விண்மீன்

பொருத்தமான சொற்களைக் கொண்டு தொடர்களை நிரப்புக.

அழகு, ஏற்றம், இன்பம், ஊக்கம், இனிமை, ஆற்றல், ஈடு, இசை, உணர்வு, ஏடுகள், உரிமை, என்றும், எளிதாய், உவகை, , அன்பு

(எ.கா.)

அ – அன்பு தருவது தமிழ்

ஆ – _____ தருவது தமிழ்

இ – _____ தருவது தமிழ்

ஈ – _____ இல்லாதது தமிழ்

உ – _____ தருவது தமிழ்

ஊ – _____ தருவது தமிழ்

எ – _____ வேண்டும் தமிழ்

ஏ – _____ தருவது தமிழ்

6th Std Tamil CBSE Pages 1-24.indd 22 20-03-2020 16:19:03

கட்டங்களில் மறைந்துள்ள பெயர்களைக் கண்டுபிடிக்க.

பா	ர	தி	தா	ச	ன்	க
ர	ம்	தா	ர	சு	ச	ம்
தி	ரு	வ	ள்	ளு	வ	ர்
யா	பா	தை	ஔ	வை	யா	ர்
ர்	ன்	ச	தா	ணி	வா	ன்

1. _____

2. _____

3. _____

4. _____

5. _____



நிற்க அதற்குத் தக...

என் பொறுப்புகள்...

1. நான் தாய்மொழியிலேயே பேசுவேன்.
2. தாய்மொழியிலேயே கல்வி கற்பேன்.
3. தமிழ்ப்பெயர்களையே சூட்டுவேன்.

கலைச் சொல் அறிவோம்

வலஞ்சுழி	–	Clock wise	இடஞ்சுழி	–	Anti Clock wise
இணையம்	–	Internet	குரல்தேடல்	–	Voice Search
தேடுபொறி	–	Search engine	தொடுதிரை	–	Touch Screen
முகநூல்	–	Facebook	செயலி	–	App
புலனம்	–	Whatsapp	மின்னஞ்சல்	–	E-mail



இணையத்தில் காண்க

உனக்குப் பிடித்த தமிழ்க் கவிஞர் பற்றிய செய்திகளை இணையத்தில் தேடி அறிக.

6th Std Tamil CBSE Pages 1-24.indd 23 20-03-2020 16:19:03

இணையச் செயல்பாடுகள்

பிழை



படி 1

கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்திப் பிழை என்னும் செயலியைப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.

படி 2

செயலியைத் திறந்தவுடன் நல்வரவு என்னும் திரையில் play குறியீட்டு வடிவில் இருக்கும் பொத்தானை அழுத்தவும்.

படி 3

திரையில் தோன்றும் வார்த்தைகளில் ஒற்று அல்லது எழுத்துப் பிழை உண்டா? இல்லையா? என்பதைத் தெரிவு செய்க.

செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :

படி 1



படி 2



படி 3



செயல்பாட்டிற்கான உரலி

https://play.google.com/store/apps/details?id=com.jishyut.pizhai&hl=en

6th Std Tamil CBSE Pages 1-24.indd 24 20-03-2020 16:19:04

இயல் இரண்டு

இயற்கை இன்பம்



கற்றல் நோக்கங்கள்

- இயற்கையின் சிறப்புகளை அறிதல்
- இயற்கையைப் பாதுகாக்கும் வழிமுறைகள் பற்றி விவாதித்தல்
- உழவுத் தொழிலுக்கு மழை இன்றியமையாதது என்பதை உணர்தல்
- மழை பெய்யாவிட்டால் ஏற்படும் விளைவுகளை வகுப்பறையில் விவாதித்தல்
- பறவைகளுக்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையேயான தொடர்பை அறிதல்

6th Std Tamil CBSE Pages 25-50.indd 25 20-03-2020 16:26:12

இயல் இரண்டு

சிலப்பதிகாரம்

7AXDFL

நுழையும்முன்

நம்மைச் சுற்றிலும் எங்குப் பார்த்தாலும் இயற்கையின் அழகு கொட்டிக் கிடக்கிறது. கடலும், மலையும், கதிரும், நிலவும் மழையும் பனியும் இயற்கையின் கொடைகள் அல்லவா? அவற்றைக் கண்டு மகிழாதவர் உண்டோ? நிலவின் குளிர்ச்சியையும் கதிரவனின் வெம்மையையும், மழையின் பயனையும் சிலப்பதிகாரம் போற்றுகிறது.

திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கு அலர்தார்ச் சென்னி குளிர் வெண்குடை போன்றுஇவ்
அங்கண் உலகு அளித்த லான்

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலம் திரிதலான்

**மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்*
நாம நீர் வேலி உலகிற்கு அவன் அளிபோல்
*மேல்நின்று தான் சுரத்தலான்**

– இளங்கோவடிகள்



வான்நிலா போற்றுவோம்! வான்நிலா போற்றுவோம்!
மாலை அணிந்த சோழனின் குளிர்ந்த
வெண்குடை போல அருளை வழங்கும்
வான்நிலா போற்றுவோம்! வான்நிலா போற்றுவோம்!



கதிரவன் போற்றுவோம்! கதிரவன் போற்றுவோம்!
காவிரி நாடன் சோழனின் ஆணைச்
சக்கரம் போலவே இமயத்தை வலம்வரும்
கதிரவன் போற்றுவோம்! கதிரவன் போற்றுவோம்!



வான்மழை போற்றுவோம்! வான்மழை போற்றுவோம்!
கடல்சூழ் உலகுக்கு அருளைப் பொழியும்
மன்னனைப் போல முகில்வழி சுரக்கும்
வான்மழை போற்றுவோம்! வான்மழை போற்றுவோம்!

6th Std Tamil CBSE Pages 25-50.indd 26 20-03-2020 16:26:18

சொல்லும் பொருளும்

திங்கள்	–	நிலவு	பொற்கோட்டு	–	பொன்மயமான சிகரத்தில்
கொங்கு	–	மகரந்தம்	மேரு	–	இமயமலை
அலர்	–	மலர்தல்	நாமநீர்	–	அச்சம் தரும் கடல்
திகிரி	–	ஆணைச்சக்கரம்	அளி	–	கருணை

பாடலின் பொருள்

தேன் நிறைந்த ஆத்திமலர் மாலையை அணிந்தவன் சோழ மன்னன். அவனுடைய வெண்கொற்றக் குடை குளிர்ச்சி பொருந்தியது. அதைப் போலவே வெண்ணிலவும் தன் ஒளியால் உலகுக்கு இன்பம் அளிக்கிறது. அதனால் வெண்ணிலவைப் போற்றுவோம்.

காவிரி ஆறு பாய்ந்து வளம் செய்யும் நாட்டை ஆட்சி செய்பவன் சோழ மன்னன். அவனது ஆணைச் சக்கரம் போல, கதிரவனும் பொன்போன்ற சிகரங்களையுடைய இமயமலையை வலப்புறமாகச் சுற்றிவருகிறது. அதனால் கதிரவனைப் போற்றுவோம்!

அச்சம்தரும் கடலை எல்லையாகக் கொண்ட உலகிற்கு மன்னன் அருள் செய்கிறான். அதுபோல, மழை, வானிலிருந்து பொழிந்து மக்களைக் காக்கிறது. அதனால் மழையைப் போற்றுவோம்!

நூல் வெளி



சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தை இயற்றியவர் இளங்கோவடிகள். இவர் சேர மன்னர் மரபைச் சேர்ந்தவர் என்று சிலப்பதிகாரப் பதிகம் கூறுகிறது. இவர் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்பர்.

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று சிலப்பதிகாரம். இதுவே தமிழின் முதல் காப்பியம். இது முத்தமிழ்க் காப்பியம், குடிமக்கள் காப்பியம், என்றெல்லாம் போற்றப்படுகிறது. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

திங்கள், ஞாயிறு, மழை என இயற்கையை வாழ்த்துவதாக இந்நூல் தொடங்குகிறது. அவ்வாழ்த்துப்பகுதி நமக்குப் பாடமாகத் தரப்பட்டுள்ளது.

கற்பவை கற்றபின்

1. 'வளர்பிறையும் தேய்பிறையும்' என்னும் தலைப்பில் பேசுக.
2. நீங்கள் விரும்பும் இயற்கைப் பொருள்களின் பெயர்களைப் பட்டியலிடுக.
3. "நிலா " என்னும் தலைப்பில் நான்கு அடிகளில் கவிதை படைத்திடுக.

6th Std Tamil CBSE Pages 25-50.indd 27 20-03-2020 16:26:18

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

7B79H9

1. கழுத்தில் சூடுவது _____

   அ) தார் ஆ) கணையாழி இ) தண்டை ஈ) மேகலை

2. கதிரவனின் மற்றொரு பெயர் _____

   அ) புதன் ஆ) ஞாயிறு இ) சந்திரன் ஈ) செவ்வாய்

3. 'வெண்குடை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

   அ) வெண் + குடை ஆ)வெண்மை + குடை

   இ) வெம் + குடை ஈ) வெம்மை + குடை

4. 'பொற்கோட்டு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

   அ) பொன் + கோட்டு ஆ) பொற் + கோட்டு

   இ) பொண் + கோட்டு ஈ) பொற்கோ + இட்டு

5. கொங்கு + அலர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____

   அ) கொங்குஅலர் ஆ) கொங்அலர் இ) கொங்கலர் ஈ) கொங்குலர்

6. அவன் + அளிபோல் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____

   அ)அவன்அளிபோல் ஆ) அவனளிபோல்

   இ) அவன்வளிபோல் ஈ) அவனாளிபோல்

நயம் அறிக.

1. பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களை எடுத்து எழுதுக
2. பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக

குறுவினா

1. சிலப்பதிகாரக் காப்பியம் எவ்வெவற்றை வாழ்த்தித் தொடங்குகிறது?
2. இயற்கை போற்றத்தக்கது ஏன்?

சிந்தனைவினா

இயற்கையைப் போற்றும் வழக்கம் ஏற்படக் காரணமாக எவற்றைக் கருதுகிறீர்கள்?

6th Std Tamil CBSE Pages 25-50.indd 28 20-03-2020 16:26:18

கவிதைப்பேழை

இயல் இரண்டு

காணி நிலம்



அடுக்ககங்களில் வாழும் பலர் இயற்கை தரும் இன்பத்தை எண்ணி ஏங்குகிறார்கள். 'வீடு' என்பது எப்படி இருக்க வேண்டும் என்று பாரதியார் கற்பனை செய்கிறார். இயற்கைச் சூழலை உருவாக்க வேண்டியதன் தேவையை உணர்த்துகிறார். இயற்கையைப் பலவகைகளிலும் போற்றிடும் பாரதியின் கனவு இல்லத்தைப் பற்றி அறிவோம்.

*காணி நிலம் வேண்டும் – பராசக்தி
காணி நிலம் வேண்டும் – அங்குத்
தூணில் அழகியதாய் – நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய் – அந்தக்
காணி நிலத்திடையே – ஓர் மாளிகை
கட்டித் தரவேண்டும் – அங்குக்
கேணி அருகினிலே – தென்னைமரம்
கீற்றும் இளநீரும்
பத்துப் பன்னிரண்டு – தென்னைமரம்
பக்கத்திலே வேணும் * – நல்ல
முத்துச் சுடர் போலே – நிலாவொளி
முன்பு வரவேணும் – அங்குக்
கத்துங் குயிலோசை – சற்றே வந்து
காதில் படவேணும் – என்றன்
சித்தம் மகிழ்ந்திடவே – நன்றாய் இளம்
தென்றல் வரவேணும்.

– பாரதியார்



சொல்லும் பொருளும்

காணி – நில அளவைக் குறிக்கும் சொல்
மாடங்கள் – மாளிகையின் அடுக்குகள்
சித்தம் – உள்ளம்.

6th Std Tamil CBSE Pages 25-50.indd 29 20-03-2020 16:26:19

பாடலின் பொருள்

காணி அளவு நிலம் வேண்டும். அங்கு ஒரு மாளிகை கட்டித்தர வேண்டும். அழகான தூண்களையும் தூய நிறமுடைய மாடங்களையும் அது கொண்டிருக்கவேண்டும். நல்ல நீரையுடைய கிணறும் அங்கே இருக்க வேண்டும். இளநீரும் கீற்றும் தரும் தென்னைமரங்கள் வேண்டும்.

அங்கே முத்து போன்ற நிலவொளி வீச வேண்டும். காதுக்கு இனிய குயிலின் குரலோசை கேட்க வேண்டும். உள்ளம் மகிழுமாறு இளந்தென்றல் தவழ வேண்டும்.

நூல் வெளி





இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர் பாரதியார். அவரது இயற்பெயர் சுப்பிரமணியன். இளமையிலேயே சிறப்பாகக் கவிபாடும் திறன் பெற்றவர். எட்டயபுர மன்னரால் பாரதி என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டவர். தம் கவிதையின் வழியாக விடுதலை உணர்வை ஊட்டியவர். மண் உரிமைக்காகவும் பெண் உரிமைக்காகவும் பாடியவர். நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் மிக்க பாடல்கள் பலவற்றைப் படைத்தவர். பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு போன்ற பல நூல்களை இயற்றி உள்ளார்.

பாரதியார் கவிதைகள் என்னும் தொகுப்பில் இப்பாடல் இடம் பெற்றுள்ளது.

கற்பவை கற்றபின்

1. பாடலை ஓசைநயத்துடன் படித்து மகிழ்க.
2. காணி என்பது நில அளவைக் குறிக்கும் சொல். இதுபோல நிலத்தை அளக்கப் பயன்படும் சொற்களைப் பட்டியலிடுக.
3. என் கனவு இல்லம் என்னும் தலைப்பில் பேசுக.

மதிப்பீடு

7BQ1KJ

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'கிணறு' என்பதைக் குறிக்கும் சொல்_____

அ) ஏரி ஆ) கேணி இ) குளம் ஈ) ஆறு

2. 'சித்தம்' என்பதன் பொருள் _____

அ) உள்ளம் ஆ) மணம் இ) குணம் ஈ) வனம்

6th Std Tamil CBSE Pages 25-50.indd 30 20-03-2020 16:26:19

3. மாடங்கள் என்பதன் பொருள் மாளிகையின் ------

அ) அடுக்குகள் ஆ) கூரை இ) சாளரம் ஈ) வாயில்

4. நன்மாடங்கள் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ------

அ) நன்+மாடங்கள் ஆ) நற் +மாடங்கள்

இ) நன்மை + மாடங்கள் ஈ) நல் + மாடங்கள்

5. நிலத்தினிடையே என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ------

அ) நிலம் + இடையே ஆ) நிலத்தின் + இடையே

இ) நிலத்து + இடையே ஈ) நிலத் + திடையே

6. முத்து + சுடர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்------

அ) முத்துசுடர் ஆ) முச்சுடர் இ) முத்துடர் ஈ) முத்துச்சுடர்

7. நிலா + ஒளி என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்-------

அ) நிலாஒளி ஆ) நிலஒளி இ) நிலாவொளி ஈ) நிலவுஒளி

பொருத்துக.

1. முத்துச்சுடர்போல – மாடங்கள்
2. தூய நிறத்தில் – தென்றல்
3. சித்தம் மகிழ்ந்திட – நிலாஒளி

நயம் அறிக.

1. காணி நிலம் பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.
2. காணி நிலம் பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.

குறுவினா

1. காணி நிலம் பாடலில் பாரதியார் வேண்டுவன யாவை?
2. பாரதியார் இயற்கையின் மீது கொண்டுள்ள விருப்பம் குறித்து எழுதுக.

சிந்தனைவினா

பாரதியார் வீட்டின் அருகில் தென்னை மரங்கள் வேண்டும் என்கிறார்.
நீங்கள் எந்தெந்த மரங்களை வளர்ப்பீர்கள் என எழுதுக.

6th Std Tamil CBSE Pages 25-50.indd 31 20-03-2020 16:26:19

இயல் இரண்டு

சிறகின் ஓசை

7BYHM7

நுழையும்முன்

மனிதர்கள் பொருள் தேடுவதற்காக வேறு ஊர்களுக்குச் செல்கிறார்கள். சிலர் திரும்புகிறார்கள். சிலர் அங்கேயே தங்குகிறார்கள். மனிதர்களைப் போலவே பறவைகளும் வேறு இடங்களுக்கும் நாடுகளுக்கும் செல்கின்றன. பறவைகள் போகாத நாடுகள் இல்லை; மலைகள் இல்லை; நீர்நிலைகள் இல்லை; பறவைகளோடு கொஞ்சம் பறந்து போகலாமா!

மனிதர்கள் வெளியூர்களுக்குச் சென்று மீண்டும் தம் சொந்த ஊருக்குத் திரும்புவதை அறிவோம். அதைப் போலவே பறவைகளும் வெளிநாடுகளுக்குச் சென்று திரும்புகின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா?



பறவைகள் கண்டம்விட்டுக் கண்டம் பறக்கின்றன. அவை பெருங்கடல்களையும் மலைகளையும் கடந்து போகின்றன; குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு புறப்பட்ட இடத்திற்கே வந்து சேர்கின்றன. இவ்வாறு பறவைகள் இடம் பெயர்தலை வலசை போதல் என்பர். நீர்வாழ் பறவைகளே பெரும்பாலும் வலசை போகின்றன.

உணவு, இருப்பிடம், தட்பவெப்பநிலை மாற்றம், இனப்பெருக்கம் இவற்றிற்காகவே பறவைகள் இடம் பெயர்கின்றன. நிலவு, விண்மீன், புவிஈர்ப்புப் புலம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே பறவைகள் இடம் பெயர்கின்றன. பொதுவாக வடக்கிலிருந்து தெற்கு நோக்கியும், மேற்கிலிருந்து கிழக்கு நோக்கியும் பறவைகள் வலசை போகின்றன.



பறவைகள் தங்களுக்கென ஒரு வழித்தடத்தைத் தேர்ந்தெடுத்து, அந்தப் பாதையிலேயே பறக்கின்றன. சில பறவை இனங்கள் அதே பாதையில் தாய்நிலங்களுக்குத் திரும்புகின்றன. சில பறவை இனங்கள் போவதற்கும் வருவதற்கும் இருவேறு பாதைகளைப் பயன்படுத்துகின்றன.

6th Std Tamil CBSE Pages 25-50.indd 32 20-03-2020 16:26:23


பயணம் செய்யும்போது சிலவகைப் பறவைகள் இரை, ஓய்வு போன்ற தேவைகளுக்காகத் தரை இறங்கும். இடையில் எங்கும் நிற்காமல் பறந்து, வாழிடம் சேரும் பறவைகளும் உண்டு.

வலசையின்போது பறவையின் உடலில் ஏற்படும் மாற்றங்கள்

- தலையில் சிறகு வளர்தல்
- இறகுகளின் நிறம் மாறுதல்
- உடலில் கற்றையாக முடி வளர்தல்

ஒருவகைப் பறவை வேறுவகைப் பறவையாக உருமாறித் தோன்றும் அளவிற்குக்கூடச் சில நேரங்களில் மாற்றங்கள் ஏற்படும்.

தெரிந்து தெளிவோம்



கப்பல் பறவை

சிறகடிக்காமல் கடலையும் தாண்டிப் பறக்கும் பறவை கப்பல் பறவை (*Frigate bird*). இது தரையிறங்காமல் 400 கிலோ மீட்டர் வரை பறக்கும். இது கப்பல் கூழைக்கடா, கடற்கொள்ளைப் பறவை என்றும் அழைக்கப்படுகிறது.

தமிழகத்திற்கு வெளிநாட்டுப் பறவைகள் வலசை வருவது பற்றி இலக்கியங்களிலும் செய்திகள் உள்ளன. ஏறத்தாழ 1500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த சத்திமுத்தப்புலவர் "நாராய், நாராய், செங்கால் நாராய்" என்னும் பாடலை எழுதியுள்ளார். அப்பாடலில் உள்ள **"தென்திசைக் குமரிஆடி வடதிசைக்கு ஏகுவீர் ஆயின்"** என்னும் அடிகள் பறவைகள் வலசை வந்த செய்தியைக் குறிப்பிடுகின்றன.

ஐரோப்பாவில் இருந்து தமிழகத்திற்குச் செங்கால் நாரைகள் வருவது தற்போதைய ஆய்விலும் உறுதிப்படுத்தப்பட்டு உள்ளது. வெளிநாட்டுப் பறவைகளுக்கும் புகலிடமாகத் திகழ்கிறது தமிழ்நாடு.

தற்போது வெகுவாக அழிந்து வரும் பறவையினம் எது? உங்களுக்குத் தெரியுமா? சிட்டுக் குருவிதான் அது.

உருவத்தில் சிறிய இந்தப் பழுப்புநிறப் பறவையைப் பார்த்தவுடனே ஆண், பெண் வேறுபாட்டை உணர முடியும். ஆண்குருவியின் தொண்டைப்பகுதி கறுப்பு நிறத்தில் இருக்கும். உடல்பகுதி அடர்பழுப்பாக இருக்கும். பெண் குருவியின் உடல் முழுவதும் மங்கிய பழுப்பு நிறத்தில் இருக்கும்.



சிட்டுக்குருவி கூடுகட்டி வாழும் பறவையினத்தைச் சார்ந்தது. கூடுகட்டும் காலங்களில் சத்தமிட்டுக் கொண்டே இருக்கும். கூடுகட்டிய பின் மூன்று முதல் ஆறு முட்டைகள் வரை இடும். பதினான்கு நாள்கள் அடைகாக்கும். பதினைந்தாம் நாளில் குஞ்சுகள் வெளிவரும்.

6th Std Tamil CBSE Pages 25-50.indd 33 20-03-2020 16:26:25

துருவப் பகுதிகள் தவிர மனிதன் வாழும் இடங்களில் எல்லாம் சிட்டுக்குருவிகளும் வாழ்கின்றன. இந்தியா முழுவதும் சிட்டுக்குருவிகளைக் காணலாம். இமயமலைத் தொடரில் 4000 மீட்டர் உயரத்தில் கூட இவை வாழ்கின்றன.

தானியங்கள், புழுபூச்சிகள், மலர் அரும்புகள், இளந்தளிர்கள், தேன் போன்றவை சிட்டுக் குருவிகளின் உணவாகும். சிட்டுக்குருவியின் குஞ்சுகள் பெரும்பாலும் புழு, பூச்சிகளையே உட்கொள்ளும். அதனால், தாய்க்குருவி புழு பூச்சிகளைப் பிடித்துத் தம் குஞ்சுகளுக்கு ஊட்டிவிடும். சிட்டுக்குருவியின் வாழ்நாள் பத்து முதல் பதின்மூன்று ஆண்டுகள் ஆகும். சிட்டுக்குருவி உருவத்தில் சிறியது. ஆனாலும் வேகமாகப் பறக்கும். அதனால்தான் விரைவாகச் செல்பவனைச் சிட்டாய்ப் பறந்து விட்டான் என்று கூறுகிறோம்.

சிட்டுக்குருவிகளின் அழிவுக்குக் காரணங்கள்

- மனிதர்கள் விவசாயத்திற்குப் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துவதால் குருவிக் குஞ்சுகளுக்கு உணவான புழுபூச்சிகள் கிடைப்பதில்லை.
- நவீன கட்டடங்கள் குருவிகள் கூடு கட்ட ஏற்றவையாக இல்லை.
- தற்காலத்தில் தாவர வேலிகளுக்கு மாற்றாகச் செயற்கை வேலிகள் அமைக்கப் படுகின்றன. எனவே சிட்டுக்குருவிகள் வாழ உகந்த வேலித் தாவரங்கள் குறைந்துவிட்டன.
- சிட்டுக்குருவிகள் ஓய்வெடுக்கும் புதர்ச்செடிகளும் இல்லை.
- உணவுக்கும், இருப்பிடத்திற்கும் சிட்டுக்குருவிகளுடன் மற்ற பறவைகள் போட்டியிடுகின்றன.


பறவையினங்களைக் காப்பாற்ற நாம் செய்ய வேண்டியவை

- ஆல், அரசு போன்ற மரங்களையும் அவரை, புடலை போன்ற கொடிகளையும் வளர்க்க வேண்டும்.
- நமது மண்ணுக்கேற்ற பிறவகை உள்ளூர்த் தாவரங்களையும் வளர்க்க வேண்டும்.
- தோட்டங்களிலும் வயல்வெளிகளிலும் செயற்கை உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவற்றைத் தெளிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

காக்கைகுருவி எங்கள் சாதி – என்று பாரதியார் பாடினார். சமைப்பதற்குத் தன் மனைவி வைத்திருந்த சிறிதளவு அரிசியையும் முற்றத்தில் இருந்த சிட்டுக் குருவிகளுக்கு மகிழ்வுடன் போட்டுவிட்டுப் பட்டினியாக இருந்தாராம் இவர்.

இந்தியாவின் பறவை மனிதர்

இன்றைய பறவையியல் ஆய்வாளர்களுக்கு முன்னோடி டாக்டர் சலீம் அலி. தம் வாழ்நாள் முழுவதும் பறவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்வதிலும் அவற்றைப் படம் பிடிப்பதிலும் ஈடுபட்டார். அதனால், அவர் 'இந்தியாவின் பறவை மனிதர்' என்று அழைக்கப்படுகிறார். பறவைகள் குறித்துப் பல நூல்களை எழுதியுள்ளார். தன் வாழ்க்கை வரலாற்று நூலுக்குச் 'சிட்டுக்குருவியின் வீழ்ச்சி' (The fall of sparrow) என்று பெயரிட்டுள்ளார்.



6th Std Tamil CBSE Pages 25-50.indd 34 20-03-2020 16:26:26

மனிதன் இல்லாத உலகில் பறவைகள் வாழமுடியும்!

பறவைகள் இல்லாத உலகில் மனிதன் வாழமுடியாது!

என்கிறார் பறவையியல் ஆய்வாளர் சலீம் அலி. இவ்வுண்மையை நாமும் உணர்ந்து இயற்கையைப் போற்றிப் பறவைகளைக் காப்போம்.



பறவை பற்றிய படிப்பு ஆர்னித்தாலஜி (ORNITHOLOGY) எனப்படும்.

உலகச் சிட்டுக்குருவிகள் நாள் மார்ச் – 20

கற்பவை கற்றபின்

1. உங்கள் பகுதியில் காணப்படும் பறவைகளின் பெயர்களைப் பட்டியலிடுக.
2. உங்கள் வீட்டுக்கு அருகில் பறவைகள் வருவதற்கு என்னென்ன வழி வகைகள் செய்யலாம் என்பது பற்றி வகுப்பறையில் கலந்துரையாடுக.
3. பறவைகள் தொடர்பான பழமொழிகளைத் தொகுத்து எழுதுக.
4. இயற்கையைப் பாதுகாக்கும் வகையில் முழக்கத் தொடர்களை எழுதுக.
   (எ. கா.) காப்போம் காப்போம்! பறவைகளைக் காப்போம்!

மதிப்பீடு

7C8SNU

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'தட்பவெப்பம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) தட்பம் + வெப்பம் ஆ) தட்ப + வெப்பம்

   இ) தட் + வெப்பம் ஈ) தட்பு + வெப்பம்

2. 'வேதியுரங்கள்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) வேதி + யுரங்கள் ஆ) வேதி + உரங்கள்

   இ) வேத் + உரங்கள் ஈ) வேதியு + ரங்கள்

3. தரை + இறங்கும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்_____.

   அ) தரையிறங்கும் ஆ) தரைஇறங்கும் இ) தரையுறங்கும் ஈ) தரையற்றங்கும்

6th Std Tamil CBSE Pages 25-50.indd 35 20-03-2020 16:26:29

4. வழி + தடம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்_____.

அ) வழிதடம் ஆ) வழித்தடம் இ) வழிதிடம் ஈ) வழித்திடம்

5. சிட்டுக்குருவி வாழ முடியாத பகுதி_____.

அ) துருவப்பகுதி ஆ) இமயமலை இ) இந்தியா ஈ) தமிழ்நாடு

கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. மிக நீண்டதொலைவு பறக்கும் பறவை _____.

2. பறவைகள் வலசை போவதைப் பற்றிப் பாடிய தமிழ்ப்புலவர் _____.

3. பறவைகள் இடம்பெயர்வதற்கு _____ என்று பெயர்.

4. இந்தியாவின் பறவை மனிதர் _____.

5. பறவைகள் வலசை போகக் காரணங்களுள் ஒன்று _____.

சொற்றொடர் அமைத்து எழுதுக.

1. வெளிநாடு_____

2. வாழ்நாள்_____

3. செயற்கை_____

பொருத்தமான சொல்லைக் கொண்டு நிரப்புக.

1. மரங்களை வளர்த்து _____ யைக் காப்போம் _____ உரங்களைத் தவிர்த்து நிலவளம் காப்போம். (செயற்கை / இயற்கை)

2. தமிழகத்தில் வலசைப் பறவைகளின் வருகை _____ தற்போது சிட்டுக் குருவிகளின் எண்ணிக்கை _____ (குறைந்துள்ளது / மிகுந்துள்ளது)

குறுவினா

1. பறவைகள் எக்காரணங்களுக்காக இடம் பெயர்கின்றன?
2. வலசையின்போது பறவையின் உடலில் ஏற்படும் மாற்றங்கள் யாவை?

சிறுவினா

1. சிட்டுக் குருவியின் வாழ்க்கை பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.
2. வலசைப் பறவைகளின் பயணம் பற்றி நீங்கள் அறிந்தவை யாவை?

சிந்தனைவினா

பறவை இனங்கள் அழியாமல் காப்பாற்றப்பட நாம் செய்ய வேண்டியவை பற்றிச் சிந்தித்து எழுதுக.

6th Std Tamil CBSE Pages 25-50.indd 36 20-03-2020 16:26:29

விரிவானம்


இயல் இரண்டு

கிழவனும் கடலும்

7CHNQH

நுழையும்முன்

மனிதன் இயற்கையோடு போராடிக்கொண்டே இருக்கிறான். சில நேரங்களில் வெற்றி பெறுகிறான். சில நேரங்களில் தோல்வி அடைகிறான். ஆனால் முயற்சிகள் என்றும் ஓய்வதில்லை. மனிதன் இயற்கையோடு நடத்துகிற போராட்டமே அவன் வாழ்வை அமைக்கிறது. போராடுவதில் மகிழ்ச்சியும் வெற்றியும் இருக்கிறது. மீன் பிடிக்கப் போராடும் மீனவர் ஒருவரின் வாழ்வைப் பார்ப்போமா!




கிழவனும் கடலும் (The Oldman and the Sea.) என்னும் ஆங்கிலப் புதினம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு படக்கதையாக இங்குச் சுருக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நூல் 1954ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்றது. இந்நூலின் ஆசிரியர் எர்னெஸ்ட் ஹெமிங்வே.

இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையே நடக்கும் போராட்டமே இந்தக் கதை. இக்கதையின் நாயகன் சாண்டியாகோ. வயது முதிர்ந்த மீனவர் அவர். முன்பெல்லாம் கடலுக்குச் சென்றால் மீன் இல்லாமல் திரும்பமாட்டார். ஆனால், கடந்த எண்பத்து நான்கு நாள்களாக ஏனோ அவருக்கு ஒரு மீனும் கிடைக்கவில்லை. மனோலின் என்னும் சிறுவன் மீன்பிடிக்கக் கற்றுக்கொள்வதற்காக முதல் நாற்பது நாள்களும் அவருடன் கடலுக்கு வந்தான். அவன், அவருக்கு வேண்டிய உதவிகள் செய்ததோடு பேச்சுத்துணையாகவும் இருந்தான். அவரோடு கடலுக்குப் போனால் ஒரு மீனும் கிடைப்பதில்லை என்று அவனை வேறு படகிற்கு அனுப்பிவிட்டனர் அவனது பெற்றோர். இப்போதெல்லாம் தனியாகவே மீன்பிடிக்கச் செல்கிறார் சாண்டியாகோ.


அன்று எண்பத்து ஐந்தாவது நாள்...

6th Std Tamil CBSE Pages 25-50.indd 37 20-03-2020 16:26:29













6th Std Tamil CBSE Pages 25-50.indd 38 20-03-2020 16:26:44

மீனைப் படகுக்குள் இழுக்க முயற்சி செய்கிறார். முடியவில்லை.

மீனே! ஏன் இப்படி தூண்டிலை இழுக்கிறாய்? என்னையும் கடலுக்குள் இழுத்துத் தள்ளிவிடப் பார்க்கிறாயா?

மீன் நீருக்கு மேலே வருவதும் மூழ்குவதுமாக இருக்கிறது.

மேலேயும் வராமல் ஆழத்திற்கும் செல்லாமல் படகை எங்கோ இழுத்துக் கொண்டே போகிறதே! இருக்கட்டும். இருக்கட்டும்! எப்படியும் மேலே வந்துதானே ஆக வேண்டும்!

மாலை நேரம்.

பசியும் சோர்வும் என்னை வாட்டுகின்றன. நண்பகல் தூண்டிலில் சிக்கிய மீன் நாலு மணி நேரமாக என்னிடம் ஆட்டம் காட்டுகிறதே!

மீன் அசைவின்றி இருக்கிறது. மீனுடன் போராடிய களைப்பில் சாண்டியாகோ சற்றுக் கண்ணயர்ந்து விட்டார்.

மீன் மீண்டும் தூண்டிலை இழுக்கிறது. சாண்டியாகோவின் உறக்கம் கலைகிறது.

ஓ! இரவு முழுவதும் தூக்கம் இல்லாததால் என்னை அறியாமல் தூங்கிவிட்டேனோ? இனியும் சும்மா இருக்க முடியாது.

ம்ம்... அப்படித்தான் ஆகட்டும். மேலே வா! இன்று என்னிடம் இருந்து உன்னால் தப்பிக்கவே முடியாது.

6th Std Tamil CBSE Pages 25-50.indd 39 20-03-2020 16:26:54

சாண்டியாகோ தூண்டிலை இழுக்கிறார். மீன் முதன்முதலாக நீருக்கு மேலே துள்ளிக் குதிக்கிறது.

ஆகா! தூண்டிலில் மாட்டியது நீதானா? இப்போதுதான் உன்னை முழுமையாகப் பார்க்கிறேன். அடேயப்பா! எவ்வளவு பெரிய மீன்!

மீன் படகைச் சுற்றி வட்டமிடுகிறது.

ஏ, மீனே! படகைச் சுற்றிச் சுற்றி ஏன் இப்படி வட்டமிடுகிறாய்? நில், நில்! என் வலிமையை எல்லாம் திரட்டி உன்னை எதிர்க்கப் போகிறேன்.

மீண்டும் மேலே வருகிறாயா? விடமாட்டேன் நீ, எவ்வளவு பெரிய மீனாக இருந்தாலும் எனக்குக் கவலையில்லை. என் உயிர் உள்ளவரை உன்னுடன் போராடி வெற்றி பெறுவேன்.


நான் சாப்பிடவும் இல்லை, தூங்கவும் இல்லை. இத்தனை மணி நேரமாக உன்னுடன் போராடுகிறேனே! ஏன் இப்படித் துள்ளுகிறாய்?

உன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள நீ போராடுகிறாய், நான் என் இலக்கை அடையப் போராடுகிறேன். இந்தப் போராட்டத்தின் முடிவில் ஒன்று நான் உயிரோடு இருப்பேன் அல்லது நீ இருப்பாய்.

மீன் படகுக்கு அருகில் மேலெழும்பிக் குதிக்கிறது. சாண்டியாகோ ஈட்டியால் மீனைக் குத்துகிறார்.

இறுதியாக உன்னைக் கொன்று விட்டேன். இனிமேல் தான் நிறைய வேலை இருக்கிறது, கயிறுகளில் சுருக்குகள் போட வேண்டும்.

6th Std Tamil CBSE Pages 25-50.indd 40 20-03-2020 16:27:06














6th Std Tamil CBSE Pages 25-50.indd 41 20-03-2020 16:27:09



கற்பவை கற்றபின்

1. கடல் காட்சி ஒன்றைப் படம் வரைந்து வண்ணம் தீட்டுக.
   அப்படத்திற்குப் பொருத்தமாக நான்கு வரிகளுக்குள் குறிப்பு எழுதுக.
2. இக்கதையின்வழியாக நீங்கள் உணர்ந்தவற்றை வகுப்பில் பகிர்க.
3. சாண்டியாகோ குறித்து உங்கள் கருத்து யாது?

மதிப்பீடு

'கிழவனும் கடலும்' என்னும் படக்கதையை உங்கள் சொந்த நடையில் கதையாக எழுதுக.

6th Std Tamil CBSE Pages 25-50.indd 42 20-03-2020 16:27:11

கற்கண்டு

இயல் இரண்டு

முதலெழுத்தும் சார்பெழுத்தும்

எழுத்துகள் இரண்டு வகைப்படும்

1. முதல் எழுத்துகள்
2. சார்பு எழுத்துகள்


7CRJS5

முதல் எழுத்துகள்

உயிர் எழுத்துகள் பன்னிரண்டு, மெய்யெழுத்துகள் பதினெட்டு ஆகிய முப்பது எழுத்துகளும் முதல் எழுத்துகள் ஆகும். பிற எழுத்துகள் தோன்றுவதற்கும் இயங்குவதற்கும் முதற்காரணமாக இவை இருக்கின்றன. எனவே இவற்றை முதல் எழுத்துகள் என்பர்.

சார்பு எழுத்துகள்

முதல் எழுத்துகளைச் சார்ந்து வரும் எழுத்துகள் சார்பெழுத்துகள். இவை பத்து வகைப்படும்.



1. உயிர்மெய்
2. ஆய்தம்
3. உயிரளபெடை
4. ஒற்றளபெடை
5. குற்றியலிகரம்
6. குற்றியலுகரம்
7. ஐகாரக்குறுக்கம்
8. ஔகாரக்குறுக்கம்
9. மகரக்குறுக்கம்
10. ஆய்தக்குறுக்கம்

இவ்வகுப்பில் உயிர்மெய், ஆய்தம் ஆகிய இரண்டு சார்பெழுத்துகள் பற்றிக் காண்போம்.

உயிர்மெய்

- மெய் எழுத்துகளும் உயிர் எழுத்துகளும் ஒன்றுடன் ஒன்று சேர்வதால் உயிர்மெய் எழுத்துகள் தோன்றுகின்றன.

6th Std Tamil CBSE Pages 25-50.indd 43 20-03-2020 16:27:12

- உயிர்மெய் எழுத்தின் ஒலிவடிவம் மெய்யும் உயிரும் சேர்ந்ததாக இருக்கும்.
- வரிவடிவம் மெய்யெழுத்தை ஒத்திருக்கும். ஒலிக்கும் கால அளவு உயிர் எழுத்தை ஒத்திருக்கும்.
- முதல் எழுத்துகளைச் சார்ந்து வருவதால் இவை சார்பெழுத்து வகையுள் அடங்கும்.

ஆய்தம்

- மூன்று புள்ளிகளை உடைய தனித்த வடிவம் பெற்றது.
- முப்புள்ளி, முப்பாற்புள்ளி, தனிநிலை, அஃகேனம் என்ற வேறு பெயர்களும் இதற்கு உண்டு.
- நுட்பமான ஒலிப்புமுறையை உடையது.
- தனக்குமுன் ஒரு குறில் எழுத்தையும் தனக்குப்பின் ஒரு வல்லின உயிர்மெய் எழுத்தையும் பெற்றுச் சொல்லின் இடையில் மட்டுமே வரும்.
- தனித்து இயங்காது.
- முதல் எழுத்துகளாகிய உயிரையும், மெய்யையும் சார்ந்து இயங்குவதால் ஆய்த எழுத்து சார்பெழுத்து ஆகும்



கற்பவை கற்றபின்

1. முதல் எழுத்துகள், சார்பு எழுத்துகள் தொடர்பைப் பற்றி விவாதிக்க
2. முதல் எழுத்துகள் மட்டும் இடம்பெறும் சொற்களை எழுதுக.
   (எ.கா.) ஆம்
3. முதல் எழுத்துகள் இடம்பெறாத சொற்களை எழுதுக.
   (எ.கா.) குருவி



மதிப்பீடு

1. முதல் எழுத்துகள் என்பவை யாவை? அவை எதனால் அவ்வாறு அழைக்கப்படுகின்றன ?
2. சார்பெழுத்துகள் எத்தனை? அவை யாவை?
3. சொற்களில் ஆய்த எழுத்து எவ்வாறு இடம்பெறும்?

6th Std Tamil CBSE Pages 25-50.indd 44 20-03-2020 16:27:12

மொழியை ஆள்வோம்!

கேட்டும் கண்டும் அறிந்தும் மகிழ்க

1. இயற்கை சார்ந்த பாடல்கள், கதைகள், உரைகளைக் கேட்டு மகிழ்க.
2. பறவைகள், விலங்குகளின் வாழ்க்கை முறை பற்றிய காணொலிக் காட்சிகளைக் கண்டு மகிழ்க.

கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக

இயல்பாகவே தோன்றி மறையும் பொருள்கள், அவற்றின் இயக்கம், அவை இயங்கும் இடம், இயங்கும் காலம் அனைத்தும் ஒன்றிணைந்ததே இயற்கை என்கிறோம். பனிபடர்ந்த நீலமலைகள், பாடித்திரியும் பறவைகள், தன்னிச்சையாகச் சுற்றித்திரியும் விலங்குகள், சலசலக்கும் ஓடைகள், ஆர்ப்பரித்து வீழும் அருவிகள், நீந்தும் மீன்கள், அலைவீசும் அழகிய கடல், கண்சிமிட்டும் விண்மீன்கள், தங்க ஓடமாய்த் தவழ்ந்து வரும் வெண்ணிலா இவையெல்லாம் இயற்கை நமக்குத் தந்த கொடைகள்.

இயற்கையின் அழகைக் கண்டு இன்புற்றால் மட்டும் போதாது. அந்த அழகை நாம் பாதுகாக்க வேண்டும். நாம் நமது தேவைக்காக மலைகள், காடுகள், விலங்குகள், பறவைகள் ஆகியவற்றை அழித்து வருகிறோம். மேலும் நிலம், நீர், காற்று ஆகியவற்றை மாசுபடுத்தி வருகிறோம். அதனால் இயற்கைச் சமநிலை மாறி புவி வெப்பமயமாகிறது. புவி வெப்பமடையாமல் காப்பது நமது கடமை. இயற்கையைப் பாதுகாத்தால் மட்டுமே நாம் நம்மையும் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

1. எதனை இயற்கை என்கிறோம்?
2. இப்பத்தியில் உள்ள இயற்கையை வருணிக்கும் சொற்கள் யாவை?
3. இயற்கையை ஏன் பாதுகாக்க வேண்டும்?
4. பத்திக்குப் பொருத்தமான தலைப்புத் தருக.

ஆசிரியர் கூறக்கேட்டு எழுதுக.

மாமழை	வான் சிறப்பு	முரல் மீன்
வலசை போதல்	பறவை இனங்கள்	சார்பு எழுத்துகள்
சாண்டியாகோ	தோற்கடிக்க முடியாது	காணிநிலம்

கீழ்க்காணும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

இயற்கையைக் காப்போம்



மொழியோடு விளையாடு

திரட்டுக.

கடல் என்னும் பொருள் தரும் வேறு சொற்களைத் திரட்டுக.

6th Std Tamil CBSE Pages 25-50.indd 45 20-03-2020 16:27:12

-

தொடர்களைப் பிரித்து இரண்டு தொடர்களாக எழுதுக.

(எ. கா.) பல நாள்களாக மழை பெய்யாததால் பயிர்கள் வாடின.

விடை: பல நாள்களாக மழை பெய்யவில்லை. பயிர்கள் வாடின.

1. கபிலன் வேலை செய்ததால் களைப்பாக இருக்கிறான்.
2. இலக்கியா இனிமையாகப் பாடியதால் பரிசு பெற்றாள்.

பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பரந்து விரிந்து இருப்பதால் கடலுக்குப்_____ என்று பெயர். (பறவை / பரவை)
2. இலக்கிய மன்ற விழாவில் முகிலன் சிறப்பாக _____ ஆற்றினார். (உரை / உறை)
3. முத்து தம் _____ காரணமாக ஊருக்குச் சென்றார். (பனி / பணி)
4. கலைமகள் தன் வீட்டுத் தோட்டத்தைப் பார்க்க வருமாறு தோழியை _____ (அலைத்தாள் / அழைத்தாள்).

பொருத்தமான சொற்களால் கட்டங்களை நிரப்புக.

1. 'புள்' என்பதன் வேறு பெயர் – | | | |
2. பறவைகள் இடம்பெயர்தல் – | | | | | | |
3. சரணாலயம் என்பதன் வேறு பெயர் – | | | | |

வரிசை மாறியுள்ள சொற்களைச் சரியான வரிசையில் அமைத்து எழுதுக.

1. இளங்கோவடிகள் காப்பியத்தை என்னும் இயற்றியவர் சிலப்பதிகாரம்.
2. மனிதன் உலகில் இல்லாத பறவை வாழ முடியாது.
3. மிகப்பெரிய சாண்டியாகோ மீனைப் பிடித்தார்
4. மனிதர் இந்தியாவின் டாக்டர் சலீம் அலி பறவை.

கட்டங்களில் சில சொற்கள் மறைந்துள்ளன. குறிப்புகளைக் கொண்டு அவற்றைக் கண்டுபிடித்து எழுதுக.

மு	த்	த	மி	ழ்	கா
ப்	பை	னி	மே	ம	ணி
ப	ல்	நி	ல	வு	நி
து	ட	லை	ர்	ப	ல
லை	க	மே	ணி	ம	ம்
செ	ங்	கா	ல்	நா	ரை

1. இரட்டைக் காப்பியங்களில் ஒன்று _____
2. முதலெழுத்துகளின் எண்ணிக்கை _____
3. திங்கள் என்பதன் பொருள் _____
4. சத்திமுத்தப் புலவரால் பாடப்பட்ட பறவை _____
5. பாரதியார் _____ வேண்டும் என்று பாடுகிறார்.
6. ஆய்த எழுத்தின் வேறு பெயர் _____

6th Std Tamil CBSE Pages 25-50.indd 46 20-03-2020 16:27:12

ஆய்ந்தறிக.

பெருகிவரும் மக்களின் தேவைக்காக இயற்கையை அழிப்பது சரியா? இயற்கையைச் சுரண்டாமல், மக்களின் தேவைகளை நிறைவேற்ற மாற்று வழிகள் உண்டா ?

கவிதை படைக்க.

கீழே காணப்படும் மழைபற்றிய கவிதையைச் சொந்தத் தொடர்களால் நிரப்புக.

வானில் இருந்து வந்திடும்
மனதில் மகிழ்ச்சி தந்திடும்

_____ _____ ____ ___
_____ _____ ____ ___
_____ _____ ____ ___

நிற்க அதற்குத் தக...

என் பொறுப்புகள்...

அ) சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்வேன்
ஆ) இயற்கையைப் பாதுகாப்பேன்

கலைச் சொல் அறிவோம்

கண்டம் - Continent	தட்பவெப்பநிலை - Climate	வானிலை	- Weather
வலசை - Migration	புகலிடம் - Sanctuary	புவிஈர்ப்புப்புலம்	- GravitationalField

இணையத்தில் காண்க

அழிந்து வரும் உயிரினங்கள்பற்றி இணையத்தில் தேடி அறிந்து பட்டியலிடுக.

இணையச் செயல்பாடுகள்

பறவைகள் வலசைபோதல்

செயல்பாட்டில் கிடைக்கப்பெறும் படம் →



படிகள்:

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி "globeofbirdmigration"என்னும் இணையச் செயலியின் பக்கத்திற்குச் செல்லவும். இணையச் செயலி இயங்கு நிலைக்கு வர, சற்று நேரம் ஆகும். அதுவரை காத்திருக்கவும்.
- இணையச்செயலி தயார் நிலைக்கு வந்தவுடன் ஓர் உலக உருண்டையைக் காணலாம். அதன் மையத்தில் இருக்கும் "Click to Start"என்பதைச் சொடுக்கவும். இப்போது திரையின் இடப் பக்கத்தில் பறவைகளின் பெயர்ப் பட்டியல் தெரியும். அதில் ஏதேனும் ஒரு பறவையைத் தெரிவு செய்து அதன் வலசை போகும் பாதையைத் தெரிந்து கொள்ளலாம்.
- பூமி உருண்டையைச் சுழற்றுவதன் மூலம் வெவ்வேறு பறவைகளின் வலசை போதலை அறியலாம்.

செயல்பாட்டிற்கான உரலி: http://globeofbirdmigration.com/


6th Std Tamil CBSE Pages 25-50.indd 47 20-03-2020 16:27:13

வாழ்வியல்

இயல் இரண்டு

திருக்குறள்

7D1FTS



மக்கள் பயனுள்ள முறையில் வாழ வழிகாட்டிகளாக அமைபவை அறநூல்கள். அறநூல்களில் 'உலகப் பொது மறை' என்று போற்றப்படும் சிறப்புப் பெற்றது நம் திருக்குறள். திருக்குறளில் இல்லாத செய்திகளே இல்லை. ஏழு சொற்களில் மனிதர்களுக்கு அறத்தைக் கற்றுத்தரும் திருக்குறளைப் பயிலுவோம்; வாழ்வில் பின்பற்றுவோம்.

கடவுள் வாழ்த்து

1. ***அகர முதல எழுத்தெல்லாம் ஆதி***
   பகவன் முதற்றே உலகு.

   அகரமே எழுத்துகளுக்குத் தொடக்கம். அதுபோல ஆதி பகவனே உலகுக்குத் தொடக்கம்.

வான் சிறப்பு

2. ***விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து***
   உள்நின்று உடற்றும் பசி.

   மழை உரியகாலத்தில் பெய்யாது போனால், உலகத்து உயிர்களை எல்லாம் பசி துன்புறுத்தும்.

3. ***கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே***
   எடுப்பதூஉம் எல்லாம் மழை.*

   உரிய காலத்தில் பெய்யாது கெடுப்பதும் மழைதான். உரிய காலத்தில் பெய்து காப்பதும் மழைதான்.

நீத்தார் பெருமை

4. ***செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்***
   செயற்கரிய செய்கலா தார்.

   முடியாத செயலையும் முடித்துக் காட்டுபவர் பெரியோர்; முடியாது என்பவர் சிறியோர்.

மக்கட்பேறு

5. ***தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து***
   மன்னுயிர்க்கு எல்லாம் இனிது.

   தம்மைவிடத் தம் பிள்ளைகள் அறிவுடையோர் என்றால் மக்களுக்கு அதுதான் மகிழ்ச்சி.

6th Std Tamil CBSE Pages 25-50.indd 48 20-03-2020 16:27:13

6. *ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்*
*சான்றோன் எனக்கேட்ட தாய்.**

தன் பிள்ளையின் புகழைக் கேட்ட தாய் பெற்றெடுத்தபோது அடைந்த மகிழ்ச்சியைவிடப் பெருமகிழ்ச்சி அடைவாள்.

அன்புடைமை

7. *அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்*
*என்பும் உரியர் பிறர்க்கு.**

அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளும் தமக்கே என்பார்கள். அன்பு உடையவர்கள் தம் உடம்பும் பிறர்க்கே என்பார்கள்.

8. *அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு*
என்புதோல் போர்த்த உடம்பு.

அன்பு இருப்பதுதான் உயிருள்ள உடல். அன்பு இல்லாதது வெறும் எலும்பும் தோலும் தான்.

இனியவை கூறல்

9. *பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு*
அணியல்ல மற்றுப் பிற.

பணிவும் இன்சொல்லுமே ஒருவருக்கு மிகச்சிறந்த அணிகலன்கள் ஆகும். மற்றவை அணிகலன்கள் ஆகா.

10. *இனிய உளவாக இன்னாத கூறல்*
*கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.**

இனிய சொல் இருக்கும்போது இன்னாச்சொல் பேசுவது கனி இருக்கும்போது காயை உண்பதைப் போன்றது.

நூல் வெளி





திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர். எக்காலத்துக்கும் பொருந்தும் வாழ்க்கை நெறிகளை வகுத்துக் கூறியுள்ளார். வான்புகழ் வள்ளுவர், தெய்வப்புலவர், பொய்யில் புலவர் முதலிய பல சிறப்புப் பெயர்கள் இவருக்கு உண்டு

திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. திருக்குறள் 133 அதிகாரங்களில் 1330 குறள்பாக்களைக் கொண்டுள்ளது. "திருக்குறளில் இல்லாததும் இல்லை, சொல்லாததும் இல்லை" என்னும் வகையில் சிறந்து விளங்குகிறது. திருக்குறளுக்கு உலகப் பொதுமறை, வாயுறை வாழ்த்து முதலிய பல சிறப்புப் பெயர்கள் வழங்குகின்றன. நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

6th Std Tamil CBSE Pages 25-50.indd 49 20-03-2020 16:27:13

மதிப்பீடு

7DABVF

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மக்களுக்கு மகிழ்ச்சி தருவது _____
   அ) ஊக்கமின்மை ஆ) அறிவுடைய மக்கள் இ) வன்சொல் ஈ) சிறிய செயல்
2. ஒருவர்க்குச் சிறந்த அணி _____
   அ) மாலை ஆ) காதணி இ) இன்சொல் ஈ) வன்சொல்

பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.

1. இனிய _____ இன்னாத கூறல்
   கனியிருப்பக் _____ கவர்ந்த் தற்று
2. அன்பிலார் _____ தமக்குரியர் அன்புடையார்
   _____ உரியர் பிறர்க்கு

நயம் அறிக.

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்

இந்தக் குறளில் உள்ள எதுகை, மோனைச் சொற்களை எடுத்து எழுதுக

பின்வரும் செய்திக்குப் பொருத்தமான திருக்குறள் எது எனக் கண்டறிந்து எழுதுக.

2016 ஆம் ஆண்டு ரியோ நகரில் மாற்றுத்திறனாளிகள் ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது. அதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாரியப்பன் கலந்துகொண்டார். உயரம் தாண்டுதல் போட்டியில் அவர் தங்கப் பதக்கம் பெற்றார். செய்தியாளர்கள் அவருடைய தாயிடம் நேர்காணல் செய்தனர். "என் மகனின் வெற்றி எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. அவனைப் பெற்ற பொழுதைவிட இப்போது அதிகமாக மகிழ்கிறேன்" என்று மகிழ்ச்சியுடன் கூறினார்.

அ) செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்

ஆ) ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்

இ) இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

குறுவினாக்கள்

1. உயிருள்ள உடல் எது?
2. எழுத்துகளுக்குத் தொடக்கமாக அமைவது எது?
3. அன்பிலார், அன்புடையார் செயல்கள் யாவை?

6th Std Tamil CBSE Pages 25-50.indd 50 20-03-2020 16:27:13

இயல் மூன்று

எந்திர உலகம்



கற்றல் நோக்கங்கள்

- எதையும் காரண காரியத்துடன் அறிந்துகொள்ள முயலுதல்
- அறிவியல் மனப்பான்மை பெறுதல்
- நம் நாட்டின் எதிர்கால முன்னேற்றத்துக்கு எவையெல்லாம் தேவை என அறிதல்
- அறிவியல் கண்டுபிடிப்புகளினால் ஏற்படும் விளைவுகள் பற்றி விவாதித்தல்
- வளர்ந்துவரும் அறிவியல், தொழில் நுட்பங்கள் பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வம் பெறுதல்
- தமிழில் பிழையின்றி எழுதுதல்

6th Std Tamil CBSE Pages 51-76.indd 51 20-03-2020 16:33:51

கவிதைப்பேழை

இயல் மூன்று

அறிவியல் ஆத்திசூடி

7DJ7X3

நுழையும்முன்

ஆத்திசூடி என்பது அகர வரிசையில் அறிவுரைகளைச் சொல்லும் இலக்கியம். ஔவையின் ஆத்திசூடியை நாம் அறிவோம். பாரதியார் 'புதிய ஆத்திசூடி' என்று காலத்திற்கேற்ற அறிவுரைகளைக் கூறினார். அகர வரிசையில் அறிவியல் அறிவோம்; அகில உலகையும் ஆய்வு செய்வோம்; அனைத்தையும் உலகின் நலத்திற்கு வழங்குவோம்!

அறிவியல் சிந்தனை கொள்
ஆய்வில் மூழ்கு
இயன்றவரை புரிந்துகொள்
ஈடுபாட்டுடன் அணுகு
உண்மை கண்டறி
ஊக்கம் வெற்றிதரும்





என்றும் அறிவியலே வெல்லும்
ஏன் என்று கேள்
ஐயம் தெளிந்து சொல்
ஒருமித்துச் செயல்படு
ஓய்வற உழை
ஔடதமாம் அனுபவம்

– நெல்லை சு.முத்து

6th Std Tamil CBSE Pages 51-76.indd 52 20-03-2020 16:33:54

சொல்லும் பொருளும்

இயன்றவரை – முடிந்தவரை

ஒருமித்து – ஒன்றுபட்டு

ஔடதம் – மருந்து

நூல் வெளி



"தம்மை ஒத்த அலைநீளத்தில் சிந்திப்பவர்" என்று மேதகு அப்துல் கலாம் அவர்களால் பாராட்டப் பெற்றவர் நெல்லை சு.முத்து. இவர் அறிவியல் அறிஞர் மற்றும் கவிஞர். விக்ரம் சாராபாய் விண்வெளி மையம், சதீஷ்தவான் விண்வெளி மையம், இந்திய விண்வெளி மையம் ஆகிய நிறுவனங்களில் பணியாற்றியவர். அறிவியல் கவிதைகள், கட்டுரைகள் பலவற்றைப் படைத்துள்ளார். எண்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

அறிவியல் ஆத்திசூடி என்னும் நூலின் ஒரு பகுதி இங்குத் தரப்பட்டுள்ளது.



கற்பவை கற்றபின்

1. 'அறிவியல் ஆத்திசூடி' பகுதியில் உங்களுக்குப் பிடித்த அடியை எழுதி அதன் காரணத்தைக் கூறுக.
2. அறிவியல் சிந்தனையைத் தூண்டும் முழக்கத் தொடர்கள் ஐந்து உருவாக்குக.

   (எ.கா.) அறிவியலை வளர்ப்போம்!

   உலகை வெல்வோம்!



மதிப்பீடு

7DT3YQ

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. உடல் நோய்க்கு _____ தேவை.

   அ) ஔடதம் ஆ) இனிப்பு இ) உணவு ஈ) உடை

2. நண்பர்களுடன் _____ விளையாடு.

   அ) ஒருமித்து ஆ) மாறுபட்டு இ) தனித்து ஈ) பகைத்து

3. 'கண்டறி' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_____

   அ) கண் + அறி ஆ) கண்டு + அறி இ) கண்ட + அறி ஈ) கண் + டறி

6th Std Tamil CBSE Pages 51-76.indd 53 20-03-2020 16:33:55

4. 'ஓய்வற' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_____

அ) ஓய்வு + அற ஆ) ஓய் + அற இ) ஓய் + வற ஈ) ஓய்வு + வற

5. ஏன் + என்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____

அ) ஏன்என்று ஆ) ஏனென்று இ) ஏன்னென்று ஈ) ஏனன்று

6. ஔடதம் + ஆம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____

அ) ஔடதமாம் ஆ) ஔடதம்ஆம் இ) ஔடதாம் ஈ) ஔடதஆம்

எதிர்ச்சொற்களைப் பொருத்துக.

1. அணுகு - தெளிவு
2. ஐயம் - சோர்வு
3. ஊக்கம் - பொய்மை
4. உண்மை - விலகு

பாடல் வரிகளுக்கேற்றவாறு முறைப்படுத்துக.

1. சிந்தனை கொள் அறிவியல்

_____

2. சொல் தெளிந்து ஐயம்

_____

3. கேள் ஏன் என்று

_____

4. வெல்லும் என்றும் அறிவியலே

_____

குறு வினா

மனிதர்களுக்கு மருந்தாக விளங்குவது எது?

சிறுவினா

பாடலின் கருத்தை உங்கள் சொந்த நடையில் எழுதுக.

சிந்தனை வினா

உங்களுக்குத் தெரிந்த மருத்துவ முறைகள் யாவை?

6th Std Tamil CBSE Pages 51-76.indd 54 20-03-2020 16:33:55

கவிதைப்பேழை

இயல் மூன்று

அறிவியலால் ஆள்வோம்

நுழையும்முன்

அறிவியல் ஆய்வுக்கு எல்லை இல்லை. மண்ணில், விண்ணில், கடலில், காற்றில் என எங்கும் ஆய்வுகள் நிகழ்கின்றன. மனிதனின் நகலாக எந்திர மனிதனை மனிதரே படைக்கின்றனர். மனித உடலின் பாகங்களையும் இயந்திரத்தின் பாகங்கள் போல் மாற்றுகின்றனர் . கோள்கள் இனி நமக்குத் தொலைவு இல்லை. நேற்றைய மனிதன் நினைத்துப் பார்க்காத பலவற்றை இன்றைய மனிதன் நிகழ்த்திக் காட்டுகிறான். இன்றைய மனிதனின் கனவுகளை நாளை நாம் நனவாக்குவோம் வாருங்கள்!

7E2Z1D





ஆழக் கடலின் அடியில் மூழ்கி
ஆய்வுகள் செய்து பார்க்கின்றான்
நீல வானின் மேலே பறந்து
நிலவில் வாழ நினைக்கின்றான்

செயற்கைக் கோளை விண்ணில் ஏவி
செய்தித் தொடர்பில் சிறக்கின்றான்
இயற்கை வளமும் புயலும் மழையும்
எங்கே என்று உரைக்கின்றான்



எலும்பும் தசையும் இல்லாது இயங்கும்
எந்திர மனிதனைப் படைக்கின்றான்
இணைய வலையால் உலகம் முழுமையும்
உள்ளங் கையில் கொடுக்கின்றான்



உறுப்பை மாற்றும் மருத்துவம் கண்டு
உடலும் உயிரும் காக்கின்றான்
அணுவைப் பிளந்து ஆற்றலை எடுத்து
அனைத்தும் செய்து பார்க்கின்றான்

நாளை மனிதன் கோள்களில் எல்லாம்
நகரம் அமைத்து வாழ்ந்திடுவான்
வேளை தோறும் பயணம் செய்ய
விண்வெளிப் பாதை அமைத்திடுவான்.

– பாடநூல் ஆசிரியர் குழு





6th Std Tamil CBSE Pages 51-76.indd 55 20-03-2020 16:33:55

பாடலின் பொருள்

மனிதன் ஆழ்கடலுக்கு உள்ளேயும் சென்று ஆய்வுகள் செய்கின்றான். நீல வானத்தின் மேலே பறந்து நிலவில் சென்றும் வாழ நினைக்கிறான்.

வானத்தில் செலுத்தப்படும் செயற்கைக்கோள்கள் உதவியுடன் செய்தித் தொடர்பில் சிறந்துள்ளான். இயற்கை வளங்களையும் புயல், மழை ஆகியவற்றையும் கண்டறிந்து கூறுகிறான்.

எலும்பும் தசையும் இல்லாமல் செயல்படும் எந்திர மனிதனையும் படைத்து விட்டான். இணையவலையின் உதவியால் உலகத்தையே நம் உள்ளங்கையில் கொடுக்கின்றான்.

பாதிக்கப்பட்ட உடலுறுப்புகளை மாற்றிப் பொருத்தி உடலையும் உயிரையும் காக்க வழிவகை செய்துவிட்டான். அணுவைப் பிளந்து ஆற்றலை எடுத்து அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்ள முயல்கிறான்.

நாளைய மனிதனோ விண்ணிலுள்ள கோள்களில் எல்லாம் நகரங்கள் அமைத்து வாழ்ந்திடுவான். அங்குச் சென்றுவர விண்வெளியிலும் பாதை அமைத்திடுவான்.

வானை அளப்போம் கடல் மீனையளப்போம்
சந்திர மண்டலத்தியல் கண்டுதெளிவோம்
சந்தி தெருப்பெருக்கும் சாத்திரம் கற்போம்.

– பாரதியார்



கற்பவை கற்றபின்

1. அறிவியலால் ஆள்வோம் கவிதையை உரிய ஓசையுடன் படிக்க.
2. உங்களைக் கவர்ந்த அறிவியல் சாதனங்கள் நான்கினை எழுதுக.
3. 'அலைபேசியால் நன்மையே' என்னும் தலைப்பில் வகுப்பில் கலந்துரையாடல் செய்க.

6th Std Tamil CBSE Pages 51-76.indd 56 20-03-2020 16:33:55

மதிப்பீடு

7EBV31

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மனிதன் எப்போதும் உண்மையையே _____.

அ) உரைக்கின்றான் ஆ) உழைக்கின்றான் இ) உறைகின்றான் ஈ) உரைகின்றான்

2. ஆழக்கடல் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

அ) ஆழமான + கடல் ஆ) ஆழ் + கடல் இ) ஆழ + கடல் ஈ) ஆழம் + கடல்

3. விண்வெளி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

அ) விண் + வளி ஆ) விண் + வெளி இ) விண் + ஒளி ஈ) விண் + வொளி

4. நீலம் + வான் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____.

அ) நீலம்வான் ஆ) நீளம்வான் இ) நீலவான் ஈ) நீலவ்வான்

5. இல்லாது + இயங்கும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____.

அ) இல்லாதுஇயங்கும் ஆ) இல்லாஇயங்கும்
இ) இல்லாதியங்கும் ஈ) இல்லதியங்கும்

நயம் அறிக.

1. பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களை எழுதுக.
2. பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்களை எழுதுக.
3. பாடலில் இடம்பெற்றுள்ள இயைபுச் சொற்களை எழுதுக.

குறுவினா

1. செயற்கைக்கோள் எவற்றுக்கு எல்லாம் பயன்படுகிறது?
2. நாளைய மனிதனின் வாழ்வு எவ்வாறு இருக்கும்?

சிந்தனை வினா


1. எவற்றுக்குப் புதிய கண்டுபிடிப்புகள் தேவை என்பது பற்றிச் சிந்தித்து எழுதுக
2. இதுவரை எத்தனை கோள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன? அவை யாவை?
3. இந்தியா அண்மையில் நிலவுக்கு அனுப்பிய செயற்கைக்கோளின் பெயர் யாது?

6th Std Tamil CBSE Pages 51-76.indd 57 20-03-2020 16:33:55

இயல் மூன்று

கணியனின் நண்பன்

7EKR4N



எல்லாம் எந்திரமயமாகி வருகிற காலம் இது. மனிதர்கள் தாங்கள் செய்யும் செயல்களை எந்திரங்களைக் கொண்டு செய்யும் வகையில் பலவற்றை உருவாக்கி வருகிறார்கள். மனிதர்கள் செய்ய முடியாத பணிகளையும் எந்திரங்கள் செய்கின்றன. வீடு, அலுவலகம், தொழிற்சாலை, மருத்துவமனை என்று பல இடங்களிலும் எந்திரங்கள் பணியாற்றுகின்றன. கணக்குப்போடும் எந்திரம், கற்றுத்தரும் எந்திரம், வேலை செய்யும் எந்திரம், விளையாடும் எந்திரம் என்று எங்கெங்கும் எந்திரங்கள். எந்திர உலகில் நுழைவோம்! எல்லாவற்றையும் கற்போம்!

கணியன் பள்ளி முடிந்து வீடு திரும்பினான். அழைப்பு மணியை அழுத்தினான். "யார் அங்கே?' வீட்டிற்குள் புதிய குரல்! அதைக் கேட்டுத் திகைத்தான். "யாருடைய குரல் இது? அம்மாவின் குரல் போல இல்லையே!" சிந்தித்தான். அப்போது கதவு திறந்தது. உள்ளே நின்றிருந்த உருவத்தைப் பார்த்ததும் அவனுக்குள் வியப்பு!

'கணியன் வணக்கம்! உள்ளே வா' என்றது அவ்வுருவம். கணியன் சற்றுப் பயத்துடன் தயங்கி நின்றான். அப்போது அங்கு வந்த அவனுடைய அம்மா, 'கணியா, ஏன் அங்கேயே நிற்கிறாய்? பயப்படாதே! உள்ளே வா!" என்றார்.



உள்ளே வந்த கணியன் 'அம்மா யார் இது?' எனக் கேட்டான். "இதுதான் எந்திரமனிதன். தொழில்நுட்பக் கருத்தரங்கிற்கு அப்பா போயிருந்தார் இல்லையா? அங்கிருந்து வாங்கி வந்துள்ளார். இனி இதுவும் நம் வீட்டின் உறுப்பினர்தான்" என்றார் அம்மா.

"இது என்னோடு பேசியதே!", எனக் கேட்டான் கணியன். 'ஆம் இது பேசும், பாடும், வீட்டு வேலைகள் செய்யும், படிப்பதில் உனக்கு உதவி செய்யும், என்னுடைய அலுவலக வேலைகளை முடிக்க உதவும். அப்பாவுடைய கணக்குவழக்குகளையும் முடித்துத் தரும்', என்றார் அம்மா.

6th Std Tamil CBSE Pages 51-76.indd 58 20-03-2020 16:33:56

"அப்படியா! இதனுடன் நான் பேசிப் பார்க்கட்டுமா?" என ஆவலோடு கேட்டான். "பேசு, பயப்படாமல் பேசு " என்றார் அம்மா.

"இங்கே வா!" என்றான் கணியன்.

எந்திரமனிதன் நகர்ந்து கணியன் அருகில் வந்து நின்றது. 'யார் நீ?' எனக் கேட்டான் கணியன். 'நான் ஓர் எந்திரமனிதன். என்னை 'ரோபோ' என்றும் அழைப்பார்கள்', என்றது.

"நீ எல்லா வேலைகளையும் செய்வாய் என்று அம்மா கூறினார். எப்படி உன்னால் அது முடிகிறது?"



"அதற்கு நான் உருவான வரலாற்றை நீ முதலில் அறிந்து கொள்ள வேண்டும்" என்று கூறிய ரோபோ தொடர்ந்து பேசியது.




"நான் உருவாவதற்கு முன்பே என்னைப் பற்றிய கற்பனை மனிதர்களிடம் இருந்தது. காரல் கபெக் (Karel capek) என்பவர் 'செக்' நாட்டைச் சேர்ந்த நாடக ஆசிரியர். இவர் 1920ஆம் ஆண்டு நாடகம் ஒன்றை எழுதினார். அதில் "ரோபோ" (Robot) என்னும் சொல்லை முதன் முதலாகப் பயன்படுத்தினார். ரோபோ என்ற சொல்லுக்கு 'அடிமை' என்பது பொருள். ஒரு தொழிற்சாலையில் ரோபோக்கள் வேலை செய்வதாக அந்த நாடகத்தில் காட்சிகளை அமைத்திருந்தார். இவ்வாறு ரோபோ என்னும் சொல் வழக்கத்திற்கு வந்தது.

மனிதர்கள் தம் வேலைகளை எளிதாகச் செய்ய முதலில் எந்திரங்களைக் கண்டுபிடித்தனர். அவற்றை இயக்குவதற்கு மனித ஆற்றல் தேவைப்பட்டது. இக்குறையைப் போக்க மனிதன் கண்டுபிடித்தவையே தானியங்கிகள்.

தானியங்கி என்றால் என்ன தெரியுமா? நுட்பமான, கடினமான, ஒரே மாதிரியான வேலைகளை மனிதரைவிட விரைவாகத் தானே செய்துமுடிக்கும் எந்திரமே தானியங்கி ஆகும். ஒவ்வொரு தானியங்கியிலும் ஒரு கணினி இணைந்து இருக்கும். தானியங்கியின் செயல்களை அந்தக் கணினி கட்டுப்படுத்தும்.

தெரிந்து தெளிவோம்



மனித முயற்சிகளுக்கு மாற்றாகத் தானே இயங்கும் எந்திரம் தானியங்கி ஆகும். இவை தோற்றத்தில் மனிதர் போல இல்லாமலும் இருக்கலாம். ஆனால் மனிதர்களைப் போலச் செயல்களை நிறைவேற்றும்" என்று பிரிட்டானிக்கா கலைக்களஞ்சியம் தானியங்கிகளுக்கு விளக்கம் தருகிறது.



இவ்வகைத் தானியங்கிகள் இன்று பல தொழில் நிறுவனங்களில் பயன்பட்டு வருகின்றன. இவை பயன்படும் இடத்திற்கு ஏற்ற வகையில் எந்திரக் கைகள், நகரும் கால்கள், சூழ்நிலைகளை உணர்வதற்கான நுண்ணுணர்வுக் கருவிகள் (Sensors) ஆகியவற்றுடன் உருவாக்கப்படுகின்றன" என்று கூறி நிறுத்தியது.

"நான் அவற்றைப் பார்க்க வேண்டுமே!" என்றான் கணியன்.

"வா உனக்குக் காட்டுகிறேன்" என்று

6th Std Tamil CBSE Pages 51-76.indd 59 20-03-2020 16:33:57

கூறிய எந்திரமனிதன், கணினியை இயக்கத் தொடங்கியது. கணினித்திரையில் காட்சிகள் தோன்றின.



"இவை தொழிற்சாலையில் பயன்படுத்தப்படும் தானியங்கிகள். உற்பத்தி செய்தல், பழுதுகளை நீக்குதல் போன்ற பணிகளைச் செய்கின்றன. இந்தக் காட்சியைப் பார் கணியா!" என்றது எந்திர மனிதன்.

"இது என்ன செய்கிறது? நோய்க்கு மருத்துவம் செய்வது போல உள்ளதே!" என்று கேட்டான்.



"ஆம் கணியா! இவை மருத்துவத்துறையில் நோயின் அறிகுறிகளைக் கண்டுபிடிக்க உதவுகின்றன. மருத்துவம் பார்க்கவும் பயன்படுத்தப்படுகின்றன. சிக்கலான அறுவை சிகிச்சைகளைச் செய்யும் ரோபோக்களும் உள்ளன."

"அப்படியா! அடுத்து...?" எனக் கேட்டான்.

"பிற கோள்களுக்குச் சென்று ஆய்வு நடத்தவும் செயற்கைக்கோள்களை இயக்கவும் தானியங்கிகள் பயன்படுகின்றன. உலகில் மனிதர்கள் செல்ல முடியாத இடங்கள் பல உள்ளன. பெருங்கடலின் அடி ஆழம், வெப்பநிலை உறைநிலைக்கும் கீழே உள்ள துருவப்பகுதிகள் ஆகியவை அவற்றுள் சில. இவ்விடங்களுக்குச் சென்று ஆய்வு நடத்தவும் இவை உதவுகின்றன."

"ஆனால் இவை உருவ அமைப்பில் உன்னைப் போல இல்லையே?" எனக் கணியன் வினவினான்.

"தமது வேலைகளை எளிமையாகச் செய்ய முதலில் தானியங்கிகளை உருவாக்கினான் மனிதன், பிறகு தன்னைப் போன்றே சிந்தித்துச் செயல்படும் தானியங்கிகளை உருவாக்க முயன்றான். அம்முயற்சியின் விளைவாகத் தோன்றியவர்களே என்னைப் போன்ற எந்திரமனிதர்கள். மனிதர்களைப் போலவே எங்களுக்குத் தலை, உடல், கை, கால்கள் இருக்கும்"

"அப்படியானால் எந்திர மனிதர்களுக்கும் தானியங்கிகளுக்கும் உள்ள வேறுபாடு என்ன ?"



"அதுதான் எங்களிடம் உள்ள செயற்கை நுண்ணறிவு."

"செயற்கை நுண்ணறிவா? அப்படியென்றால்....?"

"மனிதர்களாகிய நீங்கள் உங்கள் நுண்ணறிவால் செயல்படுகிறீர்கள். நாங்களும் உங்களைப் போலச் செயல்பட

6th Std Tamil CBSE Pages 51-76.indd 60 20-03-2020 16:33:58

எங்களுக்குள் சில கட்டளைகள் வடிவமைத்து வைக்கப்பட்டு உள்ளன. இந்தச் செயற்கை நுண்ணறிவைக் கொண்டே நாங்கள் இயங்குகிறோம்."



"உண்மையாகவே செயற்கை நுண்ணறிவைக் கொண்டு மனிதர் போலச் செயல்பட முடியுமா?"

"முடியும். செயற்கை நுண்ணறிவின் வலிமையை நீ அறிந்துகொள்ள வேண்டுமா? ஒரு நிகழ்ச்சியைக் கூறுகிறேன் கேள்! 1997-ஆம் ஆண்டு மே மாதம் சதுரங்கப் போட்டி ஒன்று நடைபெற்றது. அதில் உலகச் சதுரங்க வெற்றியாளர் கேரி கேஸ்புரோவ் என்பவர் கலந்து கொண்டார். ஐ.பி.எம். என்னும் நிறுவனம் உருவாக்கிய டீப் புளூ (Deep blue) என்னும் மீத்திறன் கணினி (Super Computer) அவருடன் போட்டியிட்டது.

போட்டியின் முடிவு என்ன தெரியுமா? ஆம், நீ நினைப்பது சரிதான். போட்டியில் டீப் புளூவே வெற்றி வாகை சூடியது".




"என்னால் நம்பவே முடியவில்லை! அப்படியானால் நீயும் கூட சதுரங்கம் விளையாடுவாயா?"

"ஓ விளையாடுவேனே! என்னைப்போன்ற எந்திரமனிதர்கள், உணவகங்களில் உணவு பரிமாறுகின்றனர். பொது இடங்களில் வழிகாட்டுகின்றனர். வெடிகுண்டுகளைச் செயலிழக்கச் செய்கின்றனர். உனக்கு இன்னும் ஒரு வியப்பான செய்தியும் சொல்கிறேன், கேட்கிறாயா?"

"சொல், கேட்கிறேன்" என்றான் கணியன் ஆர்வமாக.

தெரிந்து தெளிவோம்

சோபியா




"உலகிலேயே முதன்முதலாக சவுதி அரேபியா ஒரு ரோபோவுக்குக் குடியுரிமை வழங்கியுள்ளது. அந்த ரோபோவின் பெயர் 'சோபியா'. மேலும் ஐக்கிய நாடுகள் சபை 'புதுமைகளின் வெற்றியாளர்' என்னும் பட்டத்தைச் சோபியாவுக்கு வழங்கியுள்ளது. உயிரில்லாத ஒரு பொருளுக்கு ஐ.நா.சபை பட்டம் வழங்குவதும் இதுதான் முதல் முறை. என்னைப் போன்ற எந்திரமனிதருக்கு இப்பட்டம் வழங்கப்பட்டதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி."

6th Std Tamil CBSE Pages 51-76.indd 61 20-03-2020 16:33:58

"இப்படியும் நடக்குமா என்ன?"

"இனிவரும் காலங்களில் 'சோபியா' போன்ற எண்ணற்ற எந்திரமனிதர்கள் உருவாக்கப்படுவார்கள். அவர்கள் அனைவரும் மனித இனத்தின் வளர்ச்சிக்கு உதவுவார்கள்" என்றது எந்திரமனிதன்.

"உங்களைப்பற்றி அறிந்துகொண்டதில் மிக்க மகிழ்ச்சி. சரி, என்னுடன் சதுரங்கம் விளையாட வருகிறாயா?" என்று கேட்டான் கணியன். எந்திரமனிதன் தலையசைத்தது. எந்திரமனிதனுடன் சதுரங்கம் விளையாட மகிழ்வுடன் ஆயத்தமானான் கணியன்.



கற்பவை கற்றபின்

உங்களை ஓர் எந்திரமனிதனாகக் கற்பனை செய்துகொண்டு நண்பர்களுடன் உரையாடுக.

மதிப்பீடு

7EUM6B

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. நுட்பமாகச் சிந்தித்து அறிவது _____.
   அ) நூலறிவு ஆ) நுண்ணறிவு இ) சிற்றறிவு ஈ) பட்டறிவு

2. தானே இயங்கும் எந்திரம் _____.
   அ) கணினி ஆ) தானியங்கி இ) அலைபேசி ஈ) தொலைக்காட்சி

3. 'நின்றிருந்த' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_____
   அ) நின் + றிருந்த ஆ) நின்று + இருந்த இ) நின்றி + இருந்த ஈ) நின்றி + ருந்த

4. 'அவ்வுருவம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_____
   அ) அவ்வு + ருவம் ஆ) அ + உருவம் இ) அவ் + வுருவம் ஈ) அ + வுருவம்

5. மருத்துவம் + துறை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்_____
   அ) மருத்துவம்துறை ஆ) மருத்துவதுறை இ) மருந்துதுறை ஈ) மருத்துவத்துறை

6th Std Tamil CBSE Pages 51-76.indd 62 20-03-2020 16:33:59

6. செயல் + இழக்க என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்_____
அ) செயலிழக்க ஆ) செயல்இழக்க இ) செயஇழக்க ஈ) செயலிலக்க

7. நீக்குதல் என்னும் சொல்லின் எதிர்ச்சொல் ----------
அ) போக்குதல் ஆ) தள்ளுதல் இ) அழித்தல் ஈ) சேர்த்தல்

8. எளிது என்னும் சொல்லின் எதிர்ச்சொல் ----------
அ) அரிது ஆ) சிறிது இ) பெரிது ஈ) வறிது

கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. மனிதன் தன் வேலைகளை எளிதாக்கக் கண்டுபிடித்தவை _____
2. தானியங்கிகளுக்கும், எந்திரமனிதர்களுக்கும் இடையே உள்ள முக்கிய வேறுபாடு _____
3. உலக சதுரங்க வீரரை வெற்றிகொண்ட மீத்திறன் கணினியின் பெயர் _____
4. 'சோபியா' ரோபோவுக்குக் குடியுரிமை வழங்கிய நாடு _____

சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. தொழிற்சாலை _____
2. உற்பத்தி _____
3. ஆய்வு _____
4. செயற்கை _____
5. நுண்ணறிவு _____

குறுவினா

1. 'ரோபோ' என்னும் சொல் எவ்வாறு உருவானது?
2. 'டீப் புளூ' – மீத்திறன் கணினி பற்றி எழுதுக.

சிறுவினா

1. எந்திரமனிதனின் பயன்களை விளக்குக.
2. துருவப் பகுதிகளில் ஆய்வு செய்ய எந்திரமனிதர்களை அனுப்புவதன் காரணம் யாது?

சிந்தனை வினா

உங்களுக்கென ஒரு எந்திரமனிதன் இருந்தால் அதை எதற்கெல்லாம் பயன்படுத்துவீர்கள் எனச் சிந்தித்து எழுதுக.

6th Std Tamil CBSE Pages 51-76.indd 63 20-03-2020 16:33:59


விரிவானம்

இயல் மூன்று

ஒளி பிறந்தது

அப்துல் கலாமுடன் நேர்காணல்

7F4I7Y



குழந்தைகளிடமும் மாணவர்களிடமும் மிகுந்த அன்பு காட்டியவர் மறைந்த மேனாள் குடியரசுத் தலைவர் மேதகு அப்துல் கலாம். மாணவர்கள் முன்னேற பல வழிகளை எடுத்துச் சொன்னவர். எதிர்காலம் பற்றிக் கனவுகண்டு, அதை அடைய வேண்டும் என்பது அவர் கனவாக இருந்தது. மாணவர்களோடு பேசுவதை மிகவும் விரும்பிய அவரைச் சந்தித்தால் மகிழ்ச்சியாக இருக்கும் அல்லவா? வாருங்கள் அவரிடம் கேட்டிடலாம்; அறிவியலைக் கற்றிடலாம்.

இடம்: தொழில்நுட்பக் கண்காட்சி

மாணவர்கள் தொழில்நுட்பக் கண்காட்சி அரங்குகளை ஒவ்வொன்றாகப் பார்வையிட்டுக் கொண்டே வருகின்றனர். அங்கிருக்கும் 'கலாம் அரங்கு' என்னும் பெயர்ப்பலகை அவர்களின் கவனத்தை ஈர்க்கிறது. அரங்கினுள் ஆர்வத்துடன் நுழைகின்றனர். அங்கு அப்துல் கலாமின் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டு இருக்கின்றன. அவற்றைப் பார்வையிட்டு முடித்த நேரத்தில் அங்கே ஒரு பெரிய திரை இருப்பதைக் காண்கின்றனர். அப்போது……

அரங்கப் பொறுப்பாளர் : மாணவர்களே இங்கே வாருங்கள்!

(மாணவர்கள் அனைவரும் அகன்ற திரையின் முன் கூடுகின்றனர்)

அரங்கப் பொறுப்பாளர் : அப்துல் கலாம் அவர்களை நீங்கள் காணவேண்டுமா?

மாணவர்கள் : கலாம் ஐயாவைக் காண்பதா! எப்படி?

அரங்கப் பொறுப்பாளர் : பொறுங்கள்! கலாம் அவர்கள் இதோ வருகிறார்.

(திரையில் அப்துல் கலாம் தோன்றுகிறார்)


மாணவர்கள் : கலாம் ஐயா, எங்கள் வினாக்களுக்கு விடை தருவாரா?

அரங்கப் பொறுப்பாளர் : நிச்சயம் பதில் தருவார்.

மாணவர்கள் : நான் கேட்கிறேன். நான்தான் முதலில் கேட்பேன்.

எது கேட்டாலும் பதில் சொல்வாரா? (அங்கே ஒரே ஆரவாரம்)

6th Std Tamil CBSE Pages 51-76.indd 64 20-03-2020 16:33:59



அரங்கப் பொறுப்பாளர் : பொறுங்கள்! உங்கள் வினாக்களை ஒவ்வொருவராகத் திரையை நோக்கிச் சத்தமாகக் கேளுங்கள். ஐயா பதில் தருவார்.

அருண்மொழி : முதல் கேள்வியை நான் கேட்கிறேன்.

அறிவியல் மீது உங்களுக்கு ஆர்வம் ஏற்படக் காரணமான முதல் நிகழ்வு எது ஐயா?

(அப்துல் கலாம் பதிலளிக்கிறார்)

அப்துல் கலாம் : நான் பத்து வயதுச் சிறுவனாக இருந்தபோது என் அறிவியல் ஆசிரியர் பறவைகள் எப்படிப் பறக்கின்றன என்பதை விளக்கிக் கூறினார். அன்று முதல், வானில் பறக்க வேண்டும் என்பது என் வாழ்க்கையின் குறிக்கோள் ஆகிவிட்டது. அதுவே என் அறிவியல் ஆர்வத்தின் தொடக்கம்.

தேன்மொழி : அடுத்து நான் கேட்கட்டுமா? உங்களுக்கு மிகவும் பிடித்த புத்தகம் எது ஐயா?

அப்துல் கலாம் : தமிழில் திருக்குறள் எனக்கு மிகவும் பிடித்த நூலாகும்.

'அறிவுஅற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்

உள்ளழிக்கல் ஆகா அரண்'

என்னும் குறள் என் வாழ்க்கைக்கு வலுசேர்த்தது. அதுபோல் 'லிலியன் வாட்சன்' எழுதிய, விளக்குகள் பல தந்த ஒளி (*Lights from many lamps*) என்னும் நூலையும் எனக்கு மிகவும் பிடிக்கும். அதைப் படித்தபோது அறிவு, தன்னம்பிக்கை, மகிழ்ச்சி ஆகிய மூன்றையும் பெற்றேன்.

அப்துல்லா : நீங்கள் பெரிதும் மகிழ்ந்த நிகழ்வு ஏவுகணைச் சோதனைதான் அல்லவா?

6th Std Tamil CBSE Pages 51-76.indd 65 20-03-2020 16:33:59



அப்துல் கலாம் : இல்லை. போலியோவினால் பாதிக்கப்பட்டவர்கள் மூன்று கிலோ எடையுள்ள செயற்கைக்கால்களைப் பொருத்திக் கொண்டு சிரமப்பட்டு நடப்பதைக் கண்டேன். பாதுகாப்புக் கருவிகளில் பயன்படுத்தப்படும் கார்பன் இழையைக் கொண்டு முந்நூறு கிராம் எடையில் செயற்கைக் கால்கள் உருவாக்கப்பட்டன. அதனை அவர்கள் அணிந்து மகிழ்ந்த நிகழ்ச்சிதான் எனக்குப் பெருமகிழ்வை அளித்தது.

இளம்பரிதி : ஐயா, சுதந்திர இந்தியாவின் வெற்றிகளாக எவற்றைக் கருதுகிறீர்கள்?

அப்துல் கலாம் :

- உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்துள்ளோம்.
- தகவல் தொழில்நுட்பத் துறையில் மிகுதியான வளர்ச்சி பெற்றுள்ளோம்.
- எவ்வகையான செயற்கைக் கோளையும் ஏவும் திறன் நம்மிடம் உள்ளது.
- அணு உலைகள் மூலம் மின்சாரம் தயாரிப்பதில் முன்னணியில் உள்ளோம்.
- நவீன மருந்துகளும் பாரம்பரிய மருத்துவ முறைகளும் வளர்ச்சி பெற்றுள்ளன.
- பாதுகாப்புத் துறையைப் பொறுத்தவரை அக்னி மற்றும் பிரித்வி ஏவுகணைகளைச் செலுத்துவதில் வெற்றி பெற்றுள்ளோம்.

இவற்றையெல்லாம் இந்தியாவின் வெற்றிகளாகக் கருதுகின்றேன்.

நீலன் : இந்த அளவிற்கு முன்னேறியுள்ளோம். ஆனால், மனிதர்கள் பல நோய்களால் பாதிக்கப்படுகின்றனர். அவற்றிற்கான மருந்துகள் இல்லையே! அவற்றைக் கண்டுபிடிக்க என்ன மாதிரியான ஆய்வுகள் நடைபெறுகின்றன ஐயா?

அப்துல் கலாம் : கடலுக்கு அடியில் மனிதரால் கண்டறியப்படாத ஏராளமான தாவரங்கள், உயிரினங்கள் இருக்கின்றன. அவற்றிலிருந்து புதிய மூலக்கூறுகளைப் பெற முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அவை வெற்றிபெறும் போது 'எய்ட்ஸ்' போன்ற உயிர்க்கொல்லி நோய்களுக்கு மட்டுமல்லாமல் இனிவரும் புதிய நோய்களுக்கும்கூடத் தடுப்பு மருந்து கண்டறியப்படலாம்.

6th Std Tamil CBSE Pages 51-76.indd 66 20-03-2020 16:33:59

வான்மதி : நூறு ஆண்டுகளுக்குப் பிறகு நமது இந்தியா எப்படி இருக்கும் என நினைக்கிறீர்கள் ஐயா?

அப்துல் கலாம் : மூன்று சிறப்புகளைப் பெற்றிருக்கும் என நம்புகிறேன்.

1. ஆயிரம் வருடங்களுக்கு முன்பு நாளந்தா பல்கலைக்கழகத்தில் இருந்ததைப் போல வலுவான கல்வி முறை இருக்கும்.
2. அனைத்து இயற்கை வளங்களும் தீர்ந்து போயிருக்கும். ஆயினும், நாம் தயாரித்து அனுப்பிய செயற்கைக்கோள்கள் சூரிய சக்தியைப் பெற்று நமக்கு அளிக்கும்.
3. செவ்வாய்க்கோளில் மனித இனம் குடியேறி இருக்கும்.

மேரி : செவ்வாய்க்கோளில் மனிதன் வாழ முடியுமா? சரி. எங்களையெல்லாம் எப்போது நிலவிற்கு அழைத்துச் செல்வீர்கள்?

அப்துல் கலாம் : 525 கிலோ எடையுள்ள ஆளில்லாச் செயற்கைக்கோளை இந்தியா நிலவுக்கு அனுப்பியுள்ளது. அடுத்தடுத்த ஆண்டுகளில் ஏவூர்திகளில் மனிதர்களை நிலவிற்கு அனுப்புவோம். எனவே, நிலவிற்குச் செல்லத் தயாராக இருங்கள்.

பாத்திமா : நிலவிற்குச் செல்லலாம் என்றால் சூரியனுக்கும் கூடச் செல்ல முடியுமா ஐயா?

அப்துல் கலாம் : சூரியன் தொடர்ந்து எரிந்து கொண்டே இருப்பதால் ஒளியையும் வெப்பத்தையும் வெளியிட்டுக்கொண்டே இருக்கிறது. அவ்வெப்பத்தைத் தாங்கும் அளவுக்கு இன்றைய சூழலில் கவசங்கள் இல்லை. வருங்காலத்தில் அதிகபட்ச வெப்பத்தைத் தாங்கும் கருவிகள் கண்டறியப்படலாம். அப்போது மனிதன் சூரியனையும்கூடச் சென்றடையலாம்.

இளம்பிறை : ஐயா, உலகின் முதல் விஞ்ஞானியாக யாரைக் கூறலாம்? சொல்லுங்களேன்?

அப்துல் கலாம் : அறிவியலின் அடிப்படை, கேள்வி கேட்கின்ற மனப்பான்மைதான். அறிவியல் பிறந்தது, வளர்ந்தது, வாழ்வது எல்லாம் இந்தக் கேள்வி கேட்கும் திறனால்தான். குழந்தைகளின் கேள்விகளுக்குத்தான் முடிவே இல்லை. கேள்வி கேட்கும் ஒவ்வொரு குழந்தையும் விஞ்ஞானிதான். எனவே குழந்தைகளாகிய நீங்கள்தாம் இவ்வுலகின் முதல் விஞ்ஞானிகள்.

கவி அமுதன் : நாங்கள்தான் முதல் விஞ்ஞானிகளா? அப்படியென்றால் வளரும் இந்தியாவிற்கான எங்கள் பங்கு என்னவாக இருக்க வேண்டும் ஐயா?

அப்துல் கலாம் : மாணவர்களாகிய நீங்கள் வருங்காலத்தில் எந்தத் துறையைத் தேர்ந்தெடுத்துக் கற்றாலும் அதில் உயர்ந்த குறிக்கோளை மனதில் கொள்ளுங்கள். அக்குறிக்கோளுக்கான அறிவையும் அனுபவத்தையும் சேகரித்துக் கொள்ளுங்கள். கடின உழைப்பால் வெற்றியடையுங்கள். உங்கள் வெற்றி இந்தியாவின் வெற்றிக்கு உதவும்

வெண்பா : வெற்றியை அடையும் வழி எது ஐயா?

6th Std Tamil CBSE Pages 51-76.indd 67 20-03-2020 16:33:59

அப்துல் கலாம் : இரண்டு வழிகள் உள்ளன.
1. அறிவை வளர்க்கும் அனைவரின் பேச்சையும் கவனியுங்கள்

2. வியர்வை! வியர்வை! வியர்வை!

("நன்றி குழந்தைகளே!" என்றபடி திரையில் அப்துல்கலாம் கையசைத்து மெல்ல மறைகிறார். மாணவர்கள் வியந்து நிற்கின்றனர்.)

அரங்கப் பொறுப்பாளர் : என்ன மாணவர்களே! அப்துல் கலாம் ஐயாவிடம் இருந்து உங்களின் எல்லா வினாக்களுக்கும் விடை கிடைத்ததல்லவா? மகிழ்ச்சிதானே?

மாணவர்கள் : மிக்க மகிழ்ச்சி, நன்றி ஐயா!

மாணவ – மாணவியர் புத்தொளி பெற்றவர்களாக அரங்கைவிட்டு வெளியேறுகின்றனர்.



கற்பவை கற்றபின்

1. கனவு காணுங்கள் என்பது அப்துல் கலாமின் பொன்மொழி. உங்கள் கனவுகள் பற்றி வகுப்பில் கலந்துரையாடுக.
2. நீங்கள் நேர்காணல் செய்ய விரும்பும் ஒருவரைக் குறிப்பிடுக. அவரிடம் கேட்க விரும்பும் ஐந்து வினாக்களைப் பட்டியலிடுக.
3. நீங்கள் அப்துல் கலாமிடம் கேட்க விரும்பும் வினாக்களை எழுதுக.

மதிப்பீடு

1. சுதந்திர இந்தியா அடைந்த வெற்றிகளாக அப்துல் கலாம் எவற்றைக் குறிப்பிடுகிறார்?
2. தமக்குப் பெருமகிழ்வை அளித்ததாக அப்துல் கலாம் குறிப்பிடும் நிகழ்வு யாது?

6th Std Tamil CBSE Pages 51-76.indd 68 20-03-2020 16:33:59

இயல் மூன்று

மொழி முதல், இறுதி எழுத்துகள்

நம் தமிழ் மொழியின் சொற்கள் நாம் எளிதாக ஒலிக்கும் வகையில் உருவானவை. வேற்று மொழிச்சொற்களைப் பேசுகையில் நமக்குத் தடுமாற்றம் ஏற்படுகிறது. நம் மொழியின் சொற்களின் இயல்பையும் மரபையும் அறிந்து கொள்வது தேவையானது. சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் எந்தெந்த எழுத்துகள் வரும் என்பதை அறிந்து கொள்வதால் மொழியை நன்கு பேசமுடியும்.

கீழே உள்ள சொற்களைக் கவனியுங்கள்.


7N4A24

நன்றி ணன்றி னன்றி

இவற்றுள் நன்றி என்பதே சரியான சொல் அல்லவா?

பிழையின்றி எழுத எந்தெந்த எழுத்துகளை எங்கெங்குப் பயன்படுத்த வேண்டும் என்று அறிந்துகொள்வதும் மிக இன்றியமையாதது.

தமிழ் எழுத்துகளின் வகை, தொகை பற்றி அறிந்து கொண்டோம். அவற்றுள் எல்லா எழுத்துகளும் எல்லா இடங்களிலும் வருவதில்லை. சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் வரும் எழுத்துகள் பற்றித் தெரிந்துகொள்வோம்.



6th Std Tamil CBSE Pages 51-76.indd 69 20-03-2020 16:34:06

மொழி முதல் எழுத்துகள்

மொழி என்பதற்குச் சொல் என்னும் பொருளும் உண்டு. சொல்லின் முதலில் வரும் எழுத்துகளை மொழிமுதல் எழுத்துகள் என்பர்.

- உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் சொல்லின் முதலில் வரும்.
- க, ச, த, ந, ப, ம ஆகிய வரிசைகளில் உள்ள எல்லா உயிர்மெய் எழுத்துகளும் சொல்லின் முதலில் வரும்.
- ங, ஞ, ய, வ ஆகிய உயிர்மெய் எழுத்து வரிசைகளில் சில எழுத்துகள் மட்டுமே சொல்லின் முதலில் வரும்.
- ங – வரிசையில் 'ங' என்னும் ஓர் எழுத்து மட்டுமே சொல்லில் முதல் எழுத்தாக வருகிறது. எ.கா– ஙனம்

  * (இக்காலத்தில் ஙனம் என்னும் சொல் தனித்து இயங்காமல் அங்ஙனம், இங்ஙனம், எங்ஙனம் என்னும் சொற்களில் மட்டுமே வழங்கி வருகிறது.)

(எ. கா.) க – வரிசை எழுத்துகள்
கடல், காக்கை, கிழக்கு,
கீற்று, குருவி, கூந்தல்,
கெண்டை, கேணி, கைகள்,
கொக்கு, கோலம், கௌதாரி.

- ஞ – வரிசையில் ஞ, ஞா, ஞெ, ஞொ ஆகிய நான்கு எழுத்துகளும் சொல்லின் முதலில் வரும்.
- ய – வரிசையில் ய, யா, யு, யூ, யோ, யௌ ஆகிய ஆறு எழுத்துகளும் சொல்லின் முதலில் வரும்.
- வ – வரிசையில் வ, வா, வி, வீ, வெ, வே, வை, வௌ ஆகிய எட்டு எழுத்துகளும் சொல்லின் முதலில் வரும்.

மொழிக்கு முதலில் வராத எழுத்துகள்

- மெய்யெழுத்துகள் பதினெட்டும் சொல்லின் முதலில் வாரா.
- ட,ண,ர,ல,ழ,ள,ற,ன ஆகிய எட்டு உயிர்மெய் எழுத்துகளின் வரிசையில் ஓர் எழுத்து கூடச் சொல்லின் முதலில் வராது.
- ஆய்த எழுத்து சொல்லின் முதலில் வராது.
- ங, ஞ, ய, வ ஆகிய உயிர்மெய் எழுத்து வரிசைகளில் மொழி முதலில் வருவதாகக் குறிப்பிடப்பட்ட எழுத்துகள் தவிர பிற எழுத்துகள் சொல்லின் முதலில் வாரா.

டமாரம், ரம்பம், லண்டன். ஃப்ரான்ஸ், டென்மார்க், போன்றவை பிறமொழிச் சொற்கள். இவற்றைத் தமிழில் ஒலி பெயர்த்து எழுதுகிறோம்.

6th Std Tamil CBSE Pages 51-76.indd 70 20-03-2020 16:34:06

மொழி இறுதி எழுத்துகள்

சொல்லின் இறுதியில் வரும் எழுத்துகளை மொழி இறுதி எழுத்துகள் என்பர்.

- உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் மெய்யுடன் இணைந்து உயிர்மெய்யாக மட்டுமே மொழி இறுதியில் வரும்.
- ஞ், ண், ந், ம், ய் ,ர், ல், வ், ழ், ள், ன் ஆகிய மெய்யெழுத்துகள் பதினொன்றும் மொழியின் இறுதியில் வரும். (உரிஞ், வெரிந், அவ்)

மொழி இறுதியாகா எழுத்துகள்

- சொல்லின் இறுதியில் உயிரெழுத்துகள் தனித்து வருவதில்லை.

- உயிர் எழுத்துகள் மெய்யெழுத்துடன் இணைந்து உயிர்மெய்யாக மட்டுமே சொல்லின் இறுதியில் வரும்.
- அளபெடை எழுத்துகளில் இடம் பெறும் போது உயிர் எழுத்துகள் சொல்லின் இறுதியில் வரும்.

- ஆய்த எழுத்து சொல்லின் இறுதியில் வராது.
- க், ங், ச், ட், த், ப், ற் ஆகிய ஏழு மெய் எழுத்துகளும் சொல்லின் இறுதியில் வருவதில்லை.
- உயிர்மெய் எழுத்துகளுள் 'ங' எழுத்து வரிசை சொல்லின் இறுதியில் வராது.

கார்த்திக், ஹாங்காங், சுஜித், ஜாங்கிரி, திலீப், மியூனிச் போன்ற பிறமொழிப் பெயர்ச்சொற்களில் இவ்வெழுத்துகள் இறுதி எழுத்துகளாக இடம்பெறுவதுண்டு.

- எகர வரிசையில் கெ முதல் னெ முடிய எந்த உயிர்மெய் எழுத்தும் மொழி இறுதியில் வருவதில்லை.
- ஒகர வரிசையில் நொ தவிர பிற உயிர்மெய் எழுத்துகள் மொழி இறுதியில் வருவதில்லை.

நொ என்னும் எழுத்து ஓரெழுத்து ஒரு மொழியாகத் துன்பம் என்னும் பொருளில் வரும்

சொல்லின் இடையில் வரும் எழுத்துகள்

- மெய் எழுத்துகள் பதினெட்டும் சொல்லின் இடையில் வரும்.
- உயிர்மெய் எழுத்துகள் சொல்லின் இடையில் வரும்.
- ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும்.

அளபெடையில் மட்டுமே உயிர் எழுத்துகள் சொல்லின் இடையில் வரும்.

அளபெடை பற்றி உயர் வகுப்புகளில் அறிந்துகொள்வீர்கள்.

6th Std Tamil CBSE Pages 51-76.indd 71 20-03-2020 16:34:06

கற்பவை கற்றபின்

ஞ, ய, வ ஆகிய உயிர்மெய் எழுத்துகள் வரிசையில் மொழிமுதல் எழுத்துகளாக அமைபவை எவை? அவ்வெழுத்துகளைக் கொண்டு தொடங்கும் சொற்களை அகராதியைப் பார்த்து எழுதுக.

மதிப்பீடு

31NU2D

1. மொழிக்கு முதலில் வரும் உயிர்மெய் எழுத்துகள் யாவை?
2. மொழிக்கு இறுதியில் வாரா மெய்யெழுத்துகள் யாவை?
3. சொல்லின் இடையில் மட்டுமே வரும் எழுத்துகள் எவை?

மொழியை ஆள்வோம்!

கண்டும் கேட்டும் மகிழ்க.

அறிவியல் கண்டுபிடிப்புகள் பற்றிய காணொலிகளைக் கண்டும் கேட்டும் மகிழ்க

பேசி வெளிப்படுத்துக.

உங்களை ஓர் அறிவியல் அறிஞராகக் கற்பனை செய்து கொண்டு எவ்வகைக் கண்டுபிடிப்புகளை நிகழ்த்துவீர்கள் என்பது குறித்துப் பேசுக.

பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1921 ஆம் ஆண்டு மத்திய தரைக் கடலில், ஒரு கப்பல் இங்கிலாந்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. தமிழர் ஒருவர் கப்பலின் மேல்தளத்தில் நின்று கடல் அலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். திடீரென அவரது உள்ளத்தில் கடல்நீர் ஏன் நீலநிறமாகக் காட்சியளிக்கிறது என்ற வினா எழுந்தது. அவ்வினா அவரை உறங்க விடவில்லை. இங்கிலாந்து பயணம் முடிந்து இந்தியா திரும்பினார். பிறகு பாதரச ஆவி விளக்கு, பென்சீன் மற்றும் நிறமாலைக் காட்டி ஆகியவற்றின் உதவியுடன் தமது ஆய்வைத் தொடங்கினார்.

6th Std Tamil CBSE Pages 51-76.indd 72 20-03-2020 16:34:06



ஆய்வின் முடிவில் 1928 பிப்ரவரி 28 ஆம் நாள் "இராமன் விளைவு" என்னும் தமது கண்டுபிடிப்பை வெளியிட்டார். இக்கண்டுபிடிப்பு இந்தியாவிற்கு அறிவியலுக்கான முதல் நோபல் பரிசைப் பெற்றுத் தந்தது. அவர் தமது கண்டுபிடிப்பை வெளியிட்ட பிப்ரவரி 28 ஆம் நாளை நாம் ஆண்டு தோறும் " தேசிய அறிவியல் நாள்" எனக் கொண்டாடி மகிழ்கிறோம். அவர் யார் தெரியுமா? அவர்தான் சர். சி. வி. இராமன்.

1. இராமன் விளைவைக் கண்டறிந்தவர் யார்? ----------

2. இராமன் அவர்களுக்கு நோபல் பரிசைப் பெற்றுத் தந்த கேள்வி எது?
   அ) கடல்நீர் ஏன் கறுப்பாகக் காட்சியளிக்கிறது?
   ஆ) கடல்நீர் ஏன் நீல நிறமாக இல்லை?
   இ) கடல்நீர் ஏன் நீல நிறமாகக் காட்சியளிக்கிறது?
   ஈ) கடல்நீர் ஏன் உப்பாக இருக்கிறது?

3. தேசிய அறிவியல் நாள் எப்போது கொண்டாடப்படுகிறது ? ஏன்?

4. இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பிடுக.

ஆசிரியர் கூறக்கேட்டு எழுதுக.

ஈடுபாடு	பெருங்கடல்	தொழில்நுட்பம்	போலியோ
நுண் பொருள்	துருவப் பகுதி	நுண்ணுணர்வு	மூலக்கூறுகள்
உற்றவன்	குறிக்கோள்		

கீழ்க்காணும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

அறிவியல் ஆக்கங்கள்



மொழியோடு விளையாடு

சொல்வளம் பெருக்குக.

பின்வரும் தொடர்களில் அடிக்கோடிட்ட சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை எழுதுக.

1. கம்ப்யூட்டர் துறையில் உங்கள் அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள்.
2. காலிங்பெல்லை அழுத்தினான் கணியன்.
3. மனிதர்கள் தங்கள் வேலைகளை எளிதாக்க மிஷின் களைக் கண்டுபிடித்தனர்.
4. இன்று பல்வேறு துறைகளிலும் ரோபோ பயன்பாட்டிற்கு வந்துள்ளது.


பகிர்க.

ரோபோக்கள் கண்டுபிடிப்பினால் ஏற்படும் விளைவுகள் பற்றி விவாதிக்க.


6th Std Tamil CBSE Pages 51-76.indd 73 20-03-2020 16:34:06

கலைந்துள்ள எழுத்துகளை முறைப்படுத்துக.

1. விகண்லம் –
2. மத்ருதும்வ –
3. அவிறில்ய –
4. ணினிக –
5. எலால்ம் –
6. அப்ழைபு –



வட்டத்தில் சிக்கிய எழுத்துகளை எடுத்து எழுதுக.



எழுத்துகளை வரிசைப்படுத்தி தமிழக அறிவியல்
அறிஞரைக் கண்டுபிடியுங்கள் _____

வாக்கியத்தை நீட்டி எழுதுக.

(எ.கா.) நான் படிப்பேன். (அறிவியல், பாடம், நன்றாக)

நான் பாடம் படிப்பேன்.

நான் அறிவியல் பாடம் படிப்பேன்.

நான் அறிவியல் பாடம் நன்றாகப் படிப்பேன்.

1. அறிந்து கொள்ள விரும்பு. (எதையும், காரணத்துடன், தெளிவாக)
2. நான் சென்றேன். (ஊருக்கு, நேற்று, பேருந்தில்)


அடிச்சொல்லுடன் எழுத்துகளைச் சேர்த்துப் புதிய சொற்களை உருவாக்குக.

(எ.கா.) அறி – அறிக, அறிந்து, அறிஞர், அறிவியல், அறிவிப்பு

1. பார் 2. செய் 3. தெளி 4. படி


மெய் எழுத்து நடுவில் அமையுமாறு சொற்களை உருவாக்கு.

(எ. கா.) கம்பு



6th Std Tamil CBSE Pages 51-76.indd 74 20-03-2020 16:34:06

குறுக்கெழுத்துப் புதிர்.



இடமிருந்து வலம்

1. அப்துல்கலாமின் சுயசரிதை
3. சிந்தித்துச் செயல்படும் தானியங்கி
10. எந்திரமனிதனுக்குக் குடியுரிமை வழங்கிய முதல் நாடு

மேலிருந்து கீழ்

1. 'ரோபோ' என்னும் சொல்லின் பொருள்
2. அகர வரிசையில் அமையும் இலக்கியம்
7. 'புதுமைகளின் வெற்றியாளர்' என்னும் பட்டம் பெற்ற எந்திரமனிதன்.

வலமிருந்து இடம்

2. ஆராய்ச்சி என்பதைக் குறிக்கும் சொல்.
6. சதுரங்கப் ----------யில் டீப்புளூ வெற்றி பெற்றது.
8. மருந்து என்னும் பொருள் தரும் சொல்.

கீழிருந்து மேல்

4. இந்தியா செலுத்திய ஏவுகணை.
5. தானாகச் செயல்படும் எந்திரம்.
9. அப்துல்கலாம் வகித்த ----------குடியரசுத் தலைவர்.

6th Std Tamil CBSE Pages 51-76.indd 75 20-03-2020 16:34:06

சூழலைக் கையாள்க.

மாலையில் பள்ளி முடிந்து பேருந்தில் வீட்டிற்கு வந்துகொண்டிருக்கிறீர்கள். அப்போது பேருந்து பழுதாகிப் பாதி வழியில் நின்றுவிடுகிறது. இந்தப் பேருந்தை விட்டால் உங்கள் ஊருக்கு வேறு பேருந்து இல்லை. இப்போது நீங்கள் என்ன செய்வீர்கள்?

- அழ ஆரம்பித்து விடுவேன்.
- யாரிடமாவது உதவி கேட்பேன்.
- அருகில் உள்ளவரிடம் அலைபேசியை வாங்கி வீட்டிற்குத் தகவல் தருவேன்.
- ஊருக்கு நடந்தே செல்லத் தொடங்குவேன்.



நிற்க அதற்குத் தக...

என் பொறுப்புகள்...

அறிவியல் கருவிகளை நன்மைக்கு மட்டும் பயன்படுத்துவேன்

கலைச்சொல் அறிவோம்.

செயற்கை நுண்ணறிவு	–	*Artificial Intelligence*
மீத்திறன் கணினி	–	*Super Computer*
செயற்கைக் கோள்	–	*Satellite*
நுண்ணறிவு	–	*Intelligence*



இணையத்தில் காண்க

பலவகை எந்திர மனிதர்களின் படங்களை இணையத்தில் சேகரித்துப் படத்தொகுப்பு உருவாக்குக.



இணையச் செயல்பாடுகள்

Google Handwriting Input எனும் விசைப்பலகையைப் பயன்படுத்துதல்

செயல்பாட்டின் இறுதியில் கிடைக்கப்பெறும் படம்



செயல்பாட்டிற்கான உரலி

Google Handwriting

https://play.google.com/store/apps/details?id=com.google.android.apps.inputmethod.hindi&hl=en

தமிழ் 99

https://play.google.com/store/apps/details?id=in.androidtweak.inputmethod.indic&hl=en

செல்லினம்

https://play.google.com/store/apps/details?id=com.murasu.sellinam&hl=en

6th Std Tamil CBSE Pages 51-76.indd 76 20-03-2020 16:34:07

இயல் நான்கு

கண்ணெனத் தகும்



கற்றல் நோக்கங்கள்

- கல்வியின் சிறப்பையும் பயனையும் உணர்தல்
- கல்விப்பணி ஆற்றிய பெருமக்களைப் பற்றி அறிதல்
- நூலகம் பற்றித் தெரிந்து கொள்ளுதல்
- நூலகம் செல்லும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுதல்
- சொற்களில் எழுத்துகள் அமையும் முறையை அறிந்து பயன்படுத்துதல்


6th Std Tamil CBSE Pages 77-206.indd 77 20-03-2020 17:42:24

கவிதைப்பேழை

இயல் நான்கு

மூதுரை

JVFCQI



கல்விக்கு எல்லை இல்லை. மனிதன் பிறந்தது முதல் இறுதிவரை கற்றுக்கொண்டே இருக்கிறான். கல்வி மனிதனை உயர்த்துகிறது. கல்வியும் செல்வமாகக் கருதத் தக்கது. அது பிறருக்குத் தந்தாலும் குறையாமல் வளரும். கல்வியைப் பிறரால் கைப்பற்றவோ அழிக்கவோ முடியாது. அழியாச் செல்வமாகிய கல்வியைக் கற்றவன் எங்கும் எப்போதும் சிறப்புப் பெறுவான். எனவே, நாமும் கற்போம்; வளம்பெறுவோம்.

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனின் கற்றோன் சிறப்புடையன் – மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
*சென்ற இடமெல்லாம் சிறப்பு.**

– ஔவையார்

சொல்லும் பொருளும்



மாசற – குற்றம் இல்லாமல்
சீர்தூக்கின் – ஒப்பிட்டு ஆராய்ந்தால்
தேசம் – நாடு

பாடலின் பொருள்

மன்னனையும் குற்றம் இல்லாமல் கற்றவரையும் ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்தால் மன்னனைவிடக் கற்றவரே சிறந்தவர். மன்னனுக்குத் தன் நாட்டில் மட்டுமே சிறப்பு. கல்வி கற்றவர்க்குச் சென்ற இடங்களில் எல்லாம் சிறப்பு.

நூல் வெளி



இந்நூலின் ஆசிரியர் ஔவையார். இவர் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி போன்ற நூல்களையும் இயற்றியுள்ளார்.



மூதுரை என்னும் சொல்லுக்கு மூத்தோர் கூறும் அறிவுரை என்பது பொருள். சிறந்த அறிவுரைகளைக் கூறுவதால் இந்நூல் மூதுரை எனப் பெயர் பெற்றது. இந்நூலில் முப்பத்தொரு பாடல்கள் உள்ளன.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 78 20-03-2020 17:42:25

கற்பவை கற்றபின்

1. கல்வியே அழியாச் செல்வம் என்னும் தலைப்பில் பேசுக.
2. கல்வி பற்றிய பழமொழிகள் அல்லது பாடல் அடிகள் எவையேனும் இரண்டனைப் பெரியோர்களிடம் கேட்டு எழுதி வருக.

மதிப்பீடு

JVP8S6

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மாணவர்கள் நூல்களை _____ கற்க வேண்டும்.

   அ) மேலோட்டமாக ஆ) மாசுற இ) மாசற ஈ) மயக்கமுற

2. இடமெல்லாம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

   அ) இடம் + மெல்லாம் ஆ) இடம் + எல்லாம்

   இ) இட + எல்லாம் ஈ) இட + மெல்லாம்

3. மாசற என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

   அ) மாச + அற ஆ) மாசு + அற இ) மாச + உற ஈ) மாசு + உற

4. குற்றம் + இல்லாதவர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____

   அ) குற்றமில்லாதவர் ஆ) குற்றம்இல்லாதவர்

   இ) குற்றமல்லாதவர் ஈ) குற்றம்அல்லாதவர்

5. சிறப்பு + உடையார் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____

   அ) சிறப்புஉடையார் ஆ) சிறப்புடையார்

   இ) சிறப்படையார் ஈ) சிறப்பிடையார்

குறுவினா

கற்றவரின் பெருமைகளாக மூதுரை கூறுவன யாவை?

சிந்தனை வினா


1. கல்லாதவருக்கு ஏற்படும் இழப்புகளைப் பட்டியலிடுக.
2. கல்வியின் சிறப்பாக நீங்கள் எதனைக் கருதுகிறீர்கள்?

6th Std Tamil CBSE Pages 77-206.indd 79 20-03-2020 17:42:25

கவிதைப்பேழை

இயல் நான்கு

துன்பம் வெல்லும் கல்வி



"கல்வி அழகே அழகு" என்பர் பெரியோர். கற்றபடி நிற்பதே அந்த அழகைப் பெறுவதற்கான வழி. கல்வி, அறிவை வளர்ப்பதோடு பண்படுத்தவும் செய்யும். எவ்வளவுதான் கற்றிருந்தாலும் பண்பாடு இல்லாவிட்டால் அந்தக் கல்வி பயனற்றுப் போகும். பண்பட்ட மனிதரின் புகழே பல்லாண்டு நிலைத்திருக்கும். எனவே, படிப்போம்! பண்பாட்டோடு நிற்போம்! பார் போற்ற வாழ்வோம்!

JVY4TT

ஏட்டில் படித்ததோடு இருந்து விடாதே – நீ
ஏன்படித்தோம் என்பதையும் மறந்து விடாதே
நாட்டின் நெறிதவறி நடந்து விடாதே – நம்
நல்லவர்கள் தூற்றும்படி வளர்ந்து விடாதே

மூத்தோர் சொல் வார்த்தைகளை மீறக் கூடாது – பண்பு
முறைகளிலும் மொழிதனிலும் மாறக் கூடாது
மாற்றார் கைப்பொருளை நம்பி வாழக் கூடாது – தன்
மானமில்லாக் கோழையுடன் சேரக் கூடாது

துன்பத்தை வெல்லும் கல்வி கற்றிட வேணும் – நீ
சோம்பலைக் கொல்லும் திறன் பெற்றிட வேணும்
வம்பு செய்யும் குணமிருந்தால் விட்டிட வேணும் – அறிவு
வளர்ச்சியிலே வான்முகட்டைத் தொட்டிட வேணும்

வெற்றிமேல் வெற்றிவர விருதுவர பெருமைவர
மேதைகள் சொன்னதுபோல் விளங்கிட வேண்டும்
பெற்ற தாயின் புகழும் நீ பிறந்த மண்ணின் புகழும்
வற்றாமல் உன்னோடு வாழ்ந்திட வேண்டும்

– பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

சொல்லும் பொருளும்

தூற்றும் படி	–	இகழும்படி	மாற்றார்	–	மற்றவர்
மூத்தோர்	–	பெரியோர்	நெறி	–	வழி
மேதைகள்	–	அறிஞர்கள்	வற்றாமல்	–	குறையாமல்

6th Std Tamil CBSE Pages 77-206.indd 80 20-03-2020 17:42:25

பாடலின் பொருள்



நாம் நூல்களைக் கற்றதோடு இருந்துவிடக்கூடாது. கற்றதன் பயனை மறக்கக் கூடாது. நம் நாட்டின் நெறி தவறி நடக்கக் கூடாது. நல்லவர்கள் குறைசொல்லும்படி வளரக் கூடாது.

பெரியோர் கூறும் அறிவுரைகளை மீறக் கூடாது. பிறரிடம் பழகும் முறையிலும் பேசும் முறையிலும் பண்புநெறி மாறக் கூடாது. பிறர் உழைப்பை நம்பி வாழக் கூடாது.

தன்மானம் இல்லாத கோழைகளுடன் சேரக் கூடாது. துன்பத்தை நீக்கும் கல்வியினைக் கற்க வேண்டும். சோம்பலைப் போக்கிட வேண்டும். பிறருடன் வம்பு செய்யும் வழக்கம் இருந்தால் அதை விட்டுவிட வேண்டும். வானைத் தொடும் அளவுக்கு அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

மேலான அறிஞர்கள் கூறிய அறிவுரைகளின்படி வாழவேண்டும். அதன்மூலம் வெற்றிகளையும் விருதுகளையும் பெருமையையும் பெறவேண்டும். பெற்ற தாயின் புகழும் நம் தாய்நாட்டின் புகழும் அழியாத வகையில் வாழவேண்டும்.

நூல் வெளி



எளிய தமிழில் சமூகச் சீர்திருத்தக் கருத்துகளை வலியுறுத்திப் பாடியவர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். திரையிசைப் பாடல்களில் உழைப்பாளிகளின் உயர்வைப் போற்றியவர். மக்கள் கவிஞர் என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுபவர்.



கற்பவை கற்றபின்

1. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள பாடலை இசையுடன் பாடி மகிழ்க.
2. நூலகத்திற்குச் சென்று பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எழுதிய வேறு பாடல் ஒன்றை எழுதி வருக.
3. 'ஏட்டுக் கல்வி மட்டும் கல்வி இல்லை' என்னும் தலைப்பில் பேசுக.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 81 20-03-2020 17:42:26

மதிப்பீடு

JH7ZVG

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மாணவர் பிறர்_____ நடக்கக் கூடாது.

   அ) போற்றும்படி ஆ) தூற்றும்படி இ) பார்க்கும்படி ஈ) வியக்கும்படி

2. நாம்_____சொல்படி நடக்க வேண்டும்.

   அ) இளையோர் ஆ) ஊரார் இ) மூத்தோர் ஈ) வழிப்போக்கர்

3. கைப்பொருள் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_____

   அ) கையில் + பொருள் ஆ) கைப் + பொருள்

   இ) கை + பொருள் ஈ) கைப்பு + பொருள்

4. மானம் + இல்லா என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்_____

   அ) மானம்இல்லா ஆ) மானமில்லா

   இ) மானமல்லா ஈ) மானம்மில்லா

சொற்றொடரில் அமைத்து எழுதுக

1. மனமாற்றம்_____.
2. ஏட்டுக் கல்வி_____.
3. நல்லவர்கள்_____.
4. சோம்பல்_____.

குறுவினா

1. நாம் யாருடன் சேரக் கூடாது?
2. எதை நம்பி வாழக் கூடாது?
3. நாம் எவ்வாறு வாழவேண்டும் எனப் பட்டுக்கோட்டையார் கூறுகிறார்?
4. நாம் எவ்வாறு வாழ்ந்தால் பெருமை பெறலாம்?

சிந்தனை வினா

நீங்கள் படித்து என்னவாக விரும்புகிறீர்கள்? ஏன்?

6th Std Tamil CBSE Pages 77-206.indd 82 20-03-2020 17:42:26

இயல் நான்கு

கல்விக்கண் திறந்தவர்

நுழையும்முன்

கல்வி நிலையங்கள் காலந்தோறும் மாறி வருகின்றன. தொடக்கத்தில் ஆசிரியரின் வீட்டிலேயே தங்கி மாணவர்கள் கல்வி கற்றனர். பிறகு நாள்தோறும் ஆசிரியர் வீட்டுக்குச் சென்று கல்வி கற்றனர். அதன் பிறகு பொதுவான ஓர் இடத்தில் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் கற்பித்தனர். இவையே இன்றைய பள்ளிக்கூடங்கள் ஆகும். முன்பு ஒரு சில ஊர்களில் மட்டும் பள்ளிகள் இருந்தன. இன்று பள்ளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இத்தகைய கல்விப் புரட்சிக்கு வித்திட்டவரைப் பற்றி அறிந்து கொள்வோம் வாருங்கள்.

நிகழ்வு – 1



சிறுவர்கள் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தனர். அவ்வழியாக மகிழுந்து ஒன்று அங்கே வந்து நின்றது. அதிலிருந்து ஒருவர் கீழே இறங்கினார். ஆடு மேய்த்துக் கொண்டிருந்த சிறுவர்களைக் கூப்பிட்டு, அவர்களோடு உரையாடினார்.

"என்னடா தம்பிகளா! பள்ளிக்கூடம் போகாமல் ஆடு மேய்ச்சுக்கிட்டு இருக்கீங்க? ஏன் பள்ளிக்கூடம் விடுமுறையா?" என்று அவர் கேட்டார்.

"பள்ளிக்கூடமா? அதெல்லாம் எங்க ஊரில் கிடையாது" என்றனர் சிறுவர்கள். "அப்படியா? உங்க ஊரில் ஒரு பள்ளிக்கூடம் இருந்தா நீங்கள் எல்லாரும் படிப்பீங்களா?" என்று கேட்டார் அவர்.

"ஓ! படிப்போமே!" என்றனர் சிறுவர்கள்.

ஊர்தோறும் பள்ளிக்கூடங்களைத் திறக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார் அவர்.

நிகழ்வு – 2

பள்ளி விழா ஒன்றில் பங்கேற்கச் சென்றார் அவர். அப்போது மாணவர்களிடம் "படிப்பறிவு இருந்தால்தான் நாடு முன்னேற்றம் அடையும். எனவேதான் நாடு முழுக்க ஐம்பதாயிரம் பள்ளிகளைத் திறக்க முடிவு பண்ணியிருக்கோம். குழந்தைங்க நீங்க

6th Std Tamil CBSE Pages 77-206.indd 83 20-03-2020 17:42:26

எவ்வளவு தூரம் நடந்து போவீங்க? நீண்ட தூரம் நடந்தால் களைச்சுப்போயிடுவீங்க. அப்புறம் எப்படிப் படிக்க முடியும்? அதனால் ஒரு மைல் தூரத்தில் ஆரம்பப்பள்ளி, மூன்று மைல் தூரத்தில் நடுநிலைப்பள்ளி, ஐந்து மைல் தூரத்தில் உயர்நிலைப்பள்ளி இருக்கணும்னு திட்டம்" என்று பேசினார்.

நிகழ்வு – 3

பள்ளி நிகழ்ச்சி ஒன்றில் தேசியக் கொடி ஏற்ற அவரை அழைத்தனர் அவர் கொடி ஏற்றும்போது அனைவரும் எழுந்து நின்று வணக்கம் செலுத்தினர். அப்போது மாணவன் ஒருவன் மயங்கி விழுந்தான். அனைவரும் பதற்றம் அடைந்தனர். தண்ணீர் தெளித்து அவனை எழுப்பினர்.

மயக்கம் தெளிந்த சிறுவனிடம் அவர் "காலையில் சாப்பிட்டாயா?" என்று கேட்டார். அவன் "எதுவும் சாப்பிடவில்லை" என்றான். அதற்கு அவர் "ஏன்?" என்று கேட்டார். மாணவன் "சாப்பிட எதுவும் இல்லை" என்று பதில் கூறினான். இதற்குப் பிறகு படிக்க வரும் மாணவர்களுக்கு ஒரு வேளை உணவாவது வழங்க வேண்டும் என்று முடிவு செய்தார் அவர்.

நிகழ்வு – 4



பரமக்குடி தரைப்பாலத்தைப் பார்த்த போது உடன் வந்த கல்வி அதிகாரியிடம் பேசினார். "இந்தக் காட்டாற்றில் தண்ணீர் போகும் போது, இந்தப் பக்கத்து மாணவர்கள் எப்படிப் பள்ளிக்கூடத்திற்குப் போவார்கள்?" என்றார். "மழைக்காலத்தில் மாணவர்கள் பள்ளிக்கு வரமாட்டார்கள் ஐயா" என்றார் அதிகாரி. "அப்போ! இந்தப் பக்கம் ஒரு பள்ளிக்கூடம் கட்டலாமே?" என்றார் அவர். "கல்வித்துறை விதியின்படி மூன்று மைல் தூரத்திற்குள் பள்ளிக்கூடம் இருந்தால், பக்கத்தில் வேறு பள்ளிக்கு அனுமதி கிடையாதே!" என்று அதிகாரி கூறினார். அவர் முடிப்பதற்குள் "நீங்க இந்தக் காட்டாற்றைக் காரணம் காட்டுங்க. இந்தப் பக்கம் ஒரு பள்ளிக்கூடம் கட்டஅனுமதி கேளுங்க. நான் ஏற்பாடு செய்கிறேன்" என்றார் அவர்.

ஆடு மேய்க்கும் சிறுவர்களையும் பள்ளிக்கூடம் செல்ல வழி செய்தவர் யார் தெரியுமா?

குழந்தைகள் பள்ளி செல்வதற்காக நீண்ட தூரம் நடக்கக்கூடாது என்று எண்ணியவர் யார் தெரியுமா?

பள்ளிக்குப் படிக்க வரும் மாணவர்களுக்கு ஒருவேளை உணவாவது வழங்க வேண்டும் என்று நினைத்தவர் யார் தெரியுமா?

6th Std Tamil CBSE Pages 77-206.indd 84 20-03-2020 17:42:26

கல்வித்துறை விதிகளை மாணவர்களின் நலனுக்காக மாற்றி, அவர்கள் வாழும் இடங்களிலேயே பள்ளிக்கூடங்களைத் திறக்கச் செய்த சிந்தனையாளர் யார் தெரியுமா?

அவர்தான் கல்விக் கண் திறந்தவர் என்று தந்தை பெரியாரால் மனதாரப் பாராட்டப்பட்ட மறைந்த மேனாள் முதல்வர் காமராசர் ஆவார்.

தெரிந்து தெளிவோம்



காமராசரின் சிறப்புப் பெயர்கள்

பெருந்தலைவர்	கருப்புக் காந்தி
படிக்காத மேதை	ஏழைப்பங்காளர்
கர்மவீரர்	தலைவர்களை உருவாக்குபவர்

காமராசரின் கல்விப்பணிகள்

காமராசர் முதல் அமைச்சராகப் பதவியேற்ற நேரத்தில் ஏறக்குறைய ஆறாயிரம் தொடக்கப்பள்ளிகள் மூடப்பட்டு இருந்தன. அவற்றை உடனடியாகத் திறக்க ஆணையிட்டார். மாநிலம் முழுவதும் அனைவருக்கும் இலவசக் கட்டாயக் கல்விக்கான சட்டத்தை இயற்றித் தீவிரமாக நடைமுறைப்படுத்தினார். மாணவர்கள் பசியின்றிப் படிக்க மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். பள்ளிகளில் ஏற்றத்தாழ்வின்றிக் குழந்தைகள் கல்வி கற்கச் சீருடைத் திட்டத்தை அறிமுகம் செய்தார். பள்ளிகளின் வசதிகளைப் பெருக்கப் பள்ளிச்சீரமைப்பு மாநாடுகள் நடத்தினார்.

மாணவர்கள் உயர்கல்வி பெறப் பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், கால்நடைமருத்துவக் கல்லூரிகள், ஆசிரியப் பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றைப் புதிதாகத் தொடங்கினார். தமிழ்நாட்டில் பல கிளைநூலகங்களைத் தொடங்கினார். இவ்வாறு கல்விப்புரட்சிக்கு வித்திட்டவர் காமராசரே ஆவார்.

தெரிந்து தெளிவோம்

காமராசருக்குச் செய்யப்பட்ட சிறப்புகள்

- மதுரைப் பல்கலைக்கழகத்திற்கு மதுரை காமராசர் பல்கலைக்கழகம் எனப் பெயர் சூட்டப்பட்டது.
- நடுவண் அரசு 1976இல் பாரதரத்னா விருது வழங்கியது.
- காமராசர் வாழ்ந்த சென்னை இல்லம் மற்றும் விருதுநகர் இல்லம் ஆகியன அரசுடைமை ஆக்கப்பட்டு நினைவு இல்லங்களாக மாற்றப்பட்டன.
- சென்னை மெரினா கடற்கரையில் சிலை நிறுவப்பட்டது.
- சென்னையில் உள்ள உள்நாட்டு விமான நிலையத்திற்குக் காமராசர் பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- கன்னியாகுமரியில் காமராசருக்கு மணிமண்டபம் 02.10.2000 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.
- ஆண்டு தோறும் காமராசர் பிறந்தநாளான ஜூலை பதினைந்தாம் நாள் கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடப்படுகிறது.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 85 20-03-2020 17:42:26

கற்பவை கற்றபின்

1. காமராசரின் வாழ்க்கையில் நடைபெற்ற சுவையான நிகழ்வு ஒன்றினை அறிந்து வந்து வகுப்பறையில் பேசுக.
2. தற்போது மாணவர்களுக்கு அரசு அளிக்கும் நலத்திட்டங்களைப் பட்டியலிடுக.

மதிப்பீடு

JHQRYR

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பள்ளிக்கூடம் செல்லாததற்கு ஆடுமேய்க்கும் சிறுவர்கள் கூறிய காரணம் _____.

   அ) ஆடு மேய்க்க ஆள் இல்லை ஆ) ஊரில் பள்ளிக்கூடம் இல்லை

   இ) வழி தெரியவில்லை ஈ) பேருந்து வசதியில்லை

2. பசியின்றி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) பசி + இன்றி ஆ) பசி + யின்றி இ) பசு + இன்றி ஈ) பசு + யின்றி

3. படிப்பறிவு என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) படி + அறிவு ஆ) படிப்பு + அறிவு இ) படி + வறிவு ஈ) படிப்பு + வறிவு

4. காடு + ஆறு என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____.

   அ) காட்டாறு ஆ) காடாறு இ) காட்டுஆறு ஈ) காடுஆறு

சொற்றொடரில் அமைத்து எழுதுக.

அ) வகுப்பு ஆ) உயர்கல்வி இ) சீருடை

கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. குழந்தைகள் பள்ளியில் ஏற்றத்தாழ்வின்றிப் படிக்க _____ அறிமுகப்படுத்தினார்.
2. காமராசரைக் 'கல்விக் கண் திறந்தவர்' என மனதாரப் பாராட்டியவர் _____.

குறு வினா

1. காமராசர் காலத்தில் தொடங்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் யாவை?
2. காமராசர் முதல்வராகப் பொறுப்பேற்றதும் கல்விக்காகச் செய்த முதல் பணி யாது?

சிறு வினா

காமராசரின் கல்விப்பணிகள் குறித்து எழுதுக.

சிந்தனை வினா

நீங்கள் முதலமைச்சரானால் கல்வி முன்னேற்றத்திற்காக என்னென்ன திட்டங்களை வகுப்பீர்கள்?

6th Std Tamil CBSE Pages 77-206.indd 86 20-03-2020 17:42:26

விரிவானம்

இயல் நான்கு

நூலகம் நோக்கி...

JHZN1E

நுழையும்முன்

"கற்றது கைம்மண் அளவு, கல்லாதது உலகளவு" என்பர். உலக அறிவை நாம் பெறுவதற்குப் பாடநூல்கள் மட்டும் போதாது. பல்வேறு துறை சார்ந்த நூல்களைத் தேடிப் படிக்க வேண்டும். அதற்குத் துணைபுரிவன நூலகங்களே ஆகும். நூலகங்கள் மாவட்ட நூலகம், கிளை நூலகம் , ஊர்ப்புற நூலகம் , பகுதி நேர நூலகம், தனியாள் நூலகம் எனப் பலவகைப்படும். ஆசியாவிலேயே இரண்டாவது பெரிய நூலகம் நம் தமிழ்நாட்டில் உள்ளது. அதைப்பற்றி அறிந்து கொள்வோம்.



[ஆறாம் வகுப்பில் படிக்கும் மாணவர்கள் ஒரு நாள் களப்பயணமாகச் சென்னையில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு வருகின்றனர்.]

ஆசிரியர் : மாணவர்களே! இதோ, இது தான் அண்ணா நூற்றாண்டு நூலகம்.

மாணவர்கள் : ஆ! எவ்வளவு பெரிய நூலகம்!


ஆசிரியர் : ஆம். ஆசியக்கண்டத்திலேயே இரண்டாவது பெரிய நூலகம் இதுதான். தரைத்தளத்தோடு எட்டு அடுக்குகளைக் கொண்டது. இதன் பரப்பளவு மட்டும் எட்டு ஏக்கர். சரி! சரி! வாருங்கள். உள்ளே சென்று பார்க்கலாம்.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 87 20-03-2020 17:42:26

[அனுமதிக் கடிதத்தை ஆசிரியர் வரவேற்பாளரிடம் கொடுக்கிறார். அவர் தலைமை நூலகருக்குத் தொலைபேசியில் 'ஆசிரியரும் மாணவர்களும்' வந்துள்ள செய்தியைத் தெரிவிக்கின்றார். தலைமை நூலகர் உதவி நூலகர் ஒருவரை வழிகாட்டியாக அனுப்பிவைக்கின்றார்.]

தெரிந்து தெளிவோம்

ஆசியாக் கண்டத்திலேயே மிகப் பெரிய நூலகம் சீனாவில் உள்ளது.




(சுவரில் மாட்டப்பட்டிருக்கும் ஒரு படத்தை மாணவர்கள் பார்க்கின்றனர்.)

கவிதா : ஐயா, இந்தப் படத்தில் இருப்பவர் யார்?

நூலகர் : இவர்தான் முனைவர் இரா. அரங்கநாதன். நூலக விதிகளை உருவாக்கியவர். இவர் இந்திய நூலகவியலின் தந்தை (Father of Indian library science) என்று அழைக்கப்படுகிறார்.

மாணவர்களே! தரைத் தளத்தில் பார்வைத் திறன் குறைபாடு உடையோருக்கான பிரிவு உள்ளது. அவர்கள் தொட்டுப் பார்த்துப் படிப்பதற்கான பிரெய்லி நூல்கள் உள்ளன. கேட்டு அறிய ஒலி வடிவ நூல்கள், குறுந்தகடுகள் வடிவில் உள்ளன. அவர்களுக்கு உதவி செய்யப் பணியாளர்களும் உள்ளனர். இங்கு பிரெய்லி எழுத்தில் நூல்களை உருவாக்கும் கருவியும் உள்ளது. படியெடுக்கும் வசதியும் உண்டு.



பிரெய்லி நூல்

கணியன் : என் பக்கத்து வீட்டு அண்ணாவிற்குப் பார்வைக் குறைபாடு இருந்தும் பட்டப்படிப்பு முடித்துள்ளார். அவருக்கு இது மிகவும் பயன்படும். அவரிடம் இந்தத் தகவலைக் கூறப் போகிறேன்.

நூலகர் : இதோ நகரும் படிக்கட்டு. இதில் ஏறி நாம் முதல் தளத்திற்குச் செல்வோம் வாருங்கள். இந்த முதல் தளம் குழந்தைகளுக்காகச் சிறப்பாக உருவாக்கப் பட்ட பகுதி. குழந்தைகள் மகிழ்ச்சியான சூழலில் படிப்பதற்காகச் செயற்கை மரம் ஒன்று அமைக்கப்பட்டு உள்ளது. சிறுவர்கள் மட்டுமல்ல அனைவரின் மனத்தையும்



6th Std Tamil CBSE Pages 77-206.indd 88 20-03-2020 17:42:26



கொள்ளை கொள்ளும் பகுதி இது. இங்கு இருபது ஆயிரத்துக்கும் மேற்பட்ட பல்லூடகக் குறுந்தகடுகள் குழந்தைகளுக்காகச் சேகரித்து வைக்கப்பட்டு உள்ளன. பிற நாடுகளில் இருந்து திரட்டப்பட்ட ஐம்பது ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்கள் இங்கு உள்ளன.

(குழந்தைகள் பிரிவில் அமைக்கப்பட்டிருந்த நூல் அடுக்குகளையும் விளையாடும் இடத்தையும் மாணவர்கள் பார்த்து மகிழ்ந்தனர். அங்குக் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் இருந்த புத்தகங்களை ஆவலுடன் கையில் எடுத்து மகிழ்ச்சியுடன் பார்த்தனர். அப்பிரிவை விட்டுப் பிரிய மனமில்லாமல் மாணவர்கள் நகர்ந்தனர்.)

இனியா : இந்த ஒரு தளத்தைப் பார்க்கவே இன்று ஒரு நாள் போதாது போலிருக்கிறதே!.

கவிதா : ஆம் இனியா, நீ கூறுவது சரிதான்.

(ஒவ்வொரு தளமாகப் பார்த்தபடி சென்று ஏழாம் தளத்தை அடைகின்றனர்.)

நூலகர் : இதுதான் ஏழாம் தளம்.

இத்தளத்தில் அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் உள்ளது. இங்குப் பழைமையான ஓலைச் சுவடிகள் சேகரித்துப் பாதுகாத்து வைக்கப்பட்டு உள்ளன. இதே தளத்தில் வரலாறு, புவியியல், சுற்றுலா நூல்களும் உள்ளன.

இங்கு அனைத்துவகைப் போட்டித் தேர்வுகளுக்கும் தேவையான நூல்கள் உள்ளன. மின் நூலகமும் உள்ளது. அனைத்துத் துறை சார்ந்த தரமான மின்நூல்களும் மின் இதழ்களும் உள்ளன.

தெரிந்து தெளிவோம்

அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் எட்டுத் தளங்கள்

தரைத்தளம்	–	சொந்த நூல் படிப்பகம், பிரெய்லி நூல்கள்
முதல் தளம்	–	குழந்தைகள் பிரிவு, பருவ இதழ்கள்
இரண்டாம் தளம்	–	தமிழ் நூல்கள்
மூன்றாம் தளம்	–	கணினி அறிவியல், தத்துவம், அரசியல் நூல்கள்
நான்காம் தளம்	–	பொருளியல், சட்டம், வணிகவியல், கல்வி
ஐந்தாம் தளம்	–	கணிதம், அறிவியல், மருத்துவம்
ஆறாம் தளம்	–	பொறியியல், வேளாண்மை, திரைப்படக்கலை
ஏழாம் தளம்	–	வரலாறு, சுற்றுலா, அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
எட்டாம் தளம்	–	கல்வித் தொலைக்காட்சி, நூலகத்தின் அலுவலகப் பிரிவு

6th Std Tamil CBSE Pages 77-206.indd 89 20-03-2020 17:42:27

மாதவி : ஐயா, இங்குள்ள புத்தகங்களை நாம் வீட்டிற்கு எடுத்துச் செல்ல முடியுமா?

ஆசிரியர் : முடியாது மாதவி. இங்கேயே அமர்ந்துதான் படிக்க வேண்டும்.

தெரிந்து தெளிவோம்

நூலகத்தில் படித்து உயர்நிலை அடைந்தவர்களுள் சிலர்

அறிஞர் அண்ணா, ஜவஹர்லால் நேரு அண்ணல் அம்பேத்கர், காரல் மார்க்ஸ்

பாத்திமா : இந்த நூலகத்தில் எங்கும் 'குளு குளு' வென உள்ளதே!

நூலகர் : ஆமாம். நூலகம் முழுவதுமே குளிர்பதன வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் இதே வசதியுடன் கூட்ட அரங்கு, கலையரங்கு, கருத்தரங்கக் கூடம், கண்காட்சி அரங்கு போன்றவையும் உள்ளன.

பீட்டர் : ஆகா! இத்தனை வசதிகள் நூலகத்தில் உள்ளனவா? நன்றி ஐயா. எங்கள் ஊரில் நூலகம் இல்லையே? நான் என்ன செய்வது?

ஆசிரியர் : அதற்குத்தான் தமிழக அரசு நடமாடும் நூலகம் என்னும் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

பீட்டர் : அப்படியானால், அதை நான் பயன்படுத்துவேன் ஐயா.

மாணவர்கள் : இனி, எங்கள் வீட்டின் அருகிலுள்ள கிளை நூலகத்தையும் தவறாமல் பயன்படுத்துவோம் ஐயா.

தெரிந்து தெளிவோம்

சிறந்த நூலகர்களுக்கு டாக்டர் ச. இரா. அரங்கநாதன் விருது வழங்கப்படுகிறது.

ஆசிரியர் : மாணவர்களை அழைத்துச் சென்று தலைமை நூலகரிடமும் உடன் வந்த துணை நூலகரிடமும் நன்றி தெரிவித்துவிட்டு மாணவர்களைப் பார்த்து, மாணவர்களே! மகிழ்ச்சிதானே! வாருங்கள் புறப்படலாம்.

கற்பவை கற்றபின்

1. நூலகங்களில் உள்ள புத்தகங்களில் உங்களுக்குப் பிடித்தமான நூல்களைப் பட்டியலிடுக.
2. நீங்கள் விரும்பிப் படித்த நூல் குறித்து நண்பனுடன் உரையாடுக.

JX9J32

மதிப்பீடு

அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப் பற்றிச் சுருக்கமாக எழுதுக.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 90 20-03-2020 17:42:27

கற்கண்டு

இயல் நான்கு

இன எழுத்துகள்

JXIF4P

சில எழுத்துகளுக்கு இடையே ஒலிக்கும் முயற்சி, பிறக்கும் இடம் ஆகியவற்றில் ஒற்றுமை உண்டு. இவ்வாறு ஒற்றுமை உள்ள எழுத்துகள் இன எழுத்துகள் எனப்படும். ஆறு வல்லின மெய் எழுத்துகளுக்கும் ஆறு மெல்லின எழுத்துகளும் இன எழுத்துகள் ஆகும். சொற்களில் மெல்லின மெய் எழுத்தை அடுத்துப் பெரும்பாலும் அதன் இனமாகிய வல்லின எழுத்து வரும்.



(எ.கா.) திங்கள், மஞ்சள், மண்டபம், சந்தனம், அம்பு, தென்றல்



இடையின எழுத்துகள் ஆறும் (ய், ர், ல், வ், ழ், ள்) ஒரே இனமாகும்.



6th Std Tamil CBSE Pages 77-206.indd 91 20-03-2020 17:42:27

மெய்யெழுத்துகளைப் போலவே உயிர் எழுத்துகளிலும் இன எழுத்துகள் உண்டு. உயிர் எழுத்துகளில் குறிலுக்கு நெடிலும், நெடிலுக்குக் குறிலும் இன எழுத்துகள் ஆகும். குறில் எழுத்து இல்லாத ஐ என்னும் எழுத்துக்கு இ என்பது இன எழுத்தாகும். ஔ என்னும் எழுத்துக்கு உ என்பது இன எழுத்தாகும். சொல்லில் உயிர் எழுத்துகள் சேர்ந்து வருவது இல்லை. அளபெடையில் மட்டும் நெடிலைத் தொடர்ந்து அதன் இனமாகிய குறில் எழுத்து சேர்ந்து வரும்.

(எ. கா.) ஓஒதல், தூஉம், தழீஇ

தமிழ் எழுத்துகளில் ஆய்த எழுத்துக்கு மட்டுமே இன எழுத்து இல்லை.

கற்பவை கற்றபின்

தங்கப் பாப்பா வந்தாளே!
சிங்கப் பொம்மை தந்தாளே!
பஞ்சு போன்ற கையாலே!
பண்டம் கொண்டு வந்தாளே!
பந்தல் முன்பு நின்றாளே!
கம்பம் சுற்றி வந்தாளே!
தென்றல் காற்றும் வந்ததே!
தெவிட்டா இன்பம் தந்ததே!

இப்பாடலில் இடம்பெற்றுள்ள இன எழுத்துச் சொற்களை எடுத்து எழுதுக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மெல்லினத்திற்கான இன எழுத்து இடம்பெறாத சொல் எது?

அ) மஞ்சள் ஆ) வந்தான் இ) கண்ணில் ஈ) தம்பி

2. தவறான சொல்லை வட்டமிடுக.

அ) கண்டான் ஆ) வென்றான் இ) நண்டு ஈ) வண்டு

பின்வரும் சொற்களைத் திருத்தி எழுதுக.

பிழை	திருத்தம்
தெண்றல்	----------
கன்டம்	----------
நன்ரி	----------
மன்டபம்	----------

JXSB6C

குறுவினா

இன எழுத்துகள் என்றால் என்ன?

6th Std Tamil CBSE Pages 77-206.indd 92 20-03-2020 17:42:27

மொழியை ஆள்வோம்!

படித்துச் சுவைக்க

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு.

– குறள் எண்: 397

ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடுஇல்லை–அந்நாடு
வேற்றுநாடு ஆகா தமவேஆம் ஆயினால்
ஆற்றுணா வேண்டுவது இல்.

– பழமொழி நானூறு : 4

தொடர்களை நீட்டித்துப் புதிய தொடர்களை உருவாக்குங்கள்.

(எ.கா.)

பாடம் படித்தான்.	மழை பெய்தது.
வகுப்பில் பாடம் படித்தான்.	---- ---- ---
தமிழ் வகுப்பில் பாடம் படித்தான்.	---- ---- ---- ----
நேற்று தமிழ் வகுப்பில் பாடம் படித்தான்.	---- ---- ---- ---- ----
அவன் நேற்று தமிழ் வகுப்பில் பாடம் படித்தான்.	----- ---- ---- ---- ---- ----

இரு பொருள் தரக்கூடிய சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர்கள் அமையுங்கள்.

(நூல், மாலை, ஆறு, படி)

(எ. கா.) ஆடை தைக்க உதவுவது நூல்

மூதுரை அற நூல்

பின்வரும் சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர்களை உருவாக்குங்கள்.

ஆசிரியர் மாணவன்	கவிதை பாடம்	எழுதுகிறார் எழுதுகிறான் படிக்கிறார் படிக்கிறான் கற்பிக்கிறார்

6th Std Tamil CBSE Pages 77-206.indd 93 20-03-2020 17:42:27

உரையாடலை நிறைவு செய்யுங்கள்.

மாணவர் : வணக்கம் ஐயா.

தலைமை ஆசிரியர் : வணக்கம் மதி, உனக்கு என்ன வேண்டும்?

மாணவர் : எனக்கு மாற்றுச் சான்றிதழ் வேண்டும் ஐயா.

தலைமை ஆசிரியர் : ----------

மாணவர் : என் தந்தைக்குப் பணி மாறுதல் கிடைத்திருக்கிறது ஐயா.

தலைமை ஆசிரியர் : அப்படியா! எந்த ஊருக்குப் பணி மாறுதல் கிடைத்திருக்கிறது?

மாணவர் : ----------

தலைமை ஆசிரியர் : அங்கு எந்தப் பள்ளியில் சேரப் போகிறாய்?

மாணவர் : ----------

தலைமை ஆசிரியர் : ----------

மாணவர் : என் அப்பாவை அழைத்து வந்திருக்கிறேன் ஐயா.

கீழே கொடுக்கப்பட்டுள்ள தலைவர்களின் பிறந்த நாள் எந்த நாளாகக் கொண்டாடப் படுகிறது.

(குழந்தைகள் நாள், மாணவர் நாள், ஆசிரியர் நாள், தேசிய இளைஞர் நாள், கல்வி வளர்ச்சி நாள்)

1. காமராசர் பிறந்த நாள் ----------

2. டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் பிறந்தநாள் ----------

3. அப்துல்கலாம் பிறந்த நாள் ----------

4. விவேகானந்தர் பிறந்த நாள் ----------

5. ஜவஹர்லால் நேரு பிறந்த நாள் ----------

இன எழுத்துகள் அமைந்துள்ள சொற்களை வட்டமிடுங்கள்.

கங்கை, பக்கம், வண்டு, மண்டபம், மங்கை,

வெந்தயம், தந்தம், பஞ்சு, பச்சை, தக்காளி, மஞ்சள்,

கம்பளம், குன்று, காக்கை, செங்கடல், தேங்காய்

6th Std Tamil CBSE Pages 77-206.indd 94 20-03-2020 17:42:27

கீழ்க்காணும் சொற்களுள் அமைந்துள்ள இன எழுத்துகளை எடுத்து எழுதுங்கள்.

சங்கு, நுங்கு, பிஞ்சு, வஞ்சம், பண்டம், சுண்டல், வண்டி,

பந்தயம், பந்து, கற்கண்டு, தென்றல், நன்று

பின்வரும் பத்தியைப் படித்து வினாவிற்கேற்ற விடையளிக்கவும்.

காமராசரின் வீட்டுக்குள் ஒரு சிறுவனும் அவனுடைய தங்கையும் நுழைய முயன்றனர். ஊழியர் அவர்களைத் தடுப்பதைக் காமராசர் கவனித்தார். உடனே அவர்களை உள்ளே அழைத்தார். "யாரைப் பார்க்க வந்தீங்க?" என்று அன்புடன் வினவினார். "எங்க அண்ணனுக்குத் தேர்வுக்குப் பணம் கட்ட அம்மாவிடம் வசதியில்லே. உங்களைப் பார்த்தால்..." என்று சிறுமி கூறி முடிப்பதற்குள், "அம்மா அனுப்பி விட்டாரா?" என்று காமராசர் கேட்டார். "இல்லை நாங்களாகத்தான் வந்தோம். அம்மா அப்பளம் போட்டு வீடு வீடாகக் கொண்டு போய் வித்துட்டு வருவாங்க. அதில் வரும் வருமானத்தை வச்சுத்தான் எங்களைப் படிக்க வைக்கிறாங்க" என்று குழந்தைகள் கூறினர். அதனைக் கேட்டதும் மாடியேறிச் சென்று பணத்தைக் கொண்டு வந்து கொடுத்தார்.

மறுநாள் குழந்தைகள் இருவரும் காமராசரைத் தேடி வந்தனர். "ஐயா தேர்வுக்குப் பணம் கட்டியாச்சு. இந்த இரசீதை (பற்றுச் சீட்டை) அம்மா உங்களிடம் காட்டிட்டு வரச் சொன்னாங்க" என்றனர். அதனைக் கேட்டுக் காமராசர் மனம் நெகிழ்ந்தார்.

1. காமராசரின் வீட்டிற்குள் நுழைய முயன்றவர்கள் _____

அ) பெற்றோர் ஆ) சிறுவன், சிறுமி இ) மக்கள் ஈ) ஆசிரியர்கள்

2. இந்நிகழ்வு சிறுவனது குடும்பத்தின் எப்பண்பை விளக்குகிறது?

அ) ஏழ்மை ஆ) நேர்மை இ) உழைப்பு ஈ) கல்லாமை

3. மறுநாள் குழந்தைகள் வந்ததும் காமராசர் மனம் _____

4. சிறுவனும் சிறுமியும் எதற்காகக் காமராசரின் வீட்டிற்கு வந்தனர்?

5. காமராசர் செய்த உதவி யாது?

கட்டுரை எழுதுக

காமராசர் என்னும் தலைப்பில் கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

முன்னுரை
இளமைக் காலம்
கல்விப் பணி
நிறைவேற்றிய பிற திட்டங்கள்
முடிவுரை

6th Std Tamil CBSE Pages 77-206.indd 95 20-03-2020 17:42:28



மொழியோடு விளையாடு

'கல்விக்கண் திறந்த காமராசர்' இத்தொடரிலுள்ள எழுத்துகளை மட்டும் பயன்படுத்திப் புதிய சொற்களை உருவாக்குங்கள். (எ.கா.) கண்

---------- ----------

---------- ----------

முறை மாறியுள்ள சொற்களைச் சரியான இடத்தில் பொருத்திச் சொற்றொடரை நிறைவு செய்க.

1. முளையிலே விளையும் தெரியும் பயிர்

2. ஆக்குவோம் இல்லாமை கல்லாமையை

கீழ்க்காணும் கட்டங்களில் உள்ள இன எழுத்துச் சொற்களை வட்டமிட்டுத் தனியாக எடுத்து எழுதுக.

ம	ண்	ட	ப	ம்	அ
ற	தி	க	ந்	கி	ச
கி	பி	ம்	து	ளி	ங்
தெ	ன்	ற	ல்	ங்	கு
ள்	வி	ம	ஞ்	ச	ள்

செயல் திட்டம்

காமராசர் குறித்த செய்திகள் மற்றும் புகைப்படங்களுடன் ஒரு படத்தொகுப்பு (Album) உருவாக்கவும்.



நிற்க அதற்குத் தக...

என் பொறுப்புகள்

1. கல்வியின் சிறப்பை உணர்ந்துள்ளேன்.

2. தொடர்ந்து கல்வி கற்பேன்.

3. கல்வியால் எனது குறிக்கோளை அடைவேன்.

4. கல்வியால் சிறந்தவர்களை என் முன்னோடிகளாகக் கொள்வேன்.

5. புத்தகம் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வேன்.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 96 20-03-2020 17:42:28

கலைச்சொல் அறிவோம்

கல்வி	–	*Education*
தொடக்கப் பள்ளி	–	*Primary School*
மேல்நிலைப் பள்ளி	–	*Higher Secondary School*
நூலகம்	–	*Library*
மின்படிக்கட்டு	–	*Escalator*
மின்தூக்கி	–	*Lift*
மின்னஞ்சல்	–	*E – Mail*
குறுந்தகடு	–	*Compact Disk (CD)*
மின்நூலகம்	–	*E – Library*
மின்நூல்	–	*E – Book*
மின் இதழ்கள்	–	*E – Magazine*



இணையத்தில் காண்க

1. ஔவையார் என்ற பெயரில் பலர் இருந்திருக்கின்றனர் என்ற செய்தியை இணையத்தில் தேடுக.
2. கல்வியின் சிறப்புக் குறித்துக் கூறியுள்ள கல்வியாளர் சிலரின் பெயர்களை இணையத்தில் தேடிப் பட்டியலிடுக.
3. கல்வியால் உயர்ந்தோரின் பெயர்களை இணையத்தில் தேடிப் பட்டியலிடுக.
4. கல்வியின் சிறப்பினைக் கூறும் மேற்கோள்களை இணையத்தில் தேடிப் பயில்க.
5. உலகப் புகழ்பெற்ற புத்தகத் திருவிழாக்கள் குறித்து இணையத்தில் தேடி எழுதுக.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 97 20-03-2020 17:42:28

இணையச் செயல்பாடுகள்





படிகள்:

⇒ கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி ***Digital Dialects*** என்னும் இணையச் செயலியின் பக்கத்திற்குச் செல்லவும். அங்குக் கொடுக்கப்பட்டிருக்கும் மொழிகளில் தமிழைத் தேர்வு செய்து கொள்ளவும் .

⇒ இப்போது திரையில் *Tamil Alphabet, Numbers, Fruit & Vegetables, Colors , Animals* போன்ற தெரிவுகள் கொடுக்கப்பட்டிருக்கும். அதில் விரும்பும் தெரிவைத் தேர்ந்தெடுக்கவும்.

⇒ உதாரணத்திற்கு *Animals* என்பதைத் தெரிவு செய்தவுடன் விலங்குகளின் பெயர்கள் அடங்கிய கட்டம் தோன்றும். அதன் கீழே இருக்கும் *play game* என்பதைச் சொடுக்கியதும் விளையாடுவதற்கான அறிவுரைக் கட்டம் தோன்றும். அதன் கீழே இருக்கும் *play game* என்பதை மீண்டும் சொடுக்கி விளையாட்டைத் தொடரவும்.







செயல்பாட்டிற்கான உரலி

http://www.digitaldialects.com/

*கொடுக்கப்பட்டுள்ள படங்கள்அடையாளத்திற்காக மட்டுமே

6th Std Tamil CBSE Pages 77-206.indd 98 20-03-2020 17:42:29

இயல் ஐந்து

பாடறிந்து ஒழுகுதல்



கற்றல் நோக்கங்கள்

JY277Z


- நல்லொழுக்கப் பண்புகளை அறிதல்
- தமிழர் திருநாளின் சிறப்பை உணர்தல்
- தமிழரின் சிற்பக்கலைச் சிறப்பையும் பிற கலைகளையும் அறிதல்
- நாட்டுப்புறப் பாடல்கள் மூலம் வெளிப்படும் நாகரிகம், பண்பாட்டினை அறிதல்
- மயங்கொலி வேறுபாடு அறிந்து மொழியைச் சரியாகப் பயன்படுத்துதல்

6th Std Tamil CBSE Pages 77-206.indd 99 20-03-2020 17:42:31

கவிதைப்பேழை

இயல் ஐந்து

ஆசாரக்கோவை



நல்லொழுக்கமே நல்ல மனிதர்களை உருவாக்கும். நாம் ஒழுக்க நெறிகளை அறிந்தால்தான் அவற்றைப் பின்பற்றி நல்வாழ்வு வாழ முடியும். இந்த நோக்கத்திற்காகவே நம் முன்னோர் அற நூல்களைப் படைத்தனர். நாம் பின்பற்ற வேண்டிய நற்பண்புகளை அறநூல்கள் விளக்குகின்றன. அவற்றை அறிவோம் வாருங்கள்.

JZ8YSB

நன்றியறிதல் பொறையுடைமை இன்சொல்லோடு
இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு
ஒப்புரவு ஆற்ற அறிதல் அறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்டல் – இவையெட்டும்
சொல்லிய ஆசார வித்து

– பெருவாயின் முள்ளியார்

சொல்லும் பொருளும்

நன்றியறிதல்	–	பிறர் செய்த உதவியை மறவாமை
ஒப்புரவு	–	எல்லோரையும் சமமாகப் பேணுதல்
நட்டல்	–	நட்புக் கொள்ளுதல்

பாடலின் பொருள்

பிறர் செய்த உதவியை மறவாதிருத்தல்; பிறர் செய்யும் தீமைகளைப் பொறுத்துக் கொள்ளுதல்; இனிய சொற்களைப் பேசுதல்; எவ்வுயிர்க்கும் துன்பம் செய்யாதிருத்தல்; கல்வி அறிவு பெறுதல்; எல்லோரையும் சமமாகப் பேணுதல்; அறிவுடையவராய் இருத்தல்; நற்பண்புகள் உடையவரோடு நட்புக் கொள்ளுதல் ஆகிய எட்டும் நல்லொழுக்கத்தை விதைக்கும் விதைகள் ஆகும்.



நூல் வெளி

ஆசாரக்கோவையின் ஆசிரியர் பெருவாயின் முள்ளியார். இவர் பிறந்த ஊர் கயத்தூர். ஆசாரக்கோவை என்பதற்கு நல்ல ஒழுக்கங்களின் தொகுப்பு என்பது பொருள். இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூல் நூறு வெண்பாக்களைக் கொண்டது.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 100 20-03-2020 17:42:31

கற்பவை கற்றபின்

1. நாம் எந்தெந்த வகையில் பிறருக்கு உதவலாம் என்பது குறித்து நண்பர்களுடன் கலந்துரையாடுக.
2. இந்தப் பாடலில் கூறப்படும் கருத்துகளுக்குப் பொருத்தமான திருக்குறள் அதிகாரங்களின் தலைப்புகளைப் பட்டியலிடுக.
3. "கூடா நட்புக் கேடாய் முடியும்" என்னும் கருத்து அமைந்த கதை ஒன்று கூறுக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பிறரிடம் நான் _____ பேசுவேன்.

   அ) கடுஞ்சொல் ஆ) இன்சொல் இ) வன்சொல் ஈ) கொடுஞ்சொல்

2. பிறர் நமக்குச் செய்யும் தீங்கைப் பொறுத்துக்கொள்வது _____ ஆகும்.

   அ) வம்பு ஆ) அமைதி இ) அடக்கம் ஈ) பொறை

3. அறிவு+உடைமை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____

   அ) அறிவுடைமை ஆ) அறிவுஉடைமை

   இ) அறியுடைமை ஈ) அறிஉடைமை

4. இவை+எட்டும் என்பதனைச் சேர்த்து எழுதக்கிடைக்கும் சொல் _____

   அ) இவைஎட்டும் ஆ) இவையெட்டும் இ) இவ்வெட்டும் ஈ) இவ்எட்டும்

5. நன்றியறிதல் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

   அ) நன்றி+யறிதல் ஆ) நன்றி+அறிதல் இ) நன்று+அறிதல் ஈ) நன்று+யறிதல்

6. பொறையுடைமை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

   அ) பொறுமை+உடைமை ஆ) பொறை+யுடைமை

   இ) பொறு+யுடைமை ஈ) பொறை+உடைமை

குறுவினா

1. எந்த உயிருக்கும் செய்யக்கூடாதது எது?
2. நாம் யாருடன் நட்புக் கொள்ள வேண்டும்?

JZHUTY

சிறுவினா

ஆசாரக்கோவை கூறும் எட்டு வித்துகள் யாவை?

சிந்தனை வினா

1. உங்கள் நண்பரிடம் உங்களுக்குப் பிடித்த பண்புகளைப் பட்டியலிடுக.
2. நல்ல ஒழுக்கங்களை வித்து எனக் கூறுவதின் காரணத்தைச் சிந்தித்து எழுதுக.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 101 20-03-2020 17:42:31

இயல் ஐந்து

கண்மணியே கண்ணுறங்கு

நுழையும்முன்

பாடல்கள் மனத்திற்கு அமைதியையும் மகிழ்ச்சியையும் தருபவை. பாடலைப் பாடினாலும் மகிழ்ச்சி; கேட்டாலும் மகிழ்ச்சி. ஏட்டில் எழுதப்படாத இசைப்பாடல்கள் தமிழில் ஏராளமாக உள்ளன. தமிழரின் பிறப்பு முதல் இறப்பு வரை ஒவ்வொரு நிகழ்விலும் பாடல்கள் முதன்மையான இடத்தைப் பெறுகின்றன. இந்நாட்டுப்புறப் பாடல்களே தமிழர்களின் வாழ்க்கை முறைகளைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.



ஆராரோ ஆரிரரோ
ஆராரோ ஆரிரரோ

நந்தவனம் கண் திறந்து
நற்றமிழ்ப் பூ எடுத்து
பண்ணோடு பாட்டிசைத்துப்
பார் போற்ற வந்தாயோ!

தந்தத்திலே தொட்டில் கட்டித்
தங்கத்திலே பூ இழைத்துச்
செல்லமாய் வந்து உதித்த
சேரநாட்டு முத்தேனோ!

வாழை இலை பரப்பி
வந்தாரைக் கை அமர்த்திச்
சுவையான விருந்து வைக்கும்
சோழநாட்டு முக்கனியோ!

குளிக்கக் குளம் வெட்டிக்
குலம்வாழ அணை கட்டிப்
பசியைப் போக்க வந்த
பாண்டிநாட்டு முத்தமிழோ!

கண்ணே கண்மணியே
கண்ணுறங்கு கண்ணுறங்கு!

6th Std Tamil CBSE Pages 77-206.indd 102 20-03-2020 17:42:31

சொல்லும் பொருளும்

நந்தவனம் – பூஞ்சோலை
பண் – இசை
பார் – உலகம்
இழைத்து – பதித்து

JZRQVL

தொகைச்சொற்களின் விளக்கம்

முத்தேன் – கொம்புத்தேன், மலைத்தேன், கொசுத்தேன்

முக்கனி – மா, பலா, வாழை

முத்தமிழ் – இயல், இசை, நாடகம்

பாடலின் பொருள்

தமிழ்ச் சோலையில் பூ எடுத்து, இசையுடன் பாடி உலகம் புகழ வந்தாயோ! தங்கப் பூ பதித்த தந்தத்தால் ஆன தொட்டிலில் செல்லமாய் உறங்க வந்த சேரநாட்டின் முத்தேனோ! இல்லம் வந்தவரை இன்முகத்தோடு வரவேற்று அறுசுவை உணவளிக்கும் சோழ நாட்டின் முக்கனியோ! குளம் வெட்டி, அணை கட்டிக் குடிமக்களின் பசியைப் போக்கும் பாண்டி நாட்டின் முத்தமிழோ! கண்ணே கண்மணியே கண்மூடி உறங்குவாயாக!



நூல் வெளி

தாலாட்டு வாய்மொழி இலக்கியங்களுள் ஒன்று. தால் என்பதற்கு நாக்கு என்று பொருள். நாவை அசைத்துப் பாடுவதால் தாலாட்டு (தால்+ஆட்டு) என்று பெயர்பெற்றது. குழந்தையின் அழுகையை நிறுத்தவும் தூங்க வைக்கவும் இனிய ஓசையுடன் பாடும் பாடல் தாலாட்டு.



கற்பவை கற்றபின்

1. உங்கள் பகுதியில் பாடப்படும் தாலாட்டுப்பாடல் ஒன்றை அறிந்து வந்து பாடுக.
2. உங்கள் பகுதியில் பேசப்படும் பழமொழிகளைத் தொகுக்க.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 103 20-03-2020 17:42:31

மதிப்பீடு

K11LX9

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'பாட்டிசைத்து' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ……..

   அ) பாட்டி+சைத்து ஆ) பாட்டி+இசைத்து

   இ) பாட்டு+இசைத்து ஈ) பாட்டு+சைத்து

2. 'கண்ணுறங்கு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ……

   அ) கண்+உறங்கு ஆ) கண்ணு+உறங்கு

   இ) கண்+றங்கு ஈ) கண்ணு+றங்கு

3. வாழை+இலை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ……

   அ) வாழையிலை ஆ)வாழைஇலை

   இ) வாழைலை ஈ)வாழிலை

4. கை+அமர்த்தி என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ……..

   அ) கைமர்த்தி ஆ) கைஅமர்த்தி

   இ) கையமர்த்தி ஈ) கையைமர்த்தி

5. உதித்த என்ற சொல்லிற்குரிய எதிர்ச்சொல் ……

   அ) மறைந்த ஆ) நிறைந்த

   இ) குறைந்த ஈ) தோன்றிய

குறுவினா

1. இப்பாடலில் குறிப்பிடப்படும் மூன்று நாடுகள் யாவை?
2. நமது வீட்டிற்கு வந்தவரை உபசரிக்கும் முறையாக நாட்டுப்புறப் பாடல் கூறுவது யாது?
3. கண்மணியே கண்ணுறங்கு பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.

சிறுவினா

தாய் தன் குழந்தையை எவ்வாறெல்லாம் பாராட்டுகிறாள்?

சிந்தனை வினா

1. வாய்மொழி இலக்கிய வகைகளின் பெயர்களைத் தொகுக்க.
2. குழந்தைகளைக் கொஞ்சுவதற்குப் பயன்படுத்தப்படும் சொற்களைத் தொகுக்க.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 104 20-03-2020 17:42:32

இயல் ஐந்து

தமிழர் பெருவிழா

K1AHYW

நுழையும்முன்

விரும்பிக் கொண்டாடுவது விழா எனப்படும். உறவுகள் ஒன்றுகூடிக் கொண்டாடும் விழாக்கள் மனத்திற்கு மகிழ்வைத்தரும்; மனிதரிடையே ஒற்றுமையை வளர்க்கும். தமிழரின் நாகரிகம், வீரம் ஆகியவற்றை எடுத்துக்காட்டும் வகையில் பல விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. விழாக்கள் நமது பண்பாட்டை அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு சேர்க்கின்றன. தமிழருக்கே உரிய சிறப்பான விழாவைப் பற்றி அறிவோம் வாருங்கள்.



இயற்கையோடு இணைந்து வாழ்வதே தமிழரின் வாழ்க்கைமுறை ஆகும். இயற்கையை வணங்குதல் தமிழர் மரபு. தமிழர் கொண்டாடும் பல விழாக்கள் இயற்கையைப் போற்றும் வகையிலேயே அமைந்து இருக்கின்றன. அவற்றுள் சிறப்பானது பொங்கல் விழா ஆகும். இது தமிழர் திருநாள் என்றும் போற்றப்படுகிறது.

கதிரவனுக்கு நன்றி கூறிச் சிறப்புச் செய்யும் விழா பொங்கல் விழா. உழவர்கள் ஆடித்திங்களில் விதைப்பர். தைத்திங்களில் அறுவடை செய்து பயன் அடைவர். தைத்திங்களின் முதல் நாளில் பொங்கலிட்டு வழிபடுவர். எனவே, இத்திருவிழாவை

6th Std Tamil CBSE Pages 77-206.indd 105 20-03-2020 17:42:32

அறுவடைத்திருவிழா என்றும் அழைப்பர். அந்தச் சமயத்தில் இயற்கை அன்னை பசுமையான ஆடை உடுத்தி, பல நிறப் பூக்களைச் சூடி இருப்பாள். காயும் கனியும் கரும்பும் எங்குப் பார்த்தாலும் விளைந்து காட்சி தரும்.

உழவர்கள் இயற்கைக்கும் தம்முடன் உழைத்த கால்நடைகளுக்கும் இந்நாளில் நன்றி தெரிவித்து மகிழ்கின்றனர். எனவே, இவ்விழாவை உழவர் திருநாள் என்றும் கூறுவர். பொங்கல் திருநாள் இரண்டு நாள்கள் முதல் நான்கு நாள்கள் வரை கொண்டாடப்படுகிறது. இது வட்டாரத்திற்கு வட்டாரம் மாறுபடுகிறது.

போகித்திருநாள்

"பழையன கழிதலும் புதியன புகுதலும்" (நன்னூல் நூற்பா-462) என்பது ஆன்றோர் மொழி. வீட்டில் உள்ள பயனற்ற பொருள்களை நீக்கி வீட்டைத் தூய்மை செய்யும் நாள் (போக்கி) போகித் திருநாள். இது மார்கழி மாதத்தின் இறுதி நாள் ஆகும்.

தெரிந்து தெளிவோம்

வாழ்க்கைக்கு வளம் தரும் மழைக்கடவுளை வழிபடும் நோக்கில் அக்காலத்தில் போகிப்பண்டிகை இந்திரவிழாவாகக் கொண்டாடப்பட்டது.

பொங்கல் திருநாள்

தை மாதத்தின் முதல்நாள் பொங்கல் திருநாள் ஆகும். இத்திருநாளன்று வாசலில் வண்ணக் கோலமிடுவர். மாவிலைத் தோரணம் கட்டுவர். புதுப்பானையில் புத்தரிசியோடு வெல்லம், முந்திரி, நெய் சேர்த்துப் பொங்கலிடுவர். பொங்கல் என்பதற்குப் பொங்கிப்பெருகி வருவது என்று பொருள். பொங்கல் பொங்கி வரும் வேளையில் "பொங்கலோ பொங்கல்" என்று மங்கல ஒலி எழுப்பிப் போற்றுவர். "பொங்கல் பொங்கி வருவதுபோல் வாழ்வில் மகிழ்ச்சி பொங்கிப் பெருகும்" என்பது மக்களின் நம்பிக்கை ஆகும். பின்னர், தலைவாழை இலையிட்டுப் பொங்கலைப் படைப்பர். கரும்பு, மஞ்சள் கொத்து, தேங்காய், பழங்கள், வெற்றிலை பாக்கு ஆகியவற்றை வைத்து வழிபடுவர். விளைச்சலுக்குக் காரணமான கதிரவனை நன்றியோடு வணங்கி மகிழ்வர். சர்க்கரைப் பொங்கலை அனைவருக்கும் அளித்துத் தாமும் உண்டு மகிழ்வர்.

தெரிந்து தெளிவோம்

தை முதல் நாளில் திருவள்ளுவராண்டு தொடங்குகிறது. தை இரண்டாம் நாள் திருவள்ளுவர் நாள் கொண்டாடப்படுகிறது.



மாட்டுப் பொங்கல்

பொங்கலுக்கு அடுத்த நாள் மாட்டுப்பொங்கல். மாடுகள் உழவர்களின் செல்வமாக மதிக்கப்படுகின்றன. மாடு என்ற சொல்லுக்குச் செல்வம் என்னும் பொருளும் உண்டு. உழவுக்கும் உழவருக்கும் உற்ற துணையாக மாடுகள் விளங்குகின்றன. அவற்றிற்கு நன்றி செலுத்தும் வகையில் மாட்டுப்பொங்கல் கொண்டாடப்படுகிறது.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 106 20-03-2020 17:42:32

மாட்டுப் பொங்கலன்று மாடுகளை நீராட்டுவர். கொம்புகளைச் சீவி வண்ணங்கள் தீட்டுவர். மாடுகளின் கழுத்திலே மணிகளைக் கட்டுவர். பூவும் தழையும் சூட்டுவர். மாட்டுக்கு மஞ்சள், குங்குமம் இடுவர். பொங்கல், தேங்காய், பழங்கள், வெற்றிலை பாக்கு போன்றவற்றைப் படைத்து வழிபடுவர். மாட்டுப்பொங்கல் நாளிலோ அதற்கு அடுத்த நாளிலோ சில ஊர்களில் மஞ்சுவிரட்டு நடைபெறும். மஞ்சுவிரட்டு என்பது மாடுகளை அடக்கித் தழுவும் வீர விளையாட்டு ஆகும். இவ்விளையாட்டு மாடுபிடித்தல், ஜல்லிக்கட்டு, ஏறுதழுவுதல் என்றும் அழைக்கப்படுகிறது.

தெரிந்து தெளிவோம்

திருவள்ளுவர் கி.மு (பொ.ஆ.மு) 31இல் பிறந்தவர். எனவே, திருவள்ளுவராண்டைக் கணக்கிட நடைமுறை ஆண்டுடன் 31ஐக் கூட்டிக்கொள்ள வேண்டும். (எ.கா.) 2018 + 31 = 2049

காணும் பொங்கல்

மாட்டுப் பொங்கலுக்கு அடுத்த நாள் காணும் பொங்கல் ஆகும். இந்நாளில் உற்றார் உறவினர் மற்றும் நண்பர் வீடுகளுக்குச் சென்று அவர்களைக் கண்டு மகிழ்வர். குடும்பத்தினருடன் விரும்பிய இடங்களுக்குச் சென்று மகிழ்வுடன் பொழுதைக் கழிப்பர். மேலும் பட்டிமன்றங்கள், கலைநிகழ்ச்சிகள் முதலியவற்றை நடத்துவர். விளையாட்டுப் போட்டிகள் நடத்தி வெற்றி பெற்றோருக்குப் பரிசுகளை வழங்கிப் பாராட்டுவர்.

இயற்கை, உழைப்பு, நன்றியுணர்வு, பண்பாடு ஆகியவற்றைப் போற்றும் விழாவே பொங்கல் விழா ஆகும். உலகு எங்கும் உள்ள தமிழர்கள் பொங்கல் திருவிழாவை மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றனர்.

தெரிந்து தெளிவோம்

அறுவடைத் திருநாள் ஆந்திரம், கர்நாடகம், மராட்டியம், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மகரசங்கராந்தி என்ற பெயரில் கொண்டாடப்படுகிறது. பஞ்சாப் மாநிலத்தில் லோரி என்று கொண்டாடப்படுகிறது. குஜராத், இராஜஸ்தான் மாநிலங்களில் உத்தராயன் என்று கொண்டாடப்படுகிறது.

கற்பவை கற்றபின்

1. உங்கள் ஊரில் கொண்டாடப்படும் பிற விழாக்கள் பற்றி வகுப்பில் கலந்துரையாடுக.
2. உங்கள் பள்ளியில் கொண்டாடப்படும் தேசியவிழாக்களின் பட்டியலை உருவாக்குக.
3. தமிழகத்தில் ஏறுதழுவுதல் நடக்கும் இடங்களின் பெயர்களைத் தொகுக்க .
4. உங்களுக்குப் பிடித்த விழா எது? ஏன்?

6th Std Tamil CBSE Pages 77-206.indd 107 20-03-2020 17:42:32

மதிப்பீடு

K1JE1J

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. கதிர் முற்றியதும் _____ செய்வர்.

அ) அறுவடை ஆ) உரமிடுதல் இ) நடவு ஈ) களையெடுத்தல்

2. விழாக்காலங்களில் வீட்டின் வாயிலில் மாவிலையால் _____ கட்டுவர்.

அ) செடி ஆ) கொடி இ) தோரணம் ஈ) அலங்கார வளைவு

3. பொங்கல்+அன்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____

அ) பொங்கலன்று ஆ) பொங்கல்அன்று

இ) பொங்கலென்று ஈ) பொங்கஅன்று

4. போகிப்பண்டிகை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

அ) போகி+பண்டிகை ஆ) போ+பண்டிகை

இ) போகு+பண்டிகை ஈ) போகிப்+பண்டிகை

5. பழையன கழிதலும்_____ புகுதலும்.

அ) புதியன ஆ) புதுமை இ) புதிய ஈ) புதுமையான

6. பச்சைப் பசேல் என்ற வயலைக் காண இன்பம் தரும்.

பட்டுப் போன மரத்தைக் காண _____ தரும்.

அ) அயர்வு ஆ) கனவு இ) துன்பம் ஈ) சோர்வு

சொற்றொடரில் அமைத்து எழுதுக.

அ) பொங்கல் ஆ) செல்வம் இ) பண்பாடு

குறுவினா

1. போகிப்பண்டிகை எதற்காகக் கொண்டாடப்படுகிறது?
2. உழவர்கள் ஏன் மாடுகளுக்கு நன்றி செலுத்துகின்றனர்?

சிறுவினா

காணும் பொங்கலை மக்கள் எவ்வாறு கொண்டாடுகின்றனர்?

சிந்தனை வினா

1. பொங்கல் விழாவின் போது உங்கள் ஊரில் என்னென்ன சிறப்பு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வீர்கள்?
2. காணும் பொங்கல் எவ்வாறு மக்களிடையே ஒற்றுமையை வளர்க்கிறது?

6th Std Tamil CBSE Pages 77-206.indd 108 20-03-2020 17:42:32

விரிவானம்

இயல் ஐந்து

மனம் கவரும் மாமல்லபுரம்

நுழையும்முன்

கலைகளும் இலக்கியங்களும் ஒரு நாட்டின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் உலகிற்கு உணர்த்துவன. தமிழர்கள் சிற்பம், ஓவியம் முதலிய கலைகளில் சிறந்திருந்தனர். காலத்தால் அழியாத கலைச் செல்வங்கள் பலவற்றைப் படைத்தனர். நூற்றாண்டுகள் பல கடந்தும் கலைநயம் குறையாமலும் அழகு சிதையாமலும் விளங்கும் கலைச்செல்வங்கள் பல தமிழகத்தில் உள்ளன. அவற்றுள் ஒன்றைக் காண்போம் வாருங்கள்.

K1TA37



குளிர்ந்த காற்று வீசியது. வெளிச்சம் எங்கும் பரவியது. கயல் தன் கண்களை அகல விரித்துப் பார்த்தாள். 'என்ன இடம் இது? நாம் எங்கே இருக்கிறோம்?' கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தாள். அவளுக்கு முன்னால் ஒரு கோவில் தெரிந்தது. வியப்புடன் பார்த்தாள். 'என்ன இது? கோவில் போலவும் இருக்கிறது. தேர் போலவும் இருக்கிறதே! இதைப் பற்றி யாரிடம் கேட்பது எனத் திகைத்து நின்றாள். அப்போது தூரத்தில் ஒருவர் குதிரையில் வந்து கொண்டிருப்பது தெரிந்தது. அவர் தோற்றத்தில் அரசரைப் போல இருந்தார். 'இவர் யாராக இருக்கும்? சரி அருகில் வரட்டும் பார்க்கலாம்' என எண்ணினாள். குதிரை அவள் அருகில் வந்து நின்றது. குதிரையில் இருந்து அவர் இறங்கினார்.

கயல் அவரிடம், "ஐயா! வணக்கம். தாங்கள் பார்ப்பதற்கு அரசர் போல் உள்ளீர்கள். தாங்கள் யார் என்று தெரிந்து கொள்ளலாமா?" என்று கேட்டாள்.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 109 20-03-2020 17:42:32

"நான் பல்லவ மன்னன். என் பெயர் நரசிம்மவர்மன். நான் மற்போரில் சிறந்தவன். அதனால், எனக்கு மாமல்லன் என்னும் பெயரும் உண்டு. உன் பெயர் என்ன?" என்று கேட்டார் அவர்.

"ஐயா, என் பெயர் ம.தி.கயல்"

"மதி கயல் என்று இரண்டு பெயர்களா உனக்கு?"

"இல்லை ஐயா. ம. தி. என்பவை என் பெயரின் தலைப்பெழுத்துகள். என் அம்மா பெயர் மங்கை. என் அப்பா பெயர் திருநாவுக்கரசு. அப்பெயர்களின் முதல் எழுத்துகளைத் தலைப்பெழுத்துகளாக வைத்துள்ளனர்."

"அப்படியா? மகிழ்ச்சி. இங்குத் தனியாக எதைப் பார்த்துக்கொண்டிருக்கிறாய்?"

"இது கோவிலா தேரா என்று தெரியவில்லை. அதனால்தான் குழப்பத்துடன் பார்த்துக் கொண்டு இருக்கிறேன்" என்றாள் கயல்.

"நான் உனக்கு விளக்குகிறேன் கயல். ஒரே பாறையில் செதுக்கிச் செய்யப்பட்ட கோவில் இது. இரதம் (தேர்) போன்ற வடிவத்தில் இருக்கிறது. அதனால் இதனை இரதக் கோவில் என்று அழைக்கிறார்கள்" என்று விளக்கினார் மாமல்லர்.

கயல் சுற்றிலும் பார்த்தாள். அங்கே மொத்தம் ஐந்து இரதங்கள் இருந்தன. "இவை என்ன ஐயா?" என்று கேட்டாள்.

"ஐந்து இரதங்கள் உள்ளதால் இவ்விடத்திற்குப் பஞ்சபாண்டவர் இரதம் என்று பெயர். இவையெல்லாம் என் காலத்தில் உருவாக்கப்பட்டவை" என்றார் மாமல்லர்.

"வியப்பாக உள்ளதே! நீங்கள் நீண்ட காலத்துக்கு முன்பு வாழ்ந்தவர் அல்லவா?"

"ஆமாம் கயல். நான் ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவன்".

"இவற்றை உருவாக்குவதற்குக் கற்களை எங்கிருந்து கொண்டு வந்தீர்கள்?"

"இங்கேயே இருந்த பாறைகளில்தான் இவற்றை உருவாக்கினோம்".



தெரிந்து தெளிவோம்

மாமல்லபுரத்தில் காணவேண்டிய இடங்கள்

1. அர்ச்சுனன் தபசு
2. கடற்கரைக் கோவில்
3. பஞ்சபாண்டவர் ரதம்
4. ஒற்றைக்கல் யானை
5. குகைக்கோவில்
6. புலிக்குகை
7. திருக்கடல் மல்லை
8. கண்ணனின் வெண்ணெய்ப் பந்து
9. கலங்கரை விளக்கம்

6th Std Tamil CBSE Pages 77-206.indd 110 20-03-2020 17:42:32

"அப்படியா? இவற்றைக் கோவிலாக மாற்றவேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு எப்படித் தோன்றியது?"

"நான் சிறுவனாக இருந்த போது ஒருநாள் என் தந்தையுடன் இந்தக் கடற்கரைக்கு வந்தேன். இந்தப் பாறையின் அருகில் விளையாடிக் கொண்டிருந்தேன். இந்தப் பாறையின் நிழல் யானை போல் தரையில் விழுந்தது. என் தந்தையிடம் அதனைக் காட்டினேன். என் தந்தை, 'ஆம், நரசிம்மா! இது யானை போலத்தான் தெரிகிறது. அதோ அந்தக் குன்றின் நிழலைப் பார். கோவில் போலத் தெரிகிறது' என்றார். 'ஆமாம் அப்பா! அந்தக் குன்றைக் கோவிலாகவும், இந்தக் குன்றைக் கோவில் முன் நிற்கும் யானை போலவும் மாற்றிவிட்டால் நன்றாக இருக்குமே' என்றேன். 'நல்ல சிந்தனை. இவை இரண்டை மட்டும் அல்ல, இங்குள்ள ஒவ்வொரு குன்றையும் சிற்பமாக மாற்றலாம். ஒவ்வொரு பாறையையும் நந்தி, சிங்கம், யானை என்று மாற்றுவோம். இந்தக் கடற்கரையையே சிற்பக்கலைக் கூடமாக மாற்றிவிடலாம்' என்று கூறினார் என் தந்தை" என்று சொல்லி முடித்தார் மாமல்லர்.

"உங்கள் தந்தையும் அரசரா?" என்று கேட்டாள் கயல்.

"ஆமாம் கயல். எனக்கு முன்பு பல்லவ நாட்டை ஆட்சி செய்தவர் என் தந்தை மகேந்திரவர்ம பல்லவர். அவர் காலத்தில் இந்தச் சிற்பப் பணி தொடங்கியது. என்காலம், என்மகனின் காலம், என் பேரனின் காலம்வரை நடைபெற்றது. நான்கு தலைமுறைகளில் உருவாக்கப்பட்டவை இந்தச் சிற்பங்கள்" என்று பெருமிதத்துடன் கூறினார் மாமல்லர்.

"இந்தச் சிற்பங்களை எல்லாம் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும் போல் தோன்றுகிறதே" என்றாள் கயல்.



"சிற்பக் கலையின் உச்சத்தை நீ பார்க்க வேண்டுமா? என்னுடன் வா!" என்று கூறிக் கயலை அழைத்துச் சென்றார் மாமல்லர்.

இருவரும் அர்ச்சுனன் தபசுச் சிலைக்கு அருகில் வந்து நின்றனர். அங்குப் பாறையில் இருந்த சிற்பங்களைக் கண்டு கயல் வியந்து போனாள். "ஐயா! இந்தப் பாறையில் மனிதர்கள், விலங்குகள், பறவைகள் போன்ற சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவை உயிருள்ளவற்றை நேரில் பார்ப்பது போல அழகாக உள்ளன" என்றாள்.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 111 20-03-2020 17:42:33

"ஆம் கயல். இவற்றுக்குப் புடைப்புச் சிற்பங்கள் என்று பெயர். இந்த இரண்டு பாறைகளிலும் நூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட சிற்பங்கள் உள்ளன."

"அதில் ஒருவர் கண்களை மூடி, இரு கைகளையும் உயர்த்தி, வணங்குவது போல ஒரு சிற்பம் உள்ளது. அவரது உடல் மெலிந்து, எலும்புகளும் நரம்புகளும் வெளியே தெரிவது போல அழகாகச் செதுக்கப்பட்டுள்ளது."



"ஆம் கயல். அர்ச்சுனன் தவம் செய்யும் காட்சி இது. இந்தச் சிற்பம் உள்ளதால்தான், இப்பாறைக்கு 'அர்ச்சுனன் தபசு' என்று பெயர். இதனைப் 'பகீரதன் தவம்' என்றும் கூறுவர்.

"அப்படியா! இந்த இடத்தில் இரண்டு பாறைகளுக்கு இடையில் நீர் வடிந்து வந்த தடம் தெரிகிறதே?"

"ஆம் கயல். அங்கே ஆகாயகங்கை பூமிக்கு வருவது போல அமைக்கப்பட்டு உள்ளது. மழைக்காலத்தில் இதன் வழியாக மழைநீர் பாய்ந்து வரும். அப்போது உண்மையிலேயே கங்கை ஓடி வருவதைப் போல இருக்கும்" என்றார் மாமல்லர்.

"இங்கே யானைச்சிற்பங்கள் அழகாக உள்ளன. சிங்கம், புலி, அன்னப்பறவை, உடும்பு, குரங்குகள் என எல்லாமே உயிருள்ளவை போலச் செதுக்கப்பட்டுள்ளன. இங்கே பாருங்கள்! மான் தன் காலைத் தூக்கி முகவாயைச் சொறிந்து கொள்வது போன்ற சிற்பம். அது பார்ப்பதற்கு உண்மையிலேயே மான் ஒன்று இருப்பதைப் போலவே தோன்றுகிறது" என்று வியப்புடன் கூறினாள் கயல்.

"இங்கு இன்னும் நிறைய இடங்கள் உள்ளன கயல். இந்த ஊரைச் சுற்றிப் பார்க்க ஒரு நாள் போதாது" என்றார் மாமல்லர்.

"இந்த ஊரின் பெயர் என்ன ஐயா? " என்று ஆர்வத்தோடு கேட்டாள் கயல்.

"இதுதான் தமிழகத்தின் மிகப்பெரிய சிற்பக்கலைக் கூடமாகிய மாமல்லபுரம்"

தெரிந்து தெளிவோம்

சிற்பக் கலை வடிவமைப்புகள் நான்கு வகைப்படும்.

குடைவரைக் கோயில்கள்

கட்டுமானக் கோயில்கள்

ஒற்றைக் கல் கோயில்கள்

புடைப்புச் சிற்பங்கள்

இந்த நான்கு வகைகளும் காணப்படும் ஒரே இடம் மாமல்லபுரம்.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 112 20-03-2020 17:42:33

கயல் சிந்தித்தவாறு "உங்கள் பெயர் மாமல்லன். இந்த ஊரின் பெயர் மாமல்லபுரம். இரண்டுக்கும் ஏதோ ஒற்றுமை உள்ளதே!" எனக் கேட்டாள்.

"ஆம் கயல். இந்த ஊர் உருவாக எனது கேள்விதான் காரணம் என்பதால் என் தந்தை என் பெயரையே இந்த ஊருக்கு வைத்துவிட்டார். இக்காலத்தில் இவ்வூரை மகாபலிபுரம் எனவும் அழைக்கிறார்கள்".

"உங்களைச் சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி ஐயா!"

"எனக்கும்தான் கயல். உன்னோடு பேசிக் கொண்டிருந்ததில் என் இளமைக் காலத்திற்கே சென்றுவிட்டது போல உணர்கிறேன். மிக்க மகிழ்ச்சி மங்கை திருநாவுக்கரசு கயல்."

அப்போது "கயல், கயல் எழுந்திரு. இன்று மாமல்லபுரத்திற்குக் கல்விச் சுற்றுலா செல்ல வேண்டும் என்று கூறினாயே! இன்னும் தூங்கிக் கொண்டிருக்கிறாய். தூக்கத்தில் எங்கள் பெயரை வேறு சொல்லிக் கொண்டிருக்கிறாய்" என்னும் தாயின் குரல் கேட்டுக் கண் விழித்தாள் கயல்.

"இவ்வளவும் கனவா? நேற்று மாமல்லபுரத்தைப் பற்றி ஆசிரியர் கூறிய செய்திகளை நினைத்துக் கொண்டே தூங்கினேன். அதனால் இவை எல்லாம் கனவில் வந்துள்ளன. கனவில் கண்டவற்றை இன்று நேரில் காணப்போகிறேன்" என்று எண்ணி மகிழ்வுடன் சுற்றுலா செல்லத் தயாரானாள் கயல்.



கற்பவை கற்றபின்

1. நீங்கள் சென்ற சுற்றுலா பற்றிய செய்திகளை நண்பர்களுடன் பகிர்க.
2. தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்களைப் பற்றிய செய்திகளைத் திரட்டுக.
3. மாமல்லபுரச் சிற்பங்கள் பாறைகளில் செதுக்கப்பட்டவை. வேறு எந்தெந்தப் பொருள்களால் சிற்பங்களைச் செய்யலாம் எனக் கலந்துரையாடுக.
4. கலைகளுள் ஒன்று சிற்பக்கலை. இது போன்ற பிற கலைகளின் பெயர்களைத் திரட்டி எழுதுக.



மதிப்பீடு

K2364U

சிறுவினா

1. மாமல்லபுரம் எப்படி உருவானது? அதற்குக் காரணமான நிகழ்வு யாது?
2. மாமல்லபுரத்தில் அர்ச்சுனன் தபசுப் பாறையில் உள்ள சிற்பங்களைப் பற்றி எழுதுக.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 113 20-03-2020 17:42:33

இயல் ஐந்து

மயங்கொலிகள்

மணம் – மனம்

மேலே உள்ள இரண்டு சொற்களையும் கவனியுங்கள். உச்சரிக்கும் போது ஏறத்தாழ ஒன்று போலவே ஒலிக்கின்றன. ஆனால் இரண்டுக்கும் இடையே பொருள் வேறுபாடு உண்டு. இவ்வாறு உச்சரிப்பில் சிறிதளவு மட்டுமே வேறுபாடு உள்ள ஒலிகளை மயங்கொலிகள் என்கிறோம்.


ண, ன, ந

ல, ழ, ள

ர, ற ஆகிய எட்டும் மயங்கொலி எழுத்துகள் ஆகும்.

K2C26H

ண, ன, ந – எழுத்துகள்



ண – நாவின் நுனி மேல்வாய் அண்ணத்தின் நடுப் பகுதியைத் தொடுவதால் ணகரம் பிறக்கிறது.

ன – நாவின் நுனி மேல்வாய் அண்ணத்தின் முன் பகுதியைத் தொடுவதால் னகரம் பிறக்கிறது.

ந – நாவின் நுனி மேல்வாய்ப் பல்லின் அடிப் பகுதியைத் தொடுவதால் நகரம் பிறக்கிறது.

(ட், ண்) (த், ந்) (ற், ன்) ஆகியவை இன எழுத்துகள்.

இந்த இன எழுத்துகளைக் கொண்டு

டகரத்தை அடுத்து வரும் ணகரம் டண்ணகரம் என்றும்,

தகரத்தை அடுத்து வரும் நகரம் தந்நகரம் என்றும்,

றகரத்தை அடுத்து வரும் னகரம் றன்னகரம் என்றும் அழைக்கப்படுகின்றன.

தெரிந்து தெளிவோம்

சொற்களில் ண, ன இடம்பெறும் வகை

ட என்னும் எழுத்துக்கு முன் ண் வரும்
(எ.கா.) கண்டம், வண்டி, நண்டு
ற என்னும் எழுத்துக்கு முன் ன் வரும்
(எ.கா.) மன்றம், நன்றி, கன்று


6th Std Tamil CBSE Pages 77-206.indd 114 20-03-2020 17:42:33

ணகரம் வர வேண்டிய இடத்தில் னகரம் எழுதப்படுமானால் பொருள் மாறுபடும் என்பதை உணர்க.

(எ. கா.) வாணம் – வெடி பணி - வேலை

வானம் - ஆகாயம் பனி – குளிர்ச்சி

ல, ள, ழ – எழுத்துகள்



ல- நா (நாவின் இருபக்கங்கள் தடித்து) மேல் பற்களின் அடியைத் தொடுவதால் லகரம் தோன்றும். இது 'வ' போல இருப்பதால் 'வகர லகரம்' என்கிறோம்.

ள- நா (நாவின் இருபக்கங்கள் தடித்து) மேல் அண்ணத்தின் நடுப்பகுதியைத் தொடுவதால் ளகரம் தோன்றும். இதனைப் பொது ளகரம் என்கிறோம். இது 'ன' போல இருப்பதால் 'னகர ளகரம்' என்று கூறுவர்.

ழ- நாவின் நுனி மேல்நோக்கி வளைந்து வருடுவதால் ழகரம் தோன்றும். (ளகரமும் ழகரமும் ஒரே இடத்தில் ஒலிக்கப்படும்). ழ தமிழுக்கே சிறப்பானது. எனவே இதனைச் சிறப்பு ழகரம் என்று அழைக்கிறோம். இது 'ம' போல இருப்பதால் 'மகர ழகரம்' என்று கூறுவது இலக்கண மரபு.


பொருள் வேறுபாடு உணர்க.

விலை -பொருளின் மதிப்பு இலை – செடியின் இலை

விளை - உண்டாக்குதல் இளை – மெலிந்து போதல்

விழை - விரும்பு இழை – நூல் இழை

ர, ற – எழுத்துகள்



ர - நாவின் நுனி மேல் அண்ணத்தில் முதல் பகுதியைத் தொட்டு வருவதால் ரகரம் தோன்றுகிறது. இஃது இடையின எழுத்து என்பதால் இடையின ரகரம் என்கிறோம்.

ற - நாவின் நுனி மேல் அண்ணத்தில் மையப்பகுதியை உரசுவதால் றகரம் தோன்றுகிறது. இது வல்லின எழுத்து என்பதால் வல்லின றகரம் என்கிறோம்.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 115 20-03-2020 17:42:33

பொருள் வேறுபாடு உணர்க

ஏரி – நீர்நிலை கூரை – வீட்டின் கூரை

ஏறி – மேலே ஏறி கூறை – புடவை



கற்பவை கற்றபின்

1. ல, ள, ழ ஆகிய எழுத்துகள் அமைந்த சொற்களைப் பொருளுடன் தொகுக்க.
2. மயங்கொலி எழுத்துகளை உங்களது நண்பரிடம் ஒலித்துக் காட்டுக.



மதிப்பீடு

K2KX85

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1) சிரம் என்பது _____ (தலை / தளை)

2) இலைக்கு வேறு பெயர் _____ (தளை / தழை)

3) வண்டி இழுப்பது _____ (காலை / காளை)

4) கடலுக்கு வேறு பெயர் _____ (பரவை / பறவை)

5) பறவை வானில் _____ (பறந்தது / பரந்தது)

6) கதவை மெல்லத் _____ (திறந்தான் / திரந்தான்)

7) பூ _____ வீசும். (மனம் /மணம்)

8) புலியின் _____ சிவந்து காணப்படும். (கன் /கண்)

9) குழந்தைகள் _____ விளையாடினர். (பந்து /பன்து)

10) வீட்டு வாசலில் _____ போட்டனர். (கோலம் / கோளம்)

தொடர்களில் உள்ள மயங்கொலிப் பிழைகளைத் திருத்தி எழுதுக.

1) எண் வீட்டுத் தோட்டத்தில் மலர்கள் மனம் வீசின.

2) தேர்த் திருவிலாவிற்குச் செண்றனர்.

3) வாழைப்பலம் உடலுக்கு மிகவும் நல்ளது.

குறுவினாக்கள்

1. மயங்கொலி எழுத்துகள் யாவை?

2. ண,ன,ந ஆகிய எழுத்துகள் பிறக்கும் முறையைக் கூறுக.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 116 20-03-2020 17:42:34

மொழியை ஆள்வோம்!

கேட்க

தொலைக்காட்சி / வானொலியில் வேளாண்மை தொடர்பான நிகழ்ச்சிகளைக் கேட்டு வந்து வகுப்பில் கூறுக.

பேசுக

1. மாட்டுப்பொங்கலன்று மாடுகள் பேசிக் கொள்வதாகக் கற்பனை செய்து உரையாடுக.
2. உங்கள் பகுதியில் கொண்டாடப்படும் திருவிழாக்கள் குறித்துப் பேசுக.

சொல்லக் கேட்டு எழுதுக.

பொறையுடைமை, ஆசாரக்கோவை, நந்தவனம், முத்தேன், தைத்திங்கள்,

தலைவாழை, மஞ்சுவிரட்டு, மாமல்லன், ஆகாயகங்கை, மயங்கொலிகள்.

பத்தியைப் படித்து வினாக்கள் அமைக்க.

முகிலன் பொங்கல் விழாக் கொண்டாடத் தாத்தா வீட்டிற்குச் சென்றான். அங்குச் செவலை என்ற காளை இருந்தது. அக்காளையை முகிலனுக்கு மிகவும் பிடிக்கும். அதற்குத் தீவனம் வைப்பது அவனது வழக்கம். வீட்டிற்குப் பின்புறம் உள்ள தோட்டத்தில் இருந்து காய்கறிகள் பறித்துக் கொடுத்துத் தாத்தாவுக்கு உதவுவான். அவன், தாத்தா பாட்டியோடு மகிழ்ச்சியுடன் பொங்கல் விழாவைக் கொண்டாடுவான்.

(எ. கா.) முகிலன் யார் வீட்டிற்குச் சென்றான்?

1. _____
2. _____
3. _____
4. _____
5. _____

சரியான தொடர் எது? கண்டறிந்து எழுதுக.

1. கதிரவன் மறையும் காலையில் உதித்து மாலையில்
2. மாலையில் காலையில் உதித்து மறையும் கதிரவன்
3. கதிரவன் காலையில் உதித்து மாலையில் மறையும்
4. மறையும் காலையில் கதிரவன் உதித்து மாலையில்

6th Std Tamil CBSE Pages 77-206.indd 117 20-03-2020 17:42:34

உரையாடலை நிரப்புக.

செல்வன் : வாங்க மாமா. நலமாக இருக்கின்றீர்களா?

மாமா : …… நீ எப்படி இருக்கிறாய்?

செல்வன் : நன்றாக இருக்கிறேன். உட்காருங்கள் மாமா.

மாமா : அப்பா, அம்மா எங்கே சென்றுள்ளார்கள்?

செல்வன் : இருவரும் கடைவீதிக்குச் ……

மாமா : அப்படியா? ……

செல்வன் : நன்றாகப் படிக்கிறேன் மாமா.

மாமா : நாளை விடுதலை நாள் விழா. உங்கள் பள்ளியில் போட்டிகள் நடத்துகிறார்களா?

செல்வம் : ஆம் மாமா. நான் …… போட்டியில் கலந்து கொள்கிறேன்.

மாமா : வெற்றி பெற வாழ்த்துகள்.

செல்வம் : ……

நட்பு என்னும் தலைப்பில் கவிதை எழுதுக.

இன்பம் கொடுப்பது நட்பு

------- அளிப்பது நட்பு

--------- ------- நட்பு

------- ------- ------

கீழ்க்காணும் தலைப்பில் கட்டுரை எழுதுக.


பொங்கல் திருநாள்



மொழியோடு விளையாடு

கீழே உள்ள சொற்களைச் சேர்த்துப் புதிய சொற்களை உருவாக்குக.

(எ.கா.) கல்+ல்+உண்டு = கல்லுண்டு, கல்+ல்+இல்லை = கல்லில்லை.



……, ……

……, ……

……, ……

6th Std Tamil CBSE Pages 77-206.indd 118 20-03-2020 17:42:34

கட்டங்களில் மறைந்துள்ள சுற்றுலாத் தலங்களைக் கண்டுபிடித்து எழுதுக.

க	த	ஞ்	சா	வூ	ர்	மா
ன்	மி	டு	கா	ற்	ஏ	ம
னி	க	ல்	ல	ணை	ல்	ல்
யா	மை	ளி	ரு	சு	ம்	ல
கு	ற்	றா	ல	ம்	உ	பு
ம	து	ரை	க	ரு	த	ர
ரி	சி	ஞ்	செ	அ	கை	ம்

செயல்திட்டம்

1. இரவு நேர வானத்துக் காட்சியை வரைந்து வண்ணம் தீட்டி மகிழ்க.
2. உங்கள் ஊரில் அல்லது மாவட்டத்திலுள்ள பண்பாட்டுச் சின்னங்கள் குறித்த படத்தொகுப்பைச் செய்தியுடன் சேகரிக்க.



நிற்க அதற்குத் தக...

என் பொறுப்புகள்...

1. நமது நாட்டின் பாரம்பரியச் சின்னங்களைப் பாதுகாப்பேன்.
2. தமிழர் நாகரிகத்தையும் பண்பாட்டையும் உணர்ந்து அதன்வழி நடப்பேன்.
3. நற்பண்புகளுடன் அனைவரும் போற்றும்படி வாழ்வேன்.
4. நாட்டுப்புறக் கலைகளைப் போற்றுவேன்.

கலைச்சொல் அறிவோம்

1. *Welcome* – நல்வரவு
2. *Sculptures* – சிற்பங்கள்
3. *Chips* – சில்லுகள்
4. *Readymade Dress* – ஆயத்த ஆடை
5. *Makeup* – ஒப்பனை
6. *Tiffin* – சிற்றுண்டி



இணையத்தில் காண்க

தமிழ்நாட்டில் உள்ள புகழ்மிக்க பண்பாட்டுச் சிறப்பு மிக்க இடங்களை இணையத்தில் காண்க.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 119 20-03-2020 17:42:34

இயல் ஐந்து

திருக்குறள்

K2UT9S



உலகில் வாழும் மக்கள் அனைவருக்கும் சிறப்பான அறங்களை வலியுறுத்தியவர் திருவள்ளுவர். வீட்டிற்கு வந்த விருந்தினரைப் போற்றுதல், இனிய சொற்களைப் பேசுதல், பிறர் பொருளை விரும்பாமை, ஊக்கத்துடன் செயல்படுதல், பயனற்ற சொற்களைப் பேசாமல் இருத்தல் ஆகிய அறங்களைப் பற்றிய திருவள்ளுவரின் கருத்துகளை அறிவோம் வாருங்கள்.

விருந்தோம்பல்

1. *விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா*
   மருந்தெனினும் வேண்டற்பாற்று அன்று
   அமிழ்தமே ஆனாலும் விருந்தினர் இருக்கும்போது தான்மட்டும் உண்பது விரும்பத்தக்கது அன்று.

2. *மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து*
   *நோக்கக் குழையும் விருந்து**
   மோந்து பார்த்தால் அனிச்ச மலர் வாடிவிடும். நம் முகம் மாறினாலே விருந்தினர் உள்ளம் வாடிவிடும்.

கள்ளாமை

3. *உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்*
   கள்ளத்தால் கள்வேம் எனல்
   அடுத்தவர் பொருளைக் களவாடலாம் என உள்ளத்தால் நினைப்பது கூடத் தீமையானது.

4. *களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து*
   ஆவது போலக் கெடும்.
   களவு மூலம் சேர்க்கப்படும் செல்வம் வளர்வது போலத் தோன்றினாலும் முடிவில் அழிந்துவிடும்.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 120 20-03-2020 17:42:34

ஊக்கமுடைமை

5. *உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை*

நில்லாது நீங்கி விடும்

ஊக்கமே நிலையான செல்வம். மற்றவை எல்லாம் நிலைத்து நில்லாமல் அழிந்து விடும்.

6. *ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவுஇலா*

ஊக்கம் உடையான் உழை.

தளராத ஊக்கம் உடையவனிடம் ஆக்கமானது தானே வழிகேட்டுக்கொண்டு செல்லும்.

7. *வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்*

*உள்ளத்து அனையது உயர்வு**

தண்ணீரின் உயரத்துக்கு ஏற்ப நீர்ப்பூக்கள் வளரும். ஊக்கத்தின் அளவுக்கு ஏற்ப மனிதர்கள் உயர்வார்கள்.

8. *உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் மற்றது*

தள்ளினும் தள்ளாமை நீர்த்து

எண்ணுவதை உயர்வாகவே எண்ணுக. எண்ணியதை அடையாவிட்டாலும் எண்ணத்தைக் கைவிடக் கூடாது.

பயனில சொல்லாமை

9. *அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்*

பெரும்பயன் இல்லாத சொல்

நன்மை எது என ஆராயும் அறிவு உடையவர்கள் பயன்தராத சொற்களைப் பேசமாட்டார்கள்.

10. *சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க*

*சொல்லில் பயன்இலாச் சொல்**

பயனுடைய சொற்களை மட்டுமே பேசுக. பயன் இல்லாத சொற்களைப் பேசாமல் விட்டு விடுக.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 121 20-03-2020 17:42:34

கற்பவை கற்றபின்

1. பாடப்பகுதியில் இடம்பெற்ற அதிகாரங்களில் உள்ள குறட்பாக்களுள் ஐந்தனை பொருளுடன் எழுதி வந்து வகுப்பில் பகிர்க.
2. திருக்குறள் உலகப் பொதுமறை எனப்படுவது ஏன்? வகுப்பில் பேசுக.

மதிப்பீடு

K34PBF

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. விருந்தினரின் முகம் எப்போது வாடும்?

   அ) நம் முகம் மாறினால் ஆ) நம் வீடு மாறினால்

   இ) நாம் நன்கு வரவேற்றால் ஈ) நம் முகவரி மாறினால்

2. நிலையான செல்வம் .....

   அ) தங்கம் ஆ) பணம் இ) ஊக்கம் ஈ) ஏக்கம்

3. ஆராயும் அறிவு உடையவர்கள் ..... சொற்களைப் பேசமாட்டார்கள்.

   அ) உயர்வான ஆ) விலையற்ற இ) பயன்தராத ஈ) பயன்உடைய

4. பொருளுடைமை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

   அ) பொருளு+டைமை ஆ) பொரு+ளுடைமை

   இ)பொருள்+உடைமை ஈ) பொருள்+ளுடைமை

5. உள்ளுவது+எல்லாம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

   அ) உள்ளுவதுஎல்லாம் ஆ) உள்ளுவதெல்லாம்

   இ) உள்ளுவத்தெல்லாம் ஈ) உள்ளுவதுதெல்லாம்

6. பயன்+இலா என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

   அ) பயனிலா ஆ) பயன்னில்லா இ) பயன்இலா ஈ) பயன்இல்லா

நயம் அறிக

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்

இக்குறளில் உள்ள எதுகை, மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 122 20-03-2020 17:42:34

இடம் மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக.

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் ஊக்கம்
அசைவுஇலா உடையான் உழை.

உள்ளுவது உயர்வுள்ளல் எல்லாம் மற்றது
தள்ளாமை தள்ளினும் நீர்த்து.

"ஊக்கமது கைவிடேல்" என்பது ஔவையாரின் ஆத்திசூடி. இவ்வரியோடு தொடர்புடைய திருக்குறளைத் தேர்ந்தெடுக்க.

விருந்து புறத்ததாத் தாணுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் அன்று.

உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.

சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க
சொல்லில் பயன்இலாச் சொல்.

பின்வரும் கதைக்குப் பொருத்தமான திருக்குறளைத் தேர்ந்தெடுக்க.

வீட்டிற்குள் வந்த வேலனைத் தந்தை அழைத்தார். "உங்கள் பள்ளியில் பேச்சுப்போட்டி நடப்பதாகக் கூறினாயே, பெயர் கொடுத்து விட்டாயா?" என்று கேட்டார். "இல்லையப்பா, அமுதன் என்னைவிட நன்றாகப் பேசுவான். அவனுக்குத்தான் பரிசு கிடைக்கும். எனவே நான் பெயர் கொடுக்கவில்லை" என்றான் வேலன். "போட்டியில் வெற்றியும் தோல்வியும் இயல்புதான். அதற்காகப் போட்டியிடாமல் இருக்கக் கூடாது. நாம் எந்த அளவு ஊக்கத்துடன் செயல்படுகிறோமோ அந்த அளவிற்கு வெற்றி கிடைக்கும். எனவே நீ போட்டியில் கலந்துகொள்" என்றார் அப்பா. உற்சாகம் அடைந்தான் வேலன். "நாளை பெயர் கொடுத்துவிடுகிறேன் அப்பா" என்றான்.

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு.

அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல்.


குறுவினா

1. எப்படி உண்பது விரும்பத்தக்கது அன்று?
2. எது தீமையானது என்று வள்ளுவர் கூறுகின்றார்?
3. ஆக்கம் யாரிடம் வழிகேட்டுச் செல்லும்?
4. நாம் எத்தகைய சொற்களைப் பேசவேண்டும் என்று வள்ளுவர் கூறுகின்றார்?

6th Std Tamil CBSE Pages 77-206.indd 123 20-03-2020 17:42:34

இணையச் செயல்பாடுகள்






படிகள்:

⇒ கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி Google Arts and Culture என்னும் இணையச் செயலியின் பக்கத்திற்குச் செல்லவும். இப்போது திரையில் Mahabalipuram – Sculpture by the sea என்று தோன்றும்.

⇒ அதன் வலதுபுறத்தில் உள்ள அம்புக்குறியைச் சொடுக்க வரிசையாகப் படங்கள் தோன்றும். அப்படத்தினைச் சொடுக்கினால் படத்தின் 360° கோணத்திலும் உருப்பெருக்கிப் பார்க்கலாம்.









செயல்பாட்டிற்கான உரலி

https://artsandculture.google.com/exhibit/fgLC5vhuL90aJA

*கொடுக்கப்பட்டுள்ள படங்கள்அடையாளத்திற்காக மட்டுமே

6th Std Tamil CBSE Pages 77-206.indd 124 20-03-2020 17:42:37

இயல் ஆறு

கூடித் தொழில் செய்

K3DKD3



கற்றல் நோக்கங்கள்


- தமிழர்களின் பண்டைய வணிகம் குறித்து அறிதல்
- பல்வேறு தொழில்கள் குறித்து அறிதல்
- வணிகத்தின் வளர்ச்சி நிலைகளைப் புரிந்துகொள்ளுதல்
- தொழில் மூலம் அடையும் முன்னேற்றத்தை உணர்தல்
- சுட்டு எழுத்துகள், வினா எழுத்துகளைப் பொருத்தமாகப் பயன்படுத்துதல்

6th Std Tamil CBSE Pages 77-206.indd 125 20-03-2020 17:42:37

கவிதைப்பேழை

இயல் ஆறு

நானிலம் படைத்தவன்



காடுகளில் வாழ்ந்த மனிதன் அக்காடுகளைத் திருத்தி விளைநிலங்களை உருவாக்கினான். பயிர்களை விளைவித்தான். ஊர்களை உருவாக்கிக் கூடி வாழ்ந்தான். பல்வகைத் தொழில்கள் மூலம் தன் வாழ்வை மேம்படுத்திக் கொண்டான். தொழிலும் வணிகமும் அவன் வாழ்க்கையை உயர்த்தின. தமிழரின் வணிக மேன்மையை அறிவோம் வாருங்கள்.

கல்லெடுத்து முள்ளெடுத்துக் காட்டுப் பெருவெளியை
மல்லெடுத்த திண்டோள் மறத்தால் வளப்படுத்தி
ஊராக்கி ஓங்கும் நகராக்கி நாடென்ற
பேராக்கி வாழ்ந்த பெருமை அவன்பெற்றான்,
மாநிலத்தில் முல்லை மருதம் குறிஞ்சி நெய்தல்
நானிலத்தைக் கண்டபெரும் நாகரிக மாந்தன்அவன்,
ஆழக் கடல்கடந்தான் அஞ்சும் சமர்கடந்தான்
சூழும் பனிமலையைச் சுற்றிக் கொடிபொறித்தான்
முக்குளித்தான் ஆழிக்குள் முத்தெடுத்தான் தோணிக்குள்
எக்களிப்பு மீதூர ஏலம் மிளகுமுதற்,
பண்டங்கள் ஏற்றிப் பயன்நல்கும் வாணிகத்தால்
கண்டங்கள் சுற்றிக் கலமேறி வந்தவன்தான்,
அஞ்சாமை மிக்கவன்தான் ஆனாலும் சான்றோர்கள்
அஞ்சுவதை அஞ்சி அகற்றி விலக்கிடுவான்

– முடியரசன்









K3HGEQ

சொல்லும் பொருளும்

மல்லெடுத்த	–	வலிமைபெற்ற	மறம்	–	வீரம்
சமர்	–	போர்	எக்களிப்பு	–	பெருமகிழ்ச்சி
நல்கும்	–	தரும்	கலம்	–	கப்பல்
கழனி	–	வயல்	ஆழி	–	கடல்

6th Std Tamil CBSE Pages 77-206.indd 126 20-03-2020 17:42:37

பாடலின் பொருள்

தமிழன் கற்களும் முட்களும் நிறைந்திருந்த பெரிய நிலப்பரப்பைத் திருத்திப் பண்படுத்தினான். தனது உடல் வலிமையால் வளத்தைப் பெருக்கினான். ஊர், நகரம், நாடு ஆகியவற்றை உருவாக்கி வாழும் பெருமையைப் பெற்றான். முல்லை, மருதம், குறிஞ்சி, நெய்தல் என நிலத்தை நால்வகைப்படுத்திய நாகரிக மனிதன் அவன்.

பழந்தமிழன் ஆழமான கடல்களைக் கடந்து பயணம் செய்தான். அச்சம் தரும் போர்களிலும் எளிதாக வெற்றி கண்டான். பனிசூழ்ந்த இமயமலையில் தன் வெற்றிக் கொடியை நாட்டினான். ஆழ்கடலில் மூழ்கி முத்தெடுத்தான். ஏலம், மிளகு ஆகியவற்றைப் பெருமகிழ்ச்சியோடு கப்பல்களில் ஏற்றிக் கண்டங்கள்தோறும் அனுப்பி வணிகம் செய்தான். கப்பலில் உலகை வலம் வந்தான். அவன் எதற்கும் அஞ்சாதவன். ஆனால், சான்றோர்கள் அஞ்சும் தீமைகளைச் செய்ய அஞ்சுபவன்.



நூல் வெளி

முடியரசனின் இயற்பெயர் துரைராசு. பூங்கொடி, வீரகாவியம், காவியப்பாவை முதலிய நூல்களை எழுதியுள்ளார். திராவிட நாட்டின் வானம்பாடி என்று பாராட்டப்பெற்றவர்.

இப்பாடல் புதியதொரு விதி செய்வோம் என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது.





கற்பவை கற்றபின்

1. 'நானிலம் படைத்தவன்' பாடலை இசையுடன் பாடிக் காட்டுக.
2. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தலுக்கு உரிய நிலங்களை அறிந்து எழுதுக.
3. படித்து மகிழ்க.

வெள்ளிப் பனிமலையின் மீதுஉலாவுவோம் – அடி
மேலைக் கடல்முழுதும் கப்பல் விடுவோம்

கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்
சிங்க மராட்டியர்தம் கவிதை கொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்!

– பாரதியார்

6th Std Tamil CBSE Pages 77-206.indd 127 20-03-2020 17:42:38

மதிப்பீடு

K3HCGD

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. போர்க்களத்தில் வெளிப்படும் குணம்_____

   அ) மகிழ்ச்சி ஆ) துன்பம் இ) வீரம் ஈ) அழுகை

2. கல்லெடுத்து என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_____

   அ) கல் + அடுத்து ஆ) கல் + எடுத்து

   இ) கல் + லடுத்து ஈ) கல் + லெடுத்து

3. நானிலம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_____

   அ) நா + னிலம் ஆ) நான்கு + நிலம்

   இ) நா + நிலம் ஈ) நான் + நிலம்

4. நாடு + என்ற என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்_____

   அ) நாடென்ற ஆ) நாடன்ற இ) நாடுஎன்ற ஈ) நாடுஅன்ற

5. கலம் + ஏறி என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்_____

   அ) கலம்ஏறி ஆ) கலமறி இ) கலன்ஏறி ஈ) கலமேறி

சொற்றொடரில் அமைத்து எழுதுக.

அ) மாநிலம் ஆ) கடல் இ) பண்டங்கள்

நயம் அறிக.

1. நானிலம் படைத்தவன் பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.
2. நானிலம் படைத்தவன் பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.

குறுவினா

1. நான்கு நிலங்கள் என்பன யாவை?
2. தமிழன் எதற்கு அஞ்சினான்?
3. தமிழன் எதற்காகக் கண்டங்களைச் சுற்றி வந்தான்?

சிறுவினா

1. தமிழன் தான் வாழ்ந்த நாட்டினை எவ்வாறு உருவாக்கினான்?
2. தமிழனின் செயல்களாக முடியரசன் கூறுவன யாவை?

சிந்தனை வினா

காடுகளில் வாழ்ந்த மனிதன் எவ்வாறு படிப்படியாக நாகரிகம் அடைந்திருப்பான் எனச் சிந்தித்து எழுதுக.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 128 20-03-2020 17:42:38

கவிதைப்பேழை

இயல் ஆறு


கடலோடு விளையாடு

K468I1

நுழையும்முன்

பாடல் மனிதர்க்கு மகிழ்ச்சியைத் தருகிறது. அசதியைப் போக்குகிறது. உழைக்கும் தொழிலாளர்கள் களைப்புத் தெரியாமல் இருக்கப் பாடி மகிழ்கிறார்கள். வாட்டும் வெயிலையும் தாக்கும் புயலையும் தன் கூட்டாளியாக்கிக் கொண்டு மீன்பிடிப்பவர்கள் மீனவர்கள். அம்மீனவர்களின் பாடலைக் கேட்போம் வாருங்கள்.

விடிவெள்ளி நம்விளக்கு – ஐலசா
விரிகடலே பள்ளிக்கூடம் – ஐலசா
அடிக்கும்அலை நம்தோழன் – ஐலசா
அருமைமேகம் நமதுகுடை – ஐலசா
வெண்மணலே பஞ்சுமெத்தை – ஐலசா
விண்ணின்இடி காணும்கூத்து – ஐலசா
**பாயும்புயல் நம்ஊஞ்சல் – ஐலசா*
பனிமூட்டம் உடல்போர்வை – ஐலசா
காயும்கதிர்ச் சுடர்கூரை – ஐலசா
கட்டுமரம் வாழும்வீடு – ஐலசா
மின்னல்வரி அரிச்சுவடி – ஐலசா
பிடிக்கும்மீன்கள் நம்பொருள்கள் – ஐலசா
முழுநிலவே கண்ணாடி – ஐலசா
மூச்சடக்கும்நீச்சல் யோகம் – ஐலசா
தொழும்தலைவன் பெருவானம் – ஐலசா
*துணிவோடு தொழில்செய்வோம் – ஐலசா**



சொல்லும் பொருளும்

கதிர்ச்சுடர்	-	கதிரவனின் ஒளி
மின்னல்வரி	-	மின்னல் கோடு
அரிச்சுவடி	-	அகரவரிசை எழுத்துகள்

6th Std Tamil CBSE Pages 77-206.indd 129 20-03-2020 17:42:39

பாடலின் பொருள்

மீன் பிடிக்கக் கடலுக்குச் செல்பவர்கள் மீனவர்கள். அவர்களுக்கு விண்மீன்களே விளக்குகள்; விரிந்த கடலே பள்ளிக்கூடம்; கடல் அலையே தோழன்; மேகமே குடை; வண்மையான மணலே படுத்துறங்கும் பஞ்சு மெத்தை; விண்ணின் இடி அவர்கள் காணும் கூத்து; சீறிவரும் புயலே விளையாடும் ஊஞ்சல்; பனிமூட்டம்தான் உடலைச் சுற்றும் போர்வை; அனல் வீசும் கதிரவனின் ஒளிச்சுடர்தான் மேற்கூரை; கட்டுமரம்தான் அவர்கள் வாழும் வீடு; மின்னல் கோடுகளே அடிப்படைப் பாடம்; வலைவீசிப் பிடிக்கும் மீன்களே அவர்களது செல்வம்; முழு நிலவுதான் கண்ணாடி; மூச்சடக்கிச் செய்யும் நீச்சலே அவர்கள் செய்யும் தவம்; வானமே அவர்கள் வணங்கும் தலைவன்; இவற்றிற்கு இடையே மீனவர்கள் மன உறுதியோடு தொழில் செய்கின்றனர்.

தெரிந்து தெளிவோம்

நெய்தல் திணை

நிலம் : கடலும் கடல் சார்ந்த இடமும்

மக்கள் : பரதவர், பரத்தியர்

தொழில் : மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல்

பூ : தாழம்பூ



நூல் வெளி

உழைக்கும் மக்கள் தம் களைப்பை மறக்க உற்சாகத்துடன் பாடும் பாடலே நாட்டுப்புறப் பாடலாகும். காதால் கேட்டு வாய்மொழியாகவே வழங்கப்பட்டு வருவதால் இதனை வாய்மொழி இலக்கியம் என்பர். ஏற்றப்பாட்டு, ஓடப்பாட்டு முதலான தொழில்பாடல்களும் விளையாட்டுப் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள் முதலியனவும் நாட்டுப்புறப் பாடல்களுள் அடங்கும். இப்பாடல் சு. சக்திவேல் தொகுத்த நாட்டுப்புற இயல் ஆய்வு என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது.

கற்பவை கற்றபின்

1. பாடப் பகுதியில் உள்ள பாடலை இசையோடு பாடிக் காட்டுக.
2. உங்களைக் கவர்ந்த நாட்டுப்புறப் பாடல்களை எழுதி வருக.
3. கடல், வானம், மலை ஆகியவற்றைப் பற்றி சொந்தமாகப் பாடல் எழுதிப் பாடுக.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 130 20-03-2020 17:42:39

மதிப்பீடு

K4F4JN

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. கதிர்ச்சுடர் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_____

அ) கதிர்ச்+சுடர் ஆ) கதிரின்+சுடர்

இ) கதிரவன்+சுடர் ஈ) கதிர்+சுடர்

2. மூச்சடக்கி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_____

அ) மூச்சு+அடக்கி ஆ) மூச்+அடக்கி

இ) மூச்+சடக்கி ஈ) மூச்சை+அடக்கி

3. பெருமை + வானம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____

அ) பெருமைவனம் ஆ) பெருவானம்

இ) பெருமானம் ஈ) பேர்வானம்

4. அடிக்கும் + அலை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்_____

அ) அடிக்குமலை ஆ) அடிக்கும் அலை

இ) அடிக்கிலை ஈ) அடியலை

பாடல் வரிகளுக்கு ஏற்பப் பொருத்துக

1. விடிவெள்ளி	–	பஞ்சுமெத்தை
2. மணல்	–	ஊஞ்சல்
3. புயல்	–	போர்வை
4. பனிமூட்டம்	–	விளக்கு

குறுவினா

1. அலையையும் மேகத்தையும் மீனவர்கள் என்னவாகக் கருதுகின்றனர்?
2. கடல் பாடலில் கண்ணாடியாகவும் தலைவனாகவும் குறிப்பிடப்படுவன யாவை?
3. மீனவர்கள் தமது வீடாகவும் செல்வமாகவும் கருதுவன யாவை?

சிந்தனை வினா

1. நீங்கள் வசிக்கும் பகுதியில் நடைபெறும் தொழில்களில் ஒன்றைப் பற்றி ஐந்து வரிகள் எழுதுக.
2. நாட்டுப்புற இலக்கியங்களை வாய்மொழி இலக்கியங்கள் என்று கூறக் காரணம் என்ன?

6th Std Tamil CBSE Pages 77-206.indd 131 20-03-2020 17:42:39

இயல் ஆறு

வளரும் வணிகம்

நுழையும்முன்

மனிதர் வாழ்வில் வணிகம் பெரும்பங்கு வகிக்கிறது. வணிகம் இல்லையேல் மனிதர்கள் தம் தேவைகளை எளிதாக நிறைவேற்றிக் கொள்ள இயலாது. வணிகம் பல வகைகளில் நடைபெறுகிறது. வணிக நிறுவனங்களும் பல வகைகளாக உள்ளன. தமிழர் பழங்காலத்தில் இருந்தே வணிகத்தில் சிறந்து விளங்கினர். உலகம் முழுவதும் வணிகத்தொடர்பு கொண்டு இருந்தனர். அதனை அறிந்து கொள்வோம் வாருங்கள்.

K4NZLB



மனிதன் தனக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் தானே உற்பத்தி செய்து கொள்ள முடியாது. தனக்குத் தேவையான சில பொருள்களை உற்பத்தி செய்யும் பிறரிடமிருந்து வாங்குவான். தான் உற்பத்தி செய்யும் பொருள்களில் சிலவற்றைப் பிறருக்கு விற்பான். இவ்வாறு ஒரு பொருளைப் பிறரிடம் இருந்து வாங்குவதும் பிறருக்கு விற்பதும் வணிகம் ஆகும். பொருள்களை விற்பவரை வணிகர் என்பர்; வாங்குபவரை நுகர்வோர் என்பர்.

பண்டமாற்று வணிகம்

நம்மிடம் கூடுதலாக இருக்கும் பொருள்களைக் கொடுத்து நமக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுக் கொள்வது பண்டமாற்று வணிகம் ஆகும். நெல்லைக் கொடுத்து அதற்குப் பதிலாக உப்பைப் பெற்றனர். ஆட்டின் பாலைக் கொடுத்துத் தானியத்தைப் பெற்றனர். இந்தச் செய்திகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. இக்காலத்தில் கூட வீட்டிற்கே வந்து பழைய செய்தித்தாள்கள், பயனற்ற நெகிழிப் பொருள்கள் போன்றவற்றைப் பெற்றுக்கொள்கின்றனர். அதற்குப் பதிலாக வீட்டிற்குப் பயன்படும் பொருள்களைத் தருகின்றனர்.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 132 20-03-2020 17:42:39

வணிகத்தின் வகைகள்

வணிகத்தைத் தரைவழி வணிகம், நீர்வழி வணிகம் எனப் பிரிக்கலாம். தரைவழியாகப் பொருள்களைக் கொண்டு செல்ல எருது, கழுதை, குதிரை போன்ற விலங்குகளும் வண்டிகளும் பயன்படுத்தப்பட்டன. வணிகர்கள் வண்டிகளில் பொருள்களை ஏற்றி வெளியூருக்குச் செல்லும் போது குழுவாகவே செல்வார்கள். இக்குழுவை வணிகச்சாத்து என்பர். கடல்வழியாகக் கப்பல்கள் மூலம் பொருள்களை அனுப்புவதும் வரவழைப்பதும் நீர்வழி வணிகம் ஆகும். கப்பல்கள் வந்து நின்றுபோகும் இடங்கள் துறைமுகங்கள் ஆகும். துறைமுக நகரங்கள் பட்டினம் என்றும் பாக்கம் என்றும் குறிக்கப்பட்டன.

தெரிந்து தெளிவோம்

தந்நாடு விளைந்த வெண்ணெல் தந்து
பிறநாட்டு உப்பின் கொள்ளைச் சாற்றி
……..
உமணர் போகலும்

நற்றிணை – 183

பாலொடு வந்து கூழொடு பெயரும் ……

குறுந்தொகை – 23

பொன்னொடு வந்து கறியொடு பெயரும் ……

அகநானூறு – 149

தமிழ்நாட்டின் தலைசிறந்த துறைமுகமாகப் பூம்புகார் விளங்கியது. அவ்வூர்த் துறைமுகத்தில் பல்வேறு நாட்டுக் கப்பல்கள் தத்தம் நாட்டுக் கொடிகளோடு வந்து நின்றன. அவற்றின் மூலம் வெளிநாட்டுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டன. தமிழ்நாட்டுப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

வணிகத்தைத் தனிநபர் வணிகம், நிறுவன வணிகம் என்றும் பிரிக்கலாம். தனிநபரால் உருவாக்கப்பட்டு நடத்தப்படும் வணிகம் தனிநபர் வணிகம் ஆகும். ஒன்றுக்கும் மேற்பட்டோர் இணைந்து முதலீடு செய்து நடத்துவது நிறுவன வணிகம் ஆகும்.

சிறுவணிகம்

நம் அன்றாடத் தேவைகளான பால், கீரை, காய்கறிகள் போன்றவற்றை விற்பனை செய்பவர்கள் சிறு வணிகர்கள் ஆவர். இவர்கள் சிறு முதலீட்டில் பொருள்களை வாங்கி வந்து வீதிகளில் வைத்து விற்பனை செய்வர். தலையில் சுமந்து சென்று விற்றல், தரைக்கடை அமைத்து விற்றல், தள்ளுவண்டி மூலம் விற்றல் போன்ற முறைகளில் சிறு வணிகம் நடைபெறுகிறது. சிறு வணிகர்கள் நுகர்வோரிடம் நேரடித் தொடர்பு கொள்பவர்கள் ஆவர்.



பெருவணிகம்

பெருந்தொகையை முதலீடு செய்து பொருள்களை அதிக அளவில் திரட்டி வைத்து விற்பனை செய்வது பெருவணிகம் ஆகும். பெருவணிகர்கள் பொருள்கள் உற்பத்தி செய்யப்படும் இடத்தில் இருந்து மொத்தமாகக் கொள்முதல் செய்வர். அவற்றைச்

6th Std Tamil CBSE Pages 77-206.indd 133 20-03-2020 17:42:39

சிறுவணிகர்களுக்கு விற்பனை செய்வர். பெருவணிகர்களுக்கு நுகர்வோருடன் நேரடித் தொடர்பு இருப்பது அரிது.

ஏற்றுமதியும் இறக்குமதியும்



ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களைப் பிற நாடுகளுக்கு அனுப்புவது ஏற்றுமதி எனப்படும். பிற நாடுகளில் இருந்து பொருள்களை வாங்குவது இறக்குமதி ஆகும். பழங்காலத்தில் தமிழ்நாட்டில் இருந்து தேக்கு, மயில்தோகை, அரிசி, சந்தனம், இஞ்சி, மிளகு போன்றவை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. சீனத்திலிருந்து கண்ணாடி, கற்பூரம், பட்டு போன்றவை இறக்குமதி செய்யப்பட்டன. அரேபியாவில் இருந்து குதிரைகள் வாங்கப்பட்டன.

வணிகத்தில் நேர்மை

அக்கால வணிகர்கள் நேர்மையாகத் தொழில் செய்தனர் என்பதைத் தமிழ் இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின் *திருக்குறள் – 120*

என்னும் திருக்குறள் வணிகரின் நேர்மையைப் பற்றிக் கூறுகிறது. வணிகர்கள் பொருளை வாங்கும்பொழுது உரிய அளவைவிட அதிகமாக வாங்க மாட்டார்கள். பிறருக்குக் கொடுக்கும் பொழுது அளவைக் குறைத்துக் கொடுக்கமாட்டார்கள். எனவே வணிகரை

"நடுவு நின்ற நன்னெஞ்சினோர்"

என்று பட்டினப்பாலை பாராட்டுகிறது.

இணையவழி வணிகம்

கடைகளுக்குச் சென்று பொருள்களை வாங்க நேரம் இல்லாதவர்களுக்கு இணையவழி வணிகம் உதவுகிறது. இணையத்தளம் மூலம் பொருள்களை விற்பனை செய்யும் நிறுவனங்கள் பல உள்ளன. இவற்றின் இணையத்தளப் பக்கத்தில் நமக்குத் தேவையான பொருள்களைப் பற்றிய விவரங்கள் இருக்கும். பொருள்களின் தரம், விலை, சிறப்பு ஆகியவற்றைப் பிற நிறுவனப் பொருள்களோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம். நமக்குப் பிடித்த பொருள்களை நம் வீட்டிற்கே வரவழைக்கலாம். பொருளைப்



6th Std Tamil CBSE Pages 77-206.indd 134 20-03-2020 17:42:41

பெற்றுக் கொண்ட பிறகு பணம் செலுத்தலாம். மின்னணுப் பரிமாற்றம் மூலமும் பணத்தைச் செலுத்தலாம்.

வணிகம் பண்டமாற்று முறையாகத் தொடங்கியது. பணத்தைப் பயன்படுத்தும் முறையாக வளர்ந்தது. இன்று மின்னணுப் பரிமாற்றம் செய்யும் அளவுக்கு உயர்ந்துள்ளது. வருங்காலத்தில் வணிகத்தில் இன்னும் பல புதுமைகள் வரக்கூடும்.



கற்பவை கற்றபின்

1. உங்கள் ஊரில் உற்பத்தியாகும் பொருள்களின் பெயர்களைப் பட்டியலிடுக.
2. ஒவ்வொரு ஊரிலும் கிடைக்கும் சிறப்புப் பொருள்களின் பெயர்களை அட்டவணைப்படுத்துக.

   (எ.கா.) மதுரை மல்லி
3. படித்து மகிழ்க

   • கொள்வதும் மிகை கொளாது
   கொடுப்பதும் குறைபடாது –பட்டினப்பாலை

   • சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
   கோடாமை சான்றோர்க்கு அணி. –திருக்குறள்



மதிப்பீடு



சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வீட்டுப் பயன்பாட்டிற்காகப் பொருள் வாங்குபவர் _____

   அ) நுகர்வோர் ஆ) தொழிலாளி

   இ) முதலீட்டாளர் ஈ) நெசவாளி

2. வணிகம் + சாத்து என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____

   அ) வணிகசாத்து ஆ) வணிகம்சாத்து

   இ) வணிகச்சாத்து ஈ) வணிகத்துசாத்து

3. பண்டம் + மாற்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____

   அ) பண்டமாற்று ஆ) பண்டம்மாற்று

   இ) பண்மாற்று ஈ) பண்டுமாற்று

6th Std Tamil CBSE Pages 77-206.indd 135 20-03-2020 17:42:41

4. மின்னணு என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

அ) மின் + னணு ஆ) மின்ன + அணு

இ) மின்னல் + அணு ஈ) மின் + அணு

5. விரிவடைந்த என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_____

அ) விரி+வடைந்த ஆ) விரி+அடைந்த

இ) விரிவு+அடைந்த ஈ) விரிவ்+அடைந்த

பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக

அ) வணிகம் ஆ) ஏற்றுமதி இ) சில்லறை ஈ) கப்பல்

குறுவினா

1. வணிகம் என்றால் என்ன?
2. பண்டமாற்று முறைக்கு எடுத்துக்காட்டுத் தருக.
3. சிறுவணிகப் பொருட்கள் யாவை?

சிறுவினா

1. சிறுவணிகம், பெருவணிகம் – வேறுபடுத்துக.
2. பழந்தமிழர் ஏற்றுமதி, இறக்குமதி செய்த பொருள்கள் எவை?

சிந்தனை வினா

1. வணிகப் பொருள்கள் தற்காலத்தில் எவ்வாறெல்லாம் மக்களை வந்தடைகின்றன?
2. உங்கள் பகுதியில் நடைபெறும் தொழில்களைப் பட்டியலிடுக.

ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லை எடுத்து எழுதுக.

(மின்னணு வணிகம், காசோலை, இணையத்தள வணிகம், வரைவோலை, வங்கி, மின்னணு மயம், பற்று அட்டை, பணத்தாள், கடன் அட்டை)

ஆங்கிலச் சொல்	தமிழ்ச்சொல்
கரன்சி நோட்	
பேங்க்	
செக்	
டிமாண்ட் டிராஃப்ட்	
டிஜிட்டல்	
டெபிட் கார்டு	
கிரெடிட் கார்டு	
ஆன்லைன் ஷாப்பிங்	
ஈ-காமர்ஸ்	

6th Std Tamil CBSE Pages 77-206.indd 136 20-03-2020 17:42:41

விரிவானம்

இயல் ஆறு

உழைப்பே மூலதனம்

K57RPL

நுழையும்முன்

"பாடுபட்டுத் தேடிய பணத்தைப் புதைத்து வைக்காதீர்" என்பது ஔவையாரின் அறிவுரை. பணத்தைப் பயன்படுத்தாமல் வைத்திருப்பது மடமை ஆகும். பணத்தைக் கொண்டு ஏதேனும் ஒரு தொழில் செய்து வாழ்வில் முன்னேற வேண்டும். பிறருக்கு உதவியாக வாழ வேண்டும். அதுவே பணத்தின் பயன். இக்கருத்தை விளக்கும் கதை ஒன்றை அறிவோம் வாருங்கள்.

பூங்குளம் என்னும் ஊரில் அருளப்பர் என்னும் வணிகர் இருந்தார். ஒருமுறை அவர் வெளிநாட்டிற்குச் செல்ல வேண்டி இருந்தது. தமது பிள்ளைகள் வளவன், அமுதா, எழிலன் ஆகிய மூவரையும் அழைத்தார்.

"பிள்ளைகளே! நான் வெளிநாட்டிற்குச் செல்ல இருக்கிறேன். நான் உங்கள் ஒவ்வொருவருக்கும் பணம் தருகிறேன். நான் கொடுத்த பணத்தைக் கவனமாகப் பாதுகாத்து எனக்குத் திருப்பித்தர வேண்டும்" எனக் கூறினார்.

ஒவ்வொருவருக்கும் ஐம்பதாயிரம் ரூபாய் பணம் கொடுத்தார். மூவரும் மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டனர்.

அருளப்பர் அவர்களிடம் விடைபெற்றுச் சென்றார். அவர் சென்றதும் மூன்று பிள்ளைகளும் ஆலோசனை செய்தனர்.



"நமது திறமையை எடைபோடவே தந்தை நமக்குப் பணத்தைக் கொடுத்திருக்கிறார்" என்றான் வளவன்.

"நானும் அப்படித்தான் நினைக்கிறேன்" என்றாள் அமுதா.

"நான் அப்படி நினைக்கவில்லை. பணத்தைப்

6th Std Tamil CBSE Pages 77-206.indd 137 20-03-2020 17:42:42

பாதுகாக்கத் தெரிகிறதா? என்று பார்க்கவே கொடுத்திருக்கிறார்" என்றான் எழிலன்.

வளவன் உழவுத்தொழிலில் ஆர்வம் உடையவன். தந்தை கொடுத்த பணத்தைக் கொண்டு நிலத்தைக் குத்தகைக்குப் பிடித்தான். அந்நிலத்தை உழுது பண்படுத்தினான். வேலியிட்டான். பண்படுத்திய நிலத்தில் காய்கறித் தோட்டத்தை அமைத்தான். நாள்தோறும் கவனமுடன் பாதுகாத்துப் பராமரித்து வந்தான்.

தோட்டம் முழுவதும் அவரை, பாகல், வெண்டை, கத்தரி முதலிய காய்கள் காய்த்துக் குலுங்கின. அவற்றை நகரத்திற்குக் கொண்டு சென்று விற்பனை செய்தான்.

அமுதாவிற்கு ஆடு, மாடுகள் வளர்ப்பதில் விருப்பம் அதிகம். தந்தை கொடுத்த பணத்தைக் கொண்டு நாட்டு மாடுகள் சிலவற்றை வாங்கினாள். அவற்றை அக்கறையோடு வளர்த்து வந்தாள். அவை தந்த பாலை வீடு வீடாகச் கொண்டு சென்று விற்றாள். மேலும் தயிர், வெண்ணெய், நெய் போன்றவற்றை மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் விற்றுப் பொருள் ஈட்டினாள்.



எழிலன் தந்தை கொடுத்த பணத்தைப் பத்திரமாக வைத்திருந்து மீண்டும் தந்தையிடம் ஒப்படைக்க வேண்டும் என முடிவு செய்தான்.'பணம் வீட்டில் இருந்தால் திருட்டுப் போய்விடும்; வட்டிக்கு முதலீடு செய்தால் வட்டிக்கு ஆசைப்பட்டான் எனத் தந்தை தாழ்வாக நினைத்துக் கொள்வாரே' என எண்ணினான். அருகில் உள்ள வங்கிக்குச் சென்று பாதுகாப்புப் பெட்டக அறை ஒன்றை வாடகைக்கு எடுத்தான். அதில் வைத்துப் பூட்டி விட்டுத் திரும்பினான்.

அருளப்பர் தம் பயணத்தை முடித்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்தார். வளவனை அழைத்தார். "நான் கொடுத்த பணம் எங்கே?" என்று கேட்டார். வளவன் "அப்பா, நீங்கள் எனக்குக் கொடுத்த பணத்தைக் கொண்டு வேளாண்மை செய்தேன். நல்ல வருவாய் கிடைத்தது. நீங்கள் கொடுத்த பணம் இப்போது இரண்டு மடங்காக உயர்ந்து உள்ளது" எனக் கூறித் தந்தையின் முன் பணத்தை வைத்தான்.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 138 20-03-2020 17:42:43

தந்தை மகிழ்ச்சி அடைந்தார். "நல்லது! உண்மையும் உழைப்பும் உன்னிடமும் உள்ளன. அந்தப் பணத்தை நீயே வைத்துக் கொள். வேளாண்மையைத் தொடர்ந்து செய்" என்றார்.

அடுத்து அமுதாவை அழைத்தார். அமுதா, "அப்பா நான் மாடுகளை வாங்கிப் பால் கறந்து விற்றேன். நீங்கள் தந்த பணம் இரண்டு மடங்காக ஆகியிருக்கிறது. இதோ பெற்றுக் கொள்ளுங்கள்" என்று கூறிப் பணத்தைத் தந்தையிடம் கொடுத்தாள். "மிக்க மகிழ்ச்சி, இந்தப் பணத்தை எனது பரிசாக நீயே வைத்துக்கொள். பண்ணையை மேலும் விரிவாக்கி நடத்து, வாழ்த்துகள்" என்றார் தந்தை.

இறுதியாக எழிலனை அழைத்தார் தந்தை. அவன் வங்கியிலிருந்து தந்தை கொடுத்த தொகையை எடுத்து வந்தான். "அப்பா நீங்கள் கொடுத்த பணத்தை வங்கிப் பாதுகாப்புப் பெட்டகத்தில் பத்திரமாக வைத்திருந்தேன்" என்று கூறிக் கொடுத்தான்.

பணம் என்பது வங்கி காப்பறையில் வைத்துப் பாதுகாக்க வேண்டிய பொருளன்று. அதைப் பயன்படுத்தித் தொழில் செய்து முன்னேறுவது இளம் வயதும் ஆற்றலும் உடையோர் செயல். எழிலா! "நீ பணத்தையும் பயன்படுத்தவில்லை. காலத்தையும் வீணாக்கிவிட்டாய். வயதில் இளையவன் நீ. என்னுடன் சிறிதுகாலம் உடனிருந்து தொழிலைக் கற்றுக்கொள். உன் எதிர்கால வாழ்வுக்கு அது உதவும்" என்றார். எழிலன் தன் தவற்றை உணர்ந்தான். தந்தையிடம் தொழில் கற்று முன்னேற வேண்டும் என முடிவு செய்தான்.



கற்பவை கற்றபின்

1. உழைப்பே மூலதனம் கதையை வகுப்பில் நாடகமாக நடித்துக் காட்டுக.
2. நீங்கள் எழிலனாக இருந்திருந்தால் என்ன செய்து இருப்பீர்கள்? வகுப்பறையில் பேசுக.
3. கதையில் இடம் பெறும் கதாபாத்திரங்களில் உங்களைக் கவர்ந்தவர் யார்? ஏன்?



மதிப்பீடு

K5GMR9

சுருக்கி எழுதுக

உழைப்பே மூலதனம் கதையைச் சுருக்கி எழுதுக.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 139 20-03-2020 17:42:43

இயல் ஆறு

சுட்டு எழுத்துகள், வினா எழுத்துகள்

சுட்டு எழுத்துகள்

K5QISH

அவன், இவள், அங்கு, இங்கு, அந்த, இந்த ஆகிய சொற்களைக் கவனியுங்கள். அவை ஒன்றைச் சுட்டிக் காட்டுகின்றன. இவ்வாறு சுட்டிக்காட்டுவதற்கு அச்சொற்களின் முதலில் அமைந்துள்ள அ, இ ஆகிய எழுத்துகளே காரணம் ஆகும்.

இவ்வாறு ஒன்றைச் சுட்டிக் காட்ட வரும் எழுத்துகளுக்குச் சுட்டு எழுத்துகள் என்று பெயர்.

அ, இ, உ ஆகிய மூன்று எழுத்துகளும் சுட்டு எழுத்துகள் ஆகும். ஆனால், இன்று 'உ' என்னும் எழுத்தைச் சுட்டாகப் பயன்படுத்துவது இல்லை.

அகச்சுட்டு

இவன், அவன், இது, அது - இச்சொற்களில் உள்ள சுட்டு எழுத்துகளை நீக்கினால் பிற எழுத்துகள் பொருள் தருவதில்லை. இவ்வாறு, சுட்டு எழுத்துகள் சொல்லின் உள்ளேயே (அகத்தே) இருந்து சுட்டுப்பொருளைத் தருவது அகச்சுட்டு எனப்படும் .

புறச்சுட்டு

அவ்வானம்-இம்மலை-இந்நூல்-இச்சொற்களில் உள்ள சுட்டு எழுத்துகளை நீக்கினாலும் பிற எழுத்துகள் பொருள் தரும். இவ்வாறு சுட்டு எழுத்துகள் சொல்லின் வெளியே (புறத்தே) இருந்து சுட்டுப்பொருளைத் தருவது புறச்சுட்டு எனப்படும்.

அண்மைச்சுட்டு

இவன், இவர், இது, இவை, இம்மரம், இவ்வீடு - இச்சொற்கள் நம் அருகில் (அண்மையில்) உள்ளவற்றைச் சுட்டுகின்றன. எனவே, இஃது அண்மைச்சுட்டு எனப்படும். அண்மைச்சுட்டுக்குரிய எழுத்து 'இ' ஆகும்.

சேய்மைச்சுட்டு

அவள், அவர், அது, அவை, அவ்வீடு, அம்மரம் – இச்சொற்கள் தொலைவில் (சேய்மையில்) உள்ளவற்றைச் சுட்டுகின்றன. எனவே, இது சேய்மைச்சுட்டு எனப்படும். சேய்மைச்சுட்டுக்குரிய எழுத்து 'அ' ஆகும்.

தெரிந்து தெளிவோம்

அருகில் உள்ளவற்றிற்கும் தொலைவில் உள்ளவற்றிற்கும் இடையில் இருப்பதைச் சுட்டிக் காட்ட 'உ' என்ற சுட்டெழுத்து அக்காலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

(எ.கா.) உது, உவன்

6th Std Tamil CBSE Pages 77-206.indd 140 20-03-2020 17:42:43

சுட்டுத்திரிபு

அம்மரம், இவ்வீடு ஆகியவை புறச்சுட்டுகள் என்பதை அறிவோம். இச்சொற்களை அந்த மரம், இந்த வீடு என்றும் வழங்குகிறோம்.

அ, இ ஆகிய சுட்டு எழுத்துகள் மாற்றம் பெற்று (திரிந்து) அந்த, இந்த என வழங்குகின்றன.

இவ்வாறு, அ, இ ஆகிய சுட்டு எழுத்துகள் அந்த, இந்த எனத் திரிந்து சுட்டுப் பொருளைத் தருவது சுட்டுத்திரிபு எனப்படும்.



கற்பவை கற்றபின்

கரிகாலனும் அவனுடைய தங்கை மலர்க்கொடியும் பூங்காவிற்குச் சென்றனர். அங்கு இருந்த செடிகளில் பூக்கள் மலர்ந்து இருந்தன. "இங்கு உள்ள மலர்களில் இம்மலர் அழகாக உள்ளது. அம்மலர் பெரியதாக உள்ளது" என்றாள் மலர்க்கொடி. "இந்த மலரைப் பார் அந்த மலரை விட அழகாக உள்ளது" என்றான் கரிகாலன்.

1. இப்பத்தியில் உள்ள சுட்டுச் சொற்களை எடுத்து எழுதுக
2. நீங்கள் அன்றாடம் பயன்படுத்தும் சுட்டுச் சொற்கள் சிலவற்றை எழுதுக.

வினா எழுத்துகள்

வினாப் பொருளைத் தரும் எழுத்துகளுக்கு வினா எழுத்துகள் என்று பெயர். சில வினா எழுத்துகள் சொல்லின் முதலில் இடம்பெறும். சில வினா எழுத்துகள் சொல்லின் இறுதியில் இடம்பெறும்.

எ, யா, ஆ, ஓ, ஏ ஆகிய ஐந்தும் வினா எழுத்துகள் ஆகும்.

- மொழியின் முதலில் வருபவை – எ, யா (எங்கு, யாருக்கு)
- மொழியின் இறுதியில் வருபவை – ஆ, ஓ (பேசலாமா, தெரியுமோ)
- மொழி முதலிலும் இறுதியிலும் வருபவை – ஏ (ஏன், நீதானே)

அகவினா

எது, யார், ஏன் இச்சொற்களில் உள்ள வினா எழுத்துகளை நீக்கினால் பிற எழுத்துகளுக்குப் பொருள் இல்லை.

இவ்வாறு வினா எழுத்துகள் சொல்லின் அகத்தே இருந்து வினாப் பொருளைத் தருவது அகவினா எனப்படும்.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 141 20-03-2020 17:42:43

புறவினா

அவனா? வருவானோ? இச்சொற்களில் உள்ள ஆ, ஓ ஆகிய வினா எழுத்துகளை நீக்கினாலும் பிற எழுத்துகள் பொருள் தரும்.

இவ்வாறு வினா எழுத்துகள் சொல்லின் புறத்தே வந்து வினாப் பொருளைத் தருவது புறவினா எனப்படும்.



கற்பவை கற்றபின்

பத்தியில் உள்ள வினாச் சொற்களை எடுத்து எழுதுக.

செழியன் துணிக்கடைக்குச் சென்றான். விற்பனையாளர் ஒருவரிடம் "ஆயத்த ஆடைகள் பகுதி எங்கு உள்ளது?" என்று வினவினான். "யாருக்கு ஆடை வேண்டும்? உனக்கா பெரியவர்களுக்கா?" என்று கேட்டார் விற்பனையாளர். "ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்? சிறுவர்களுக்கான ஆடைகள் இல்லையோ?" என்று வினவினான். "நீ கேட்பது உன் அளவுக்குரிய ஆடைதானே? அதோ அந்தப் பகுதியில் இருக்கிறது" என்றார் விற்பனையாளர்.



மதிப்பீடு

K5ZEUJ

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது.

1. என் வீடு _____ உள்ளது. (அது / அங்கே)
2. தம்பி _____ வா. (இவர் / இங்கே)
3. நீர் _____ தேங்கி இருக்கிறது? (அது / எங்கே)
4. யார் _____ தெரியுமா? (அவர் / யாது)
5. உன் வீடு _____அமைந்துள்ளது? (எங்கே / என்ன)

குறுவினா

1. சுட்டு எழுத்துகள் என்றால் என்ன? அவை யாவை?
2. அகவினா, புறவினா – வேறுபாடு யாது?

சிந்தனை வினா

அகச்சுட்டு, அகவினா, புறச்சுட்டு, புறவினா என்று பெயரிட்ட காரணத்தை எழுதுக.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 142 20-03-2020 17:42:43

மொழியை ஆள்வோம்!

சொற்றொடர்ப் பயிற்சி.

அ) அந்த, இந்த என்னும் சுட்டுச்சொற்களை அமைத்துத் தொடர்கள் எழுதுக.

ஆ) எங்கே, ஏன், யார் ஆகிய வினாச்சொற்களை அமைத்துத் தொடர்கள் எழுதுக.

சொற்களைச் சேர்த்துச் சொற்றொடரை நீட்டி எழுதுக.

அ) நான் பள்ளியில் படிக்கிறேன். (ஆறாம் வகுப்பு , அரசு)

ஆ) பொன்னன் முன்னேறினான். (வணிகம் செய்து, பொருளீட்டி, துணி)

பின்வரும் கட்டங்களில் உள்ள சொற்களைக் கொண்டு சொற்றொடர்கள் அமைக்க.

நீ		சென்றாய்
நான்		சென்றார்
அவன்	ஊருக்குச்	சென்றேன்
அவள்		சென்றான்
அவர்		சென்றாள்

அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தக்க இடத்தில் சேர்த்து எழுதுங்கள்.

அ) நீங்கள் வரும்போது எனக்குப் புத்தகம் வாங்கி வாருங்கள். (ஒரு)

ஆ) நாம் உரங்கள் தயாரித்து உழவர்களுக்கு வழங்க வேண்டும். (இயற்கை)

இ) நான் சொன்ன வேலையை அக்கறையுடன் செய்திருக்கிறார்கள். (மிகுந்த)

சொல்லக் கேட்டு எழுதுக

மல்லெடுத்து	கதிர்ச்சுடர்	நாட்டுப்புறப்பாடல்
பண்டமாற்று வணிகம்	மின்னணுப் பரிமாற்றம்	பட்டினப்பாலை
வேளாண்மை	அண்மைச்சுட்டு	புறவினா

கீழ்க்கண்ட பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக

மனிதர்களுக்குத் தேவையான பொருள்களைக் கிடைக்கச் செய்வதே வணிகத்தின் நோக்கங்களுள் ஒன்று. ஓர் இடத்தில் உற்பத்தியாகும் பொருள்களைப் பல இடங்களுக்கு அனுப்புவதும் பல இடங்களில் கிடைக்கும் பொருள்களை ஓர் இடத்தில் கிடைக்கச் செய்வதும் வணிகம் ஆகும்.

கிடைக்கும் பொருள்களின் மதிப்பைக் கூட்டிப் புதிய பொருளாக மாற்றுவது சிறந்த வணிகமாகும். சான்றாகக் கல் என்பது விற்பனைப் பொருளன்று. ஆனால் அதனைச் செதுக்கிச் சிலையாக மாற்றலாம். உதிரும் கல்தூளைக் கோலமாவாக மாற்றலாம். இதனை மதிப்புக் கூட்டுதல் என்பர்.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 143 20-03-2020 17:42:43

1. கிடைக்கும் பொருள்களின் _____ க் கூட்டிப் புதிய பொருளாக மாற்றுவது சிறந்த வணிகம்.
   (அ) அளவை (ஆ) மதிப்பை (இ) எண்ணிக்கையை (ஈ) எடையை
2. சிலை செதுக்கப்படும்போது உதிரும் கல்தூளை _____ மாற்றலாம்.
3. வணிகத்தின் நோக்கம் என்ன?
4. மதிப்புக் கூட்டுதல் என்றால் என்ன?
5. இப்பத்திக்கு ஏற்ற தலைப்பை எழுதுக

கடிதம் எழுதுக.

பிறந்த நாள் பரிசு அனுப்பிய மாமாவுக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதுக.



மொழியோடு விளையாடு

விடுகதைக்கு விடை காணுங்கள்

(கப்பல், ஏற்றுமதி இறக்குமதி, தராசு, நெல்மணி, குதிரை)

1) தனி ஆளாய் இருந்தால் நடுநிலையாய் இருந்திடுவான்; யாரும் வந்து அமர்ந்தால் ஏற்றம் இறக்கம் காட்டிடுவான். அவன் யார்?

2) தண்ணீரில் கிடப்பான்; தள்ளாடித் தள்ளாடி நடப்பான்; காலில்லாத அவன் யார்?

3) பேசமுடியாத ஓட்டப்பந்தய வீரனுக்கு வாய்க்கு மட்டும் பூட்டு. அவன் யார்?

4) இயந்திரத்தால் செய்ய முடியாத மணி; ஊசி நூலில் கோக்க முடியாத மணி; பூமியில் விளையும் மணி; பூவுலகத்தார் விரும்பும் மணி. எந்த மணி?

5) ஒருமதி வெளியே போகும்; ஒருமதி உள்ளே வரும்; இருமதியும் சேர்ந்துவிட்டால் பலநிதியும் சேர்ந்து வரும். அவை என்ன?

பின்வரும் நவமணிகளை அகரவரிசைப்படுத்தி எழுதுக.

நீலம், கோமேதகம், மாணிக்கம், வைரம், பவளம், வைடூரியம், முத்து, புஷ்பராகம், மரகதம்


செயல்திட்டம்

1. பண்டைத் தமிழகத்தின் துறைமுகங்கள் பற்றியும் அங்கு ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களைப் பற்றியும் எழுதுக.
2. உங்களுக்குத் தெரிந்த மூன்று தொழில்களின் பெயர்களை எழுதுக. அத் தொழிலின் தொடர்புடைய ஐந்தைந்து சொற்களைப் பட்டியலிடுக.

   (எ.கா.) உழவுத் தொழில் = ஏர், கலப்பை, _____, _____, _____.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 144 20-03-2020 17:42:43

குறுக்கெழுத்துப் புதிர்



இடமிருந்து வலம்

1. நானிலம் படைத்தவன் பாடலை எழுதியவர்.
2. சுட்டிக்காட்டப் பயன்படுவது _____ எழுத்து.

வலமிருந்து இடம்

4. அரேபியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது
5. ஒரு பொருளைக் கொடுத்து வேறு பொருளைப் பெறும் முறை

மேலிருந்து கீழ்

1. காடும் காடு சார்ந்த இடமும்
3. தோட்டத்தைச் சுற்றி _____ அமைக்க வேண்டும் .

கீழிலிருந்து மேல்

4. மீனவருக்கு மேகம் _____ போன்றது.
5. உடலுக்குப் போர்வையாக அமைவது

நிற்க அதற்குத் தக...

என் பொறுப்புகள்

1. இந்தியக் குடிமகனாக எனது கடமையை நிறைவேற்றுவேன்.
2. கலப்படம் பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்துவேன்.
3. நெகிழிப் பயன்பாட்டை இயன்றவரை தவிர்ப்பேன்.
4. கடைக்குச் செல்லும்போது துணிப்பைகளை எடுத்துச் செல்வேன்.

கலைச்சொல் அறிவோம்

பண்டம்	–	Commodity	கடற்பயணம்	–	Voyage
பயணப்படகுகள்	–	Ferries	தொழில் முனைவோர்	–	Entrepreneur
பாரம்பரியம்	–	Heritage	கலப்படம்	–	Adulteration
நுகர்வோர்	–	Consumer	வணிகர்	–	Merchant

6th Std Tamil CBSE Pages 77-206.indd 145 20-03-2020 17:42:43

இணையத்தில் காண்க

பல்வேறு நிறுவனங்களின் கைப்பேசி விலைப் பட்டியலையும் அதன் சிறப்பு இயல்புகளையும் இணையத்தில் கண்டு தொகுத்து வருக.

இணையச் செயல்பாடுகள்






படிகள்:

⇒ கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்திச் சொல்லினம் என்னும் செயலியைப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.

⇒ செயலியின் முதல் பக்கத்தில் எளிமை, கடினம் என்னும் இரு தெரிவுகள் தோன்றும். ஏதேனும் ஒன்றைத் தெரிவு செய்து கொடுக்கப்பட்டிருக்கும் எழுத்துகளில் இருந்து புதிய சொற்களை உருவாக்குக.







செயல்பாட்டிற்கான உரலி

https://play.google.com/store/apps/details?id=com.nilatech.Sollinam

*கொடுக்கப்பட்டுள்ள படங்கள்அடையாளத்திற்காக மட்டுமே

6th Std Tamil CBSE Pages 77-206.indd 146 20-03-2020 17:42:44

இயல்
ஏழு

புதுமைகள் செய்யும் தேசமிது



கற்றல் நோக்கங்கள்

- இந்திய நாட்டின் சிறப்புகளை அறிதல்
- வாழ்வில் எளிமையின் சிறப்பை உணர்தல்
- சமூக மாற்றத்தில் காந்தியின் பங்கினைத் தெரிந்து கொள்ளுதல்
- விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கினை அறிந்து போற்றுதல்
- சொற்களின் வகைகளை அறிந்து பயன்படுத்துதல்

6th Std Tamil CBSE Pages 77-206.indd 147 20-03-2020 17:42:44

இயல் ஏழு

பாரதம் அன்றைய நாற்றங்கால்

நுழையும்முன்

நமது நாடு வளம் பொருந்தியது. இங்கு இயற்கை வளங்கள் மட்டுமன்றி இலக்கிய வளங்களும் மிகுந்துள்ளன. வேற்றுமையில் ஒற்றுமையைக் கொண்டது நமதுநாடு. இமயம் முதல் குமரி வரை வாழும் இந்தியர்கள் அனைவரும் உணவு, உடை, மொழி, நாகரிகம் ஆகியவற்றால் வேறுபட்டு இருந்தாலும் உணர்வால் ஒன்றுபட்டவர்களே. தேசிய ஒருமைப்பாட்டைப் போற்றும் பாடலை அறிவோம் வாருங்கள்.

புதுமைகள் செய்த தேசமிது
பூமியின் கிழக்கு வாசலிது!

தெய்வ வள்ளுவன் நெய்த குறள்தான்
தேசம் உடுத்திய நூலாடை!
மெய்களைப் போற்றிய இந்தியத் தாய்க்கு
மெய்யுணர்வு என்கிற மேலாடை! *(புதுமைகள்)*

காளி தாசனின் தேனிசைப் பாடல்கள்
காவிரிக் கரையில் எதிரொலிக்க
கம்பனின் அமுதக் கவிதை களுக்குக்
கங்கை அலைகள் இசையமைக்க *(புதுமைகள்)*


கன்னிக் குமரியின் கூந்த லுக்காகக்
காஷ்மீர்த் தோட்டம் பூத்தொடுக்கும்!
மேற்கு மலைகள் நதிகளை அனுப்பிக்
கிழக்குக் கரையின் நலம்கேட்கும்! *(புதுமைகள்)*


**புல்வெளி யெல்லாம் பூக்கா டாகிப்*
புன்னகை செய்த பொற்காலம்!
கல்லைக் கூட காவிய மாக்கிக்
கட்டி நிறுத்திய கலைக்கூடம்! *(புதுமைகள்)*

அன்னை நாட்டின் அமுத சுரபியில்
அன்னிய நாடுகள்பசிதீர
அண்ணல் காந்தியின் சின்னக் கைத்தடி
அறத்தின் ஊன்று கோலாக

புதுமைகள் செய்த தேசமிது
*பூமியின் கிழக்கு வாசலிது!**

– தாராபாரதி





6th Std Tamil CBSE Pages 77-206.indd 148 20-03-2020 17:42:45

சொல்லும் பொருளும்

மெய்- உண்மை

தேசம் - நாடு

பாடலின் பொருள்

பூமியின் கிழக்கு வாசலாகத் திகழும் நமது இந்தியநாடு பல புதுமைகளைச் செய்த நாடு. திருக்குறள் நமது நாடு அணிந்திருக்கும் ஆடையாக விளங்குகின்றது. உண்மைகளைப் போற்றும் இந்தியத் தாய்க்கு மெய்யுணர்வே மேலாடையாக விளங்குகின்றது. காளிதாசர் இயற்றிய இனிமையான பாடல்கள் காவிரிக்கரை வரை எதிரொலிக்கின்றன. கம்பரின் அமுதம் போன்ற கவிதை வரிகளுக்குக் கங்கை ஆற்றின் அலைகள் இசையமைக்கின்றன.

குமரிமுனை ஆகிய கன்னியின் கூந்தலுக்காகக் காஷ்மீரத்து மலர்கள் மாலையாகத் தொடுக்கப்படுகின்றன. மேற்கே தோன்றும் நதிகள் கிழக்கு எல்லை வரை பாய்ந்து நன்மைகளை விளைவிக்கின்றன. புல்வெளிகள் எல்லாம் பூக்கள் மலர்ந்து பொற்காலமாகப் புன்னகை புரிகின்றன. கல்லில் செதுக்கிய சிற்பங்கள் யாவும் காவியக் கலைக்கூடமாகக் காட்சி தருகின்றன.


அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபியாக அன்னை பாரத நாடு திகழ்கின்றது. நம் நாடு பிறநாட்டு மக்களின் பசியையும் போக்கி வருகின்றது. அறத்தின் ஊன்றுகோலாக காந்தியடிகளின் அகிம்சை என்னும் சிறிய கைத்தடி விளங்குகின்றது.

நூல் வெளி



தாராபாரதியின் இயற்பெயர் இராதாகிருஷ்ணன். கவிஞாயிறு என்னும் அடைமொழி பெற்றவர். புதிய விடியல்கள், இது எங்கள் கிழக்கு, விரல் நுனி வெளிச்சங்கள் முதலானவை இவர் இயற்றிய நூல்களாகும்.

இப்பாடல் தாராபாரதியின் கவிதைகள் என்னும் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.





கற்பவை கற்றபின்

1. பாரதம் அன்றைய நாற்றங்கால் என்னும் பாடலை இசையோடு பாடுக.
2. நாட்டு முன்னேற்றத்தில் நம் பங்கு என்னும் தலைப்பில் பேசுக.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 149 20-03-2020 17:42:45

மதிப்பீடு

L4PHL9

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தேசம் உடுத்திய நூலாடை எனக் கவிஞர் குறிப்பிடும் நூல்

   அ) திருவாசகம் ஆ) திருக்குறள்

   இ) திரிகடுகம் ஈ) திருப்பாவை

2. காளிதாசனின் தேனிசைப் பாடல்கள் எதிரொலிக்கும் இடம்

   அ) காவிரிக்கரை ஆ) வைகைக்கரை இ) கங்கைக்கரை ஈ) யமுனைக்கரை

3. கலைக்கூடமாகக் காட்சி தருவது

   அ) சிற்பக்கூடம் ஆ) ஓவியக்கூடம் இ) பள்ளிக்கூடம் ஈ) சிறைக்கூடம்

4. நூலாடை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

   அ) நூல்+ஆடை ஆ) நூலா+டை இ) நூல்+ லாடை ஈ) நூலா+ஆடை

5. எதிர்+ஒலிக்க என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

   அ) எதிரலிக்க ஆ) எதிர்ஒலிக்க இ) எதிரொலிக்க ஈ) எதிர்ரொலிக்க

நயம் அறிக

1. பாரதம் அன்றைய நாற்றங்கால் என்னும் பாடலில் அமைந்துள்ள எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.
2. பாரதம் அன்றைய நாற்றங்கால் என்னும் பாடலில் அமைந்துள்ள மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.
3. பாரதம் அன்றைய நாற்றங்கால் என்னும் பாடலில் அமைந்துள்ள இயைபுச் சொற்களை எடுத்து எழுதுக.

குறுவினா

1. தாராபாரதியின் பாடலில் இடம்பெற்றுள்ள கவிஞர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
2. இந்தியாவின் மேற்கு, கிழக்கு ஆகிய திசைகளை இணைத்துக் கவிஞர் காட்டும் காட்சியை எழுதுக.

சிந்தனை வினா

நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு மாணவர்கள் செய்ய வேண்டியவை பற்றிச் சிந்தித்து எழுதுக.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 150 20-03-2020 17:42:45

இயல் ஏழு

தமிழ்நாட்டில் காந்தி

L4YDMW

நுழையும்முன்

காந்தியடிகள் இந்திய விடுதலைக்குப் பாடுபட்டவர் என்பதை நாடு நன்கு அறியும். பெண்கள் முன்னேற்றம், சமுதாய மறுமலர்ச்சி, தீண்டாமை ஒழிப்பு முதலியவற்றுக்காகவும் அவர் பாடுபட்டார். எளிமையை ஓர் அறமாகப் போற்றினார். இந்தியாவில் அவர் காலடி படாத இடமே இல்லை. தமிழ்நாட்டின் மீதும் தமிழ்மொழியின் மீதும் காந்தியடிகள் கொண்ட பற்றினைக் காண்போம் வாருங்கள்.



மதுரையில் உள்ள காந்தி அருங்காட்சியகம்


காந்தியடிகளுக்குத் தமிழ்நாட்டின் மீதும் தமிழ் மக்கள் மீதும் மிகுந்த அன்பு உண்டு. அவர் பலமுறை தமிழ்நாட்டில் பயணம் செய்துள்ளார். அப்போது சுவையான பல நிகழ்வுகள் நடந்துள்ளன. அவற்றில் சிலவற்றைக் காணலாம்.

1919 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் காந்தியடிகள் சென்னைக்கு வந்தார். அப்போது ஆங்கில அரசு ரௌலட் சட்டம் என்னும் கடுமையான சட்டத்தை நடைமுறைப்படுத்தி இருந்தது. அதனை எதிர்த்துப் பெரிய போராட்டத்தை நடத்தக் காந்தியடிகள் திட்டமிட்டார். அதைப் பற்றிய கருத்தாய்வுக் கூட்டம் இராஜாஜியின் வீட்டில் நடைபெற்றது. காந்தியடிகள், அங்கு ஒரு மெத்தையில் அமர்ந்து இருந்தார். அவருக்கு அருகில் இராஜாஜியும் மற்ற தலைவர்களும் நின்றுகொண்டு இருந்தனர்.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 151 20-03-2020 17:42:45

அப்போது அங்கு வந்த பாரதியார் விரைந்து சென்று காந்தியடிகளின் அருகில் அமர்ந்தார். "திரு. காந்தி அவர்களே! நான் இன்று மாலை ஒரு பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துள்ளேன். அதற்குத் தாங்கள் தலைமைதாங்க முடியுமா?" என்று கேட்டார். "இன்று எனக்கு வேறு பணி இருக்கிறது. உங்கள் பொதுக்கூட்டத்தை நாளை நடத்த முடியுமா?" என்று கேட்டார் காந்தியடிகள். "அது முடியாது. திட்டமிட்டபடி கூட்டம் நடக்கும். தாங்கள் தொடங்கப்போகும் இயக்கத்துக்கு என் வாழ்த்துகள்" என்று கூறிய பாரதியார் "நான் போய் வருகிறேன்" என்று கூறி எழுந்து சென்றுவிட்டார்.

அவர் சென்றதும் "இவர் யார்?" என்று காந்தி வியப்புடன் கேட்டார். "இவர் எங்கள் தமிழ்நாட்டுக் கவிஞர்" என்றார் இராஜாஜி. "அப்படியா! இவரைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும்" என்றார் காந்தியடிகள். இந்நிகழ்ச்சியின் மூலம் பாரதியார் பற்றிய காந்தியடிகளின் மதிப்பீட்டை அறியலாம்.



1921 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் காந்தியடிகள் தமிழ்நாட்டிற்கு வந்தார். அப்போது புகைவண்டியில் மதுரைக்குச் சென்றார். செல்லும் வழியில் பெரும்பாலான மக்கள் இடுப்பில் ஒரு துண்டு மட்டுமே அணிந்து இருப்பதைக் கண்டார். அப்போது காந்தியடிகள் நீளமான வேட்டி, மேல்சட்டை, பெரிய தலைப்பாகை அணிவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

பெரும்பாலான இந்தியர்கள் போதிய உடைகள் இல்லாமல் இருக்கிறார்கள். தான் மட்டும் இவ்வளவு துணிகளை அணிவதா? என்று சிந்தித்தார். அன்றுமுதல் வேட்டியும் துண்டும் மட்டுமே அணியத் தொடங்கினார். அவரது தோற்றத்தில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்திய பெருமை தமிழ்நாட்டுக்கு உண்டு. அந்தக் கோலத்திலேயே தம் வாழ்நாள் முழுவதும் இருந்தார். உலகம் போற்றிய எளிமைத் திருக்கோலம் இதுவாகும்.


காந்தியடிகள் ஒருமுறை காரைக்குடியைச் சுற்றியுள்ள ஊர்களில் சுற்றுப்பயணம் செய்தார். அப்போது கானாடுகாத்தான் என்னும் ஊரில் அன்பர் ஒருவர் வீட்டில் தங்கி இருந்தார். அந்த வீடு மிகவும் ஆடம்பரமாக இருந்தது. வீட்டில் எங்குப் பார்த்தாலும் வெளிநாட்டு அலங்காரப் பொருள்கள் நிறைந்து இருந்தன. காந்தியடிகள் அந்த அன்பரிடம், "உங்கள் வீட்டை வெளிநாட்டுப் பொருள்களால் அழகு செய்து இருக்கிறீர்கள். அதற்குச் செலவு செய்த பணத்தில் பத்தில் ஒரு பங்கு பணத்தை என்னிடம் கொடுத்தால்

6th Std Tamil CBSE Pages 77-206.indd 152 20-03-2020 17:42:46

போதும். இதைவிட அழகாகச் செய்துவிடுவேன்" என்று கூறினார். அதனைக் கேட்டு, அன்பர் தலைகுனிந்தார். அந்த வீட்டுக்குக் காந்தியடிகள் மறுமுறை வந்தபோது அங்கே வெளிநாட்டுப் பொருள்கள் ஒன்றுகூட இல்லை. காந்தியடிகள் மகிழ்வுடன் அவரைப் பாராட்டினார்.

காந்தியடிகள் ஒருமுறை மதுரையில் தங்கி இருந்தார். மீனாட்சி அம்மன் கோவிலுக்குச் சென்று வரலாம் என்று தலைவர்கள் அவரை அழைத்தனர். "அந்தக் கோவிலுக்குள் செல்ல எல்லா மக்களுக்கும் அனுமதி உண்டா?" என்று காந்தியடிகள் கேட்டார். அங்கு இருந்தவர்கள் "இல்லை" என்றனர். "அப்படியானால் அங்கே வரமாட்டேன்" என்று கூறிவிட்டார். பல ஆண்டுகளுக்குப் பிறகு அந்தக் கோவிலுக்குள் செல்ல அனைவருக்கும் உரிமை உண்டு என்று அறிவிக்கப்பட்டது. அதன் பிறகு மதுரைக்கு வந்த போதுதான் காந்தியடிகள் மீனாட்சி அம்மன் கோவிலுக்குள் சென்றார்.

இதே போன்ற நிகழ்ச்சி குற்றாலத்திலும் நடைபெற்றது. குற்றால அருவியில் நீராட அனைவருக்கும் உரிமை அளிக்கப்பட்டு இருந்தது. ஆனால், அருவிக்குச் செல்லும் வழியில் ஒரு கோவில் இருந்தது. அதன் வழியாகச் செல்ல ஒருசாராருக்குத் தடை இருந்தது. எனவே அனைவரும் அருவியில் நீராட முடியாத நிலை இருந்தது. அதனை அறிந்த காந்தியடிகள் குற்றால அருவியில் நீராட மறுத்துவிட்டார். மனிதர்களிடம் உயர்வு தாழ்வு பாராட்டக் கூடாது என்பதில் காந்தியடிகள் உறுதியாக இருந்ததை இதன்மூலம் அறிய முடிகிறது.



காந்தியடிகளின் தமிழ்க் கையெழுத்து

காந்தியடிகள் தமக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பைப் பற்றிப் பலமுறை கூறியுள்ளார். தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த காலத்தில் தமிழ்மொழியைக் கற்கத் தொடங்கியதாகக் கூறியுள்ளார். ஜி.யு.போப் எழுதிய தமிழ்க்கையேடு தம்மைக் கவர்ந்ததாகவும் குறிப்பிட்டு உள்ளார். திருக்குறள் அவரைப் பெரிதும் கவர்ந்த நூலாகும்.

1937 ஆம் ஆண்டு சென்னையில் இலக்கிய மாநாடு ஒன்று நடைபெற்றது. அம்மாநாட்டுக்குக் காந்தியடிகள் தலைமை வகித்தார். உ.வே.சாமிநாதர் வரவேற்புக்குழுத் தலைவராக இருந்தார். உ.வே.சாமிநாதரின் உரையைக் கேட்ட காந்தியடிகள் மகிழ்ந்தார். "இந்தப் பெரியவரின் அடி நிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்னும் ஆவல் உண்டாகிறது" என்று கூறினார் காந்தியடிகள்.

இந்நிகழ்வுகள் மூலம் ஏற்றத்தாழ்வு அற்ற சமுதாயம் மலர வேண்டும் என்னும் காந்தியடிகளின் உள்ள உறுதியை அறிந்து கொள்ளலாம். மேலும் அவர் தமிழ் மொழியின் மீது கொண்ட பற்றையும் அறிந்து கொள்ள முடிகிறது.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 153 20-03-2020 17:42:46

கற்பவை கற்றபின்

1. காந்தியடிகளின் பொன்மொழிகளைத் திரட்டுக.
2. காந்தியடிகள் நடத்திய அறவழிப் போராட்டங்களின் பெயர்களைத் தொகுக்க.

மதிப்பீடு

L589PJ

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. காந்தியடிகளிடம் உடைஅணிவதில் மாற்றத்தை ஏற்படுத்திய ஊர் _____

அ) கோவை ஆ) மதுரை இ) தஞ்சாவூர் ஈ) சிதம்பரம்

2. காந்தியடிகள் _____ அடி நிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்று விரும்பினார்.

அ) நாமக்கல் கவிஞர் ஆ) பாரதிதாசன் இ) உ.வே.சாமிநாதர் ஈ) பாரதியார்

பொருத்துக

1. இலக்கிய மாநாடு – பாரதியார்
2. தமிழ்நாட்டுக் கவிஞர் – சென்னை
3. குற்றாலம் – ஜி.யு.போப்
4. தமிழ்க் கையேடு – அருவி

சொற்றொடரில் அமைத்து எழுதுக

1. ஆலோசனை 2. பாதுகாக்க 3. மாற்றம் 4. ஆடம்பரம்

குறுவினா

1. காந்தியடிகள் மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்குள் முதலில் ஏன் நுழையவில்லை?
2. காந்தியடிகளுக்குத் தமிழ் கற்கும் ஆர்வத்தை ஏற்படுத்திய நிகழ்வைக் கூறுக.

சிறுவினா

1. காந்தியடிகளின் உடை மாற்றத்திற்குக் காரணமாக அமைந்த நிகழ்வினை எழுதுக.
2. காந்தியடிகளுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பை எழுதுக.

சிந்தனை வினா

காந்தியடிகளிடம் காணப்படும் உயர்ந்த பண்புகளாக நீங்கள் கருதுபவை யாவை?

6th Std Tamil CBSE Pages 77-206.indd 154 20-03-2020 17:42:46

விரிவானம்

இயல் ஏழு

வேலுநாச்சியார்

L5H5R7

நுழையும்முன்

வணிகம் செய்ய வந்த ஆங்கிலேயர் சிறிது சிறிதாக நமது நாட்டைக் கைப்பற்றிக் கொண்டனர். அவர்களை எதிர்த்து வீரப்போர் புரிந்தவர்கள் பலர். அவர்களுள் வெற்றி பெற்றவர்கள் சிலரே. வீரமும் அதனால் விளையும் வெற்றியும் போருக்கு முக்கியமானவை. சூழ்நிலைக்கேற்பச் செயல்பட்டுப் பெறும் வெற்றியே சிறந்தது. விடுதலைப்போரில் ஆண்களுக்கு நிகராகச் செயல்பட்டு வெற்றி வாகை சூடிய பெண்களுள் ஒருவரைப் பற்றி அறிவோம் வாருங்கள்.



இராமநாதபுரத்தை ஆட்சி செய்த செல்லமுத்து மன்னரின் ஒரே மகள் வேலுநாச்சியார். தாய்மொழியாகிய தமிழ் மட்டும் அல்லாமல் ஆங்கிலம், பிரெஞ்சு, உருது ஆகிய மொழிகளையும் சிறப்பாகக் கற்றார். சிலம்பம், குதிரையேற்றம், வாட்போர், விற்பயிற்சி ஆகியவற்றையும் முறையாகக் கற்றுக் கொண்டார். சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதரை மணந்து மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தார்.

காளையார்கோவிலில் நடைபெற்ற போரில் முத்துவடுகநாதர் ஆங்கிலேயரால் நயவஞ்சகமாகக் கொல்லப்பட்டார். வேலுநாச்சியார் ஆங்கிலேயரை வென்று சிவகங்கையை மீட்க உறுதி பூண்டார். திண்டுக்கல் கோட்டையில் தங்கி ஒரு படையைத் திரட்டிப் பயிற்சி அளித்தார்.

எட்டு ஆண்டுகளுக்குப் பின்...

திண்டுக்கல் கோட்டையில் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. கூட்டத்தின் நடுவே வீரமங்கை வேலுநாச்சியார் அமர்ந்திருந்தார். அவரைச் சுற்றி அமைச்சர் தாண்டவராயர், தளபதிகளாகிய பெரிய மருது, சின்ன மருது மற்றும் குறுநில மன்னர்கள் சிலர் இருந்தனர்.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 155 20-03-2020 17:42:47



"நாம் சிவகங்கையை இழந்து எட்டு ஆண்டுகள் ஆகிவிட்டன" என்று வேலுநாச்சியார் கவலை நிறைந்த குரலில் கூறினார்.

"கவலைப்படாதீர்கள் அரசியாரே! நாம் சிவகங்கையை மீட்கும் நாள் நெருங்கிவிட்டது" என்றார் அமைச்சர் தாண்டவராயர்.

"அந்த இனிய நாளைத்தான் நானும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறேன்" என்றார் வேலுநாச்சியார்.

அப்போது வெளியே பெரும் ஆரவாரம் கேட்டது. "மைசூரிலிருந்து ஐதர்அலி அனுப்பிய படை வந்துவிட்டது என நினைக்கிறேன்" என்றார் வேலுநாச்சியார்.

அப்போது அறையின் வாயிலில் வீரன் ஒருவன் வந்து நின்றான். "அரசியாருக்கு வணக்கம். மைசூரில் இருந்து ஐயாயிரம் குதிரைப் படை வீரர்கள் வந்துள்ளனர்" என்றான். "அப்படியா! மகிழ்ச்சி. அவர்களை ஓய்வு எடுக்கச் சொல். நான் பிறகு வந்து பார்க்கிறேன்" என்றார் வேலுநாச்சியார். வீரன் வெளியேறினான்.

"ஐதர்அலி உறுதியாகப் படையை அனுப்புவார் என்று எனக்கு முன்பே தெரியும் அரசியாரே!" என்றார் அமைச்சர் தாண்டவராயர்.

"எதனால் அப்படிச் சொல்கிறீர்கள்?"

"நாம் இருவரும் ஐதர்அலியைச் சந்திக்க மைசூர் சென்றோம் அல்லவா? அப்போது தாங்கள் அவரிடம் உருதுமொழியில் பேசினீர்கள். அப்போது அவர் முகத்தில் பெரிய மகிழ்ச்சி தோன்றியதை நான் கண்டேன்" என்றார் தாண்டவராயர்.

"நம் அரசியாரின் பன்மொழி அறிவு நமக்குப் பெரிய நன்மையைத் தந்திருக்கிறது" என்றார் சின்ன மருது.



"ஆம். நமது வீரர்களுடன் ஐதர்அலியின் ஐயாயிரம் குதிரைப்படை வீரர்களும் சேர்ந்து விட்டனர். ஆகவே, நாளை சிவகங்கையை மீட்கப் புறப்படலாம் அல்லவா?" என்று கேட்டார் பெரிய மருது.

"என் கணவர் கொல்லப்பட்ட ஊர் காளையார்கோவில். எனவே, நாம் முதலில் காளையார்கோவிலைக் கைப்பற்றுவோம். பிறகு சிவகங்கையை

6th Std Tamil CBSE Pages 77-206.indd 156 20-03-2020 17:42:47

மீட்போம்" என்றார் வேலு நாச்சியார். அனைவரும் அதனை ஏற்றுக்கொண்டனர். மறுநாள் காளையார்கோவில் நோக்கி வேலுநாச்சியார் படை புறப்பட்டது. ஆண்கள் படைப்பிரிவுக்கு மருது சகோதரர்களும் பெண்கள் படைப்பிரிவுக்குக் குயிலியும் தலைமை ஏற்றனர்.

காளையார்கோவிலில் வேலுநாச்சியாரின் படைக்கும் ஆங்கிலேயரின் படைக்கும் இடையே கடுமையான போர் நடைபெற்றது. இறுதியில் ஆங்கிலேயரின் படை தோற்று ஓடியது.

"அரசியார் அவர்களே! காளையார்கோவில் நம் கைக்கு வந்து விட்டது. நாம் இப்போதே சிவகங்கைக் கோட்டையைத் தாக்கினால் ஆங்கிலேயரை விரட்டியடித்து விடலாம்" என்றார் பெரிய மருது. "அவசரம் வேண்டாம். இப்போது சிவகங்கைக் கோட்டைக் கதவுகள் அடைக்கப்பட்டிருக்கும். வரும் விசயதசமித் திருநாள் அன்று கதவுகள் திறக்கப்படும். அப்போது நமது படைகள் உள்ளே நுழையலாம்" என்றார் வேலுநாச்சியார்.

"அப்போதும் பெரிய காவல் இருக்குமே" என்றார் சின்ன மருது.

"விசயதசமி நாளில் கோட்டைக்குள் செல்வதற்குப் பெண்களுக்கு மட்டும் அனுமதி உண்டு. நமது பெண்கள் படைப்பிரிவினர் கூடைகளில் பூக்கள், பழங்கள் ஆகியவற்றுடன் ஆயுதங்களையும் மறைத்துக் கொண்டு கோட்டைக்குள் செல்லட்டும். உள்ளே அவர்கள் தாக்குதலைத் தொடங்கியதும் நமது ஆண்கள் படைப்பிரிவினரும் கோட்டைக்குள் நுழைந்து தாக்கட்டும். ஆங்கிலேயரை விரட்டியடித்து விடலாம்" என்றார் வேலுநாச்சியார்.



நடுகல்

"அப்படியே செய்யலாம் அரசியாரே! இன்னும் ஒரு செய்தி. தங்களைக் காட்டிக் கொடுக்குமாறு உடையாள் என்னும் பெண்ணை ஆங்கிலேயர்கள் வற்புறுத்தினார்களாம். அவர் மறுத்ததால் கொன்றுவிட்டார்களாம். அவருக்கு நாம் உரிய முறையில் சிறப்புச் செய்ய வேண்டும்" என்றார் அமைச்சர் தாண்டவராயர்.

"அவருக்கு ஒரு நடுகல் நடுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள் அமைச்சரே! அவரது பெருமையை எல்லோரும் அறிந்து கொள்ளட்டும்" என்றார் வேலுநாச்சியார்.

"அப்படியே செய்வோம்" என்றார் அமைச்சர்.

விசயதசமிக்கு முதல் நாள் சிவகங்கையை நோக்கிப் புறப்பட்டது படை. வழியில் உடையாளுக்காக நடப்பட்ட நடுகல் முன்பு குதிரையில் இருந்து இறங்கினார் வேலுநாச்சியார். தாம் வைத்திருந்த தாலியை எடுத்து அந்த நடுகல்லுக்குக் காணிக்கையாகச் செலுத்தி வணங்கினார். அருகில் நின்ற வீரர்கள் "உடையாள் புகழ் ஓங்குக" என்று முழக்கமிட்டனர்.

படை மறுநாள் காலை சிவகங்கையை அடைந்தது.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 157 20-03-2020 17:42:47

"அரசியாரே! நான் நமது பெண்கள் படைப்பிரிவுடன் மாறுவேடத்தில் உள்ளே செல்கிறேன். உள்ளே சென்றதும் அங்குள்ள ஆயுதக் கிடங்குக்கு எப்படியாவது தீ வைத்து விடுகிறேன். தீ எரிவது தெரிந்ததும் நம் படை உள்ளே நுழையட்டும்" என்று கூறினார் குயிலி.

"அப்படியே ஆகட்டும்" என்றார் வேலு நாச்சியார்.



தெரிந்து தெளிவோம்

- வேலுநாச்சியாரின் காலம் 1730–1796
- வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்ட ஆண்டு 1780.
- ஜான்சிராணிக்கு முன்பே ஆங்கிலேயரை எதிர்த்து வீரப்போர் புரிந்தவர் வேலு நாச்சியார்.

குயிலியும் பெண்கள் படையினரும் கோட்டைக்குள் சென்றனர். சிறிது நேரத்தில் கோட்டைக்குள் பெரும் கூச்சல் எழுந்தது. உள்ளே உயரமாகத் தீ எரிவது தெரிந்தது.

"நமது படை உள்ளே நுழையட்டும்" என்று ஆணையிட்டார் வேலுநாச்சியார். படை வீரர்கள் கோட்டைக்குள் பாய்ந்து சென்றனர். ஆங்கிலேயரின் படையுடன் கடுமையாகப் போரிட்டனர். இறுதியில் ஆங்கிலப்படை தோல்வியடைந்து கோட்டையைவிட்டு ஓடியது.

"வெற்றி! வெற்றி!" என்று முழக்கமிட்டனர் வீரர்கள்.

"இந்த வெற்றிக்குக் காரணமான குயிலி எங்கே?" என்று கேட்டார் வேலுநாச்சியார்.

"குயிலி தம் உடலில் தீ வைத்துக் கொண்டு ஆயுதக் கிடங்குக்குள் குதித்துவிட்டார்" என வீரர்கள் கூறினார்கள்.

"குயிலி தம் உயிரைத் தந்து நம்நாட்டை மீட்டுக் கொடுத்திருக்கிறார். அவரது துணிவுக்கும் தியாகத்திற்கும் வீரத்திற்கும் தலைவணங்குகிறேன்" என்று உணர்ச்சிப் பெருக்கோடு கூறினார் வேலுநாச்சியார்.

வேலுநாச்சியாரின் வீரம், மருது சகோதரர்களின் ஆற்றல், ஐதர்அலியின் உதவி ஆகியவற்றோடு குயிலியின் தியாகமும் இணைந்ததால் சிவகங்கை மீட்கப்பட்டது.



கற்பவை கற்றபின்

இக்கதையை நாடகமாக வகுப்பறையில் நடித்துக் காட்டுக.



மதிப்பீடு

L5R1SU

1. வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்ட நிகழ்வைச் சுருக்கமாக எழுதுக.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 158 20-03-2020 17:42:47

கற்கண்டு

இயல் ஏழு

நால்வகைச் சொற்கள்

L5ZWUH

தமிழில் சில எழுத்துகள் தனித்து நின்று பொருள் தரும். ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்து வந்தும் பொருள் தரும். இவ்வாறு பொருள் தருபவை சொல் எனப்படும்.

(எ.கா.) ஈ, பூ, மை, கல், கடல், தங்கம்.

இலக்கண அடிப்படையில் சொற்கள் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகைப்படும்.

பெயர்ச்சொல்

ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும்.

(எ.கா.) பாரதி, பள்ளி, காலை, கண், நன்மை, ஓடுதல்.

வினைச்சொல்

வினை என்னும் சொல்லுக்குச் செயல் என்பது பொருள். செயலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும்.

(எ.கா.) வா, போ, எழுது, விளையாடு.

இடைச்சொல்

பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் சார்ந்து வரும் சொல் இடைச்சொல் ஆகும். இது தனித்து இயங்காது.

(எ.கா.) உம் – தந்தையும் தாயும்
மற்று - மற்றொருவர்
ஐ - திருக்குறளை

உரிச்சொல்

பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றின் தன்மையை மிகுதிப்படுத்த வருவது உரிச்சொல் ஆகும்

(எ.கா.) மா – மாநகரம்
சால - சாலச்சிறந்தது

6th Std Tamil CBSE Pages 77-206.indd 159 20-03-2020 17:42:47

கற்பவை கற்றபின்

பின்வரும் தொடர்களில் உள்ள நால்வகைச் சொற்களை வகைப்படுத்துக.

1. வளவனும் தங்கையும் மாநகரப் பேருந்தில் ஏறினர்.
2. நாள்தோறும் திருக்குறளைப் படி.
3. "ஏழைக்கு உதவுதல் சாலச்சிறந்தது" என்றார் ஆசிரியர்.

கீழ்க்காணும் குறளில் உள்ள இடைச்சொல்லை எழுதுக.

மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு.

செய்தித்தாளில் விளையாட்டுச் செய்தி ஒன்றைப் படித்து, அதில் இடம்பெற்றுள்ள நால்வகைச் சொற்களை எழுதுக.

மதிப்பீடு

சொல்வகையை அறிந்து பொருந்தாச் சொல்லை வட்டமிடுக.

1. அ) படித்தாள்	ஆ) ஐ	இ) மற்று	ஈ) கு
2. அ) மதுரை	ஆ) கால்	இ) சித்திரை	ஈ) ஓடினான்
3. அ) சென்றாள்	ஆ) வந்த	இ) சித்திரை	ஈ) நடந்து
4. அ) மா	ஆ) ஐ	இ)உம்	ஈ) மற்று

குறுவினாக்கள்

1. சொல் என்றால் என்ன?
2. சொற்களின் வகைகளை எழுதுக.
3. பெயரையும் வினையையும் சார்ந்து வரும் சொற்களை எவ்வாறு வழங்குகிறோம்?

L69SH5

6th Std Tamil CBSE Pages 77-206.indd 160 20-03-2020 17:42:47

மொழியை ஆள்வோம்!

கேட்க

தமிழக விடுதலைப் போராட்ட வீரர்களுள் ஒருவரின் வரலாற்றைக் கேட்க.

கீழ்க்காணும் தலைப்புகளில் ஒரு நிமிடம் பேசுக.

1. பாரதியார் 2. காந்தியடிகள் 3. வேலுநாச்சியார்

சொல்லக் கேட்டு எழுதுக

இந்தியநாடு காந்தியடிகள் ஊன்றுகோல் வேலுநாச்சியார்

வாழ்த்துகள் மெய்யுணர்வு நாற்றங்கால் உரிச்சொல்

பொதுக்கூட்டம் குற்றாலம்

கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக

இந்திய விடுதலைக்குப் பாடுபட்டவர்களுள் ஒருவர் வ.உ.சிதம்பரனார். வ.உ.சி. அவர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்றிருந்தார். அவர், வழக்கறிஞர், எழுத்தாளர், பேச்சாளர், தொழிற்சங்கத் தலைவர் என்னும் பன்முகத்தன்மை பெற்றிருந்தார். ஆங்கிலேயரின் கப்பல்களுக்குப் போட்டியாக உள்நாட்டு இந்தியக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கியவர். 1906 ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் நாள் "சுதேசி நாவாய்ச் சங்கம்" என்ற கப்பல் நிறுவனத்தைப் பதிவு செய்தார். வ.உ.சி. சென்னைக்குச் செல்லும்போது பாரதியாரைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். மேலும், பாரதியார் பாடல்களை விரும்பிக் கேட்பார்.

1. சுதேசி நாவாய்ச் சங்கத்தை நிறுவியவர் யார்?
2. வ.உ.சி. சென்னைக்குச் செல்லும்போது யாரைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்?
3. வ. உ.சி. அவர்கள் யாருடைய பாடல்களை விரும்பிக் கேட்பார்?
4. வ. உ. சி. அவர்களின் பன்முகத் தன்மைகள் யாவை?
5. வ. உ. சி. அவர்கள் புலமை பெற்றிருந்த மொழிகள் யாவை?

இடம் அறிந்து பயன்படுத்துவோம்

ஒன்று என்பதைக் குறிக்க ஓர், ஒரு ஆகிய இரண்டு சொற்களும் பயன்படுகின்றன. உயிரெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் ஓர் என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும். உயிர்மெய்யெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் ஒரு என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 161 20-03-2020 17:42:47

(எ.கா.) ஓர் ஊர் ஓர் ஏரி

ஒரு நகரம் ஒரு கடல்

இவை போலவே, உயிரெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் அஃது என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும். உயிர்மெய்யெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் அது என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

(எ.கா.) அஃது இங்கே உள்ளது

அது நன்றாக உள்ளது

கீழ்க்காணும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக

1. ஒரு அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது.
2. ஒரு இரவும் ஓர் பகலும் சேர்ந்தது ஒருநாள்.
3. அது இல்லாத இடத்தில் எதுவும் நடக்காது.
4. அஃது நகரத்திற்குச் செல்லும் சாலை.
5. அது ஒரு இனிய பாடல்.

அகரவரிசைப்படுத்துக

பெண்கள், பாரதம், புதுமை, பீலி, பேருந்து, பூமி, பழங்கள், பொதுக்கூட்டம், பையன், போக்குவரத்து, பின்னிரவு

செயல்திட்டம்

காந்தியடிகளின் விடுதலைப் போராட்ட நிகழ்வுகள் பற்றிய படங்களைத் திரட்டிப் படத்தொகுப்பு ஒன்று உருவாக்குக.

கீழ்க்காணும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

தேசிய ஒருமைப்பாடு



மொழியோடு விளையாடு

இரண்டு சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்கு.

(எ.கா.) எனக்கு		எனக்குண்டு	எனக்கில்லை
வடக்கு		----------	----------
பந்து	உண்டு	----------	----------
பாட்டு	இல்லை	----------	----------

6th Std Tamil CBSE Pages 77-206.indd 162 20-03-2020 17:42:48

கட்டங்களில் உள்ள சொற்களைக் கொண்டு தொடர்கள் உருவாக்குக.

பாரி		வந்தன
எழிலி		வந்தான்
மாணவர்கள்	வீட்டுக்கு	வந்தது
மாடு		வந்தார்கள்
மாடுகள்		வந்தாள்

கட்டங்களில் மறைந்துள்ள நால்வகைச் சொற்களை எழுதுக

கு	ம்	பே	சி	வ	ன்
ம	ர	ரு	ப	ண்	தா
ர	க	ந்	று	டி	ய்
ன்	ந	து	உ	ம்	செ
ஐ	மா	டு	ம	ற்	று
ந	ட	க்	கி	றா	ள்

எ.கா: குமரன் – பெயர்ச்சொல்



நிற்க அதற்குத் தக...

என் பொறுப்புகள்

1. தாய் தந்தையின் வீட்டு வேலைகளில் என்னால் முடிந்த உதவிகளைச் செய்வேன்.
2. பள்ளி, பொது இடங்களில் உள்ள பொருட்களை உடைக்காமல் பாதுகாப்பேன்.
3. தமிழ்த்தாய் வாழ்த்து, நாட்டுப்பண், தேசியக்கொடி முதலியவற்றிற்கு உரிய மரியாதை தருவேன்.

கலைச்சொல் அறிவோம்

நாட்டுப்பற்று	–	Patriotism	இலக்கியம்	–	Literature
கலைக்கூடம்	–	Art Gallery	மெய்யுணர்வு	–	Knowledge of Reality



இணையத்தில் காண்க

விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்ட தமிழகத் தலைவர்கள் பற்றிய செய்திகளை அறிக.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 163 20-03-2020 17:42:48

இணையச் செயல்பாடுகள்

சொல் விளையாட்டு





படிநிலைகள்:

⇒ கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி, "சொல்லி அடி" செயலியை நிறுவுக.

⇒ செயலியைத் திறந்தவுடன் வரும் திரையில் கொடுக்கப்பட்டிருக்கும் 'படம் பார்த்துக் கண்டுபிடி', 'குறிப்புகள் மூலம் கண்டுபிடி', 'சொல்லுக்குள் சொல்', 'பிற மொழிச்சொற்கள்', 'எதிர்ச் சொற்கள்' மற்றும் 'இணைச்சொற்கள்' போன்ற தெரிவுகளில் ஏதேனும் ஒன்றைத் தெரிவு செய்க.

⇒ எடுத்துக்காட்டாகக் கொடுக்கப்பட்டிருக்கும் படங்களைக்கொண்டு அதன் பெயர்களை அடையாளம் காணுதல். இதே போன்று பிற விளையாட்டுகளின் மூலம் சொற்களஞ்சிய அறிவை வளர்த்துக் கொள்க.







செயல்பாட்டிற்கான உரலி

https://play.google.com/store/apps/details?id=nithra.tamil.word.game.solliadi

ஒத்த பிற செயலிகள்

1. மாயக்கட்டம் 2. புதிர்நானூறு 3. திருக்குறள் விளையாட்டு

*கொடுக்கப்பட்டுள்ள படங்கள்அடையாளத்திற்காக மட்டுமே

6th Std Tamil CBSE Pages 77-206.indd 164 20-03-2020 17:42:48

இயல் எட்டு

எல்லாரும் இன்புற



கற்றல் நோக்கங்கள்

- எல்லா உயிர்களிடத்தும் அன்பு செய்தல், பிறருக்கு உதவி செய்தல் போன்ற அறச்சிந்தனைகளை அறிதல்
- வாழும் முறைகளை அறிதல்
- பிறர் பசியைப் போக்கும் உயர் சிந்தனையை வளர்த்தல்
- பெற்றோரையும் பெரியோர்களையும் மதிக்கும் பண்பு பெறுதல்
- பிறர் பொருளை விரும்பாமை ஓர் அறம் என்பதை உணர்தல்
- அறுவகைப் பெயர்கள், இடுகுறிப்பெயர், காரணப்பெயர்களை அறிதல்

6th Std Tamil CBSE Pages 77-206.indd 165 20-03-2020 17:42:50

கவிதைப்பேழை

இயல் எட்டு

பராபரக் கண்ணி

L6INXS



அற இலக்கியங்கள் நம் முன்னோர்களின் வாழ்க்கை அனுபவங்களை உள்ளடக்கியவை. அவை வாழ்வியல் நெறிகளையும் ஒழுக்கங்களையும் விளக்குபவை. நம் தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள் உலகம் முழுமைக்கும் பொதுவானவை. அற இலக்கியங்கள் கூறும் கருத்துகளைக் கடைப்பிடித்து வாழ்வதே சிறந்த வாழ்வு. அவற்றை நாமும் பின்பற்றுவோம்; வாழ்வை வளமாக்குவோம்.

தம்உயிர்போல் எவ்வுயிரும் தானென்று தண்டருள்கூர்
*செம்மையருக்கு ஏவல்என்று செய்வேன் பராபரமே!**

அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந்து எய்தும் பராபரமே!

எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே
*அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே!**

– தாயுமானவர்

சொல்லும் பொருளும்

தண்டருள்	–	குளிர்ந்த கருணை	பணி	–	தொண்டு
கூர்	–	மிகுதி	எய்தும்	–	கிடைக்கும்
செம்மையருக்கு	–	சான்றோருக்கு	எல்லாரும்	–	எல்லா மக்களும்
ஏவல்	–	தொண்டு	அல்லாமல்	–	அதைத்தவிர
பராபரமே	–	மேலான பொருளே			

பாடலின் பொருள்

அனைத்து உயிர்களையும் தம் உயிர்போல் கருதும் கருணை மிகுந்த சான்றோர்க்குத் தொண்டு செய்ய வேண்டும்.


அன்பர்களுக்குத் தொண்டு செய்பவராக என்னை ஆக்கிவிட்டால் போதும். இன்பநிலை தானே வந்து சேரும்.

எல்லாரும் இன்பமாக வாழ வேண்டும். அதைத்தவிர, வேறு எதையும் நினைக்க மாட்டேன்.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 166 20-03-2020 17:42:50

நூல் வெளி

இப்பாடலை எழுதியவர் தாயுமானவர். திருச்சியை ஆண்ட விசயரகுநாத சொக்கலிங்கரிடம் தலைமைக் கணக்கராகப் பணி புரிந்தவர்.



இப்பகுதி தாயுமானவர் பாடல்கள் என்னும் நூலில் உள்ளது. இந்நூலைத் தமிழ் மொழியின் உபநிடதம் எனப் போற்றுவர். இப்பாடல்கள் 'பராபரக் கண்ணி' என்னும் தலைப்பில் உள்ளன. 'கண்ணி' என்பது இரண்டு அடிகளில் பாடப்படும் பாடல்வகை.

கற்பவை கற்றபின்

1. உங்கள் வீட்டில் வளர்க்கும் உயிரினங்கள் பற்றிக் கூறுக.
2. நீங்கள் பிறர் மகிழும்படி செய்த நிகழ்வுகளைக் கூறுக.

மதிப்பீடு

L6SJZF

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. தம் + உயிர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____
   அ) தம்முயிர் ஆ) தமதுயிர் இ) தம்உயிர் ஈ) தம்முஉயிர்
2. இன்புற்று + இருக்க என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____
   அ) இன்புற்றிருக்க ஆ)இன்புறுறிருக்க இ) இன்புற்றுஇருக்க ஈ) இன்புறு இருக்க
3. 'தானென்று' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____
   அ) தானெ + என்று ஆ)தான் + என்று இ) தா + னென்று ஈ) தான் + னென்று
4. 'சோம்பல்' என்னும் சொல்லுக்குரிய பொருத்தமான எதிர்ச்சொல் _____
   அ) அழிவு ஆ) துன்பம் இ) சுறுசுறுப்பு ஈ) சோகம்

நயம் அறிக

பராபரக்கண்ணி பாடலில் இடம் பெற்றுள்ள எதுகை, மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.

குறுவினா

1. யாருக்குத் தொண்டு செய்ய வேண்டும்?
2. இன்பநிலை எப்போது வந்து சேரும்?

சிறுவினா

பராபரக்கண்ணியில் தாயுமானவர் கூறுவன யாவை?

சிந்தனைவினா


குளிரால் வாடுபவர்களுக்கு நீங்கள் எவ்விதம் உதவுவீர்கள்?

6th Std Tamil CBSE Pages 77-206.indd 167 20-03-2020 17:42:52

இயல் எட்டு

நீங்கள் நல்லவர்

L72G23



இலக்கியங்கள் மக்களின் வாழ்வை நெறிப்படுத்தி அறவழியில் செலுத்துகின்றன. மனித வாழ்வைச் செம்மைப்படுத்துகின்றன. கவிஞர்கள் வாழ்வின் பொருளை உணர்த்தும் உயர்ந்த சிந்தனைகளைக் கூறியுள்ளனர். அத்தகைய சிந்தனைகளைக் கூறும் கவிஞர்கள் உலகெங்கும் உள்ளனர். அயல்நாட்டுக் கவிஞர் ஒருவரின் சிந்தனைகளை அறிவோம் வாருங்கள்.

வாழ்க்கை பின்திரும்பிச் செல்லாது
நேற்றுடன் ஒத்துப் போகாது
கொடுப்பவரின் பரிசுடன்
அவருக்குச் சமமாக எழுங்கள்
சிறகுகளின் மீது எழுவது போல

உழைக்கும்போது நீங்கள்
புல்லாங் குழலாகி விடுகிறீர்கள்
அதன் இதயம் காலத்தின் கிசுகிசுப்பை
ஓர் இசையாக மாற்றி விடுகிறது
உங்களுக்குள் இருக்கும்
நன்மையைப்பற்றித்தான்
நான் பேச முடியும்
தீமையைப் பற்றியல்ல

உங்கள்சுயத்துடன்
நீங்கள் ஒருமைப்பாடு கொண்டிருக்கும்போது
நீங்கள் நல்லவர்
என்னைப்போல் இரு
பழுத்து உன் உள்ளீடுகளை எல்லாம்
முழுசாய்க்கொடு என்று
பழம் வேரைப் பார்த்து
நிச்சயமாகச் சொல்லாது
கொடுப்பது பழத்தின் இயல்பு
பெறுவது வேரின் இயல்பு

உங்கள் பேச்சின் போது
நீங்கள் விழிப்புணர்ச்சியுடன்
இருப்பது நல்லது
உறுதியாகக் கால்பதித்து
உங்கள் குறிக்கோளை நோக்கி நடக்கையில்
நீங்கள் நல்லவர்

– கலீல் கிப்ரான்



6th Std Tamil CBSE Pages 77-206.indd 168 20-03-2020 17:42:53

சொல்லும் பொருளும்

சுயம் – தனித்தன்மை உள்ளீடுகள் – உள்ளே இருப்பவை

நூல் வெளி



கலீல் கிப்ரான் லெபனான் நாட்டைச் சேர்ந்தவர். கவிஞர், புதின ஆசிரியர், கட்டுரையாசிரியர், ஓவியர் எனப் பன்முக ஆற்றல் பெற்றவர்.

இப்பாடப்பகுதி கவிஞர் புவியரசு மொழிபெயர்த்த தீர்க்கதரிசி என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது.



கற்பவை கற்றபின்

1. உங்களது நிறை குறைகளைப் பட்டியலிடுக.
2. உங்கள் நண்பர் மனம் சோர்ந்து இருக்கும்போது அவரைத் தேற்றும் வழிகள் குறித்துக் கலந்துரையாடுக.

மதிப்பீடு

L7BC3Q

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பரிசு பெறும்போது நம் மனநிலை …… ஆக இருக்கும்.
   அ) கவலை ஆ) துன்பம் இ) மகிழ்ச்சி ஈ) சோர்வு
2. வாழ்வில் உயர கடினமாக …… வேண்டும்.
   அ) பேச ஆ) சிரிக்க இ) நடக்க ஈ) உழைக்க

குறுவினா

1. பழம், வேர் ஆகியவற்றின் இயல்புகள் யாவை?
2. உழைக்கும்போது என்னவாக ஆகிறோம்?

சிந்தனை வினா

1. நல்லவர் என்னும் பெயர் பெற நாம் என்ன செய்யலாம்?
2. உங்கள் குறிக்கோளை அடைய நீங்கள் செய்யும் முயற்சிகளை எழுதுக.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 169 20-03-2020 17:42:54

இயல் எட்டு

பசிப்பிணி போக்கிய பாவை

நாடகம்



உலகில் தோன்றிய அனைத்து உயிரினங்களுக்கும் இன்றியமையாதது உணவு. உலக உயிர்கள் அனைத்தும் வாழ்நாள் முழுவதும் உணவு தேடியே உழைக்கின்றன. உணவே உயிர்களுக்கு ஆதாரமாக விளங்குகிறது. "தனி ஒருவனுக்கு உணவு இல்லை எனில் இச்செகத்தினை அழித்திடுவோம்" என்றார் பாரதியார். பசித்திருக்கும் ஒருவனுக்கு உணவு அளிப்பது உயிர் கொடுப்பதற்கு இணையானது. அதுவே சிறந்த அறமாகும்.

காட்சி – 1

L7K85D

இடம் : மணிபல்லவத் தீவு

கதை மாந்தர்கள் : மணிமேகலை, தீவதிலகை.

மணிமேகலை : (தனக்குள்)

எங்குப் பார்த்தாலும் வெண்மணல் குன்றுகள். பூத்துக் குலுங்கும் செடிகொடிகள். அடர்ந்த மரங்கள். இடையிடையே பொய்கைகள். மனதை மயக்கும் காட்சிகள் . . . ஆகா! . . . அருமை! அருமை.!

(அப்போது அவள் எதிரில் தீவதிலகை வருகிறாள்)

தீவதிலகை : அழகிய பெண்ணே! நீ யார்? இங்கு எப்படி வந்தாய்?

மணிமேகலை : நான் பூம்புகார் நகரைச் சேர்ந்தவள். என் பெயர் மணிமேகலை. மணிமேகலா தெய்வம் என்னை இங்குக் கொண்டு வந்து சேர்த்தது. நீங்கள் யார் அம்மா? நீங்கள் எப்படி இத்தீவிற்கு வந்தீர்கள்?

தீவதிலகை : என் பெயர் தீவதிலகை. நான் இத்தீவையும் இதிலுள்ள புத்த பீடிகையையும் காவல் செய்து வருகிறேன். பெருமை மிக்கவர்கள் மட்டுமே இத்தீவிற்கு வந்து இந்தப் புத்த பீடிகையை வணங்க முடியும். நீ அந்தப் பெருமையைப் பெற்றிருக்கிறாய். இன்னும் நீ அறியவேண்டியது ஒன்று உண்டு.

மணிமேகலை : அஃது என்ன அம்மா?

தீவதிலகை : நம் எதிரில் பூக்கள் நிறைந்து விளங்கும் இந்தப் பொய்கையைப் பார். இதற்குக் கோமுகி என்று பெயர். கோ என்றால் பசு. முகி என்றால் முகம். பசுவின் முகம் போன்று அமைந்து இருப்பதால் இப்பொய்கை கோமுகி என்னும் பெயரைப் பெற்றது.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 170 20-03-2020 17:42:54

மணிமேகலை : ஓ! அப்படியா! வடிவத்திற்கு ஏற்ற பெயராக இருக்கிறதே!

தீவதிலகை : இப்பொய்கைக்கு வேறு ஒரு சிறப்பும் உண்டு. வைகாசித் திங்கள் முழு நிலவு நாளில் இப்பொய்கை நீரின் மேல் ஓர் அரிய பாத்திரம் தோன்றும். அஃது ஆபுத்திரன் கையிலிருந்த 'அமுதசுரபி' என்னும் பாத்திரம் ஆகும்.

மணிமேகலை : அமுதசுரபியா? அதன் சிறப்பு என்ன?

தீவதிலகை : அந்தப் பாத்திரத்தில் இட்ட உணவு எடுக்க எடுக்கக் குறையாமல் வளர்ந்து கொண்டே இருக்கும். அதனைக் கொண்டு எத்தனை பேருக்கு வேண்டுமானாலும் உணவு அளிக்கலாம்.

மணிமேகலை : அப்படியா! வியப்பாக உள்ளதே!

தீவதிலகை : ஆம். அந்தப் பாத்திரம் தோன்றும் வைகாசி முழுநிலவு நாள் இன்றுதான்.

(இவ்வாறு தீவதிலகை சொல்லிக் கொண்டிருக்கும் போதே பொய்கையின் நீருக்குமேல் அப்பாத்திரம் தோன்றுகிறது. மணிமேகலை அதனை வணங்கிக் கையில் எடுக்கிறாள்).

தீவதிலகை : மணிமேகலையே! உயிர்களின் பசிபோக்கும் அமுதசுரபியை நீ பெற்றுள்ளாய். இனி இவ்வுலக உயிர்களுக்குப் பசி இல்லாமல் போகும்படி உணவு வழங்கி உயர்வு பெறுவாயாக!

(மணிமேகலை தீவதிலகையை வணங்கி அமுதசுரபியுடன் விடை பெறுகிறாள்.

பூம்புகாருக்குத் திரும்புகிறாள். ஆதிரையிடம் உணவு பெறச் செல்கிறாள்.)

காட்சி – 2.

இடம் : ஆதிரையின் இல்லம்

கதை மாந்தர்கள் : ஆதிரை, மணிமேகலை

(ஆதிரையின் வீட்டு வாயிலில் மணிமேகலை கையில் அமுதசுரபியுடன் வந்து நிற்கிறாள்)

ஆதிரை : யார் நீங்கள் ?

மணிமேகலை : இவ்வூரில் வாழ்ந்த கோவலன், மாதவி ஆகியோரின் மகள் நான். உங்களின் சிறப்பை அறிந்து இப்பாத்திரத்தில் உணவு பெற வந்தேன்.

ஆதிரை : ஓ! நீங்கள் தான் மணிமேகலையா? உங்கள் பெற்றோரைப் பற்றி அறிவேன். உங்களை இன்று தான் காண்கிறேன். இஃது என்ன பாத்திரம்? மிகவும் அழகாக இருக்கிறதே!

மணிமேகலை : இஃது அள்ள அள்ளக் குறையாமல் உணவு வழங்கும் 'அமுதசுரபி' ஆகும்.

ஆதிரை : இப்பாத்திரம் உங்களுக்கு எப்படிக் கிடைத்தது?

(மணிமேகலை மணிபல்லவத் தீவில் அமுதசுரபி பெற்ற வரலாற்றைக் கூறுகிறாள்.)

ஆதிரை : (வியப்புடன்) அப்படியா! அமுதசுரபியின் சிறப்பை அறிந்தேன். அதில் இப்போதே உணவு இடுகின்றேன். ஆமாம். இதைக் கொண்டு என்ன செய்வீர்கள்?

6th Std Tamil CBSE Pages 77-206.indd 171 20-03-2020 17:42:54

மணிமேகலை : அன்பிற்குரிய ஆதிரையே, ஏழை மக்களின் பசியைப் போக்குவதே மேலான அறம். உணவு கொடுத்தவர்களே உயிரைக் கொடுத்தவர்கள் என்பதை உணர்ந்துள்ளேன். அதனால், இந்தப் பாத்திரத்தில் இருக்கும் உணவைப் பசியால் வாடும் மக்களுக்கு எல்லாம் வழங்கப் போகின்றேன்.



ஆதிரை : மிகவும் மகிழ்ச்சி. உங்கள் அறம் செழிக்கட்டும். மக்களின் பசிநோய் ஒழியட்டும். இதோ! இப்போதே அமுதசுரபியில் நான் உணவை இடுகிறேன்.

(ஆதிரை அமுதசுரபியில் உணவை இடுகிறாள். மணிமேகலை அமுதசுரபியைக் கொண்டு, உடல் குறையுற்றோர், பிணியாளர், ஆதரவு அற்றோர் ஆகியோருக்கு உணவு அளிக்கிறாள். பின்னர்ப் பூம்புகாரில் உள்ள சிறைச்சாலைக்குச் சென்று அங்கு உள்ளவர்களுக்கும் உணவிடுகிறாள்)

காட்சி – 3

இடம் : அரண்மனை

கதை மாந்தர்கள் : சிறைக்காவலர், மன்னர், மணிமேகலை.

சிறைக்காவலர் : வேந்தே! வணக்கம். இன்று காலை நம் சிறைச்சாலைக்கு இளம்பெண் ஒருத்தி வந்தாள். அவள் கையில் ஒரு சிறிய பாத்திரம் இருந்தது. அந்தச் சிறிய பாத்திரத்திலிருந்து உணவை அள்ளி அள்ளிச் சிறையில் இருந்த அனைவருக்கும் வழங்கினாள். ஆனால், அந்தப் பாத்திரத்தில் இருந்த உணவு குறையவே இல்லை.

மன்னர் : (வியப்புடன்) என்ன! ஒரு சிறிய பாத்திரத்திலிருந்து உணவை எடுத்து அத்தனை பேருக்கும் வழங்கினாளா? அப்பெண்ணை உடனே அழைத்து வா.

சிறைக் காவலர் : ஆகட்டும் மன்னா.

(சிறைக்காவலர்கள் மணிமேகலையை மன்னரிடம் அழைத்து வருகின்றனர்)

மணிமேகலை : (மன்னரை வணங்கி) அருள் உள்ளம் கொண்ட அரசே! வணக்கம்.

மன்னர் : பெண்ணே! நீ யார்? உணவு அள்ள அள்ளக் குறையாத இப்பாத்திரத்தின் பெயர் என்ன? இஃது உனக்கு எப்படிக் கிடைத்தது?

(மணிமேகலை தனக்கு அமுதசுரபி கிடைத்த வரலாற்றைக் கூறுகிறாள்)

மன்னர் : (மிக்க மகிழ்ச்சியுடன்) மாதவம் செய்தவளே! இந்த உலக மக்களின் பசிப்பிணி தீர்க்கும் பாங்குடைய அறத்தைச் செய்கிறாய். நான் உனக்குச் செய்ய வேண்டிய உதவி ஏதேனும் இருக்கிறதா?

மணிமேகலை : அன்பால் ஆட்சி செய்யும் அரசே! சிறைச்சாலையில் தண்டனை பெற்றுள்ளவர்கள் திருந்தி வாழ வழிகாண வேண்டும். சிறைக் கோட்டம் அறக்கோட்டமாக மாற வேண்டும்.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 172 20-03-2020 17:42:54

மன்னர் : அதற்கு என்னவெல்லாம் செய்ய வேண்டும்?

மணிமேகலை : வாழ்க்கைக்கு அறம் சொன்ன வள்ளுவர் வாழ்ந்த நாடு இது. புத்தர் பிறந்து அறம் போதித்த பூமி இது. எவை நன்மைகள் எவை தீமைகள் என்பவற்றை எல்லாம் தக்க அறிஞர்களைக் கொண்டு சிறையில் உள்ளவர்களுக்கு எடுத்துக் கூறவேண்டும். மேலும் அவர்களுக்குப் பெற்றோரை மதித்தல், முதியோரைப் பேணல், உறவினர்களை அரவணைத்தல் போன்றவற்றை வலியுறுத்தும் அறநெறிக் கல்வியை அளிக்க வேண்டும். இதுவே என் வேண்டுகோள் மன்னா!

மன்னர் : நல்லறம் புரியும் நங்கையே! உன் வேண்டுகோள் அனைத்தையும் நடைமுறைப்படுத்த ஆணை இடுகிறேன். நீ வாழ்க! உன் அறம் வளர்க!

மணிமேகலை : நன்றி மன்னா! (வணங்கி விடைபெறுகிறாள்).

கற்பவை கற்றபின்

1. பசிப்பிணி போக்கிய பாவை நாடகத்தை வகுப்பில் நடித்துக் காட்டுக.
2. பசிப்பிணி போக்கிய பாவை என்னும் நாடகத்தைக் கதை வடிவில் சுருக்கி எழுதுக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மணிமேகலா தெய்வம் மணிமேகலையை அழைத்துச் சென்ற தீவு ……
   அ) இலங்கைத் தீவு ஆ) இலட்சத் தீவு இ) மணிபல்லவத் தீவு ஈ) மாலத் தீவு
2. மணிமேகலை கையில் இருந்த அமுதசுரபியில் உணவு இட்ட பெண் ……
   அ) சித்திரை ஆ) ஆதிரை இ) காயசண்டிகை ஈ) தீவதிலகை

சொற்றொடரில் அமைத்து எழுதுக.

அ) செடிகொடிகள் ஆ) முழுநிலவு நாள் இ) அமுதசுரபி ஈ) நல்லறம்

குறுவினா

1. அமுதசுரபியின் சிறப்பு யாது?
2. 'கோமுகி" என்பதன் பொருள் யாது?

சிறுவினா

1. மணிபல்லவத்தீவு எவ்வாறு காட்சி அளித்தது?
2. மணிமேகலை மன்னரிடம் வேண்டியது யாது?

சிந்தனை வினா

அறச்செயல்கள் என்று நீங்கள் எவற்றை எல்லாம் கருதுகிறீர்கள்?


L7U471

6th Std Tamil CBSE Pages 77-206.indd 173 20-03-2020 17:42:54

விரிவானம்

இயல் எட்டு

பாதம்



கதை என்றால் எல்லோருக்கும் பிடிக்கும். கதையை விரும்பாதவர் யாரும் இருக்க மாட்டார்கள். அதிலும் நம்ப முடியாத கற்பனைகளைக் கொண்ட விந்தைக் கதைகள் அனைவரையும் கவரும். கதையில் சிறந்த கருத்தும் கூறப்படுமானால் அது சர்க்கரைப் பந்தலில் தேன்மழை பொழிந்தது போல மேலும் சுவையாக இருக்கும். அத்தகைய கதை ஒன்றைப் படிப்போமா?

என்றைக்கும்போல் தியேட்டர் வாசலில் உட்கார்ந்திருந்தார் காலணி தைக்கும் மாரி. காலையிலே தொடங்கிய மழை இடைவிடாது தனது அரூப விரல்களால் நகரமெங்கும் எதையோ தேடுவதுபோல் படர்ந்து கொண்டிருந்தது. எவரேனும் காலணி தைக்க வரக்கூடுமோ எனப் பசியுடன் காத்திருந்தார். ஒரு டீ குடித்தால் கூடப் பசி அடங்கிவிடும். அதற்கும் ஒரு ரூபாய் வேண்டி இருக்கிறதே என்ற யோசனை தோன்றியது. வலுத்துப் பெய்யத் துவங்கியது மழை. காற்றும் மழையோடு சேர்ந்து கொண்டது. அந்த நீண்ட தெருவில் எவருமில்லை. அவரும் ஒரு மரமும் எட்டுப் பழைய செருப்புகளும் தவிர.

சினிமா தியேட்டரின் குறுகிய வலப்புறச் சந்தில் இருந்து குடையில்லாமல் நனைந்தபடி வெளிப்பட்ட சிறுமியொருத்தி ஒரு மீனைப் போலச் சுழன்று அவர் அருகில் வந்து தனது இடக்கையில் வைத்திருந்த காலணி ஒன்றைக் குனிந்து தரையிலிட்டு, தைத்து வைக்கும்படி சொல்லிவிட்டு அவர் நிமிர்ந்து அவளைப் பார்க்கும் முன்பு தெருவில் ஓடி அடுத்த வளைவின் சுவர்களைக் கடந்து சென்றாள்.

அந்தக் காலணி இளம் சிவப்பு நிறத்தில் இருந்தது. வழக்கமான சிறுமிகளின் காலணிபோல அல்லாது வெல்வெட் தைத்துப் பூவேலை கொண்ட காலணியாக இருந்தது. அந்தக் காலணியில் சிறுமியின் பாதவாசனை படிந்திருந்தது. அது ஏதோ ஒரு பெயரிடப்படாத நறுமணம். கிழிசலைத் தைத்து வைத்துக் கொண்டு காத்திருந்தார். இப்போதே குடிக்கப் போகும் டீயின் ருசி நாக்கில் துளிர் விட்டது. காற்றும் மழையும் தீவிரமாகிச் சுழன்றன. பின் மதியம் அடங்கி ஓய்ந்த போது ஒளித் திவலைகள் ஆங்காங்கே தெரியத் துவங்கின.

அந்தச் சிறுமிக்காகக் காத்திருந்தார் மாரி. நிச்சயம் இரண்டு ரூபாய் கிடைக்கும். மாலைவரை அந்தச் சிறுமி வரவில்லை. ஆனால் மீண்டும் மழை வந்துவிட்டது. பின்பு

6th Std Tamil CBSE Pages 77-206.indd 174 20-03-2020 17:42:54



இரவு இரண்டாம் ஆட்டம் சினிமா வரை மரத்தடியில் காத்துக் கொண்டிருந்தார். அவள் வரவில்லை. மழைக்குப் பயந்து வீட்டிலேயே இருக்கக் கூடும் என நினைத்துக்கொண்டு காலணியைத் தன்னுடன் எடுத்துக் கொண்டு வீடு போய்ச் சேர்ந்தார். அடுத்த நாள் காலை மழையில்லை. நல்லவெயில்.

இளம் சிவப்பான அந்தக் காலணியை எடுத்து மீண்டும் ஒருமுறை நன்றாகத் துடைத்து, தனது நீலநிற விரிப்பில் வைத்துவிட்டு மற்ற வேலைகளில் ஈடுபடத் துவங்கினார். அன்றும் அந்தச் சிறுமி வரவேயில்லை. மறந்துவிட்டாளா? இல்லை, யாரிடம் கொடுத்தோம் எனத் தெரியாமல் அலைகிறாளா தெரியவில்லையே! என்றபடி இரவில் அதை வீட்டிற்கு எடுத்துப்போனார். மறுநாள், மூன்றாம் நாள் என நாட்கள் கடந்தபோதும் அவள் வரவேயில்லை. ஆனால் அவர் அந்தக் காலணியைத் தினமும் கொண்டுவந்து காத்துக்கிடந்தார்.

ஓர் இரவில் மாரியின் மனைவி அந்தக் காலணியைக் கண்டாள். அதன் வசீகரம் தொற்றிக்கொள்ளக் கையில் எடுத்துப் பார்த்தாள். சிறுமியின் காலணி போலிருந்தது. அதைப் போட்டுப் பார்க்க ஆசையாக இருந்தது. தனது வலது காலில் அந்தக் காலணியை நுழைத்துப் பார்த்தாள். அது அவளுக்குச் சரியாக இருந்தது. சிறுமியின் காலணி அவளுக்குப் பொருந்துகிறதே என்றவள் மற்றொரு காலணியைத் தேடிப் பையைக் கொட்டினாள். சப்தம்கேட்டு மாரி கோபமாக உள்ளே வந்தபோது, மனைவியின் வலக்காலில் இருந்த சிவப்புக் காலணியைக் கண்டார். ஆத்திரத்துடன் திட்டி, அவள் சொல்வதைக் கேட்காமல் கழற்றச் சொல்லிக் கிழிந்துவிட்டதா எனப் பார்க்கக் கையில் எடுத்து உயர்த்தினார். கிழியவில்லை. சிறுமியின் காலணி இவளுக்குத் தைத்தது போலச் சரியாக இருக்கிறதே என்ற வியப்புடன் அது ஒற்றைக் காலணி எனப் பிடுங்கிப் பையில் போட்டுக் கட்ட முயன்றார். அவள் முணுமுணுத்தபடி பின் வாசலுக்குப் போய்விட்டாள். காலணி அவருக்குள்ளும் ஆசையைத் தூண்டியது, போட்டுப் பார்க்கலாமென. தன் வலக்காலைச் சிறிய காலணியில் நுழைத்தபோது அது தனக்கும் சரியாகப் பொருந்துவதைக் காண வீடுதிரும்பியபோது இரண்டு வேறுபட்ட அளவுள்ள கால்களுக்கு எப்படி ஒரே காலணி பொருந்துகிறது. அவரால் யோசிக்க முடியவில்லை. எப்படியோ உரியவரிடம் அதை ஒப்படைத்துவிட வேண்டியது தனது வேலை என்றபடி பையில் போட்டுக் கொண்டார்.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 175 20-03-2020 17:42:55

மறுநாள் பகலில் உடன் தொழில் செய்யும் நபரிடம் இந்தக் காலணியின் விசித்திரம் பற்றிச் சொல்ல அவர் தன் வலக் காலைப் பொருத்திப் பார்த்தார். அவருக்கும் சரியாக இருந்தது. இச்செய்தி நகரில் பரவியது. அந்தக் காலணியைப் போட்டுப் பார்க்க ஆசை கொண்ட பலர் தினமும் வந்து அணிந்து தமக்கும் சரியாக உள்ளதைக் கண்டு அதிசயித்துப் போயினர். அந்தக் காலணி ஒருவயது குழந்தை முதல் வயசாளி வரை எல்லோருக்கும் பொருந்துவதாக இருந்தது. அதைக் காலில் அணிந்தவுடன் மேகத்துணுக்குகள் காலடியில் பரவுவதுபோலவும், பனியின்மிருது படர்வதுபோலவும் இருப்பதாகப் பலர் கூறினர். அவர், வராது போன, காலணிக்கு உரிய சிறுமியை நினைத்துக் கொண்டார்.

கோடைக்காலம் பிறந்திருந்தது. எண்ணற்ற சிறுமிகளும் பெண்களும் ஆண்களும் அந்த விந்தைக் காலணியை அணிந்து பார்த்துப் போயினர். அதை அணிந்து பார்க்க அவர்களே பணம் தரவும் தொடங்கினர். தினசரியாகப் பணம் பெருகிக் கொண்டே போனது. வருடங்கள் புரண்டன. அவர் பசு இரண்டு வாங்கினார். வீடு கட்டிக் கொண்டார். வாழ்வின் நிலை உயர்ந்து கொண்டே போனது. இப்போதும் அந்தச் சிறுமி வரக்கூடும் என்று பலர் முகத்தின் ஊடேயும் அவளைத் தேடிக் கொண்டிருந்தார்.

அவர் வருவதற்கு முன்பாகவே காலையில் பலர் மரத்தடியில் அவருக்காகக் காத்து நிற்பார்கள். அணிந்து பார்ப்பார்கள். முகத்தில் சுருக்கம் பீறிடும். கலைந்து போவார்கள். இப்படியாக மாரியின் முப்பது வருடம் கடந்தது. அந்த வருடம் மழைக்காலம் உரத்துப் பெய்தது. ஓர் இரவில் காலணியோடு வீடு திரும்பும்போது அதைத் திருட முனைந்த இருவர் தடியால் தாக்க, பலமிழந்து கத்தி வீழ்ந்தார். யாரோ அவரைக் காப்பாற்றினார்கள். காலணி திருடு போகவில்லை. ஆனால், தலையில் பட்ட அடி அவரைப் பலவீனமடையச் செய்தது. வீட்டைவிட்டு வெளியேறி நடக்க முடியாதவராகிப் போனார். அந்தச் சிறுமிக்காக அவர் மனம் காத்துக் கொண்டே இருந்தது. தனது மரணத்தின் முன்பு ஒரு தரம் அவளைச் சந்திக்க முடியாதோ என்ற ஏக்கம் பற்றிக் கொண்டது. தான் அவளால் உயர்வு அடைந்ததற்கான கடனைச் சுமந்தபடி மரிக்க வேண்டும் என்பது வேதனை தருவதாக இருந்தது. பார்வையாளர்கள் அவர் வீடு தேடி வந்து அணிந்து பார்த்துப் போயினர்.

ஒரு மழை இரவில் பார்வையாளர் யாவரும் வந்து போய் முடிந்த பின்பு கதவை மூடி மாரி உள்ளே திரும்பும் போது யாரோ கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. கதவைத் திறந்த படி, "காலையில் வாருங்கள்" எனச் சொன்னார். மத்திய வயதில் ஒரு பெண் நனைந்தபடி நின்றிருந்தாள். அவள் தணிவான குரலில் சொன்னாள், "வெகு தாமதமாகிவிட்டது எனது காலணியைத் தைத்துவிட்டீர்களா இல்லையா?"

அவளை அடையாளம் கண்டுவிட்டார் மாரி. அதே சிறுமி. அந்தப் பெண் தன் கையிலிருந்த கூடையிலிருந்து சிவப்புநிற இடக்கால் காலணியை எடுத்து அவர் முன்னே காட்டிச் சொன்னாள். "இதன் வலது காலணி தைக்கக் கொடுத்தது நினைவிருக்கிறதா?" அவர் தலையாட்டியபடி தன்னிடமிருந்த காலணியை எடுத்து வந்து துடைத்து அவளிடம் காட்டினார். அவள் கைகளில் தந்தபடி அதன் விந்தையை எடுத்துச் சொன்னார். "இந்தக்

6th Std Tamil CBSE Pages 77-206.indd 176 20-03-2020 17:42:56

காலணி உலகின் எல்லாப் பாதங்களுக்கும் பொருந்துகிறது."

அவள் ஆச்சரியமின்றித் தலையாட்டினாள். தன்னிடம் இருந்த நாணயம் எதையோ அவரிடம் கூலியாகக் கொடுத்துவிட்டுக் கூடையில் அந்தக் காலணியைப் போட்டாள். இந்தச் சொத்து, வாழ்வு யாவும் அவள் தந்ததுதான். அவள் யார் என அறிய ஆவலாகிக் கேட்டார். பதிலற்றுச் சிரித்தபடி மீண்டும் மழையில் வெளியேறிச் சென்றுவிட்டாள். தெருவின் விளக்குக் கம்பம் அருகே வந்து நின்ற அவள் கூடையில் இருந்த இரண்டு காலணிகளையும் எடுத்துத் தரையிலிட்டு காலில் அணிய முயன்றாள். அவள் கொண்டு வந்த இடது காலணி சரியாகப் பொருந்தியது. தைத்து வாங்கின வலது பாதக் காலணியை அணிந்த போது அது பொருந்தவில்லை. சிறியதாக இருந்தது.



நூல் வெளி

எஸ்.ராமகிருஷ்ணன் தற்காலத் தமிழ் எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தக்கவர். நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைத் தொகுப்புகள், சிறுவர் இலக்கியங்கள் என இவருடைய படைப்புகள் நீள்கின்றன. உபபாண்டவம், கதாவிலாசம், தேசாந்திரி, கால் முளைத்த கதைகள் முதலிய ஏராளமான நூல்களை எழுதியுள்ளார்.

இக்கதை தாவரங்களின் உரையாடல் என்னும் சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.



கற்பவை கற்றபின்

1. தனக்குப் பெரும் வருமானத்தைத் தந்த காலணியைத் திரும்ப ஒப்படைக்க வேண்டுமென மாரி நினைத்தது ஏன்? வகுப்பில் கலந்துரையாடுக.
2. மீண்டும் வந்த பெண்ணுக்குக் காலணி பொருந்தாதது ஏன்?
3. மாரிக்குக் கிடைத்தது போன்ற காலணி உங்களுக்குக் கிடைத்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? வகுப்பில் உரையாடுக.
4. பாதம் என்னும் கதையின் மூலம் நீங்கள் அறிந்து கொண்ட கருத்து யாது?



மதிப்பீடு

'பாதம்' கதையைச் சுருக்கி எழுதுக.

L8CVAB

6th Std Tamil CBSE Pages 77-206.indd 177 20-03-2020 17:42:56

கற்கண்டு

இயல் எட்டு

பெயர்ச்சொல்

மரம், பள்ளிக்கூடம், சித்திரை, கிளை, இனிப்பு, பாடுதல் ஆகிய சொற்களைக் கவனியுங்கள். இவை அனைத்தும் பெயரைக் குறிக்கின்றன. இவ்வாறு ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும். பெயர்ச்சொல் ஆறு வகைப்படும். அவையாவன

1. பொருட்பெயர்
2. இடப்பெயர்
3. காலப்பெயர்
4. சினைப்பெயர்
5. பண்புப்பெயர்
6. தொழிற்பெயர்

L9JMUM

பொருட்பெயர்

பொருளைக் குறிக்கும் பெயர் பொருட்பெயர் எனப்படும். இஃது உயிருள்ள பொருள்களையும் உயிரற்ற பொருள்களையும் குறிக்கும்.

(எ.கா.) மரம், செடி, மயில், பறவை, புத்தகம், நாற்காலி.

இடப்பெயர்

ஓர் இடத்தின் பெயரைக் குறிக்கும் பெயர் இடப்பெயர் எனப்படும்.

(எ.கா.) சென்னை, பள்ளி, பூங்கா, தெரு.

காலப்பெயர்

காலத்தைக் குறிக்கும் பெயர் காலப்பெயர் எனப்படும்.

(எ.கா.) நிமிடம், நாள், வாரம், சித்திரை, ஆண்டு.

சினைப்பெயர்

பொருளின் உறுப்பைக் குறிக்கும் பெயர் சினைப்பெயர் எனப்படும்.

(எ.கா.) கண், கை, இலை, கிளை.

பண்புப்பெயர்

பொருளின் பண்பைக் குறிக்கும் பெயர் பண்புப்பெயர் எனப்படும்.

(எ.கா.) வட்டம், சதுரம், செம்மை, நன்மை.

தொழிற்பெயர்

தொழிலைக் குறிக்கும் பெயர் தொழிற்பெயர் எனப்படும்.

(எ.கா.) படித்தல், ஆடுதல், நடித்தல்.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 178 20-03-2020 17:42:56

அறுவகைப் பெயர்ச்சொற்களுக்கான சான்றுகளை தொடரில் அமைத்து எழுதுவோம்.

காவியா புத்தகம் படித்தாள் – பொருட்பெயர்
காவியா பள்ளிக்குச் சென்றாள் – இடப்பெயர்
காவியா மாலையில் விளையாடினாள் – காலப்பெயர்
காவியா தலை அசைத்தாள் – சினைப்பெயர்
காவியா இனிமையாகப் பேசுவாள் – பண்புப்பெயர்
காவியாவுக்கு நடனம் ஆடுதல் பிடிக்கும் – தொழிற்பெயர்

இடுகுறிப்பெயர், காரணப்பெயர்

நம் முன்னோர் பெயர்ச்சொற்களை அவை வழங்கும் அடிப்படையில் இடுகுறிப்பெயர், காரணப்பெயர் என இருவகைப்படுத்தினர்.

இடுகுறிப்பெயர்

நம் முன்னோர் சில பொருள்களுக்குக் காரணம் கருதாமல் பெயரிட்டு வழங்கினர். அவ்வாறு இட்டு வழங்கிய பெயர்கள் இடுகுறிப்பெயர்கள் ஆகும்.

(எ.கா.) மண், மரம், காற்று

இடுகுறிப் பொதுப்பெயர், இடுகுறிச் சிறப்புப்பெயர் என இடுகுறிப்பெயர் இரண்டு வகைப்படும்.

இடுகுறிப் பொதுப்பெயர்

ஓர் இடுகுறிப்பெயர் அத்தன்மை உடைய எல்லாப் பொருள்களையும் பொதுவாகக் குறிப்பது இடுகுறிப் பொதுப்பெயர் எனப்படும்.

(எ.கா.) மரம், காடு.

இடுகுறிச் சிறப்புப்பெயர்

ஓர் இடுகுறிப்பெயர் குறிப்பாக ஒரு பொருளை மட்டும் குறிப்பது இடுகுறிச் சிறப்புப்பெயர் எனப்படும்.

(எ.கா.) மா, கருவேலங்காடு.

காரணப்பெயர்

நம் முன்னோர் சில பொருள்களுக்குக் காரணம் கருதிப் பெயரிட்டனர். இவ்வாறு காரணத்தோடு ஒரு பொருளுக்கு வழங்கும் பெயர் காரணப்பெயர் எனப்படும்.

(எ.கா.) நாற்காலி, கரும்பலகை

காரணப் பொதுப்பெயர், காரணச் சிறப்புப்பெயர் எனக் காரணப் பெயர் இரு வகைப்படும்.

காரணப் பொதுப்பெயர்

காரணப்பெயர் குறிப்பிட்ட காரணமுடைய எல்லாப் பொருள்களையும் பொதுவாகக் குறித்தால் அது, காரணப்பொதுப்பெயர் எனப்படும்.

(எ.கா.) பறவை, அணி

6th Std Tamil CBSE Pages 77-206.indd 179 20-03-2020 17:42:56

காரணச் சிறப்புப்பெயர்

குறிப்பிட்ட காரணமுடைய எல்லாப் பொருள்களுள் ஒன்றை மட்டும் சிறப்பாகக் குறிப்பது காரணச்சிறப்புப்பெயர் ஆகும்.

(எ.கா.) வளையல், மரங்கொத்தி



கற்பவை கற்றபின்

கீழ்க்காணும் பத்தியைப் படித்து அதில் இடம் பெற்றுள்ள இடுகுறி, காரணப் பெயர்களை அறிந்து எழுதுக.

நீர் வற்றிப்போன குளத்தில் செந்தாமரை, ஆம்பல், கொட்டி, நெய்தல் முதலான கொடிகளும் வாடியிருந்தன. நீர் நிரம்பி இருந்தவரை ஊர் மக்களும், விலங்குகளும் மரங்கொத்திபோன்ற பறவைகளும் பயன்படுத்தி மகிழ்ந்த குளம் அது. காலை நேரம் சூரியன் காய்ந்து கொண்டிருந்தது. இப்போது அக்குளத்தைக் கண்டுகொள்வார் யாருமில்லை.



மதிப்பீடு

L9TIHA

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. இடுகுறிப்பெயரை வட்டமிடுக.
   அ) பறவை ஆ) மண் இ) முக்காலி ஈ) மரங்கொத்தி
2. காரணப்பெயரை வட்டமிடுக.
   அ) மரம் ஆ) வளையல் இ) சுவர் ஈ) யானை
3. இடுகுறிச்சிறப்புப் பெயரை வட்டமிடுக.
   அ) வயல் ஆ) வாழை இ) மீன்கொத்தி ஈ) பறவை

குறுவினா

1. பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. இடுகுறிப்பெயர் என்றால் என்ன?
3. காரணப்பெயர் என்றால் என்ன?

சிறுவினா

1. அறுவகைப் பெயர்ச்சொற்களை எழுதுக.
2. அறுவகைப் பெயர்ச்சொற்களுக்கும் எடுத்துக்காட்டுகள் தருக.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 180 20-03-2020 17:42:56

மொழியை ஆள்வோம்!

கேட்க

தத்துவப் பாடல் ஒன்றைக் கேட்டு மகிழ்க.

பேசுக

உங்கள் பகுதிகளில் செயல்படும் தொண்டு நிறுவனங்கள் குறித்துப் பேசுக.

படித்து மகிழ்க

அன்பினில் இன்பம் காண்போம்;
அறத்தினில் நேர்மை காண்போம்;
துன்புறும் உயிர்கள் கண்டால்;
துரிசறு கனிவு காண்போம்;
வன்புகழ் கொடையிற் காண்போம்;
வலிமையைப் போரில் காண்போம்;
தன்பிறப் புரிமை யாகத்
தமிழ்மொழி போற்றக் காண்போம்.

– அ.முத்தரையனார், மலேசியக் கவிஞர்.

குறிப்புகளைக் கொண்டு கதை எழுதுக.

நாய்க்குட்டி - குழிக்குள் – கத்தும் சத்தம் – முகிலன் – முதலுதவி – பால் – தூங்கியது – வாலாட்டியது.

அகராதியைப் பயன்படுத்தி பொருள் எழுதுக.

1. கருணை 2. அச்சம் 3. ஆசை

கீழ்க்காணும் பெயர்ச் சொற்களை அகரவரிசையில் எழுதுக.

பூனை, தையல், தேனீ, ஓணான், மான், வெளவால், கிளி, மாணவன், மனிதன், ஆசிரியர், பழம்

பின்வரும் தொடர்களில் அடிக்கோடிட்ட சொற்கள் எவ்வகைப் பெயர்கள் என எழுதுக.

1. <u>கைகள்</u> இரண்டும் பிறர்க்கு உதவவே எனச் சான்றோர் கருதினர். – _____.
2. அறம், பொருள், இன்பம், வீடு <u>அடைதல்</u> நூலின் பயனாகும். – _____.
3. குழந்தை <u>தெருவில்</u> விளையாடியது. – _____.
4. நீதிநூல் பயில் என்கிறார் <u>பாரதியார்</u>. – _____.
5. <u>மாலை</u> முழுதும் விளையாட்டு. – _____.
6. <u>அன்பு</u> நிறைய உடையவர்கள் மேலோர். – _____.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 181 20-03-2020 17:42:56

பின்வரும் தொடர்களில் உள்ள பெயர்ச்சொற்கள் எவ்வகைப் பெயர்கள் என எழுதுக.

விடியலில் துயில் எழுந்தேன் – _____

இறைவனைக் கை தொழுதேன் – _____

நான் மதுரைக்குச் சென்றேன் – _____

புத்தகம் வாங்கி வந்தேன் – _____

கற்றலைத் தொடர்வோம் இனி – _____

நன்மைகள் பெருகும் நனி – _____

கீழ்க்காணும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

அறம் செய விரும்பு



மொழியோடு விளையாடு

கட்டங்களில் உள்ள வார்த்தைகளைக் கொண்டு தொடர்களை அமைக்க.

வெல்லும்	கேளிர்	தீதும்
வாரா	நன்றும்	யாவரும்
யாதும் ஊரே	பிறர்தர	வாய்மையே

சொற்றொடரை முறையாக வரிசைப்படுத்துங்கள்

1. சிறைக் கோட்டத்தை அறக்கோட்டமாக மாற்றுமாறு மன்னனிடம் வேண்டினாள்.
2. மணிமேகலை மணிபல்லவத் தீவிற்குச் சென்றாள்.
3. சிறைச் சாலைக்குச் சென்று உணவிட்டாள்.
4. அமுதசுரபியைப் பெற்றாள்.
5. ஆதிரையிடம் சென்று முதல் உணவைப் பெற்றாள்.

ஒலி வேறுபாடறிந்து வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

1. அரம் – அறம்

---

2. மனம் – மணம்

இருபொருள் தருக.

(எ.கா.) ஆறு – நதி

ஆறு – எண்

1. திங்கள் 2. ஓடு 3. நகை

6th Std Tamil CBSE Pages 77-206.indd 182 20-03-2020 17:42:56

புதிர்ச் சொல் கண்டுபிடி

1. இச்சொல் மூன்றெழுத்துச் சொல். உயிர் எழுத்துகள் வரிசையில் முதல் எழுத்து இச்சொல்லின் முதல் எழுத்து. வல்லின மெய் எழுத்துகளின் வரிசையில் கடைசி எழுத்து இச்சொல்லின் இரண்டாம் எழுத்து. வாசனை என்னும் பொருள்தரும் வேறு சொல்லின் கடைசி எழுத்து இச்சொல்லின் மூன்றாம் எழுத்து. அஃது என்ன?

கட்டத்தில் உள்ள சொற்களைக் கொண்டு தொடர்கள் உருவாக்குக.

மாலையில்	கற்போம்
பிறருக்கு உதவி	எழுவோம்
பெரியோரை	விளையாடுவோம்
நூல் பல	செய்வோம்
உடற்பயிற்சி	புரிவோம்
அதிகாலையில்	வணங்குவோம்

செயல்திட்டம்

1. நீங்கள் சேவை செய்ய விரும்பும் பணிகளைப் பட்டியலிடுக.
2. உயர்ந்த குறிக்கோளை அடைந்து வெற்றி பெற்ற சாதனையாளர்கள் தொகுப்பு ஒன்றைத் தயாரிக்க.



நிற்க அதற்குத் தக...

என் பொறுப்புகள்

1. உணவை வீணாக்க மாட்டேன்.
2. நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவேன்.
3. பயணம் செய்யும் போது தேவைப்படுவோருக்கு எழுந்து இடம் தருவேன்.
4. எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துவேன்.

கலைச்சொல் அறிவோம்

1. அறக்கட்டளை – *Trust*
2. தன்னார்வலர் – *Volunteer*
3. இளம் செஞ்சிலுவைச் சங்கம் – *Junior Red Cross*
4. சாரண சாரணியர் – *Scouts & Guides*
5. சமூகப் பணியாளர் – *Social Worker*



இணையத்தில் காண்க

பொதுத்தொண்டு செய்யும் நிறுவனங்களின் பெயர்களை இணையத்தில் கண்டு திரட்டுக.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 183 20-03-2020 17:42:56

இயல் எட்டு

திருக்குறள்

LA3EXX

அறன் வலியுறுத்தல்

1. *மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்*
   *ஆகுல நீர பிற.**
   உள்ளத்தில் குற்றம் இல்லாமல் இருப்பதே சிறந்த அறமாகும். மற்றவை எல்லாம் வெறும் ஆரவாரமே.
2. *அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்*
   இழுக்கா இயன்றது அறம்.
   பொறாமை, பேராசை, சினம், கடுஞ்சொல் பேசுதல் ஆகிய நான்கும் இல்லாமல் வாழ்வதே அறம் ஆகும்.

ஈகை

3. *வறியார்க்குஒன்று ஈவதே ஈகைமற்று எல்லாம்*
   குறியெதிர்ப்பை நீரது உடைத்து.
   இல்லாதவர்க்கு தருவதே ஈகை ஆகும். மற்றவை எல்லாம் பயனை எதிர்பார்த்துச் செய்பவை ஆகும்.
4. *ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை*
   வைத்திழக்கும் வன்க ணவர்.
   இல்லாதவர்க்குத் தருவதால் உண்டாகும் இன்பத்தை அறியாதவர்கள் பொருளைச் சேர்த்து வைத்துப் பின் அதனை இழந்து விடுவார்கள்.

இன்னா செய்யாமை

5. *இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண*
   *நன்னயம் செய்து விடல்.**
   நமக்குத் துன்பம் செய்தவர் நாணும்படி அவருக்கு நன்மை செய்வதுதான் அவரைத் தண்டிக்கும் வழியாகும்.
6. *அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்*
   தந்நோய்போல் போற்றாக் கடை.
   பிற உயிரின் துன்பத்தைத் தமது துன்பம் போல் கருதாவிட்டால் தாம் பெற்றுள்ள அறிவால் எந்தப் பயனும் இல்லை.
7. *எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்*
   மாணாசெய் யாமை தலை.
   நம் உள்ளம் ஏற்றுக் கொள்ளாத எச்செயலையும் எக்காலத்திலும் யார்க்கும் சிறிதளவுகூடச் செய்யக் கூடாது.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 184 20-03-2020 17:42:56

கொல்லாமை

8. *பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.**
தம்மிடம் இருப்பவற்றைப் பிற உயிர்களுக்குப் பகிர்ந்து கொடுத்துக் காப்பாற்ற வேண்டும். அதுவே அறநூல்களில் கூறப்படும் அறங்களுள் சிறந்தது.

பெரியாரைப் பிழையாமை

9. *ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்*
போற்றலுள் எல்லாம் தலை
ஆற்றல் உடையவர்களை இகழக் கூடாது. அதுவே தம்மைத் தீங்கிலிருந்து காத்துக்கொள்ளும் வழிகளுள் சிறந்த வழியாகும்.

10. *எரியால் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்*
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்.
தீயினால் சுடப்பட்டவர்கூடப் பிழைத்துக்கொள்ள முடியும். ஆனால் பெரியவர்களுக்குத் தீங்கு செய்தவர் தப்ப முடியாது.



மதிப்பீடு

LACAZK

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஏழைகளுக்கு உதவி செய்வதே …… ஆகும்.
அ) பகை ஆ) ஈகை இ) வறுமை ஈ) கொடுமை

2. பிற உயிர்களின் .....க் கண்டு வருந்துவதே அறிவின் பயனாகும்.
அ) மகிழ்வை ஆ) செல்வத்தை இ) துன்பத்தை ஈ) பகையை

3. உள்ளத்தில் ..... இல்லாமல் இருப்பதே சிறந்த அறமாகும்.
அ) மகிழ்ச்சி ஆ) மன்னிப்பு இ) துணிவு ஈ) குற்றம்

இடம் மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக.

வறியார்க்கு ஒன்று ஈகைமற்று ஈவதே எல்லாம்
குறியெதிர்ப்பை உடைத்து நீரது.

எனைத்தானும் யார்க்கும் எஞ்ஞான்றும் மனத்தானாம்
மாணாசெய் தலை யாமை.

குறுவினா

1. அறிவின் பயன் யாது?
2. பிற உயிர்களை எவ்வாறு காப்பாற்ற வேண்டும்?
3. ஈகை பற்றிய வள்ளுவரின் கருத்து யாது?

6th Std Tamil CBSE Pages 77-206.indd 185 20-03-2020 17:42:57

பின்வரும் நிகழ்வைப் படித்து அதற்குப் பொருத்தமான திருக்குறள் எதுவெனக் காண்க.

நிறைமதி அவளுடைய தோழிகளுடன் பூங்காவிற்குச் சென்றாள். அங்குள்ள இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தாள். நண்பகல் நேரத்தில் ஒரு மரத்தின் கீழ் அமர்ந்து தான் கொண்டு வந்திருந்த உணவைத் தோழிகளுடன் பகிர்ந்து உண்டாள். அவர்களின் அருகே பறவைகள் பறந்து வந்தன. தன்னிடம் இருந்த உணவைப் பறவைகளுக்கும் அளித்தாள்.

1. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
   ஆகுல நீர பிற.
2. எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
   மாணாசெய் யாமை தலை.
3. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
   தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

இணையச் செயல்பாடுகள்







படிகள்:

⇒ கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தித் திருக்குறள் என்னும் செயலியைப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.

⇒ செயலியின் முதல் பக்கத்தில் ஆரம்பிக்க, தொடர்க, வகைப்பாட்டியல் போன்ற தெரிவுகள் தோன்றும். இதன் வழியே விரும்பும் திருக்குறளை அறிக.

⇒ மேலும் குறள் விளையாட்டு என்பதைத் தெரிவு செய்து மாறி இருக்கும் சீர்களை வரிசைப்படுத்தித் திருக்குறளை விளையாட்டின் மூலம் அறிக.







செயல்பாட்டிற்கான உரலி

https://play.google.com/store/apps/details?id=com.EL4.KuralGame&hl=en

*கொடுக்கப்பட்டுள்ள படங்கள் அடையாளத்திற்காக மட்டுமே

6th Std Tamil CBSE Pages 77-206.indd 186 20-03-2020 17:42:57

இயல் ஒன்பது

இன்னுயிர் காப்போம்



கற்றல் நோக்கங்கள்

- பிற உயிர்களைத் தம் உயிர் போல் மதித்தல்
- பிற உயிர்களுக்குத் துன்பம் தராமல் இருத்தல்
- உதவி செய்யும் பண்பைப் பெறுதல்
- உறுப்பு தானத்தின் முக்கியத்துவத்தை அறிதல்
- இயல்பு நவிற்சி, உயர்வு நவிற்சி அணிகளை இனம் காணுதல்

6th Std Tamil CBSE Pages 77-206.indd 187 20-03-2020 17:42:59

கவிதைப்பேழை

ஆசியஜோதி

LAL728



இரக்கம் என்பது தலைசிறந்த பண்பு. மனிதரிடம் மட்டுமன்று, மற்ற எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் கொள்ள வேண்டும். பிற உயிர்களைத் தம்முயிர் போல் எண்ணிக் காக்க வேண்டும். அதுவே சான்றோர் போற்றும் உயிர் இரக்கம் ஆகும். அவ்விரக்கமே மனித குலத்தை வாழ வைக்கிறது. உலக உயிர்கள் எல்லாம் துன்பம் இன்றி இன்புற்று வாழ வேண்டும் என்று விரும்பியவர் புத்தர். அவரின் அறவுரையை அறிவோம் வாருங்கள்.

முன்கதைச் சுருக்கம்

அரச வாழ்வைத் துறந்து நள்ளிரவில் அரண்மனையை விட்டு வந்தவர் புத்தர்பிரான். பிம்பிசார மன்னனின் யாகத்துக்காக ஆடுகள் கொண்டு செல்லப்பட்டன. அவற்றின் நடுவில் அடிபட்டு வலியால் துடித்துக் கொண்டிருந்த ஆட்டுக்குட்டியைப் புத்தர் தம் தோளில் சுமந்து சென்றார். யாகசாலையை அடைந்தார். மன்னனுக்கு அறவுரை கூறினார். நாடெங்கும் உயிர்க்கொலையைத் தடுத்து நிறுத்தினார்.

நின்றவர் கண்டு நடுங்கினாரே – ஐயன்
நேரிலே நிற்கவும் அஞ்சினாரே;
துன்று கருணை நிறைந்த வள்ளல் – அங்கு
சொன்ன மொழிகளைக் கேளும் ஐயா!

வாழும் உயிரை வாங்கிவிடல் – இந்த
மண்ணில் எவர்க்கும் எளிதாகும்;
வீழும் உடலை எழுப்புதலோ – ஒரு
வேந்தன் நினைக்கிலும் ஆகாதையா!

யாரும் விரும்புவது இன்னுயிராம்; – அவர்
என்றுமே காப்பதும் அன்னதேயாம்;
பாரில் எறும்பும் உயிர்பிழைக்கப் – படும்
பாடு முழுதும் அறிந்திலீரோ?



6th Std Tamil CBSE Pages 77-206.indd 188 20-03-2020 17:42:59

நேரிய உள்ளம் இரங்கிடுமேல் – இந்த
நீள்நிலம் முற்றுமே ஆண்டிடலாம்;
பாரினில் மாரி பொழிந்திடவே – வயல்
பக்குவ மாவது அறிந்திலீரோ?

காட்டும் கருணை உடையவரே – என்றும்
கண்ணிய வாழ்வை உடையவராம்;
வாட்டும் உலகில் வருந்திடுவார்– இந்த
மர்மம் அறியாத மூடரையா!

காடு மலையெலாம் மேய்ந்துவந்து – ஆடுதன்
கன்று வருந்திடப் பாலையெல்லாம்
தேடிஉம் மக்களை ஊட்டுவதும் – ஒரு
தீய செயலென எண்ணினீரோ?

அம்புவி மீதில்இவ் ஆடுகளும் – உம்மை
அண்டிப் பிழைக்கும் உயிரலவோ?
நம்பி இருப்பவர் கும்பி எரிந்திடில்
நன்மை உமக்கு வருமோ ஐயா?

ஆயிரம் பாவங்கள் செய்தவெல்லாம் – ஏழை
ஆட்டின் தலையோடு அகன்றிடுமோ?
தீயவும் நல்லவும் செய்தவரை – விட்டுச்
செல்வது ஒருநாளும் இல்லைஐயா!

ஆதலால் தீவினை செய்யவேண்டா – ஏழை
ஆட்டின் உயிரையும் வாங்கவேண்டா;
பூதலந் தன்னை நரகம்அது ஆக்கிடும்
புத்தியை விட்டுப் பிழையும்ஐயா!

– கவிமணி தேசிக விநாயகனார்

சொல்லும் பொருளும்

அஞ்சினர்	–	பயந்தனர்	முற்றும்	–	முழுவதும்
கருணை	–	இரக்கம்	மாரி	-	மழை
வீழும்	–	விழும்	கும்பி	–	வயிறு
ஆகாது	-	முடியாது	பூதலம்	–	பூமி
நீள்நிலம்	–	பரந்த உலகம்	பார்	–	உலகம்

6th Std Tamil CBSE Pages 77-206.indd 189 20-03-2020 17:42:59

பாடலின் பொருள்

யாகசாலையில் நின்றவர் அனைவரும் புத்தர்பிரானைக் கண்டு நடுங்கினர். அவர் முன்னால் நிற்கவும் அஞ்சினர். கூடி இருந்த மக்களின் முன்னால் இரக்கமே உருவான புத்தர்பிரான் கூறிய உரையைக் கேளுங்கள்.

வாழ்கின்ற உயிர்களை அழிப்பது இந்த உலகத்தில் எல்லார்க்கும் எளிய செயல். ஆனால், இறந்த உடலுக்கு உயிர் கொடுத்து எழுப்புவது மன்னனாலும் முடியாத செயல்.

எல்லாரும் தம் உயிரைப் பெரிதாக மதித்துப் பாதுகாக்கின்றனர். எறும்பு கூடத் தன் உயிரைக் காத்துக் கொள்ளப் பாடுபடுவதை அறியாதவர் உண்டோ?

நேர்மையான இரக்க மனம் கொண்டிருப்பவரால் மட்டுமே பரந்த இவ்வுலகம் முழுமையையும் ஆட்சி செய்ய முடியும். உலகில் மழை பெய்வதால் வயல் பக்குவம் அடைவதை அறியாதவர் உண்டோ?

எல்லா உயிர்கள் மீதும் இரக்கம் கொள்பவரே நேர்மையான வாழ்வு வாழ்பவர். இந்த மறைபொருளை அறியாதவர் பிற உயிர்களை வருத்தித் தாமும் துன்புறுவர்.

காடுமலை எல்லாம் மேய்ந்து வருகிறது ஆடு. அது தன் குட்டி வருந்திடும் வகையில் பாலை எல்லாம் மக்களுக்குத் தருகிறது. இதனைத் தீயசெயல் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

இந்த உலகில் ஆடுகளும் உங்களை நம்பி இருக்கும் உயிர்கள் அன்றோ? நம்மை நம்பி இருப்பவரின் வயிறு எரியும்வகையில் நடந்து கொள்வதால் உங்களுக்கு நன்மை கிடைக்குமா?

ஆயிரம் பாவங்கள் செய்துவிட்டு, ஆட்டின் உயிரை எடுப்பதால் பாவங்கள் நீங்கி விடுமா? ஒருவர் செய்த நன்மையும் தீமையும் ஒருநாளும் அவரை விட்டுச் செல்லாது.


ஆகையால், தீய செயல்களைச் செய்யாதீர்கள். பிற உயிர்களைக் கொல்லும் செயலைச் செய்யாதீர்கள். இந்தப் பூமியை மகிழ்ச்சியற்றதாக மாற்றிடும் எண்ணத்தை உங்களைவிட்டு நீக்குங்கள். இங்கு மக்களோடு சேர்ந்து மற்ற உயிர்களும் மகிழ்வோடு வாழ வழி செய்யுங்கள்.



நூல் வெளி

தேசிக விநாயகனார் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிஞர். முப்பத்தாறு ஆண்டுகள் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியவர். கவிமணி என்னும் பட்டம் பெற்றவர்.

ஆசிய ஜோதி, ஆங்கில மொழியில் எட்வின் அர்னால்டு என்பவர் எழுதிய லைட் ஆஃப் ஆசியா (Light of Asia) என்னும் நூலைத் தழுவி எழுதப்பட்டது. இந்நூல் புத்தரின் வரலாற்றைக் கூறுகிறது.



6th Std Tamil CBSE Pages 77-206.indd 190 20-03-2020 17:43:01

கற்பவை கற்றபின்

1. நீங்கள் மிகவும் விரும்பும் தாவரங்கள், பறவைகள், விலங்குகளின் பெயர்களைப் பட்டியலிடுக.
2. உங்களைப்போல் பிறரையும் நேசியுங்கள் – என்னும் தலைப்பில் பேசுக.

மதிப்பீடு

LAV33V

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. புத்தரின் வரலாற்றைக் கூறும் நூல் _____
   அ) ஜீவ ஜோதி ஆ) ஆசிய ஜோதி இ) நவ ஜோதி ஈ) ஜீவன் ஜோதி
2. நேர்மையான வாழ்வை வாழ்பவர் _____
   அ) எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் கொண்டவர் ஆ) உயிர்களைத் துன்புறுத்துபவர்
   இ) தம்மை மட்டும் காத்துக்கொள்பவர் ஈ) தம் குடும்பத்தையே எண்ணி வாழ்பவர்
3. ஒருவர் செய்யக் கூடாதது _____
   அ) நல்வினை ஆ) தீவினை இ) பிறவினை ஈ) தன்வினை
4. 'எளிதாகும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____
   அ) எளிது + தாகும் ஆ) எளி + தாகும் இ) எளிது + ஆகும் ஈ) எளிதா + ஆகும்
5. 'பாலையெல்லாம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____
   அ) பாலை+யெல்லாம் ஆ) பாலை+எல்லாம் இ) பாலை+எலாம் ஈ) பா+எல்லாம்
6. இனிமை + உயிர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____
   அ) இன்உயிர் ஆ) இனியஉயிர் இ) இன்னுயிர் ஈ) இனிமைஉயிர்
7. மலை+எலாம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____
   அ) மலைஎலாம் ஆ) மலையெலாம் இ) மலையெல்லாம் ஈ) மலைஎல்லாம்

குறுவினா

1. அரசனாலும் செய்ய முடியாத செயல் எது?
2. எறும்பு எதற்காகப் பாடுபடுகிறது?
3. ஒருநாளும் விட்டுச் செல்லாதது எது?
4. உலகம் முழுமையையும் எப்போது ஆளமுடியும்?

சிறுவினா

எல்லா உயிர்களும் மகிழ்வோடு வாழப் புத்தர்பிரான் கூறும் அறிவுரைகள் யாவை?

சிந்தனை வினா

பறவைகளும், விலங்குகளும் சுதந்திரமாக வாழ வேண்டும் எனில் நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

6th Std Tamil CBSE Pages 77-206.indd 191 20-03-2020 17:43:01

இயல் ஒன்பது

மனிதநேயம்



இல்லாதவர்க்குக் கொடுத்து மகிழ்வதே ஈகை. பசி என்று வந்தவர்க்கு வயிறார உணவிட வேண்டும். தீமை செய்தவர்க்கும் நன்மையே செய்ய வேண்டும். ஆதரவு இல்லாதவர்களை அன்புடன் அரவணைக்க வேண்டும். பிறர் துன்பத்தைத் தமது துன்பமாக நினைத்து வருந்தும் பண்பினைக் கொள்ள வேண்டும். இப்பண்புகளைக் கொண்டு வாழ்வோர் உயர்வு அடைவர். அப்படி வாழ்ந்தோரின் வாழ்வில் நடந்த சில நிகழ்வுகளைக் காண்போம் வாருங்கள்.

உலகில் எந்த ஆறும் தனது தாகத்திற்காக ஓடுவதில்லை. எந்த நிலமும் தன் பசிக்காக விளைவதில்லை. எந்த மரமும் தனக்காகக் கனிகளை உருவாக்குவதில்லை. இவற்றைப் போல மனிதனும் தனக்கென வாழாமல், பிறர்க்கென வாழ வேண்டும். அவ்வாறு வாழ்வதற்குக் அருள், பொறுமை, பரிவு, நன்றி உணர்வு, இன்சொல் பேசுதல் போன்றவை தேவை. எல்லா உயிர்களிடமும் அன்பு செலுத்துதல் வேண்டும். அதுவே மனிதநேயம் ஆகும். மனிதநேயத்துடன் வாழ்பவர்களால்தான் இவ்வுலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த உண்மையை,

தமக்கென முயலா நோன்றாள் – பிறர்க்கென
முயலுநர் உண்மையானே (புறம் – 182)

என்னும் புறநானூற்று அடிகள் உணர்த்துகின்றன.

LB4Y5I

வள்ளலார்



வள்ளலார் வாழ்வில் நடந்ததாக ஒரு நிகழ்வைப் பலரும் கூறுவதுண்டு. வள்ளலார் தம் இளம் வயதில் ஒருநாள் நடந்து வந்து கொண்டிருந்தார். நீண்ட தூரம் நடந்ததால் களைப்பு ஏற்பட்டது. எனவே ஓய்வெடுக்க விரும்பினார். வழியில் சத்திரம் ஒன்று இருந்தது. அதன் திண்ணையில் படுத்து உறங்கினார். அப்போது ஒருவன் அங்கு வந்தான். படுத்திருந்த வள்ளலாரின் காதில் கடுக்கன் இருப்பதைக் கண்டான். அதனைத் தனதாக்கிக் கொள்ள முடிவெடுத்தான். தங்கக்கடுக்கனை மெதுவாகக் கழற்றினான். அவனது செயலை

6th Std Tamil CBSE Pages 77-206.indd 192 20-03-2020 17:43:01

அறிந்தும் வள்ளலார் கண் மூடியபடியே படுத்திருந்தார். ஒரு கடுக்கனைக் கழற்றியவுடன், மறுகாதில் உள்ள கடுக்கனை அவன் கழற்றுவதற்கு ஏதுவாகத் திரும்பிப் படுத்தார். அவன் அதையும் கழற்றிக் கொண்டு, அந்த இடத்தைவிட்டு அகன்று செல்ல முற்பட்டான். அப்போது வள்ளலார் மென்மையான குரலில், "அப்பா, இவை இரண்டும் தங்கக்கடுக்கன்கள். குறைந்த விலைக்கு விற்றுவிடாதே! மேலும், ஒரு கடுக்கனுடன் சென்றால் உன்னைத் திருடன் என எளிதாகக் கண்டுபிடித்து விடுவார்கள். எனவேதான் இரண்டு கடுக்கன்களையும் நீ எடுத்துக் கொள்வதற்கு வாய்ப்பாகத் திரும்பிப் படுத்தேன்" என்றார். வள்ளலார் கூறியதைக் கேட்ட அவன் வெட்கித் தலைகுனிந்தான். இவ்வாறு தம்பொருளைக் கவர்ந்தவரிடம் கூட அன்பு காட்டியவர் வள்ளலார்.

தெரிந்து தெளிவோம்

"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்"

– வள்ளலார்

வள்ளலார் மக்களின் பசிப்பிணியைக் கண்டு உள்ளம் வாடினார். அதனை நீக்க விரும்பினார். தம் பெருமுயற்சியால் வடலூரில் சத்திய தருமச்சாலையைத் தொடங்கி எல்லாருக்கும் உணவளித்தார். பசித்தோருக்கு உணவு வழங்கும் வள்ளலாரின் மனிதநேயச் செயல் வடலூரில் இன்றும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அன்னை தெரசா

ஒரு நாள் அன்னை தெரசா சாலையின் ஓரமாக நடந்து சென்றார். அப்போது வழியில் மூதாட்டி ஒருவர் சாலையின் ஓரம் படுத்திருந்தார். அவர் முகத்தைத் துணியால் மூடி இருந்தார். ஒரு கையால் பூனைக் குட்டியை அணைத்துக் கொண்டு இருந்தார். அன்னை தெரசா அவரின் அருகில் சென்று உற்றுநோக்கினார். தொழுநோயின் கடுமையால் உண்டான வேதனை மூதாட்டியின் முகத்தில் தெரிந்தது. கைகளில் விரல்கள் இல்லை. அன்னை தெரசா மனம் கலங்கினார். மூதாட்டியின் அருகில் சென்று அவரைத் தொட்டுத் தூக்கினார். "சாலை ஓரத்தில் படுத்து இருப்பது ஏன்?" எனக்கேட்டார்.



"என்னைத் தொடாதீர்கள். என் நோய் உங்களுக்கும் தொற்றிக்கொள்ளும். என் உறவினர்களே என்னை வெறுத்து விலக்கி விட்டனர். என்னுடன் பேசுவதில்லை. என்னைக் கண்டாலே விலகி ஓடுகின்றனர். இந்தப் பூனை மட்டுமே என்னுடன் இருக்கிறது" என அழுதார் மூதாட்டி.

இதைக் கேட்ட அன்னை தெரசா கண்ணீர் விட்டார். இவரைப் போல ஆயிரக்கணக்கான நோயாளிகள் உதவி செய்ய யாருமின்றி வாடுவதைக் கண்டார். அக்காலத்தில் தொழுநோய் கடுமையான தொற்றுநோயாகக் கருதப்பட்டது. கருணை உள்ளம் கொண்ட அன்னை தெரசா அவர்களுக்குத் தொண்டு செய்ய முடிவெடுத்தார். தமது இறுதிக் காலம் வரை பிறருக்காகவே வாழ்ந்தார்.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 193 20-03-2020 17:43:03

மக்களுக்குச் செய்யும் பணியே இறைவனுக்குச் செய்யும் பணி என்று வாழ்ந்தார். அதனால் அமைதிக்கான நோபல் பரிசு அவரைத் தேடி வந்தது.


தெரிந்து தெளிவோம்

வாழ்க்கை என்பது
நீ சாகும் வரை அல்ல
மற்றவர் மனதில்
நீ வாழும் வரை

– அன்னை தெரசா

கைலாஷ் சத்யார்த்தி

அன்னை தெரசாவிற்கு அடுத்து அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற இந்தியர் கைலாஷ் சத்யார்த்தி. இவர் சிறு வயதில் தினமும் பள்ளிக்கூடம் செல்லும் பொழுது சாலையோரத்தில் ஒரு சிறுவனைக் காண்பார். அவன் தன் தந்தையுடன் அமர்ந்து வேலை செய்து கொண்டு இருப்பான். ஏன் அந்தச் சிறுவன் தன்னைப் போல் பள்ளிக்கு வரவில்லை என்ற கேள்வி அவர் உள்ளத்தில் உறுத்திக் கொண்டே இருந்தது. தம் ஆசிரியரிடமும் பெற்றோரிடமும் இக்கேள்வியைக் கேட்டார். "பணம் இல்லாததால் அச்சிறுவன் பள்ளிக்கு வரவில்லை. வீட்டின் உணவுத் தேவையை நிறைவு செய்யப் பணம் வேண்டும். எனவே அவன் பணம் ஈட்ட வேலை பார்க்கிறான்" என்ற பதில் கிடைத்தது. அந்தப் பதில் அவருக்கு மிகுந்த மன வருத்தத்தைக் கொடுத்தது.



அவருடைய மனித நேயம் பிற்காலத்தில் அவரைப் பள்ளி செல்லாத குழந்தைகள் மேல் பரிவு கொள்ள வைத்தது. அதற்காக அவர் குழந்தைகளைப் பாதுகாப்போம் என்னும் இயக்கத்தைத் தொடங்கினார். அந்த இயக்கத்தின் மூலம் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்கப் பாடுபட்டு வருகிறார். கடந்த முப்பது ஆண்டுகளில் எண்பத்து ஆறாயிரம் குழந்தைத் தொழிலாளர்களை மீட்டுள்ளார். உலகக் குழந்தைகள் கல்வி உரிமைக்காக 103 நாடுகளில் 80,000 கி.மீ தூரம் நடைப்பயணம் சென்றுள்ளார். குழந்தைகளின் கல்வி மற்றும் உரிமைக்காக நாடு கடந்து பரப்புரை ஆற்றி வருகிறார்.

தெரிந்து தெளிவோம்

குழந்தைகளைத் தொழிலாளர்களாக மாற்றுவது மனிதத் தன்மைக்கு எதிரான குற்றம். உலகத்தைக் குழந்தைகளின் கண் கொண்டு பாருங்கள். உலகம் அழகானது.

– கைலாஷ் சத்யார்த்தி

இவரைப் போல் மனிதநேயம் மிக்க பலர் உள்ளனர். அமைப்பாக உதவுவது மட்டுமன்று; சூழலுக்கேற்ப மனிதநேயம் கொள்ளும் இவர்களைப் போல நாமும் மனிதநேயத்துடன் நடந்து கொள்ள வேண்டும். நமக்குள் இருக்கும் மனிதநேயத்தை மலரச் செய்ய வேண்டும்.

எங்கே அன்பு இருக்கிறதோ அங்கே மனித நேயமும் இருக்கும்.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 194 20-03-2020 17:43:03

கற்பவை கற்றபின்

1. நாளிதழ்களில் வந்துள்ள மனிதநேயம் பற்றிய செய்திகளைச் சேகரித்துக் கூறுக.
2. எவரேனும் ஒருவருக்கு நீங்கள் உதவி செய்த அனுபவத்தைக் கூறுக.
3. ஒற்றுமையாக வாழும் பண்பே சிறந்தது என்பது பற்றி நண்பர்களுடன் கலந்துரையாடுக.

மதிப்பீடு

LBDU76

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துதல் _____
   அ) மனித வாழ்க்கை ஆ) மனித உரிமை இ) மனித நேயம் ஈ) மனித உடைமை
2. தம் பொருளைக் கவர்ந்தவரிடமும் _____ காட்டியவர் வள்ளலார்.
   அ) கோபம் ஆ) வெறுப்பு இ) கவலை ஈ) அன்பு
3. அன்னை தெரசாவிற்கு _____ க்கான 'நோபல் பரிசு' கிடைத்தது
   அ) பொருளாதாரம் ஆ) இயற்பியல் இ) மருத்துவம் ஈ) அமைதி
4. கைலாஷ் சத்யார்த்தி தொடங்கிய இயக்கம் _____
   அ) குழந்தைகளைப் பாதுகாப்போம் ஆ) குழந்தைகளை நேசிப்போம்
   இ) குழந்தைகளை வளர்ப்போம் ஈ) குழந்தைகள் உதவி மையம்

பொருத்துக

1. வள்ளலார் – நோயாளிகளிடம் அன்பு காட்டியவர்
2. கைலாஷ் சத்யார்த்தி – பசிப்பிணி போக்கியவர்
3. அன்னை தெரசா – குழந்தைகள் உரிமைக்குப் பாடுபட்டவர்

சொற்றொடரில் அமைத்து எழுதுக.

1. மனிதநேயம் 2. உரிமை 3. அமைதி 4. அன்புசெய்தல்

குறுவினா

1. யாரால் உலகம் இயங்கிக் கொண்டு இருக்கிறது?
2. வள்ளலார் பசிப்பிணியை நீக்க என்ன செய்தார்?
3. அன்னை தெரசா கண்ணீர் விடக் காரணம் யாது?

சிறுவினா

கைலாஷ் சத்யார்த்தி நோபல் பரிசு பெறத் தூண்டுகோலாக அமைந்த இளமைக்கால நிகழ்வு யாது?

சிந்தனை வினா


அன்னை தெரசாவின் மனிதநேயம் பற்றிய வேறு ஒரு நிகழ்வினை அறிந்து எழுதுக.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 195 20-03-2020 17:43:03

விரிவானம்

இயல் ஒன்பது

முடிவில் ஒரு தொடக்கம்



பொன்னையும் பொருளையும் வாரி வழங்குவது மட்டும் வள்ளல் தன்மை அன்று. நமது இறப்பிற்குப் பின் மண்ணுக்குச் செல்லும் உடல் உறுப்புகளைப் பிறர் வாழ வழங்குவதும் வள்ளல் தன்மையே. உறுப்புக் கொடை செய்வோம். மண்ணில் ஒருவரையாவது வாழ வைப்போம். இன்றே இந்தச் சூளுரை ஏற்போம். உறுப்புக் கொடை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திய நிகழ்வை அறிவோம் வாருங்கள்.

பெங்களூரு

மாலை நேரம்

"அம்மா... என் தோழிகள் வந்து இருக்கிறார்கள். எங்களுடன் விளையாட வரமாட்டாயா? என்று கேட்கிறார்கள். அவர்களுடன் நான் விளையாடப் போகட்டுமா?"

அம்மாவும் அப்பாவும் கண்கலங்குகின்றனர்.

"உன் உடல் நிலை சரியாகட்டும் கண்ணு. நீ சீக்கிரமே விளையாடப் போகலாம். சரியா?"

"சரிம்மா, எனக்கும் அவர்களுடன் சேர்ந்து விளையாட ஆசைதான். ஆனால் முன்பு போல் என்னால் ஓடியாட முடியவில்லை. மூச்சு விடவும் சிரமமாக உள்ளது" என்று தாயிடம் சொல்லிவிட்டு, பிறகு தோழிகளை அனுப்பிவிட்டு உள்ளே வந்தாள்.

LBMQ8T

திருக்கழுக்குன்றம்

மாலை நேரம்

"அம்மா என் நண்பர்கள் விளையாட அழைக்கிறார்கள். நான் விளையாடப் போகட்டுமா?" என்றான். "விளையாடிட்டுச் சீக்கிரமாக வந்துவிட வேண்டும்" என்று கூறிய அம்மாவிடம் "சரிம்மா" என்று கூறி நண்பர்களுடன் விளையாடத் தனது இரு சக்கர வாகனத்தில் வெளியே சென்றான்.

நண்பர்களுடன் சேர்ந்து விளையாடினான். நேரம் போனதே தெரியவில்லை. வீட்டிற்குப் புறப்பட்டான். நண்பர்களோடு விளையாடியதை மகிழ்வுடன் அசைபோட்டுக் கொண்டு வீட்டை நோக்கிச் சென்றான். நேரமாகிவிட்டதே; பெற்றோர் கவலைப்படுவார்களே என்னும் சிந்தனையுடன் வாகனத்தை ஓட்டினான்.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 196 20-03-2020 17:43:03

பெங்களூரு

"உங்கள் மகளின் இதயம் நாளுக்கு நாள் வலுவிழந்து கொண்டே வருகிறது. இதயமாற்று அறுவைசிகிச்சை ஒன்றுதான் கடைசி நம்பிக்கை. அதற்கு முயற்சி செய்யுங்கள்" என்று மருத்துவர் கூறியது நினைவிற்கு வந்தது. எந்த வழியிலாவது தம் மகளின் இதயம் சரியாகிவிடாதா என்ற ஏக்கத்துடன், படுக்கையில் இருக்கும் தம் ஆசை மகளின் நிலை கண்டு பெற்றோர் உள்ளம் பதைத்தனர்.

கவலையோடு மகளின் படுக்கை அருகில் அமர்ந்திருந்த பெற்றோர் தம்மை அறியாமல் உறங்கி விட்டனர். திடீரெனக் கண்விழித்தனர். தங்கள் மகள் அசைவற்றுக் கிடப்பதைக் கண்டு அதிர்ந்தனர். உடனடியாக மருத்துவமனையில் சேர்த்தனர்.

திருக்கழுக்குன்றம்

முன்னால் ஒரு சரக்குந்து சென்றுகொண்டு இருந்தது. அதில் இருந்த கம்பிகள் வெளியே நீட்டிக் கொண்டு இருந்தன. அந்தக் கம்பியால் தடுக்கப்பட்டு, தடுமாறிக் கீழே விழுந்தான் அவன். என்ன நடக்கிறது என்பதை உணரும் முன்பே மயக்கம் அடைந்தான். அருகிலிருந்தவர்கள் அவனை மருத்துவமனையில் சேர்த்தனர்.

பெங்களூரு

பெற்றோர் : எதுவும் சொல்ல மறுக்கிறீர்களே! ஏதாவது சொல்லுங்கள் டாக்டர். எங்கள் மகள் பிழைக்க நாங்கள் என்ன செய்ய வேண்டும்?

மருத்துவர் : நிலைமையைப் புரிந்து கொள்ளாமல் பேசுகிறீர்களே? உங்கள் மகளுக்கு உடனடியாக இதயமாற்று அறுவைசிகிச்சை செய்ய வேண்டும். இல்லை என்றால் உங்கள் மகளைக் காப்பாற்ற முடியாது.

திருக்கழுக்குன்றம்

அவனது இதயம் மட்டுமே துடித்துக் கொண்டிருந்தது. வேறெந்த அசைவுமில்லை. சீராட்டிப் பாராட்டி வளர்த்த அன்பு மகனின் நிலைகண்டு பெற்றோர் கதறித் துடித்தனர். செய்வதறியாது தவித்தனர்.

'என்ன செய்வதென்றே தெரியவில்லை. நீங்கள் இருவருமே மருத்துவர்கள். நிலைமையைப் புரிந்துகொள்வீர்கள் என்று நினைக்கிறேன்! தலையில் கடுமையாக அடிபட்டிருக்கிறது. மூளை செயலிழந்து விட்டது. தீவிர சிகிச்சை அளித்தாலும் மூளை மீண்டும் செயல்படும் என்று சொல்ல முடியாது. இதயம் மட்டுமே இயங்குகிறது' என்றார் மருத்துவர்.

"டாக்டர்! எங்கள் மகனின் நிலைமை எங்களுக்குப் புரிகிறது. அவனைச் சாகவிட மாட்டோம். எங்கள் இதயம் போன்ற அவனை இழக்க விரும்பவில்லை. நாங்கள் ஒரு முடிவிற்கு வந்துவிட்டோம்!"

பெங்களூரு

"டாக்டர்! எங்கள் மகளின் நிலைமை எங்களுக்குப் புரிகிறது. அவளைச் சாகவிட விரும்பவில்லை. எங்கள் இதயம் போன்ற அவளை இழக்க மாட்டோம். நாங்கள் ஒரு முடிவிற்கு வந்துவிட்டோம். எங்கள் இதயத்தை எடுத்துக் கொள்ளுங்கள். எங்கள் மகளைக் காப்பாற்றுங்கள்! இனியும் காலம் தாழ்த்த வேண்டாம்! எங்கள் மகளுக்கு வாழ்வு கொடுங்கள்"

6th Std Tamil CBSE Pages 77-206.indd 197 20-03-2020 17:43:03

திருக்கழுக்குன்றம்

எங்கள் மகனின் இதயத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அவன் இதயத்தை எடுத்துத் தேவைப்படும் யாருக்காவது பொருத்த நாங்கள் சம்மதிக்கிறோம் . தயவுசெய்து உடனே செயலாற்றுங்கள். எங்கள் மகனுக்கு வாழ்வு கொடுங்கள். அவனைச் சாகவிட மாட்டோம். இவன் வாழ்க்கையை நிறைவானதாக ஆக்குங்கள்.

கதறலுடன் மயங்கி விழுந்தனர் பெற்றோர்.

மருத்துவக்குழுவினர் விரைவாகச் செயல்பட்டனர். அந்த இளைஞனின் இதயத்தைச் சிறுமிக்குப் பொருத்தினர். இதயம் இடம் மாறி நிலைத்தது; துடித்தது.

உறுப்புக்கொடையின் உயர்வினை அன்றுதான் உலகமே அறிந்தது; வியந்தது!

மனித நேயத்தின் மகத்தான சாதனையாகத் தம் மகனின் துடிக்கும் இதயத்தையே கொடையாகத் தந்த இக்கால வள்ளல்கள் தாம் அசோகன் – புஷ்பாஞ்சலி என்ற மருத்துவத் தம்பதியினர். சிறுமிக்குப் பொருத்தப்பட்ட இதயத்திற்குரிய அந்த இளைஞனின் பெயர் ஹிதேந்திரன். பிறந்த போது பெற்றோரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டதால் ஹிதேந்திரன் என்று பெயரிடப்பட்டான். அவன் இறந்த போது உலகத்தார் இதயங்களை எல்லாம் கொள்ளை கொண்டான். இதயம் கொடுத்து இதயங்களை வென்ற ஹிதேந்திரனை இவ்வுலகம் என்றென்றும் நினைவில் கொள்ளும்.



கற்பவை கற்றபின்

1. "முடிவில் ஒரு தொடக்கம்" உங்கள் உள்ளத்தில் ஏற்படுத்திய தாக்கத்தினைப் பகிர்க.
2. முதலுதவி பற்றி உங்களுக்குத் தெரியுமா? அவற்றுள் சிலவற்றையேனும் அறிந்து கொள்க.
3. ஹிதேந்திரனின் உண்மைக் கதையைப் படித்தபின் நீங்கள் எடுத்துக் கொண்ட உறுதிமொழி யாது?

மதிப்பீடு

LC6HC4

1. "முடிவில் ஒரு தொடக்கம்" என்ற தலைப்பின் காரணம் குறித்துக் கூறுக.
2. இக்கதைக்குப் பொருத்தமாக மற்றொரு தலைப்பு இடுக.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 198 20-03-2020 17:43:04

கற்கண்டு

இயல் ஒன்பது

அணி இலக்கணம்

LC6HC4

எதிலும் அழகைக் காண விரும்புவது மனிதர்களின் இயல்பு. நாம் நம்மை அணிகலன்களால் அழகுபடுத்திக் கொள்கிறோம். அதுபோல் கவிஞர்கள் தங்கள் கற்பனைத் திறத்தாலும் புலமையாலும் தாங்கள் இயற்றும் பாடல்களில் அழகைச் சேர்க்கின்றனர். இதனை விளக்குவது அணி இலக்கணம் ஆகும். அணி என்பதற்கு அழகு என்பது பொருள்.


கவிஞர் தமது கருத்தைச் சுவையோடு சொல்வதற்கு உதவுவது அணி. மருந்தைத் தேனில் கலந்து கொடுப்பது போல் கருத்துகளைச் சுவைபடக் கூறுவது அணியாகும்.

இயல்பு நவிற்சி அணி

ஒரு பொருளின் இயல்பை உள்ளது உள்ளபடியே அழகுடன் கூறுவது இயல்பு நவிற்சி அணி ஆகும். இதனைத் தன்மை நவிற்சி அணி என்றும் கூறுவர்.

(எ. கா.)

தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு – அங்கே
துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி
அம்மா என்குது வெள்ளைப்பசு – உடன்
அண்டையில் ஓடுது கன்றுக்குட்டி
நாவால் நக்குது வெள்ளைப்பசு – பாலை
நன்றாய்க் குடிக்குது கன்றுக்குட்டி
– கவிமணி தேசிக விநாயகனார்



இப்பாடலில் கவிஞர் பசுவும் கன்றும் ஒன்றுடன் ஒன்று கொஞ்சி விளையாடுவதை இயல்பாக எடுத்துக் கூறியுள்ளார். எனவே இது இயல்பு நவிற்சி அணி ஆகும்.

உயர்வு நவிற்சி அணி

ஒரு பொருளின் இயல்பை மிகைப்படுத்தி அழகுடன் கூறுவது உயர்வு நவிற்சி அணி ஆகும்.

(எ. கா.)

குளிர்நீரில் குளித்தால்
கூதல் அடிக்குமென்று
வெந்நீரில் குளித்தால்
மேலே கருக்குமென்று
ஆகாச கங்கை
அனல் உறைக்குமென்று
பாதாள கங்கையைப்
பாடி அழைத்தார் உன் தாத்தா

என்று ஒரு தாய் தாலாட்டுப் பாடுகிறாள். இதில் உயர்வு நவிற்சி அணி அமைந்துள்ளது.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 199 20-03-2020 17:43:04

கற்பவை கற்றபின்

1. பின்வரும் பாடலைப் படித்து இதில் அமைந்துள்ள அணியைக் குறிப்பிடுக.

ஆறு சக்கரம் நூறு வண்டி
அழகான ரயிலு வண்டி
மாடு கன்னு இல்லாமத்தான்
மாயமாத்தான் ஓடுது
உப்புப் பாரம் ஏத்தும் வண்டி
உப்பிலிப் பாளையம் போகும் வண்டி

2. நீங்கள் மிகவும் விரும்பிப் பார்த்த இடம் ஒன்றினை இயல்பு நவிற்சியாகவும் உயர்வு நவிற்சியாகவும் விவரிக்க.

மதிப்பீடு

LCFDDR

குறுவினா

1. உள்ளதை உள்ளவாறு கூறும் அணியின் பெயர் யாது?
2. உயர்வு நவிற்சி அணி என்பது யாது?

மொழியை ஆள்வோம்

கேட்க

மனித நேயத்தை வளர்க்கும் கதைகளைப் பெற்றோர், ஆசிரியரிடம் கேட்க.

பேசுக

1. உங்கள் மீது அதிகம் அன்பு செலுத்துபவர்கள் யார்? நீங்கள் யார்யார் மீது அன்பு வைத்திருக்கிறீர்கள்? காரணம் கூறுக.
2. நீங்கள் ஒருவருக்குப் பரிசு கொடுக்க விரும்பினால் யாருக்குக் கொடுப்பீர்கள்? என்ன கொடுப்பீர்கள்? எதற்காகக் கொடுப்பீர்கள்?
3. பின்வரும் தலைப்புகளுள் ஒன்று பற்றி மூன்று மணித்துளிகள் பேசுக.

அ) பொதுநலம் ஆ) சமூகத்தொண்டு

6th Std Tamil CBSE Pages 77-206.indd 200 20-03-2020 17:43:04

படித்து உணர்க.

செல்வி பள்ளிக்கூட மைதானத்தில் அமர்ந்து இருந்தாள். அங்கு ஓடி வந்த முத்து, "செல்வி, உன்னைத் தலைமை ஆசிரியர் அழைக்கிறார்" என்று கூறியவாறே அவளுடைய சக்கர நாற்காலியைத் தலைமை ஆசிரியர் அறையை நோக்கித் தள்ளிக் கொண்டு போனான். தலைமை ஆசிரியர் செல்வியை ஆறாம் வகுப்பிற்கு அழைத்துச் சென்றார்.

வகுப்பறைக் கதவு மூடப்பட்டிருந்தது. கதவைத் திறந்ததும் மாணவர்கள் அனைவரும் பிறந்த நாள் வாழ்த்துக் கூறினர். மெழுகுவர்த்திகள் ஒளி வீசின. காகிதத் தோரணங்களால் வகுப்பறை அலங்கரிக்கப்பட்டு இருந்தது. பலூன்கள் 'பட்பட்' என வெடித்தன. மாணவர்கள் அவளுக்குப் பிறந்த நாள் வாழ்த்துப் பாடினர். செல்வியின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது.

சொல்லக் கேட்டு எழுதுக.

மனிதநேயம்	கடுக்கன்	பசிப்பிணி	அன்னைதெரசா
நோபல் பரிசு	கைலாஷ் சத்தியார்த்தி	தொழிலாளர்	உறுப்புக் கொடை
ஹிதேந்திரன்	இயல்பு நவிற்சி		

அகரவரிசைப்படுத்துக.

ஒழுக்கம்	உயிர்	ஆடு	எளிமை
அன்பு	இரக்கம்	ஓசை	ஐந்து
ஈதல்	ஊக்கம்	ஏது	ஔவை

கீழ்க்காணும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கவிதை எழுதுக.

அ) அன்பு ஆ) நட்பு இ) உதவி

பத்தியைப் படித்துக் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்க.

அரசர் ஒருவர் தன் மக்களிடம் "அமைதி என்றால் என்ன?" என்பதை விளக்கும் வகையில் ஓவியமாக வரைந்து கொடுப்பவர்களுக்கு மிகச்சிறந்த பரிசு வழங்கப்படும் என்று அறிவித்தார். இதையடுத்து நாட்டின் முன்னணி ஓவியர்கள் அமைதியை வெளிப்படுத்தும் வகையில் பல ஓவியங்களை வரைந்து அரண்மனைக்குக் கொண்டு வந்தனர். அரசர் ஒவ்வொரு ஓவியமாகப் பார்த்துக் கொண்டே வந்தார். அழகிய மலையின் அடிவாரத்தில் ஓர் ஏரி இருப்பது போல் ஓவியம் ஒன்று இருந்தது. அது மிகவும் சிறப்பாக இருந்தது. பார்த்த உடனே பறிக்கத் தூண்டும் வகையில் மலர்களின் ஓவியம் ஒன்று இருந்தது. இப்படி ஒவ்வொருவரும் அமைதியைத் தங்களுக்குத் தோன்றியபடி ஓவியத்தில் வெளிப்படுத்தி

6th Std Tamil CBSE Pages 77-206.indd 201 20-03-2020 17:43:04

இருந்தனர். ஓர் ஓவியத்தில் ஒரு மலைமேல் இருந்து ஆர்ப்பரித்துக் கொட்டும் அருவியின் படம் வரையப்பட்டிருந்தது. அதிலேயே இடியோடு மழை கொட்டிக் கொண்டு இருந்தது. சற்று உற்றுப் பார்த்தால் அருவியின் கீழே இருந்த மரம் ஒன்றில் பறவைக் கூட்டில் பறவை ஒன்று தனது குஞ்சுகளோடு இருந்தது.

"இந்த ஓவியத்தை வரைந்தது யார்?" என்று அரசர் கேட்டார். அந்த ஓவியர் வந்தார். "இந்த ஓவியத்தில் அமைதி எங்கே இருக்கிறது?" என்றார் அரசர். அதற்கு ஓவியர் "மன்னா பிரச்சினையும் போராட்டமும் ஆரவாரமும் இல்லாத இடத்தில் இருப்பது அமைதி அன்று. இவை எல்லாம் இருக்கும் இடத்தில் இருந்தும், எதற்கும் கலங்காமலும், தன்னை எதுவும் பாதிக்க விடாமலும் உள்ளுக்குள் அமைதியாக இருப்பதே உண்மையான அமைதி" என்றார்.

1. அமைதி என்றவுடன் உங்கள் மனதில் தோன்றுவது என்ன?
2. இக்கதையில் அமைதி எங்கு இருப்பதாகக் கூறப்படுகிறது?
3. நீங்கள் இந்த ஓவியப் போட்டியில் பங்கு பெற்று இருந்தால் என்ன ஓவியம் வரைந்து இருப்பீர்கள்?
4. இக்கதைக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

கடிதம் எழுதுக.

நூல்கள் அனுப்ப வேண்டிப் பதிப்பகத்தாருக்குக் கடிதம் எழுதுக



மொழியோடு விளையாடு

கட்டங்களில் உள்ள சொற்களைக் கொண்டு தொடர்கள் உருவாக்குக.

நேற்று இன்று நாளை	எங்கள் ஊரில் மழை	பெய்கிறது பெய்யும் பெய்தது

இவை போன்று மூன்று காலங்களையும் காட்டும் சொற்றொடர்களை அமைக்க.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 202 20-03-2020 17:43:05

கட்டங்களில் மறைந்துள்ள அணிகலன்களின் பெயர்களை எழுதுக.

க	ணி	மோ	பு	வ
ம்	ம	தி	ம்	ளை
ம	ளா	ர	ல	ய
ல்	சூ	ம்	சி	ல்
க	டு	க்	க	ன்

எ.கா. கம்மல்

நிற்க அதற்குத் தக...

என் பொறுப்புகள்

1. நான் எல்லாரிடமும் அன்பு காட்டுவேன்.
2. உறுப்புக்கொடையின் இன்றியமையாமையை எனக்குத் தெரிந்தவர்களிடம் எடுத்துச் சொல்வேன்.
3. பிறருக்கு என்னால் இயன்ற உதவியைச் செய்வேன்.
4. பிற உயிர்களைத் துன்புறுத்த மாட்டேன்.
5. எப்போதும் மனிதநேயத்துடன் நடந்து கொள்வேன்.

கலைச்சொல் அறிவோம்

மனிதநேயம்	–	*Humanity*
கருணை	–	*Mercy*
உறுப்பு மாற்று அறுவைசிகிச்சை	–	*Transplantation*
நோபல் பரிசு	–	*Nobel Prize*
சரக்குந்து	–	*Lorry*

இணையத்தில் காண்க


உடல் உறுப்புக் கொடை குறித்த செய்திகளை இணையத்தில் தேடி அறிக.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 203 20-03-2020 17:43:05

இணையச் செயல்பாடுகள்

முதலுதவி





படிநிலைகள்:

⇒ கொடுக்கப்பட்டஉரலியைப் பயன்படுத்தி, இணையத்திலிருந்து 'First Aid' என்னும் செயலியைப் பதிவிறக்கி, நிறுவிக்கொள்ளவும்.

⇒ 'First Aid' செயலியைத் திறந்ததும், 'Emergency, Instructions, Call' போன்ற தெரிவுகள் இருக்கும், அதில் எமெர்ஜென்சி என்னும் தலைப்பின் கீழிருக்கும் பல்வேறு உடல்நலக் குறைபாடுகளில் BURNS என்பதைத் தேர்வு செய்யவும்.

⇒ தற்போது தீக்காயங்களுக்குச் செய்ய வேண்டிய முதலுதவி அறிவுரைகள் பட்டியலிடப்பட்டிருப்பதைத் தெரிந்து கொள்ளவும்.

⇒ மீண்டும் முதல் பக்கத்திற்குச் சென்று 'Instructions' என்பதைத் தேர்வு செய்து, அதில் CPR என்னும் முதலுதவி செய்வதற்கான படிமுறைகளைத் தெரிந்து கொள்ளவும்.









'முதலுதவி' காண்பதற்கான உரலி:

https://play.google.com/store/apps/details?id=org.indianredcross.firstaid&hl=en

*கொடுக்கப்பட்டுள்ள படங்கள்அடையாளத்திற்காக மட்டுமே

6th Std Tamil CBSE Pages 77-206.indd 204 20-03-2020 17:43:05

திருக்குறள்

கடவுள் வாழ்த்து (1)

1) அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

2) கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

3) மலர்மிசை ஏகினான் மாண்அடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

4) வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

5) இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

6) பொறிவாயில் ஐந்துஅவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

7) தனக்குஉவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

8) அறஆழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
பிறஆழி நீந்தல் அரிது.

9) கோளில் பொறியில் குணம்இலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை

10) பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

வான்சிறப்பு (2)

1) வான்நின்று உலகம் வழங்கி வருதலான்
தான்அமிழ்தம் என்றுஉணரற் பாற்று

2) துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

3) விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியன்உலகத்து
உள்நின்று உடற்றும் பசி.

4) ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

5) கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

6) விசும்பின் துளிவீழின் அல்லால்மற்று ஆங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது.

7) நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்துஎழிலி
தான்நல்காது ஆகி விடின்.

8) சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

9) தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்
வானம் வழங்காது எனின்.

10) நீர்இன்று அமையாது உலகுஎனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 205 20-03-2020 17:43:05

நீத்தார் பெருமை (3)

1) ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு.

2) துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று.

3) இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு.

4) உரன்என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரன்என்னும் வைப்பிற்கோர் வித்து.

5) ஐந்துஅவித்தான் ஆற்றல் அகல்விசும்பு உளார்கோமான்
இந்திரனே சாலும் கரி.

6) செயற்குஅரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்குஅரிய செய்கலா தார்.

7) சுவைஒளி ஊறுஓசை நாற்றம்என்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு.

8) நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்

9) குணம்என்னும் குன்றுஏறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது.

10) அந்தணர் என்போர் அறவோர்மற்று எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டுஒழுக லான்.

அறன் வலியுறுத்தல் (4)

1) சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தின்ஊங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு

2) அறத்தின்ஊங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்குஇல்லை கேடு.

3) ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்.

4) மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற.

5) அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

6) அன்றுஅறிவாம் என்னாது அறம்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை.

7) அறத்தாறு இதுஎன வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை.

8) வீழ்நாள் படாஅமை நன்றுஆற்றின் அஃதுஒருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்.

9) அறத்தான் வருவதே இன்பம்மற்று எல்லாம்
புறத்த புகழும் இல.

10) செயற்பாலது ஓரும் அறனே ஒருவற்கு
உயற்பாலது ஓரும் பழி.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 206 20-03-2020 17:43:05

மக்கட் பேறு (7)

1 பெறுமவற்றுள் யாம்அறிவது இல்லை அறிவுஅறிந்த மக்கட்பேறு அல்ல பிற.

2) எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப் பண்புடை மக்கள் பெறின்.

3) தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள் தம்தம் வினையான் வரும்.

4) அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள் சிறுகை அளாவிய கூழ்.

5) மக்கள்மெய் தீண்டல் உடற்குஇன்பம் மற்றுஅவர் சொற்கேட்டல் இன்பம் செவிக்கு.

6) குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள் மழலைச்சொல் கேளா தவர்.

7) தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து முந்தி இருப்பச் செயல்.

8) தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கு எல்லாம் இனிது.

9) ஈன்ற பொழுதின் பெரிதுஉவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்.

10) மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை என்நோற்றான் கொல்எனும் சொல்.

அன்புடைமை (8)

1) அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர் புன்கண்நீர் பூசல் தரும்.

2) அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு.

3) அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு.

4) அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும் நண்புஎன்னும் நாடாச் சிறப்பு.

5) அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து இன்புற்றார் எய்தும் சிறப்பு.

6) அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார் மறத்திற்கும் அஃதே துணை.

7) என்பு இலதனை வெயில்போலக் காயுமே அன்பி லதனை அறம்.

8) அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண் வற்றல் மரம்தளிர்த் தற்று.

9) புறத்துறுப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை அகத்துறுப்பு அன்பி லவர்க்கு.

10) அன்பின் வழியது உயிர்நிலை அஃதுஇலார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 207 20-03-2020 17:43:05

விருந்தோம்பல் (9)

1) இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்துஓம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

2) விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்துஎனினும் வேண்டற்பாற்று அன்று.

3) வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று.

4) அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்.

5) வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்.

6) செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்துஇருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

7) இனைத்துணைத்து என்பதொன்று இல்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்.

8) பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

9) உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு.

10) மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

இனியவை கூறல் (10)

1) இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

2) அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகன்அமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்.

3) முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தான் ஆம்
இன்சொ லினதே அறம்.

4) துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.

5) பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணிஅல்ல மற்றுப் பிற.

6) அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்.

7) நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்.

8) சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும்.

9) இன்சொல் இனிதுஈன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

10) இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 208 20-03-2020 17:43:06

பயனில சொல்லாமை (20)

1) பல்லார் முனியப் பயன்இல சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்.

2) பயன்இல பல்லார்முன் சொல்லல் நயன்இல
நட்டார்கண் செய்தலின் தீது.

3) நயனிலன் என்பது சொல்லும் பயன்இல
பாரித்து உரைக்கும் உரை.

4) நயன்சாரா நன்மையின் நீங்கும் பயன்சாராப்
பண்புஇல்சொல் பல்லார் அகத்து.

5) சீர்மை சிறப்பொடு நீங்கும் பயன்இல
நீர்மை உடையார் சொலின்.

6) பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி எனல்.

7) நயன்இல சொல்லினும் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று.

8) அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல்.

9) பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருள்தீர்ந்த
மாசறு காட்சி யவர்.

10) சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க
சொல்லில் பயனிலாச் சொல்.

ஈகை (23)

1) வறியார்க்குஒன்று ஈவதே ஈகைமற்று எல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து.

2) நல்ஆறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்எனினும் ஈதலே நன்று.

3) இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலன்உடையான் கண்ணே உள.

4) இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகம் காணும் அளவு.

5) ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.

6) அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

7) பாத்துஊண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்டல் அரிது.

8) ஈத்துஉவக்கும் இன்பம் அறியார்கொல் தாம்உடைமை
வைத்துஇழக்கும் வன்க ணவர்

9) இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல்.

10) சாதலின் இன்னாதது இல்லை இனிதுஅதூஉம்
ஈதல் இயையாக் கடை.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 209 20-03-2020 17:43:06

கள்ளாமை (29)

1) எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்துஒன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு.

2) உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்.

3) களவினால் ஆகிய ஆக்கம் அளவுஇறந்து
ஆவது போலக் கெடும்.

4) களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமம் தரும்.

5) அருள்கருதி அன்புடையர் ஆதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்.

6) அளவின்கண் நின்றுஒழுகல் ஆற்றார் களவின்கண்
கன்றிய காத லவர்.

7) களவுஎன்னும் கார்அறி வாண்மை அளவுஎன்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல்.

8) அளவுஅறிந்தார் நெஞ்சத்து அறம்போல நிற்கும்
களவுஅறிந்தார் நெஞ்சில் கரவு.

9) அளவுஅல்ல செய்துஆங்கே வீவர் களவுஅல்ல
மற்றைய தேற்றா தவர்.

10) கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தேள் உலகு.

இன்னா செய்யாமை (32)

1) சிறப்புஈனும் செல்வம் பெறினும் பிறர்க்குஇன்னா
செய்யாமை மாசுஅற்றார் கோள்.

2) கறுத்துஇன்னா செய்தவக் கண்ணும் மறுத்துஇன்னா
செய்யாமை மாசுஅற்றார் கோள்.

3) செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமம் தரும்.

4) இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

5) அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தம்நோய்போல் போற்றாக் கடை.

6) இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கண் செயல்.

7) எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணாசெய் யாமை தலை.

8) தன்னுயிர்க்கு இன்னாமை தான்அறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல்.

9) பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும்.

10) நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 210 20-03-2020 17:43:06

கொல்லாமை (33)

1) அறவினை யாதுஎனின் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும்.

2) பகுத்துஉண்டு பல்உயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

3) ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றுஅதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

4) நல்ஆறு எனப்படுவது யாதுஎனின் யாதுஒன்றும்
கொல்லாமை சூழும் நெறி.

5) நிலைஅஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலைஅஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை.

6) கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள்மேல்
செல்லாது உயிர்உண்ணும் கூற்று.

7) தன்உயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்உயிர் நீக்கும் வினை.

8) நன்றுஆகும் ஆக்கம் பெரிதுஎனினும் சான்றோர்க்குக்
கொன்றுஆகும் ஆக்கம் கடை.

9) கொலைவினையர் ஆகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவார் அகத்து.

10) உயிர்உடம்பின் நீக்கியார் என்ப செயிர்உடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்.

ஊக்கமுடைமை (60)

1) உடையர் எனப்படுவது ஊக்கம் அஃதுஇல்லார்
உடையது உடையரோ மற்று.

2) உள்ளம் உடைமை உடைமை பொருள்உடைமை
நில்லாது நீங்கி விடும்.

3) ஆக்கம் இழந்தேம்என்று அல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துஉடை யார்.

4) ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை.

5) வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு.

6) உள்ளுவது எல்லாம் உயர்வுஉள்ளல் மற்றுஅது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

7) சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதைஅம்பின்
பட்டுப்பாடு ஊன்றும் களிறு.

8) உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு.

9) பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்.

10) உரம்ஒருவற்கு உள்ள வெறுக்கை அஃது இல்லார்
மரம்மக்கள் ஆதலே வேறு.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 211 20-03-2020 17:43:06

பெரியாரைப் பிழையாமை (90)

1) *ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்*
போற்றலுள் எல்லாம் தலை.

2) *பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்*
பேரா இடும்பை தரும்.

3) *கெடல்வேண்டின் கேளாது செய்க அடல்வேண்டின்*
ஆற்று பவர்கண் இழுக்கு.

4) *கூற்றத்தைக் கையால் விளித்துஅற்றால் ஆற்றுவார்க்கு*
ஆற்றாதார் இன்னா செயல்.

5) *யாண்டுச்சென்று யாண்டும் உளர்ஆகார் வெந்துப்பின்*
வேந்து செறப்பட் டவர்.

6) *எரியால் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்*
பெரியார்ப் பிழைத்துஒழுகு வார்.

7) *வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னாம்*
தகைமாண்ட தக்கார் செறின்.

8) *குன்றுஅன்னார் குன்ற மதிப்பின் குடியொடு*
நின்றுஅன்னார் மாய்வர் நிலத்து.

9) *ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து*
வேந்தனும் வேந்து கெடும்.

10) *இறந்துஅமைந்த சார்புடையர் ஆயினும் உய்யார்*
சிறந்துஅமைந்த சீரார் செறின்.

வான்புகழ் வள்ளுவரின் அறக்கருத்துகள் மாணவரிடம் சென்று சேர வேண்டும். அதன்வழி நன்னெறிப் பண்புகள் மாணவரிடையே வளர வேண்டும் என்ற நோக்கில் புதிய பாடத்திட்டத்தில் திருக்குறளின் 150 பாக்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் எளிதில் படித்துப் பொருள் புரிந்துகொள்வதற்கு ஏற்றவகையில் குறட்பாக்களின் சீர்கள் பிரித்துத் தரப்பட்டுள்ளன; அலகிடுவதற்காக அன்று.

திருக்குறள் கருத்துகளை மாணவர்களிடையே பரப்புவதற்கான வழிகாட்டுதல்கள்

- நாள்தோறும் வழிபாட்டுக் கூட்டத்தில் திருக்குறளைப் பொருளுடன் கூறலாம்.
- வகுப்பு வாரியாகத் திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி நடத்தலாம்.
- இலக்கிய மன்றக் கூட்டங்களில் குறட்பாக்கள் தொடர்பான கதைகளைக் கூறலாம்.
- திருக்குறள் கருத்துகளை விளக்கும் நாடகங்களை நடத்தச் செய்யலாம்.
- திருக்குறள் கருத்துகளை விளக்கும் ஓவியப் போட்டியை நடத்தலாம்.
- குறட்பாக்கள் தொடர்பான வினாக்களைத் தொகுத்து வினாடி வினா நடத்தலாம்.
- சான்றோர் வாழ்வில் நிகழ்ந்த சுவையான நிகழ்ச்சிகள் மூலம் திருக்குறள் கருத்துகளை விளக்கலாம்.
- உலகப் பொதுமறையாம் திருக்குறளில் இடம் பெற்றிருக்கும் நன்னெறிக் கருத்துகளின் அடிப்படையில் நீதிக்கதைகள், இசைப்பாடல்கள், சித்திரக் கதைகள், அசைவூட்டப் படங்கள் ஆகியவற்றை உருவாக்கி அவற்றின் வாயிலாகத் திருக்குறள் வளங்களை மாணவர்களிடம் கொண்டு சேர்க்கலாம்.

6th Std Tamil CBSE Pages 77-206.indd 212 20-03-2020 17:43:06

ஆறாம் வகுப்பு – தமிழ்
ஆக்கம்

ஆலோசனைக் குழு

முனைவர் பா. வீரப்பன்
பேராசிரியர், தேசியக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், புதுடில்லி.

முனைவர் டி. சகாய தாஸ்
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், கேரளா.

முனைவர் நா. அருள்முருகன்
இணை இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை-6.

மேலாய்வாளர் குழு

முனைவர் இராம. பாண்டுரங்கன்
இணை இயக்குநர் (ஓய்வு), மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

முனைவர் ச. மாடசாமி
பேராசிரியர் (ஓய்வு), சென்னை.

திரு. ச. தமிழ்ச்செல்வன்
எழுத்தாளர்.

திருமதி ஏ.எஸ். பத்மாவதி
எழுத்தாளர், சென்னை.

திரு. ம. இராமகிருட்டினன்
முதன்மைக்கல்வி அலுவலர், திருச்சி.

பாட வல்லுநர் குழு

முனைவர் வி. கிருஷ்ணன்
தமிழ்த்துறைதலைவர், அரசு கலைக்கல்லூரி, உடுமலைப்பேட்டை.

முனைவர் காசி. மாரியப்பன்
இணைப் பேராசிரியர், பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி, திருச்சி.

முனைவர் பா. முத்துசாமி
உதவிப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

முனைவர் மா. வெங்கடேசன்
இணைப் பேராசிரியர், அரசு கலைக் கல்லூரி (ஆடவர்), கிருஷ்ணகிரி.

முனைவர் கவிதா ராணி
இணைப்பேராசிரியர், லேடி டோக் கல்லூரி, மதுரை.

முனைவர் அ. மணமலர்ச்செல்வி
முதுநிலை விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், அரியலூர் மாவட்டம்.

கலை மற்றும் வடிவமைப்புக்குழு

வரைபடம்

திரு. இளையராஜா

திரு. இளையபாரதி

திரு. கோபு சுப்பையன்

திரு. பி. தனபால்
ஓவிய ஆசிரியர், M.CT. RM. இராமநாதன் செட்டியார் மேல்நிலைப் பள்ளி, குழிமிறை, புதுக்கோட்டை மாவட்டம்.

திரு. சோ.வேல்முருகன்
ஓவிய ஆசிரியர், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம்.

திரு. ஏ.முத்துக்குமரன்
ஓவிய ஆசிரியர், அ.மே.நி.பள்ளி, பண்ருட்டி, கடலூர் மாவட்டம்.

திரு. என். கோபாலகிருஷ்ணன்
ஓவிய ஆசிரியர், குமார ராஜா முத்தையா மேல்நிலைப் பள்ளி, காந்தி நகர், அடையார், சென்னை.

திரு. கா. தனஸ் தீபக் ராஜன்

திரு. கா .நலன் நான்சி ராஜன்

திரு. ம.சார்லஸ்
மாணவர்கள்,அரசு கவின் கலை கல்லூரி, சென்னை மற்றும் கும்பகோணம்

பக்க வடிவமைப்பாளர்

பழையவலம் பா. இராமநாதன்
வி2இனோவேஷன்ஸ், சென்னை

தரக் கட்டுப்பாடு

திரு. கோபு சுப்பையன்
திரு. எம். கரண்
கி. ஜெரால்டு வில்சன்

நன்றி

கோபுலு, மருது, லதா

தட்டச்சர்

திருமதி **இரா.வித்யா**
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

அட்டைப்படம்

கதிர் ஆறுமுகம்

ஒருங்கிணைப்பு

ரமேஷ் முனிசாமி

பாடநூலாசிரியர் குழு

திரு. ம. பாலசுப்பிரமணியம்
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம். கரூர்.

திருமதி .சொ. இராஜலஷ்மி
பட்டதாரி ஆசிரியர், நகராட்சி மேல்நிலைப் பள்ளி, சேலையூர், தாம்பரம், காஞ்சிபுரம் மாவட்டம்.

திரு. த. ஜீவானந்தம்
பட்டதாரி ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, அட்டப்பட்டி, கொட்டாம்பட்டி ஒன்றியம், மதுரை மாவட்டம்.

திரு. சிவ. முரளி
பட்டதாரி ஆசிரியர், ஜே.எப்.மேல்நிலைப் பள்ளி, புலிவலம், திருச்சி மாவட்டம்.

புலவர் கு. சம்பந்தம்
முதுகலை ஆசிரியர் (ஓய்வு), டி.ஆர்.பி.சி.சி.சி இந்து மேல்நிலைப் பள்ளி, திருவள்ளூர்.

திருமதி சிவ. அன்புச்செல்வி
முதுகலை ஆசிரியர், பெ.கா.அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, அம்பத்தூர், திருவள்ளூர் மாவட்டம்.

புலவர் தமிழ். திருமால்
முதுகலை ஆசிரியர், திருவள்ளுவர் மேல்நிலைப் பள்ளி, குடியாத்தம், வேலூர் மாவட்டம்.

முனைவர் செ. தாரகேஸ்வரி
முதுகலை ஆசிரியர், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, கே.வி.குப்பம், வேலூர் மாவட்டம்.

திரு. மொ. மருதமுத்து
பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, இ.கீரனூர், கடலூர் மாவட்டம்.

திருமதி ஆர். சந்திரா
பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, மேடவாக்கம், சென்னை.

திருமதி ஐ.சா. மேபல் ஜெசி சந்திரா
பட்டதாரி ஆசிரியர், சி.சி.எம்.ஏ.அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, ராஜாதெரு, கோவை.

திரு. ந. தமிழ்க் காவலன்
பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, அடியக்கமங்கலம், திருவாரூர் மாவட்டம்.

திருமதி மு. கீதா
இடைநிலை ஆசிரியர், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, சந்தைபேட்டை, புதுகோட்டை மாவட்டம்.

திருமதி ச. சாந்த சுந்தரி
பட்டதாரி ஆசிரியர், ஆர்.கே.ஸ்ரீ. ரங்கம்மாள் கல்வி நிலையம், கோவை.

திருமதி ரெ. விமலா தேவி
பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, சிறுமலை ராயபுரம், திண்டுக்கல் மாவட்டம்.

திருமதி ஆ. கலைவாணி
பட்டதாரி ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, காளம்பாளையம், கோவை மாவட்டம்.

திருமதி நா. ஜானகி
பட்டதாரி ஆசிரியர், அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சின்னத்தடாகம், கோவை மாவட்டம்.

முனைவர் ஆ. சக்தி வடிவு
முதுகலை ஆசிரியர், அறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப் பள்ளி, குன்னூர், நீலகிரி மாவட்டம்.

திருமதி வசந்தா
பட்டதாரி ஆசிரியர், பவன்ஸ் ராஜாஜி வித்யாஷ்ரம்(CBSE), கீழ்பாக்கம், சென்னை.

திருமதி ஜே.பி.ஆர். லீனா ஜீடியா
பட்டதாரி ஆசிரியர், டி.ஏ.வி. ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, கோபாலபுரம், சென்னை.

திரு. மா. பழனி
தலைமை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, சின்னப்பள்ளத்தூர், பென்னகரம், தருமபுரி மாவட்டம்.

திருமதி ப. சித்ரகலா
பட்டதாரி ஆசிரியர், சின்மயா வித்யாலயா (CBSE), சின்மயா நகர், விருகம்பாக்கம், சென்னை.

முனைவர் ந. சுரேஷ்ராஜன்
பட்டதாரி ஆசிரியர், புனித வளனார் அரசு மேல்நிலைப் பள்ளி, மஞ்சக்குப்பம், கடலூர் மாவட்டம்.

திரு. ப்ரகாஷ்
ஆசிரியப் பயிற்றுநர், அனைவருக்கும் கல்வி இயக்கம், நாமக்கல்.

திரு. இ. அப்துல்க:பூர்
பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி,தேவர் சோலை, நீலகிரி மாவட்டம்.

ஒருங்கிணைப்பாளர்

திருமதி மு. செல்வி
பட்டதாரி ஆசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, சேரி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், வேலூர் மாவட்டம்.

இந்நூல் 80 ஜி.எஸ்.எம் அழகிய மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.
ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:

6th Std Tamil CBSE Pages 77-206.indd 213 20-03-2020 17:43:06

குறிப்புகள்

6th Std Tamil CBSE Pages 77-206.indd 214 20-03-2020 17:43:06